யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்



86 வது ஆண்டு நிறைவு மலர்

# தீபம்

1922 - 2008



யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்


# 86வது ஆண்டு நிறைவு மலர்

## 1922 - 2008

# தீபம்


நெழுவினி சித்திவிநாயகர் துணை

# G.N Divisions in Delft




பாடசாலை ஸ்தாபகர் – முதல் அதிபர்
திருவாளர்
சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள்

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே

- சுப்பிரமணிய பாரதியார்.


எங்கள் அதிபர்
திரு. சு. சத்தியவரதன்
B.A., Dip. in- Edu., Sc. Tra. (Sp)

எமது வித்தியாலய

86வது ஆண்டு நிறைவு மலரை

வெளியிடுவதற்கு முழுமையான நிதிஉதவியை

வழங்கிய நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய

மாணவர் மன்றம் – கனடா

நிர்வாக உறுப்பினர்களுக்கும் உதவி நல்கும்

கனடாவாழ் நெடுந்தீவு உறவுகளுக்கும்

இதயம் கனிந்தஉருக்கமான நன்றிகளையும்

நல்வாழ்த்துக்களையும்

எமது பாடசாலை சமூகம் சார்பில்

தெரிவிப்பதில் பெரு மகிழ்வுறுகிறோம்.

# நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா

## OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA

**Reg:1585865**



**இடமிருந்து வலம் இருப்பவர்கள்:**

திருமதி. ஜெயகௌரி தயாபரராசா

திரு. சுப்பிரமணியம் நடராசா (தலைவர்)

திரு. சின்னத்தம்பி சண்முகநாதன் (பொருளாளர்)

திரு. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை (செயலாளர்)

**இடமிருந்து வலம் நிற்பவர்கள்:**

திரு. இராமநாதர் கந்தையா (உபதலைவர்)

திரு. நமசிவாயம் பசுபதிப்பிள்ளை (செயற்குழு உறுப்பினர்)

திரு. சுப்பிரமணியம் குமாரசாமி (செயற்குழு உறுப்பினர்)

திரு. சந்திரசேகரா வேர்ச் (செயற்குழு உறுப்பினர்)

திரு. குமாரசாமி வரதராசன் (செயற்குழு உறுப்பினர்)

**படத்தில் இடம்பெறாதோர் :**

திருமதி. கலாவதி விசாகன் (செயற்குழு உறுப்பினர்)

திரு. கனகசபை அம்பலவாணர் (உப செயலாளர்)

திரு. நாகேந்திரன் விக்னேஸ்வரன்

# இதழ் விரிந்து.....

## வாழ்த்துச் செய்திகள்


- நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமச்சாரியசுவாமிகள் அவர்கள் i
- யாழ்மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர்– அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ii
- தென்னிந்தியத்திருச்சபை பேராயர் பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா அவர்கள் iii
- துணைவேந்தர் – பேராசிரியர்.என். சண்முகலிங்கன் அவர்கள் iv
- அராசங்க அதிபர் – உயர்திரு. க. கணேஷ் அவர்கள் v
- செயலாளர் வட மாகாணக் கல்வி அமைச்சு – உயர்திரு. இ.இளங்கோவன் அவர்கள் vi
- செயலாளர் வட மாகாணக்கல்வி அமைச்சு செயலாளர் கிழக்குமாகாணப் பேரவைச் செயலகம்
  உயர்திரு. ஆர்.தியாகலிங்கம் அவர்கள் vii
- மாகாணக்கல்விப் பணிப்பாளர் – உயர்திரு. வி. இராசையா அவர்கள் viii
- மாகாணத்திட்ட முகாமையாளர் உயர்திரு. V. மகேந்திரன் அவர்கள் ix
- வலயக்கல்விப்பணிப்பாளர் – உயர்திரு. ஜி.வி. இராதாகிருஸ்ணன் அவர்கள் x
- வலயக்கல்விப்பணிப்பாளர் – வலிகாமம் – உயர்திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் xi
- திட்டப்பணிப்பாளர், மாவட்டச் செயலகம் உயர்திரு. ம.பிரதீபன் அவர்கள் xii
- பிரதிக்கல்விப்பணிப்பாளர் – யாழ்ப்பாணம் –உயர்திரு.ஆ. இராஜேந்திரன் அவர்கள் xiii-xvi
- பிரதித்திட்டப்பணிப்பாளர், வடக்கு–கிழக்கு வீடமைப்புத்திட்டம் –
  உயர்திரு. ஜே. எக்ஸ். செலவ்நாயகம் அவர்கள் xv
- கோட்டக் கல்விப்பணிப்பாளர் – நெடுந்தீவு –உயர்திரு. க. அரசரத்தினம் அவர்கள் xvi-xvii
- பிரதிக்கல்விப் பணிப்பாளர் – தீவகம்– உயர்திரு. ஐ. புவனேந்திரன் அவர்கள் xviii
- பிரதிக்கல்விப்பணிப்பாளர் – தீவகம் – உயர்திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் xix
- பிரதிக்கல்விப்பணிப்பாளர் – தீவகம் – உயர்திரு. சி. மகேஸ்வரன் அவர்கள் xx
- ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர் – உயர்திரு. சோ.தில்லைநாதன் அவர்கள் xxi-xxii
- தலைவர், நெடுந்தீவு பா.ப. மா. மன்றம் – கனடா –உயர்திரு சு. நடராசா அவர்கள் xxiii
- ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் – உயர்திரு. எஸ். சிவநாயகமூர்த்தி அவர்கள் xxiv-xxv
- செயலாளர் – நெடுந்தீவு பா.ப.மா. மன்றம் – கனடா – உயர்திரு. க. பொன்னுத்துரை அவர்கள் xxvi
- நிதியாளர் – நெடுந்தீவு பா.ப.மா. மன்றம் – கனடா – உயர்திரு. சி. சண்முகநாதன் அவர்கள் xxvii
- பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலர் – திருமதி. க. நடராஜலிங்கம் xxviii-xxix
- இதழாசிரியரின்உள்ளத்தில் இருந்து திரு. ந. செந்தூரன் அவர்கள் xxx-xxxi
- அதிபரின் எண்ணத்தில் இருந்து xxxii-xxxix


## பள்ளியின் பார்வையில்


- பாடசாலை இலட்சினை 01
- மகுட வாக்கியம் 02

- வித்தியாலய கீதம் 03
- வித்தியாலயத்தின் அதிபர்கள் 04
- பாடசாலைக்கொடி விளக்கம் 05
- பாடசாலைச் சின்னத்தின் விளக்கம் 06
- பாடசாலை தகவல் சுருக்கம் 07
- வெற்றிக்கிண்ணமும் சான்றிதழும் 08
- ஆசிரியர் குழாம் 09
- ஆரம்பக் கல்வி மன்றம் 10
- சமூகக்கல்வி மன்றம் 11
- இந்து மாணவர் மன்றம் 12
- தமிழ் மன்றம் 13
- கணித, விஞ்ஞான, விவசாய மன்றம் 14
- படங்கள் 15
- படங்கள் 16
- எமது பாடசாலை அன்றும் இன்றும்-செல்வி. குமாரசாமி லலிதாதேவி, செல்வி. இலட்சுமணன் ஜீவாநந்தினி 17-18
- நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் - அமரர் பண்டிதர் சு.பசுபதி (அதிபர்) 19-23
- எமது சைவப்பிரகாச வித்தியாலயம் - மு. சுப்பையா (இளைப்பாறிய அதிபர்) 24-25
- எமது பாடசாலை வளர்ச்சிக்கு பலம் தந்து வளம் ஈய்ந்தோர் 26- 33


## விசேட ஆக்கங்கள்


- நிறுவனங்களில் பயிற்சியளித்தலின் முக்கியத்துவம் - திரு. க. தேவராஜா(பீடாதிபதி) 34-41
- குழந்தை இலக்கிய வரலாற்றில், ஈழத்துக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள் - பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 42-47
- பாடசாலைகளின் தரமேம்பாட்டிற்கு அதிபரின் பங்களிப்பும்,பொறுப்பும் - கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம் 48-52
- மாணவர் தேர்ச்சி விருத்தியல் ஆசிரியர் வகி பங்கு - திருமதி வாசகி தவபாலன் 53-57
- மனஅழுத்தமும் மூச்சுப் பயிற்சியும் - சி.சபாஆனந் (விரிவுரையாளர்) 58-60
- நேரத்தை முகாமை செய்தல் - ச.சத்தியவரதன் (அதிபர்) 61 - 62


## ஆசிரியர் பக்கம்


- பிள்ளைகளில் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு - லோகேஸ்வரி நகுலசிறி 63-64
- ஆசான்கள் - திருமதி விஜிதா பத்மநாதன் 65-66
- ஆரம்பக்கல்வியை வழங்குவதில் ஆசிரியரின் பணி - த. சுகந்தினி 67-68
- வாழ்வில் சைவம் - திருமதி சுபாஜினி புவனேந்திரன் 69-70
- எங்கள் அதிபர் - திருமதி விலிங்சானி ஹொல்பேட் 71
- ஆசிரியப் பணி - திருமதி V. சிறிதரன் 72-73
- கலை பற்றிய ஒரு கண்ணோட்டம் - இ. ஜெனிதா 74-76
- கணினி பற்றிய ஒரு நோக்கு... ந.செந்தூரன் 77-83
- பாடசாலை நூலகத்தின் பயன்கள் - செல்வி ச. நளினி 84
- குத்துவிளக்கு ஏற்றுதலின் மகத்துவம் - திருமதி சந்திரகலா புவனேந்திரா 85


## மாணவர் பக்கம்


- எனது பாடசாலை - பே. தனுஷா 86-87
- தாய் - ந. கோபிஷா 88
- கடவுள் அழுவது எல்லோருக்குமே - மு.கோபிகா 89
- நெடுந்தீவு - ந. தனுஷிகா 90-91
- கல்விச் செல்வம் - இ. யனுஷா 92
- சந்தேசிக்காத வரை - ச. துஷாந்தி 93
- சூரிய சக்தியும் அதன் பயன்பாடும் - யோ. கனகரஞ்சினி 94-95
- அழுகை - ச. நளாயினி 96-98
- Delft - ந.யதூசினி 99
- கணினியில் அறிந்திருக்க வேண்டியவை - ப. புவிதா 100-102
- அறிவுக் கணைகள் - பா. மேகலா 103-105
- எமது கிராமத்தின் வரலாறு - பு. லக்ஸன்யா 106-107
- கற்க உதவும் காலையுணவு - ந. கணேஸ்வரன் 108
- விஞ்ஞானம் - கி. கபிலன் 109
- மூன்றெழுத்தில் வாழ்க்கை - பு. அபிராம் 110
- கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் - சோ. நிருசனா 111
- தெரிந்து கொள்ளச்சில தகவல்கள் - ச. மதுஷா 111
- யானை - ம. பிரதீப் 112
- மின்மினிப்பூச்சியின் ஒளிவீதம் இரகசியம் - சோ. பவித்திரன் 112
- பொது அறிவு - சோ.லக்ஷனா 113
- கல்வி - இ. நிதர்சன் 114-115
- பார் போற்றும் உத்தமர்கள் ஆசான்களே - த. நிசாந்தினி 116
- பூக்கள் - ச.யுவேந்தினி 117
- அதிசய வர்க்கம் எம் அன்னையர் வர்க்கம் - ச. தவனேசன் 118
- ஆசிரியர் - இ. நிகேதன் 119
- My School - ந. அனுஷாந் 120
- My Garden - ச. கிந்துஷன் 120
- The Elephant - சோ. லக்ஷனா 121
- My pet - ஜெ. துாபகரன் 121
- இலங்கை - வி. சோபனா 122


## பொது பக்கம்


- இது போதும் எனக்கு - சந்திரன் (ஆவூரான்) 123-124
- கூட்டுப்பிரார்த்தனைச்சபை விபரம் 125-126
- நெடுந்தீவு பா.ப.மாணவர் மன்றம் - கனடா ஆற்றும் சேவை விபரம் 127-128
- நன்றி நவில்கிறோம் 129

# ஆசிச் செய்திகள்





உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்
ஆதீனமுதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: நல்லூர், யாழ்ப்பாணம்.

## அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாசாலை தனது 86வது அகவை அடைந்திருப்பதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். சைவப் பண்பாடும் தமிழ் மொழி கலாசாரமும் நிறைவாக கொண்ட நெடுந்தீவுப் பிரதேசத்தில் நீண்ட காலமாக கல்விப் பணியாற்றிவரும் பாடசாலைகள் வரிசையில் சைவ சமய நெறி முறையை வளர்த்து வரும் இவ் வித்தியாலயம் கல்விக்காகவும் ஏனைய வளர்ச்சிக்காகவும் நீண்ட காலமாக பணியாற்றி வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத்தருகின்றது. மனித வாழ்வை உயர் நிலை அடையச் செய்வது கல்வி. கல்வியை நிறைவாக பெற்றுத் தருபவைகள் பாடசாலைகள். இதனையே வள்ளுவரும்,

"கண்ணுடையாரென்பார் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதார்" என

கல்வியின் பெருமையை உணர்த்துகின்றார். இதனை அறிந்த நம்மவர்கள் சமயத்தோடு சேர்ந்த கல்வியைக் கற்பதற்காகவே சமயம் சார்ந்த கல்விச் சாலைகளை உருவாக்கினர். இவ்வரிசையில் சைவப் பிரகாச வித்தியாசாலையின் பணி போற்றுவதற்கும் தேவைக்கும் உரியதாகும். இப் பணியை நிறைவாகச் செய்த அதிபர் ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம். இவ்வித்தியாசாலை பல்லாண்டு காலம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பல வளர்ச்சிகளைக் கண்டு பணியாற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக! பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் பல பிரதேசங்களில் இருந்தும் பணியாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு இறைவனின் ஆசி கிடைப்பதாக. பாடசாலை பல வளர்ச்சிகளை கண்டு சமய சமூகப் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று வெளிவரும் மலர் பாடசாலை சமூகத்திற்கும் வரலாற்று ஆவணமாகும். இதனை வெளியிடும் பாடசாலை சமூகத்தை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## வாழ்த்துச் செய்தி



யாழ் நகரில் இருந்து முப்பதுமைல் தொலைவில் ஆழ்கடலின் முத்தெனக் கொஞ்சிக் குலாவும் கடலலைகளின் மத்தியில் நெடுநகராய் பரந்து விரிந்து இயற்கை அழகுடன் கற்பகத்தருவையும் பல கிறிஸ்தவ, இந்து ஆலயங்களையும், கல்வி நிறுவனங்களையும் தன் பாரம்பரிய சொத்தாய்க் கொண்டு விளங்கும் இத்தீவகத்தில் அமைந்துள்ள யாழ் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய 86வது ஆண்டு நிறைவு மலரிற்கு வாழ்த்துக் கூறுவதில் யாழ் மறைமாவட்ட ஆயர் என்ற முறையில் பெருமகிழ்வடைகிறேன்.

இப்பாடசாலையானது முடிவின்றி நீண்டு செல்லும் போரினால் பல கஸ்ரங்களை அனுபவித்தாலும் தன்னகத்தேயுள்ள வளங்களைக் கொண்டு எதிர்காலக் கல்விமான்களை உருவாக்கும் பணியில் முன்னேறிச்செல்வதைக் காணும் போது என்மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. கத்தோலிக்க தமிழ்கூறும் உலகு வாழ்த்திப்போற்றும் பேரறிஞர் தமிழ்த்தூது வண. பிதா. தனிநாயகம் அடிகளார் வழிநின்று மேலும் பல கல்விமான்களை இம்மண்ணில் உருவாக்க இறைவரம் வேண்டி இப்பாடசாலை சமூகத்தை வாழ்த்தி ஆசி கூறி நிற்கிறேன்.

**பேரருட்திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ்.மறைமாவட்ட ஆயர்**

# Church of South India

**JAFFNA DIOCESE**

(Inaugurated - 1947)

**AMERICAN CEYLON MISSION**

(Founded in 1816)

**Diocesan Office** : Vaddukoddai, Sri Lanka. Tel : 94-(0)60-2212424 Fax : 94-11-2505805

**Colombo Office** : Bishop's Office, 36-5/2, Sinsapa Road, Colombo 6, Sri Lanka


Tel./Fax : 94-11-2505805 94-(0)777 563833 (Mobile)

**The Rt.Revd. Dr. Daniel S.Thiagarajah Ph.D.**
Bishop
Tel : 94-(0)60-2212424
e mail : bishopthiagarajah@gmail.com

**The Revd. I. Rajkumar**
Secretary
Tel : 94-(0)21-222-7831 (also fax)
e mail : jdcsirajkumar@gmail.com

**Mr. A. Arul Joseph**
Treasurer
Tel : 94-(0)774135203
e mail : treasurerjdcsi@gmail.com


## தென் இந்திய திருச்சபை பேராயர் வழங்கும் அருளாசி



நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 86வது வருட நிறைவையொட்டி அப்பாடசாலையினை வாழ்த்தி அருளாசி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

1922ம் ஆண்டில் உயர்திரு வேலுப்பிள்ளை அவர்களின் அருப்பாடுகளின் பேறாக உருவாக்கப்பட்ட இப்பாடசாலை இத்தனை வருடங்களாக இத்தீவகத்தின் கல்வி மேட்பாட்டுக்கு வழங்கிய பங்களிப்பினை அறிந்தவனாக இப்பாடசாலை தொடர்ந்தும் கல்வி வளர்ச்சிக்காக உதவும் ஒரு சிறந்த ஊடகமாகத் திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

காலாகாலமாக இப்பாடசாலை செய்து வந்த சேவையின் பேறாக இன்று இது 1 சி பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆண்டு 01முதல் உயர்தர வகுப்புக்கள் வரையாக வகுப்புக்கள் சிறப்பாக நடாத்தப்படுவது பாராட்டத்தக்கதாகும். குறிப்பாக, திரு. எஸ். சத்தியவரதன் அவர்கள் இப்பாடசாலையின் முதல்வராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலம் முதலாக இதனது வளர்ச்சி அதிகம் மெச்சத்தக்க ஒன்றாக இருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. முதல்வரது ஆக்கமும், சிறந்த தலைமைத்துவமும், அவரது தாலந்துகளும் இப்பாடசாலையின் துரித வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கின்றன என்றால் மிகையாகாது.

தீவக வலயத்தில் காணப்படும் 05பிள்ளைநேயப் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகக் காணப்படுவதுடன் முன்னணிப் பாடசாலையாகவும் தீவகத்தில் மிளிர்வதும் எமக்கு அதிக பெருமையைத் தருகின்றது. தொடர்ந்தும் இத் தீவகத்தின் தொன்றுதொட்ட கல்விச்சிறப்பைக் குன்றிடாது பரப்பிடும் சிறந்ததொரு ஊடகமாகத்திகழ தென்இந்திய திருச்சபை வாழ்த்தி நிற்கின்றது.

**பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா**

**பேராயர், தென் இந்திய திருச்சபை - யாழ். திருமண்டிலம்**

# துணைவேந்தர் வாழ்த்து



எங்கள் புலமைப் பாரம்பரியத்தின் காப்பரண்களாக கிராமந் தோறும் அமைந்துள்ள வித்தியாலயங்கள் விளங்குகின்றன. இந்த வகையில் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் தோற்றமும் வரலாறும் எங்கள் கல்வி - சமூக - பண்பாடு மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

சுய பண்பாட்டு விழிப்புணாவு என்பதே பெருந்தனமாக பிடியரிசித் தொண்டின் வழி தொடங்கிய பாடசாலை, அர்ப்பணிப்பான சைவ ஆளுமைகள் பலரினதும் அர வணைப்பில் வளர்ச்சி கண்டது.

"இந்து போட்" டின் ஆரம்பகால முதன்மைப் பாடசாலையாக துவங்கிய சைவப் பிரகாச வித்தியாலயத்தின் விழுதுகள்பலர்,தேசப்பரப்பெலாம் செழுமையாய் விரிந்துள்ளனர்.

சூழமைவின் மட்டுப்பாடுகளை, நகர்நோக்கிய இழுவைகளைத்தாண்டி சாதனைகளை நிலைநாட்டும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் தாபக அதிபர் வேலுப்பிள்ளை அவர்களிலிருந்து அதன் வரலாற்றுப் பெருமைகளை பதிவுகளாக்கும் இன்றைய அதிபர்வரை இப்பாடசாலையின் அதிபர்வரை இப்பாடசாலையின் மேம்பாட்டுக்காய் உழைத்த அனைவரையும் இந்நாளில் பாராட்டுவோம்.

வாணி விழாக்கால வேளையிலே மலரும் 86ம் ஆண்டு மலர் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அழியாப்புகழுக்கான சான்றாதாரமாய் நின்று நிலைத்திட எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்

**பேராசிரியர். என். சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone } 021-222 22 / 021-222 22

# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
# District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. } GA/JF/02

ඔබේ අංකය / உமது எண் / Your No. }

දිනය / திகதி / Date } 09.09.2008

## அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



"கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்பர். அழகிய சிறு தீவாம் நெடுந்தீவில் தனித்து விடப்பட்ட மக்கள் குழுமத்தின் அறிவின் வளர்ச்சியில் கடந்த 86ஆண்டுகளாக நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆற்றிவரும் பணி மறக்க முடியாதது.

நாட்டின் பல பாகங்களிலும், உலகின் பல்வேறு இடங்களிலும் வாழும் நெடுந்தீவு மக்களின் பசுமை நிறைந்த நினைவுகளில் இவ் வித்தியாலயத்திற்கென தனி இடம் உண்டு. புலால் உண்ணல் சைவசமயத்தில் மறுக்கப்பட்டிருந்தாலும் முற்றாக நிராகரிப்பட்ட தொன்றல்ல. அனைத்துமுண்ணியான மனிதனுக்கு விலங்குப் புரதம் வேண்டப்படு மொன்றாகவே காணப்படுகின்றது. இவ்வகையில் யாழ்.மாவட்ட மக்களின் போசணைமட்ட உயர்ச்சியில் நெடுந்தீவு மக்கள் ஆற்றிவரும் பணி பாராட்டிற்குரியது.

இச்சிறுதீவிற்கு வேண்டிய மருத்துவர்களை, பொறியியலாளர்களை, ஆசிரியர்களை, நிர்வாகிகளை, புத்திஜீவிகளை, தொழில்நுட்ப வல்லுனர்களை எனச் சிறந்த மனிதவளத்தைக் காலத்திற்குக் காலம் உருவாக்கி உவந்தளிக்க வேண்டிய பெரும் பொறுப்பைச் சுமந்துள்ள யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் அதன் ஏந்து பிரதேசத்தை முன்மாதிரிக் கிரமமாகக் கட்டியெழுப்ப வேண்டிய கல்விப்புல அறிவை நல்க வேண்டியது காலத்தின் தேவை எனலாம்.

"உள்ளத்தனையது உயர்வு" என வாழ்த்துகிறேன். வாழ்க.

**க.கணேஷ்**

**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**

**யாழ் / மாவட்டம்.**

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය
**Ministry Of Education, Cultural Affairs & Sports**
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council

கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝතයනගර්, ත්‍රිකුණාමලය.
**Kanniya Road, Varothayanagar, Trincomalee.**

website: www.np.gov.lk e- mail: npminedu@sltnet.lk

எனது இல. / මගේ අංකය / My No. NP/03/06/03/SEGR/6 உமது இல. / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date. 2008/09/11

## பரிசுத்தின செய்தி

1922ம் அண்டு நெடுந்தீவில் கல்விப்பணிக்கெனத் தொடங்கப்பட்ட இப்பாடசாலை 86ஆண்டு காலமாகத் தனது பணியைத் தொடர்ந்து செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஊர்மக்கள் ஆதரவும், சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் அரவணைப்பிலும் நொடியாது இருந்து பாடசாலை தற்போது 13ஆம் வகுப்பு வரையும் உள்ள 1C பாடசாலையாகப் பணி புரிகின்றது.

பாடசாலைகளில் நடைறெும் பரிசுத்தின நிகழ்வானது பெற்றோர் ஆதரவாளர்களின் ஒன்றுகூடலாக அமைவதனால் மாணவர்கள் அவர்கள் முன் கௌரவிக்கப்படும் போது ஒவ்வொரு மாணவரிடத்தும் தான் முன்னுக்கு வர வேண்டும் என்ற ஊக்கம் பிறக்கின்றது.

86ஆண்டுகள் கல்விப்பணி புரிந்ததை நினைவு கூறும் முகமாக பரிசுத் தினத்தன்று வெளியிடப்படும் இம்மலருக்கு எனது பாராட்டுக்கள்.

**இ. இளங்கோவன்**
**செயலாளர்**
**கல்வி பண்பாட்டலுவல்கள்**
**விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம், திருகோணமலை.**

பேரவைச் செயலகம்
கிழக்கு மாகாணசபை, திருகோணமலை.
සභා ලේකම් කාර්යාලය නැගෙනහිර පළාත් සභාව, ත්‍රිකුණාමලය
ASSEMBLY SECRETARIAT
EASTERN PROVINCIAL COUNCIL, TRINCOMALEE.

தொடர் இல
ඔබේ අංකය
Ref No:

எனது இல:
මගේ අංකය
My No:

# வாழ்த்துச் செய்தி



நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம் சைவச் சூழலில் சிறப்பான கல்வியை வழங்கி வரும் ஒரு கல்வி ஸ்தாபனம். இப் பாடசாலை அதிபர் திரு.ச. சத்தியவரதன் அவர்களின் பெருமுயற்சியினால் உருவான இந்நூல் வெளியீட்டில் எனது கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதில் பெருமையும் உவகையும் அடைகின்றேன்.

2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி பல தூரம் அலைகளில் பயணித்து கடல் சூழ்ந்த நெடுந்தீவுக் கிராமத்துக்கும் இப் பாடசாலைக்கும் வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் என்ற உத்தியோகபூர்வ ரீதியில் விஜயம் செய்து பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டது மறக்க முடியாத ஒரு நினைவு, அத்தருணம் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்ட குதூகலமான வரவேற்பையும் விருந்துபசாரத்தையும் இன்றும் உவகையுடன் நினைவு கூருகின் றேன்.

இப் பாடசாலை 1922ஆம் ஆண்டு ஸ்தாபக அதிபர் திரு. வேலுப்பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டு பல அல்லல்களுக்கிடையிலும் கல்விப் பணியைத் தொடர்ந்து இந்துசபை பிரமுகர் திரு. இராசரத்தினத்தால் கையேற்கப்பட்டு இந்துசபை பரிபாலனத்தில் வளர்ச்சி அடைந்தது. இன்று இப் பாடசாலை 13ஆம் தரம் வரை வகுப்புக்களைக் கொண்டு 1C கலவன் பாடசாலையாக தீவகத்தில் உள்ள முன்னணி பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. கல்வி நடவடிக்கைகளில் மட்டுமல்லாமல் விளையாட்டு போன்ற ஏனைய புறக்கிருத்திய நடவடிக்கைகளிலும் இங்குள்ள மாணவ மாணவியர் திறமைபெற்று விளங்குவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக துடிப்புடன் செயல்பட்டு வரும் அதிபர் திரு. ச. சத்தியவரதன் அவர்கள் அதிபர்கட்கு முன்னுதாரணமாக திகழ்பவர். பாடசாலையின் வளர்ச்சியே தனது மூச்சாகக் கருதி பல மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்றி உள்ளார். ஆசிரியப் பற்றாக்குறை, வளங்கள் பற்றாக்குறை, மத்தியிலும் அர்ப்பணிப்புள்ள ஆசிரிய ஆசிரியைகள் தமது சிறப்பான செயற்பாட்டால் இப் பாடசாலையை தீவகத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக மாற்றியுள்ளனர். அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இப்பாடசாலை மென் மேலும் சிறப்புற்று கல்விமான்கள் பலரை உருவாக்கி முன்னேற வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**ஆர். தியாகலிங்கம்,**
**செயலாளர் பேரவைச் செயலகம்**

# வாழ்த்துச் செய்தி



கல்வியறிவூட்டுவதோடு சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக தோற்றம் பெற்ற யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் தனது 86வது ஆண்டு நிறைவை யொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப் பாடசாலை தீவகக் கல்வி வலயத்தில் கடலலை தாலாட்ட வளம்மிக்க கிராமத்தில் செழுமையையும் அறிவொளியையும் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த(சா/த) பரீட்சைகளில் தன்னை சாதனைகளால் நிலை நிறுத்திக் கொண்டது மட்டுமல்லாது இப்பாடசாலை க.பொ.த(உ/த) இல் எல்லா மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்று 100% பல்கலைக்கழக அனுமதித் தகைமையை தொடர்ச்சியாகப் பெற்று அதனைத் தக்க வைத்துக் கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1922ஆம் ஆண்டு ஆரம்ப கல்வி வழங்கும் பாடசாலையாக உருவாகி இன்று க.பொ.த(உ/த) கலைப்பிரிவு கொண்ட 1C பாடசாலையாக தரம் உயர்ந்துள்ளமை இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டுகின்றது.

தீவக கல்வி வலயத்தில் பிள்ளைநேயப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் விளையாட்டுக்கள், தமிழ் மொழித்தினப் போட்டிகள் போன்ற இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் கோட்ட, வலய மட்டங்களில் சாதனை படைத்து சமூகத்திற்கு தன்னைப் புடம் போட்டு வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் போக்குவரத்து முதலான பல்வகைப்பட்ட சிரமங்களின் மத்தியில் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அவர்களின் சாதனைகளுக்கும் உறுதுணையாகவும் பின்புலமாகவும் நின்று காத்திரமான பங்களிப்புச் செய்த அதிபர், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சார்ந்த சமூகத்தினருக்கும் எனது பாராட்டுக்கள்.

எனவே இப் பாடசாலையின் செயற்பாடுகளையும் வளர்ச்சியையும் கண்டு பெருமிதப்படுவதுடன் 86வது ஆண்டு நிறைவு மலர் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகள்.

வரோதயநகர்,
திருகோணமலை.

**வீ. இராசையா**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்**
**வடமாகாணம்.**

# வாழ்த்துச் செய்தி



யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் தனது 86வது ஆண்டு நிறைவு மலரை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

தீவக வலயக் கல்விப்பணிப்பாளராக நான் கடமையாற்றிய காலத்தில் இப் பாடசாலையின் வளர்ச்சி கண்டு மகிழ்வுற்றேன். அதிபரின் அயரா முயற்சியால் இவ் வித்தியாலயம் மிகவும் குறுகிய காலத்தில் "1சீ" தரத்திற்கு உயர்ந்தது மட்டுமன்றி கல்வி அடைவு மட்டம், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பவற்றிலும் உயர்நிலை எய்திக் காணப்படுகின்றது.

இவ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியிற் பிரதம விருந்தினராக கலந்து கொண்டமை இன்றும் பசுமையான நினைவாக உள்ளது. இவ்விளையாட்டு விழா மூலம் இவ் வித்தியாலத்தின் உயர் தரத்தை உணர முடிந்தது.


சைவத் தமிழ் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்பதோடு, சிறந்த கல்வியையும், ஆளுமையும் வழங்கிவரும் இக்கலைக் கோவில் நெடுந்தூரம் கடலால் தனிமைப் படுத்தப்பட்டு, அதிகஸ்டப் பிரதேசத்தில் இயங்கினாலும் நகரப் பாடசாலைகளின் தரத்திற்கு எந்த விதத்திலும் குறைவற்ற நிலையில் சிறப்பாக இயங்குவது பாராட்டுக்குரியதாகும்.

இவ் வித்தியாலய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் அயராது பணியாற்றும் அதிபர் ஊக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இவ் வித்தியாலயம் மேலும் பல நூற்றாண்டுகள் சிறந்த கல்விப்பணியாற்றி மிகச் சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**V. மகேந்திரன்**
மாகாணத்திட்ட முகாமையாளர்
இடைநிலைக்கல்வியை நவீனமயப்படுத்தும்
செயற்றிட்டம் (SEMP)
வடக்கு மாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



நெடுந்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை தனது எண்பத்தாறாவது ஆண்டு நிறைவையொட்டி மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

ஓர் ஆரம்பப் பாடசாலையாகத் தோற்றம் பெற்ற இப்பாடசாலை இன்று ஓர் உயர்தரப் பாடசாலையாக வளர்ச்சி பெற்றமை மட்டுமல்லாது ஒரு சிறந்த பிள்ளைநேயப் பாடசாலையாக மிளிர்ந்திருப்பது அக நிறைவைத் தருகின்றது. மிகவும் கஷ்டமான பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் நிறைவான கல்வியை மாணவர்களுக்கு வழங்கி, சிறந்த பெறுபேறுகள் மூலம் மாணவர் சாதனையை வெளிப்படுத்தி வருகின்றது.


குறிப்பாக பாடசாலையை அதிபர் திரு.ச. சத்தியவரதன் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் அவரது வழிகாட்டலின் கீழ் சமூகத்தின் ஒத் துழைப்புடன் பாடசாலை புதுப்பொலிவு பெற்ற நவீன யுக மாற்றத்திற்கேற்ப பல்வேறு நல்ல மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு "எங்கள் பாடசாலை" என்ற உணர்வுடன் ஒரு நல்ல ஆரோக்கியமான கவிநிலையில் இயங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது.

மாணவர் உயர்விற்காய் தம்மை முழுமையாய் அர்ப்பணிக்கும் அதிபரையும் ஆசிரியர் குழாத்தினரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

இப் பாடசாலையின் பணி சிறப்புற தொடர இறையாசி வேண்டி பிரார்த்தித்து ஆண்டு விழாவும் மலர்வெளியீடும் சிறப்புற நடைபெற எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜி.வி. இராதாகிருஷ்ணன்**
**வலயக் கல்விப்பணிப்பாளர்**
**தீவகம், வேலணை.**

# வாழ்த்துச் செய்தி



இலங்கையின் வடபால் அலைகடலின் நடுவே அமைந்துள்ள அழகான தீவுக் கூட்டங்களில் நெடுந்தீவு புராதன சின்னங்களை உள்ளடக்கியதும் புவியியல் ரீதியாக வித்தியாசமான அமைப்பினைக் கொண்ட கிராமமாகும். அங்குள்ள மக்கள் பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் வந்தோரை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் முன்னிலை - யிலுள்ளவர்கள்.

இக் கிராமத்தின் மேற்குப் புறமாக அமைந்த நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம். அதிபர் சத்தியவரதனின் வருகையுடன் புதுப்பொலிவு பெற்று நவீன வசதி கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றுள்ளது. உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் இளம் ஆசிரியர்களின் சேவையும் இம் மாணவர்களை நோக்கி நகர்ந்துள்ளது.

நவராத்திரி காலத்தில் வெளிவரும் இவ்வித்தியாலயத்தின் 86வது ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன் வித்தியாலயம் மேலும் பல வளர்ச்சி பெறவும், மாணவர்களின் ஆற்றல் மிளிரவும் இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**ப. விக்கினேஸ்வரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

## யாழ். மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் தனது 86வது அகவையை பூர்த்தி செய்வதையிட்டும் அதனை நினைவு கூர்ந்து மலர் வெளியிடுவதனையிட்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பாடசாலை சமூகத்திற்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பசுத்தீவு எனப்போற்றப்படும் நெடுந்தீவில் 1922ம ஆண்டு முதல் மாணவர்களுக்கு கல்வி புகட்டி, வளமான, சமூகப் பொருத்தப்பாடுடைய மனிதர்களை உருவாக்குவதில் யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் தனக்கென தனியான இடத்தினை வகிக்கினறது. மக்களின் ஒத்துழைப்படனும் இந்து போட்டினது வழிப்படுத்தலுடனும் வளர்ச்சி பெற்ற இப்பாடசாலை இன்று தீவக கல்வி வலயத்தின் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்கின்றது.


சமூகத்திற்கு ஏற்புடைய பிரஜைகளை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்களிப்பு இன்றியமையாதது. அத்தகைய பணியினை சிறந்த முறையிலே இப் பாடசாலை மேற்கொள்கின்றது. நகரப் பாடசாலைகளை ஒட்டிய முகப்புத் தோற்றம், கணனிஅறை, அலுவலக செயற்பாடுகள், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஒன்று சேர்ந்து நெடுந்தீவுப் பிரதேசத்தில் கற்றல் கற்பித்தல், நிர்வாக செயற்பாடுகளுக்கு சிறந்ததொரு முன்மாதிரியாக காணப்படுகின்றது.

ஆளுமைத் திறன்மிக்க அதிபரின் விடாமுயற்சி, தன்னலம் கருதாத சேவை, ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பு, பெற்றோர் பழைய மாணவர், நலன் விரும்பிகளினது ஒன்றிப்புடன் இன்று பாடசாலை பௌதீக ரீதியாகவும், கல்வி அடைவுமட்டம், இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிலும் மிகச் சிறப்பான முறையில் மிளிர்ந்து கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது.

இப் பாடசாலை நூறு ஆண்டுகள் கடந்து தொடர்ந்து தனது பங்களிப்பினை நெடுந்தீவு வாழ் எதிர்கால சந்ததியினருக்கு வழங்கி ஆரோக்கியமான, உயிர்த்துடிப்புள்ள எதிர்கால சமுதாயத்தை உருவாக்க இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்**
**திட்டப்பணிப்பாளர்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# பாலைவனத்துப் பசுஞ்சோலை



நெடுந்தீவு வரண்ட பிரதேசம், அப்பிரதேசத்திற்கே உரித்தான மரங்கள், பற்றைகள், புல்பூண்டுகள் காணிகளையும், வீடு வளவுகளையும் எல்லைப்படுத்த கற்களால் ஆக்கப்பட்ட வேலிகள், பிரதான தொழிலாக மீன்பிடி, சொற்ப அளவிலான விவசாய முயற்சிகள், ஜீவனோபாயத்திற்கென பனையை மூலப்பொருளாகக் கொண்ட குடிசைக் கைத்தொழில்கள்.

வந்தாரை வாவென வரவேற்று உபசரிக்கும் அன்புள்ளம் கொண்ட ஊர்மக்கள், வசதிகள், வாய்ப்புக்கள் மற்றும் அண்மைய நெருக்கீடுகள் காரணமாக மக்கள் பலர் தீவை விட்டு வெளியேறிவிட ஊர்ப்பற்றும், மண் பற்றும் கொண்டு நீண்ட காலமாக வாழ்ந்து வரும் குடிமக்கள், இங்கு கல்விக் காலா நிலையங்களாக எட்டு அரசாங்கப் பாடசாலைகள். எமது பாடசாலைகள், எமது பிள்ளைகள் என்னும் உணர்வுடன் பணியாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள்.

கிராமத்தைக் கிழக்கு மேற்காக ஊடறுத்துச் செல்லும் ஒரேயொரு பிரதான வீதியின் மேற்கு எல்லையை அண்மியதாக நெழுவினி சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகே பாலைவனத்துப் பசுஞ்சோலையாக அமைந்துள்ளது நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் என்னும் கலா நிலையம். பிரதான வீதியாற் பயணிப்போர் அனைவரினதும் கவனத்தை ஈக்கக்கவல்ல, வெளித்தோற்றத்தைக் கொண்டுள்ள இப்பாடசாலையின் நுழைவாயில் அதற்கு எதிரேயுள்ள கலைமகள் உருவச்சிலை, அதன் அருகே அமைந்துள்ள சிறுவர் முற்றம் - பூந்தோட்டம் என்பன பாடசாலையின் முன்றிலை அழகு செய்கின்றன. உள்ளே என்றும் நிர்வாகக் கட்டமைப்புடன் திகழும் அதிபர் அலுவலகம், அதனைத் தொடர்ந்துள்ள நூலகம் - கற்றல் வள நிலையம், தொடராக அமைந்துள்ள நேர்த்தியான வகுப்பறைகள், விஞ்ஞான தொழிற் கூடங்கள், ஆசிரியர் ஓய்வறை என அவசியமான வளங்களைத் தன்னகத்தே கொண்டு இப்பாடசாலை மிளிர்கின்றது. இப்பாடசாலை ஆரம்ப, இடைநிலை, மற்றும் கலைத்துறை சார்ந்த உயர்கல்வியை சிறப்பான முறையில் வழங்கி வருகிறது. கல்வியின் பண்புத்தரவிருத்தி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் இப்பாடசாலை தொடர்ச்சியாகக் காட்டிவரும்

அபிவிருத்தி தொடர்பில் நாம் அனைவரும் பெருமிதம் அடையலாம். 2006 ஆம் ஆண்டில் இப்பாடசாலைக்கு விஜயம் செய்த மாகாண மட்ட மேற்பார்வைக் குழுவினர் இங்கு அவதானித்த பல சிறப்பம்சங்களை எம்மிடம் பகிர்ந்து கொண்டனர்.

இப்பாடசாலையின் விருப்புமிக்க கற்றல் சூழல், கல்வியே கருத்தனம் என்ற தூர நோக்குடன் பாடசாலையை நாடி வரும் மாணவச் செல்வங்கள், "சஹாரா என்றாலும் தார் றோட்டு என்றாலும் அங்கு நாம் தாமரையாய்ப் பூப்போம்"என்ற உணர்வுமிக்க அதிபர் - ஆசிரியர்கள், பாட சாலையின்பாற் பக்திமிக்க பெற்றோர்கள் என அனைவருமே இன்றும் என் நினைவிற் பசுமையாய் உள்ளனர். நெடுந்தீவு என்னும் கிராமம் நிலைத்து நிற்கும் வரை, இக்கலா நிலையமும் நிலைத்து நிற்குமென உறுதியாக நம்பலாம்.

**ஆ. ராஜேந்திரன்,**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம். யாழ்ப்பாணம்.**

# வாழ்த்துச்செய்தி



நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம் 86ஆண்டு கல்விப்பணியைப் பூர்த்தி செய்து அதனை நினைவுகூர்ந்து விழா எடுத்துக் கொண்டாடும் இவ்வேளையில் வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


நெடுந்தீவின் கல்விப் பாரம்பரியம் மிகவும் பழமை வாய்ந்தது. சமயம் பரப்புதலுக்காக கல்வியைச் சாதனமாகப் பாவித்த காலத்திலும் அச்சவால்களுக்கெல்லாம் முகம் கொடுத்து மாணவர்கள் தங்களின் சமய பாரம்பரியச் சூழலிலேயே கல்வியைப் பயில்வதற்கு களம் அமைத்துக் கொடுத்த மூத்த கல்விச் சாலைகளில் ஒன்றாக இப்பாடசாலையும் விளங்குகின்றது.

உள்ளூர் அன்பர்களின் நிலம் மற்றும் பொருள் உதவியுடன் தாபிக்கப்பட்டு இந்துமகா சபையால் பின்னர் பரிபாலிக்கப்பட்டு அரச பாடசாலையான இவ்வித்தியாலயம் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளது. இன்று பல்வேறு பௌதீக வளங்களையும், ஆசிரிய வளங்களையும் நிறைவாகப் பெற்று எமது மாணவர்கட்கு கிடைத்தற்கரிய கல்விச் செல்வத்தை மிகச் சிறப்பாக வழங்கி செழித்து சிறப்புற்று நிற்கின்றது. அத்துடன் விளையாட்டு, கலை என பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களை வழிப்படுத்தி வருவதை உணர்கின்றேன்.

இக் கல்லூரி சிறப்புற அயராது உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெற நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**ஜே. எக்ஸ். செல்வநாயகம்**
**பிரதித்திட்டப் பணிப்பாளர்**
**வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டம்**
**திருகோணமலை.**

## வாழ்த்துச் செய்தி



யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 86ம் ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் சைவ பாரம்பரியத்துடன் கல்வி பயில வேண்டும் என்ற பெரு நோக்குடன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் அதன் செயலதிபர் உயர்திரு இராசரத்தினம் அவர்களால் 1922ம் ஆண்டு பங்குனித் திங்கள் திறந்து வைக்கப்பட்டு முதல் அதிபராக எனது பாட்டனார் திரு. சினத்தம்பி வேலுப்பிள்ளை அவர்களிடம் கையளிக்கப்பட்டது. மேற்படி சங்கத்தின் முதலாம் இலக்கத்தில் பதிவு" செயய்பட்ட இவ் வித்தியாலயத்தை முதல் அதிபராகப் பதவியேற்ற திரு. வேலுப்பிள்ளை அவர்கள் அரும்பாடுபட்டு அதன் வளர்ச்சிக்காக தன்னலமற்ற சேவையை ஆற்றிக் கொண்டிருந்து ஐந்தாம் ஆண்டு நிறைவுறும் வேளையில், வித்தியாலயத்தின் அபிவிருத்தியை அறிந்த பலர் தங்கள் பிள்ளைகளை சேர்த்த பொழுது மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது. அப்பொழுது ஆசிரியர் ஆளணி தேவைப்பட்டது. சில ஆசிரியர்களை இணைத்து முன்னெடுத்த வேளையில் இவர்களுக்கான வேதனம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்திற் கொண்ட அதிபர் அவர்கள் தனது பெறாமகன் திரு. இராமநாதர் சுவாமிநாதன் அவர்களை அதிபராக நியமித்து விட்டு தனது அதிபர் பதவியைத் துறந்து யா/விக்டோரியாக் கல்லூரியில் ஆசிரியராகப் பொறுப்பேற்று தனது ஆசிரிய வேதனத்தை இவ் வித்தியாலய ஆசிரியர்களுக்கு வழங்கி தன்னலமற்ற சேவையாளனாகத் திகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது.

இதே போல் இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு பெரும் பங்காற்றியவர் யா/ நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் செல்வி இராசம்மா கணபதிப்பிள்ளை அவர்களின் தந்தையார் திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள். இவர் தனது சொந்தக்காணிகளை ஈடுவைத்து இப் பாடசாலையின் ஆரம்பக் கட்டிடத் தேவைக்கு செலவு செய்த உத்தமர்.

தொடர்ந்து இவ் வித்தியாலயத்தில் பணியாற்றிய அதிபர்கள் தங்கள் பணிகளைச் சிறப்பாக ஆற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

2001ம் ஆண்டு இவ்வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்ற திரு. சங்கரப்பிள்ளை சத்தியவரதன் அவர்கள் தியாக சிந்தையோடு தன்னலமற்ற சேவையை ஆற்றி வருவது பாராட்டுதற்குரியது. தரம் 5 புலமைப்பரீட்சைகள், க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பரீட்சைகள், இணைப்பாட விதான செயற்பாடுகள் அனைத்திலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று வருவது அதன் கல்வி வளர்ச்சியைத் துல்லியமாக அறியத்தருகின்றது.

க.பொ.த(சா/த) பரீட்சையில் நல்ல பெறுபேற்றினை பெற்றமையால், மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பல சிரமங்களின் மத்தியில் கல்வியமைச்சின் அனுமதியைப் பெற்று க.பொ.த (உ/த) தரத்தை ஆரம்பித்த பெருமை தற்போதைய அதிபரையே சாரும். கடந்த 2007ம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் அனைவரும் சித்தியடைந்தமை இதன் சிறப்பம்சமாகும்.

இவ் வித்தியாலயத்தின் கல்வி அபிவிருததிக்கு உறுதுணையாக இருக்கும் அதிபர், முழு மூச்சுடன் துணைபுரியும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் சகல வளர்ச்சியிலும் மேம்பாடடைந்து பிரகாசிக்க எல்லாம் வல்ல நெழுவினி சித்தி விநாயகர் பாதங்களை வேண்டி அமைகின்றேன்.

**வாழ்க வித்தியாலயம்! வளர்க அதன் கல்விப்பணி !**


**க. அரசரத்தினம்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**

கோட்டக் கல்வி அலுவலகம்,
நெடுந்தீவு.

# வாழ்த்துச்செய்தி



நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயததின் 86வது ஆண்டு நிறைவு நாள் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி-யடைகின்றேன்.

பௌதீக அமைவிடம் காரணமாக பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற போதிலும் பிரதேச மக்களின் அயராத உழைப்பினால் இப்பாடசாலை உயர்ந்து நிற்கின்றது.

எழில்மிகு வனப்புடன் காட்சி தரும் இப்பாடசாலை கல்வி வளர்ச்சியிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் உயர்ந்திட வழிசமைத்தவர்கள் அதிபரும் ஆசிரியர்களும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய அதிபர் திரு. ச. சத்தியவரதன் அவர்களின் நேரிய சிந்தனை. திட்டமிடல், ஆர்வம், ஆற்றல் ஆகியவற்றின் வெளிப்பாடு, வழிகாட்டலும், ஆசிரியர்களின் கூட்டுணர்வும், ஊர்மக்களின் பங்களிப்பும், இணைந்து பிள்ளைநேயப் பாடசாலையாக முன்னோக்கி செல்வது பாராட்டுதற்குரியது.

**திரு. ஐ. புவனேந்திரன்**
*M.Phill in Ed, PGD in Education(Merit) S.L.E.A.S III*
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்,**
**தீவகம் - வேலணை.**

# வாழ்த்துச் செய்தி



தீவகக் கல்வி வலயத்தில் உள்ள ஏழு தீவுகளில் ஒரு தீவாகிய நெடுந்தீவில் இயங்கும் எட்டுப் பாடசாலைகளில் யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயமானது ஓர் உயர்தர வகுப்பு பிரிவுகளைக் கொண்ட சிறப்பான பாடசாலையாக மிளிர்கின்றது. இப் பாடசாலையினுடைய வளர்ச்சி பல முனைகளிலும் கடந்த ஒரு தசாப்தமாக முனைப்புப் பெற்று வருவதனை இனங்காணக் கூடியதாகவுள்ளது. பாடவிதானம், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலைக் கவின் நிலை, வளப் பெருக்கம் மற்றும் இன்னோரன்ன செயற்பாடுகளினூடாக தனி முத்திரை பதித்து வருகின்றது. மேலும் பாடசாலைச் சமூகத்தினர்களை தன்னுள் உள்ளீர்த்து பாடசாலை மேம்பாட்டிற்கு அவர்களது அர்ப்பணிப்பான உதவிகளைப் பெற்று முன்னணிப் பாடசாலையாக இனங்காட்டுவது விசேட இயல்பாக காணப்படுகிறது. தீவகக் கல்வி வலயத்தில் இனங்காணப்பட்ட மிகச் சிறப்பான, ஐந்து பிள்ளை நேயப்பாடசாலைகளுள் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயமும் ஒன்று என்பது எமது மதிப்பீட்டு ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தனை வளர்ச்சிக்கும் வேராக நின்று உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என்றும் பாராட்டுக்குரியவர்கள். இன்று இப்பாடசாலை தனது 86ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடும் மலரை வாழ்த்துவதில் மன மகிழ்வடைகின்றேன்.

**திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ்,**

**பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி**

**தீவக கல்வி வலயம்,**

**வேலணை**

# நூல் வெளியீடு



யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், தனது 86ஆவது அகவை நிறைவையொட்டி வெளியீடு செய்யப்படும் நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சரஸ்வதி பூஜை தினத்தில் இந்நூல் வெளியீடு செய்யப்படுவது மிகவும் பொருத்தமானதே.

நெடுந்தீவின் மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையானது சைவ பாரம்பரியங்களின் பிறப்பிடமாக திகழ்வதுடன் மாணவ செல்வங்களை சைவ பாரம்பரியங்களுடன் வளர்த்தெடுக்கும் உன்னதமான பணியில் ஈடுபட்டிருப்பது சிறப்பான விடயமாகும். அத்துடன் கல்வி, சுகாதார பழக்க வழக்கங்களில் மாணவர்களை நெறிப்படுத்தி சிறந்ததோர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் இப் பாடசாலையானது விநாயகப் பெருமானின் நல்லாசிகளுடன் மேலும் தனது பணியில் சிறப்புற்று விழுங்கும் என்பது திண்ணம்.

**சி. மகேஷ்வரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**திட்டமிடலும் மீளாய்வும்**
**தீவக கல்வி வலயம்**
**வேலணை.**

# வாழ்த்துச்செய்தி



நெடுந்தீவுக் கிராமத்தின் மேற்குப் பகுதியானது நீண்ட நெடுங்காலமாக தமிழும், சைவமும் தளைத்தோங்கிய பிரதேசமாகும். சிறந்த பண்பாட்டையுடைய இப்பிரதேச மக்களின் கல்வியூற்றாகத் திகழ்வது சைவப்பிரகாச வித்தியாலயம் என்பது அனைவரும் அறிந்ததே. இவ்வித்தியாலயம் இப்பிரதேசப் பெரியோர்களின் பெரு முயற்சியால் 1922ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகு அவாம்
பேரறி வாளன்திரு"

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க இவ் வித்தியாலயம் சேவையாற்றி வந்துள்ளது. அதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகளின் தன்னல மற்ற பணி என்றும் மறத்தற்கரியதும் போற்றுவதற்குரியதுமாகும். பல்லாயிரக் கணக்கான மாணவச் செல்வங்களின் அறிவுக்கண்ணைத்திறந்து நல்வழி காட்டிய பெருமையுடன் 86ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ் வேளையில் வித்தி யாலயத்தின் கடந்த காலப்பணி களை எண்ணிப் பெருமையடைகின்றேன்.

கல்வியானது அறியாமை போக்கி மாணவர்களிடத்து அறிவு, செயற்றிறன், நல்மனப்பாங்கு என்பவற்றை சீரிய முறையில் வளர்த்து ஒழுக்க சீலர்களான நற்பிரசையாக அவர்களை உருவாக்க வேண்டும். அத்தகைய உயரிய பணியை சிறப்பாக ஆற்றிவரும் இவ்வித்தியாலயம், தரம் 01 முதல் தரம் 13வரை வகுப்புக்களைக் கொண்ட முழுமையான கல்லூரியாக இன்று மிளிர்கின்றது. கடந்த ஆண்டுகளில் சில மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகியுள்ளனர் என்ற செய்தி மகிழ்ச்சிக் குரியதே.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய போது இவ்வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டேன். அவ்வேளை அண்மைக் காலத்தில்

பாடசாலையின் உன்னத வளர்ச்சி கண்டு பிரமித்துப் போனேன். புதிய கட்டிடங்கள், நூலகம், விளையாட்டு மைதானம் என்பனவற்றுடன் பாலைவனத்துப் பசுஞ்சோலையாக கற்றலுக்குரிய சூழலுடன் பாடசாலை புனிதமாகக் காணப்பட்டமை பாராட்டிக் குறிப்பிட வேண்டியதாகும். இத்தகைய உயரிய நிலைக்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்களின் கூட்டு முயற்சியே காரணமென அறிந்தேன். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கு இதுவோர் நல்லுதாரணமாகும்.

அதிபர் திரு. ச. சத்தியவரதன் அவர்களது விடாமுயற்சி அவர் மாணவர்களின் முன்னேற்றத்தில் கொண்ட அக்கறை, தாய் மண்மீதும் கொண்டுள்ள பற்று என்பனவற்றை நான் நெடுந்தீவு கோட்டக்கல்வி அலுவலராக பணியாற்றிய வேளை நன்கறிவேன். மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணாக அவரது பணியிருக்கும். "தினை விதைத்தவன் தினையறுப்பான்" என்பதற்கிணங்க பயன்கருதாப் பணியால் அவரும், பாடசாலையும் மென்மேலும் உயர்வுபெறும் என்பது உறுதி.


மிகக் கஷ்டமான இப்பிரதேசத்தில் பல்வேறு தேவைகளையுடைய மாணவர்களின் உயர்ச்சிக்கு ஆதாரமாகவிருந்து கல்வியறிவுடைய சமுதாயத்தை உருவாக்கிய இவ்வித்தியாலயத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பாராட்டுகின்றேன். வருடாந்தப் பரிசளிப்பு விழா, சிறப்பு மலர் வெளியீடு, வாணி விழா என முப்பெரும் நிகழ்வுகள் அரங்கேறவுள்ள இவ்வேளையில் அனைத்து நிகழ்வுகளும் சிறப்புற நல்வாழ்த்துக்களை கூறி மகிழ்கின்றேன்.

' கல்விப்பணியே கடவுட்பணி"

**சோ. தில்லைநாதன்** ***J.P***

***B.A.,Dip.in.Edu.,SLPS.I***

**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் – கனடா**
**OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA**
**Reg:1585865**



நெடுந்தீவு மேற்கு சைவபிரகாச வித்தியாலயத்தின் 86வது ஆண்டு நிறைவு விழா நடைபெற இருப்பதையிட்டும், அதன் நினைவாக ஆண்டு மலர் வெளியிடுவதையுமிட்டு அதற்கான எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நான் சைவபிரகாசவித்தியாலயத்தில் கல்வி கற்காவிட்டாலும், அப்பாடசாலையின் சிறப்புக்களையும், அதன் சேவைகளையும் அங்கு கல்விகற்ற பழைய மாணவர்களாகிய பல பெரியோர்களிடம் இருந்து அறிந்து கொண்டேன். அன்றைய காலகட்டத்தில் நெடுந்தீவு மேற்கில் ஓர் சைவப் பாடசாலை அவசியம் என்பதை உணர்ந்து 1922 ஆம் ஆண்டு இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஆரம்ப கால அதிபர்களும், ஆசிரியர்களும் தம்மை அர்பணிந்திருந்தார்கள். அவர்களில் குறிப்பிடதக்கவர் அமரர் சு.சுவாமிநாதன் ஆசிரியர் அவர்கள் என்றால் மிகையாகாது. இவரின் சேவைக்காலம் குறுகியதாக இருந்தாலும் அக்காலம் பொற்காலம் எனலாம். பாடசாலையின் கட்டிடத் தேவைகளுக்கு பொதுமக்கள் பலர் பொருள், பண உதவிகள் வழங்கினார்கள்.

இங்கு கல்விகற்ற பலர் ஆசிரியர்களாக, அதிபர்களாக, பண்டிதர்களாக, சமயப் பெரியோர்களாக வெளிநாடுகளிலும் தீவகத்திலும் வாழ்ந்து வருகின்றனர். எமது தீவகத்திற்கு அவர்கள் தங்களால் ஆன பங்களிப்புகளை செய்து வருகின்றனர் என்பதை அறியத்தருவதில் பெருமைப்படுகின்றோம். அவர்களை பாராட்டுகின்றோம்.

நெடுந்தீவின் கல்வி வளர்சிக்கு உழைத்த கல்விமான்களில் உயர்திரு எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களும் ஒருவர். இன்றைய நிலையில் இப்பாடசாலையின் அதிபர் திரு ச. சத்தியவரதன் அவர்கள் பாடசாலையின் வளர்சியிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் பங்கு ஆற்றிவருகின்றார். தற்பொழுது சோலையாக காட்சியளிக்கும் பாடசாலை புதிய கட்டிடங்கள் மற்றும் புதிய விளையாட்டு மைதானம் ஆகியவற்றையும் கொண்டு கம்பீரமாக நிற்கிறது. தற்பொழுது நடைறெும் 86 ஆம் ஆண்டு விழாவும், மலர் வெளியீட்டுடன் கூடிய பரிசளிப்பு விழாவும் அதிபர் அவர்களின் சிந்தனையில் உதித்தவைதான் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எமது தீவகத்திற்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இவரது சேவை தொடர வேண்டும் என இறைவனை வேண்டி நிற்கின்றேன். அவரிற்கு உறுதுணையாக நிற்கும் பாடசாலை சமூகத்திற்கு எனது வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 86 ஆவது ஆண்டு நிறைவு விழாவையும், மலர் வெளியீட்டையும் கொண்டாடும் பாடசாலைச் சமூகத்தையும் அங்குள்ள மக்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க எம்மக்கள், வளர்க எம் மாணவ சமூகம்

**சுப்பிரமணியம் நடராசா - தலைவர்**
**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா**

## நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் எண்பத்தாறாவது

# ஆண்டு நிறைவு விழாவிற்கு என் இனிய வாழ்த்துக்கள்



"ஆயிரங்கோடி புண்ணியமாகும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" எனப்பாடினான் ஒரு புலவன். அந்த கையிலே 1922ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு. இற்றைக்கு எண்பத்தாறு ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ ஆயிரக் கணக்கான மாணவர்களின் அறிவுக் கண்களைத்திறந்து கல்வி புகட்டி வரும் பாடசாலைகளில் ஒன்றுதான் நெடுந்தீவு மேற்குச் சைவப் பிரகாச விததியாசாலை. நெடுந்தீவிலே சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காகச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் முதலில் ஆரம்பிக்கப்பட்ட உயர் பாடசாலைகளில் முதன்மையானது இப்பாடசாலை. இப் பாடசாலையை அமைப்பதிலும், அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதிலும் பல நெடுந்தீவுச்சைவப் பெரியார்களும், அரசியல்வாதிகளும் முன்னின்று உழைத்தார்கள். இப் பாடசாலை இந்து பரிபாலன சபையால் நடாத்தப்பட்டுப் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்று அரசாங்கப் பாடசாலையாகத் தற்போது நடைபெற்று வருகிறது.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இங்கு கடமையாற்றிய எல்லா அதிபர்களும் சிறப்பாகப் பணியாற்றினார்கள். இங்கு கற்பித்த ஆசிரியர்களும் சைவமும் தமிழும் வளர அருந் தொண்டாற்றினர். இன்று இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிவரும் துடிப்பு மிக்க இளைஞரான திரு. சங்கரப்பிள்ளை சத்தியவரதன் அவர்களும், அவரோடு கடமையாற்றிவரும் ஆசிரியர்களும் பல கஷ்டங்களின் மத்தியிலும் சிறப்பாக கடமையாற்றி வருவது பாராட்டத்தக்கதாகும். யான் 2004ஆம் ஆண்டு நெடுந்தீவிற்குச் சென்றிருந்தபோது அதிபர் ஆசிரியர்களின் சேவைத்திறனையும், பாடசாலையின்முன்னேற்றத்தையும் பார்த்து வியந்தேன்.

இப் பாடசாலையில் யானும் ஆசிரியராகக் கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணிப் பெருமையடைகிறேன். 1965ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டுவரை இப்பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றினேன். கிட்டத்தட்ட ஏழுவருடங்களாக உதவியாசிரியராகப் பல வெளி மாவட்ட ஆசிரியர் களோடும். வெளியூர், மலைநாடு,ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர் களோடும்.எனது தாயகத்திலிருந்து 200மைல்களுக்கப்பாலுள்ள இறக்குவானை சென்யோன்ஸ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய எனக்கு, எனது சொந்த ஊரிலுள்ள இப்பாடசாலையில் பணி புரிவது ஒரு புதிய உத்வேகத்தையும் மகிழ்ச்சியையும் தந்தது. அக்காலம் என் வாழ்க்கையிலே பல திருப்பங்களை ஏற்படுத்தியது. யான் இப்பாடசாலையில் கடமையாற்றத் தொடங்கிய பொழுது அங்கிருந்த ஆசிரியர்கள் யாவரும் ஒரு குடும்ப உறவினர்களாகவே காணப்பட்டனர். அவர்கள்காட்டிய அன்பும்,சேவை மனப்பான்மையும் என்னை மிகவும் கவர்ந்தன. அவர்களின் குடும்பத்திற்குள்ளேயே எனது திருமணமும் நிகழ்ந்தது. அதனால் யானும் அவர்களின் நெருங்கிய குடும்ப உறவினனானேன். இப்பாடசாலையின் வரலாறு பற்றி

யான் எழுதிய "நெடுந்தீவு மக்களும் வரலாறும்" என்ற நூலிலும் குறிப்பிட்டுள்ளேன். அப்பொழுது எமது குடும்ப உறவினரான அதிபர் அமரர் க.வேலுப்பிள்ளை அவர்கள் அங்கு அதிபராகவிருந்தார்.அவரும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகச் சிறப்புடன் பணியாற்றினார். அவருடன் அமரர்களான எனது மாமனார் பண்டிதர். ஆ. சுப்பிரமணியம், அவரின் தமையனரான ஆறுமுகம் கணபதிப்பிள்ளை அதிபரின் மனைவியாரான, திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை மற்றும் திருமதி கமலம் கந்தையா, இவர்களுடன் தற்போது இளைப்பாறிய ஆசிரியரான திருமதி இலட்சுமி பேரம்பலம் ஆகியோர் ஆசிரியர்களாகவிருந்தனர். இவர்கள் அனைவரும் நெருங்கிய உறவினர்கள், அது மட்டுமன்றிப் பாடசாலையின்வளர்ச்சிக்காகவும் மணவரின் கல்விக்காகவும் மிகச் சிறப்பாகவும் பணியாற்றினர்.

அக் காலத்திலே அதிபர், ஆசிரியர்களின் சிறந்த ஒத்துழைப்போடு ஒரு சிறந்த விஞ்ஞானப் பொருட்காட்சியை நடாத்தினோம். அது மட்டுமன்றி அப்பாடசாலையின் அயலிலேயுள்ள நெழுவினி விநாயகர் ஆலய வெளிவீதியிலேயுள்ள பரந்த வெளியிலே, முதல் முதலாக இல்ல விளையாட்டுப் போட்டியை, யான் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவிருந்து ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் வெகு சிறப்பாக நடத்தினோம். அத்துடன் முதல்முதலாகச் சாரணர் இயக்கத்தை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கத் தொடக்கி வைத்தேன். இவற்றோடு அக்காலத்தில் ஐந்தாந் தரப் புலமைப்பரீட்சை வகுப்பில் பல மாணவர்கள் புலமைப்பரிசில் பெறுவதற்குத் தெரிவு பெற்றனர். அவர்களில் அப்போது மாணவிகளாகவிருந்த டானியேல் சாந்தி, செல்லத்துரை ரதிதேவி, வேலுப்பிள்ளை பரமேஸ்வரநாயகி ஆகியோர் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மீண்டும் G.C.E(O/L) பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்ற வைத்தோம். இவையாவும் என்மனதில் இன்றும்பசுமையான நினைவுகளாகத் திகழ்கின்றன.

இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதால் தான் ஆரம்பத்தில் பல மாணவர் தமிழ் மொழிமூலம் உயர்கல்வியைப் பெறக் கூடியதாகவிருந்ததோடு, சைவசமயமும் அக்காலத்தில் வேகமாகப் பரவிய பிறசமயங்களால் நிலைகுலையாது வளர்ச்சி பெற்றது. இப்பாட சாலையிலே கற்ற பல மாணவர்கள் இன்று உலகெங்கணும் சிறந்து விளங்குகிறார்கள். எனவே நெடுந்தீவிலே மகாவித்தியாலயம் வருவதற்கு முன்னரும் தற்போதும் சைவ மாணவர்கள் சமயத்தையும், தமிழையும் கற்க இப்பாடசாலை ஆற்றிவரும் சேவை அளப்பரியதாகும். ஆகவே இப் பாடசாலையின் எண்பத்தாறாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்த அதிபர், ஆசிரியர், மாணவர்களைப் பாராட்டுவதோடு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலை மேலும் உயர்வு பெற்று சிறந்துவிளங்க நெழுவினிப் பிள்ளயையார் அருள் பாலிப்பாராக!

**கலாநிதி எஸ். சிவநாயகமூர்த்தி**

**முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் - கனடா**

# செயலாளரின் வாழ்த்துச்செய்தி



நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ள சைவப் பிரகாச வித்தியாலயம் 1922ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 86ஆண்டுகளாகின்றன. இப்பாடசாலை முதன் முறையாக ஆண்டுவிழா கொண்டாடும் இவ்வேளையில் பல அசிரியர்களையும், பண்டிதர்களையும், கல்விமான்களையும் உருவாக்கிய பாடசாலைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். பாடசாலை அதிபர் திரு.சாங்கரப்பிள்ளை சத்தியவரதன் அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து உதவிய ஆசிரியர்களுக்கும். நெ.பா.ப.மா.மன்றத் தலைவர் S.P. அருளப்புவும் சக உறுப்பினர்களும் மலர் வெளியிட ஒத்துழைப்பு வழங்கியதையிட்டு அவர்களையும், பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்விழா சிறப்புற நடைபெற வேண்டுமென நெழுவினிப் பிள்ளையாரை வணாங்கி நிற்கின்றேன்.

நன்றி

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**


**கனடா**

**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா**

**OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA**

**Reg:1585865**

# நிதியாளரின் வாழ்த்து



பார் போற்றும் பசுந்தீவு என்று சொல்லப்படுகின்ற நெடுந்தீவில் நெழுவினி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது சைவப்பிரகாச வித்தியாலயம். இப்பாடசாலை 1922இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று 87ம் அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கின்றது என்பது பெருமைக்குரியது. ஆனால் இன்று வரை ஆண்டு விழா காணாதது என்பது மனவருத்தத்திற்குரியதொன்றாகும். இப் பாடசாலையின் பெருமையினைப் பலர் அறிவார்கள். இங்கே கற்ற எத்தனையோ பேரறிஞர்கள் புத்தி ஜீவிகள் , கல்வி மான்கள், பண்பாளர்களை இக்கலைக் கோவில் உருவாக்கி உள்ளது.

இதற்கு எல்லாம் சிகரம் வைத்தால் போல் இன்று பாடசாலையின் அதிபர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன் இருக்கின்றார். இவரின் சிறந்த செயல்பாட்டினாலும் ஆளுமையினாலும் அயராத ஊக்கத்தினாலும் சக ஆசிரியர்களின் உதவியுடனும் இப்பாடசாலையின் பழைய மாணவன் இன்று கோட்டக் கல்வி அதிகாரி கனகராசா அரசரட்ணம் அவர்களின் ஆசியுடன் நெ.பா.ப.மா.மன்ற தலைவர் எஸ்.பி.அருளப்புவும் சக அங்கத்தவர்களின் மலர் வெளியீட்டிற்கான ஆதரவுடன் இன்று விழா காண்பதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வேளையில் எம்மக்களுக்கு உதவி வழங்கும் கனடா வாழ் எம் உறவுகளுக்கும் இதய நன்றிகளை நவில்கின்றேன்.

இக் கலைத்தாய் மென்மேலும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு தீவகத்தின் முதல்தரப் பாடசாலையாக மிளிர வேண்டும் என நெழுவினி வினாயகர் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

**சின்னத்தம்பி சண்முகநாதன்**

**கனடா**

## பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் எண்ண அலைகள் ....



யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயமானது. இந்து சமய விழுமியங்களைக் கட்டியெழுப்பும் உள்நோக்குடன் நான்கு ஆசிரியர்களுடன் பிடியரிசி பெற்று அமைக்கப்பட்டதென முன்னோர்கள் கூறக் கேட்ட இவ்வித்தியாலயம் இன்று 86 ஆண்டுகளாக வீறு நடை போட்டு வருகின்றதெனில் இதன் தேவையும், சேவையும் அளப் பெரியதாகும்.

எனது இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்கும் தொடர்ந்து ஆசிரியப் பணியை மேற்கொள்வதற்கும் அடிகோலித்தந்த இவ்வித்தியாலயத்தில் இன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளாராகவும் உள்வாங்கப்பட்ட வகையில் சிலவரிகள் எழுத முனைகின்றேன்.

இப்பிரதேசத்தினுள் 99 வீதத்திற்கும் மேலான இந்து மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையானது, மாணவர்கள் ஊடாக ஆலயக் கூட்டுவழிபாடுகள், நால்வர் குருபூசைகள், நவராத்திரிவிழா, கந்தசஷ்டி பூசைகள் போன்றவற்றினை நடாத்தி ஆன்மீக நெறியை வளர்த்து அன்றைய நோக்கின் உச்சியை எட்டியுள்ளது என்ற பெருமையைப் பெறுகின்றது எனலாம்.

மேற்குப் பகுதி மாணவர்களின் கல்விப்பசி போக்க அமைக்கப்பட்ட போதிலும் உயர்கல்வி பெற 4km தூரம் வரை செல்ல வேண்டியிருந்த நிலையில் தனது அயராத உழைப்பினால் இப்பகுதி மாணவர்களுக்கான உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் உடல் உள ஆரோக்கியத்தைப் பேணும் நோக்கில் சிறந்த முறையில் மெய்வன்மைப் போட்டிகளை நடாத்துவதற்கான விளையாட்டு மைதானத்தைப் பெற்றுள்ளதுடன் சிறுவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழி சமைத்துக் கொடுக்கும் முகமாக விளையாட்டு முற்றத்தினையும், சுய கற்றலுக்கான நூலகச் செயற்பாடுகளையும் பரந்து விரிந்த செயற்பாட்டுடனான வகுப்பறைகளையும், நவீன தொழிநுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ள கணனிசார் பயிற்சிகளையும். மாணவர்களுக்கு வழங்குவதுடன் குடிநீர் வசதிகளும் மின்சார வசதிகளும் கிடைக்கப்

அச்சூழலைப் பாதுகாக்கும் சுற்று மதில்கள் என நகர்ப்புறப் பாடசாலை ஒன்றிற்கு நிகராக வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் இவ் வித்தியாலயம் போற்றப்பட வேண்டியதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

மாணவர்கள் சார் அனைத்துச் செயற்பாடுகளிலும் சாதனைகளையே படைத்து வரும் இவ்வித்தியாலயத்தின் பெருமையானது தேசப்பற்றும், தியாக மனப்பாங்கும் அர்ப்பணிப்பும், தளராத நம்பிக்கையும், அயராத உழைப்பும் ஒருங்கே கிடைக்கப் பெற்ற தற்போதைய அதிபரையே சாரும். அவரது இந்த முயற்சிக்கு பக்க பலமாக இருந்து தோளோடு தோள் கொடுத்து உழைத்துவரும் ஆசிரியகுழாம் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இப்பிரதேச மாணவ சமுதாயத்திற்கு கிடைத்த இவ் அரும்பெரும் கொடையைப் பயன்படுத்தி தொழிற்கல்வியுடன் வாழ்நாள் முழுவதற்குமான வாழ்க்கைக் கல்வியையும் பெற்று இச் சமுதாயத்தின், பிரதேசத்தின், நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றி வித்தியாலயத்தினதும், கிராமத்தினதும் பெயரை நிலை நாட்ட வேண்டுமென உளமார வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**திருமதி. க. நடராஜலிங்கம்**

**பா. அ. ச. செயலாளர்**

**யா/ சைவப்பிரகாச வித்தியாலயம்**

# இதழாசிரியரின் உள்ளத்தில் இருந்து....



யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பாடசாலைகளை நிறுவினார். இக்கால கட்டத்திலே 1922ம் ஆண்டு நெடுந்தீவுக் கிராமத்தில் சிறிய கொட்டிலாக திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட எமது வித்தியாலயம் இன்று 86வது அகவையினை நிறைவு செய்கின்றது. இந்நிலையில் நாம் எம் அன்னைக்கு இச்சஞ்சிகையை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

மாறிவரும் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய ஒழுங்குபடுத்திய அறிவினை மாணவர் சமூகத்துக்கு அளித்து செயற்றிறன் கொண்டதும் ஆளுமை நிறைந்ததுமான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதில் காலங்காலமாக எமது பாடசாலை தளர்வில்லாத முயற்சியில் வெற்றிகள் பெற்றுள்ளது.

"மக்கள் சேவையே மகேசன் சேவையென" வீரத் துறவி விவேகானந்தர் கூறிய கருத்துக்கமைய மக்களுக்கு கல்வி புகட்டுவதே மகத்தான சேவையெனச் செயற்படும்நல்லாசிரியர் பணியினால் மாணவர்சமுதாயத்தின் கல்விக்கான திறக்கப்படுகிறது. பூரணத்துவம் பெற்ற மனிதனின் உள்ளார்ந்த சக்தியை வெளிப்படுத்துவது கல்வியாகும். ஒவ்வொரு தனிமாணவனது வளர்ச்சியினால் சமுதாயம் எழுச்சி பெற்று பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பண்பாட்டிலும் மேலோங்கி நிற்பதற்கு கல்வியே காரணமாகும்.

எமது வித்தியாலயத்தின் வரலாற்றில் இம் மலர் வித்தியாலய வளர்ச்சியையும் எதிர்கால ஒளிக்கீற்றையும் சுட்டி நிற்கின்றது. சைவத்தையும் தமிழையும் வளர்க்க வித்தியாலய ஸ்தாபகரின் நினைவுகளை செயல்படுத்த சந்ததி சந்ததியாக திடசங்கற்பத்துடன் உறுதிகொள்வோம். நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய எம் அன்னைக்கு தொண்டாற்ற நாம் அனைவரும் திரள்வோமாக.

நாம் இவ்மலரினை வெளியிட எண்ணிய போது இதற்கான நிதித் தேவையினை ஈடு செய்வதற்காக நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் (கனடா) அவர்களை நாடியபோது எந்தவித மறுப்பும் இன்றி மலருக்கான நிதியினை வழங்கினர். அவர்களுக்கும் பாடசாலைச்சமூகத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இம்மலர் செம்மையுற வாழ்த்துச் செய்திகளையும் ஆக்கங்களையும் தந்துதவிய கல்விமான்கள், பெரியோர்கள், மதகுருமார்கள், மற்றும் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவச்செல்வங்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கும் மலரை பிரசுரித்த கங்கை பிறின்டேர்ஸ் தாபனத்தார் அனைவருக்கும் இந்த இடத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

**ந. செந்தூரன்**
இதழாசிரியர்

# அதிபரின் எண்ணத்தில் இருந்து.....

நெடுந்தீவின் குல தெய்வம் நெழுவினி சித்தி விநாயகரின் தெய்வீக ஆட்சி நடைபெறும் ஆலயத் திற்கு அருகில் "பிள்ளையார் கோவில் பள்ளிக் கூடம்" என்னும் செல்லப்பெயரோடு அமைந்து காணப்படும் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் தரம் 01முதல் 07வரையான வகுப்புக்களைக் கற்ற ஞாபகம் இன்றும் பசுமையாக இருக்கின்றது. "ட" வடிவக் கட்டிடம், அதிபர் அமரர் வேலுப்பிள்ளை, ஆசிரியர்கள் அமரர்கள் திருமதி வே. புஸ்பராணி, திருமதி காமாட்சி கந்தையா, மற்றும் திருமதி. இலட்சுமி, பேரம்பலம், போன்ற ஆரம்ப ஆசிரியர்கள் இன்னும் மனக்கண்முன் நிழ லாடுகின்றார்கள். பின்னர் அமரர் பண்டிதர் சு.பசுபதி அதிபரானதும் திரு.க. கயிலாயபிள்ளை, திரு. சு. நடராசலிங்கம், செல்வி த. கனகமணி ஆசிரியர்கள் கல்விப்பணியாற்றியதும் இன்றும் பசுமையாக உள்ளன. தொடர்ந்து இடைநிலைக்கல்வியை மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ் நகரிலும் மேற்கொண்டு ஆசிரியப் பணிக்காய் மகாவித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தில் 2001ம் ஆண்டு தைமாதம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் பணி என்னை நாடி வந்தது.

மிகப் பொறுப்பான பணியை பொறுப்பேற்ற போது மிகப் பெரிய தேவைகளையும், மிகக் கூடிய வளப்பாற்றாக்குறையையும், மாணவர் இடப் பெயர்ச்சி யையும் உணர முடிந்தது. நான் கற்ற காலத்து இரணை வாங்குகள் இன்றும் என் கண்முன் காட்சி தந்து, பொறுப்பின் சுமையைப் பறை சாற்றியது. ஆனாலும் சோர்வைத்தரவில்லை. உற்சாகம் ஊட்டியது. உறக்கம் இல்லாமல் உழைக்க வேண்டும் என்ற உத்வேகம் பிறந்தது. கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.க. அரசரத்தினம், அவர்கள் அன்றைய வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தந்த ஆதரவு இரட்டிப்பு வேகத்தை ஊட்டியது.

வலயக் கல்விப்பணிப்பாளரின் வழி காட்டலில் "நிகொட்" நிறுவனம் மூலம் போதிய மாணவர் மேசை, கதிரைகளும், ஆசிரியர் மேசை, கதிரை என்பனவும் கிடைக்கப் பெற்றன. அத்துடன் வலயக் கல்வப பணிமனை மூலமும் மேலும் பல ஆரம்ப, இடைநிலை (தரம் 5-8) தளபாடங்கள் கிடைக்கப் பெற்று நிரம்பிய நிலை உருவானது.

பாடசாலைக்கான அமைப்பு வேலைகள் பலவற்றைச்செய்ய வேண்டிய தேவை இருந்ததினால் ஆசிரியர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆதரவுடன் சின்னம்(இலட்சனை) கொடி, கழுத்துப்பட்டி என்பன உருவாக்கி புகழ்பெற்ற இசைமேதை அமரர் வீரமணி ஐயர் மூலம் பாடசாலைக் கீதமும் உருவாக்கப்பட்டது. அத்துடன் மகுட வாக்கியம், தூர நோக்கு, பணி இலக்கு என்பனவும் பாடசாலை வரலாற்றுத் தகவல் புத்தகமும் தயாரிக்கப்பட்டது. அத்துடன் அலுவலகத்தில் ஸ்தாபக அதிபர், மற்றும் மறைந்த அதிபர்களின் படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. மாணவத் தலைவர், வகுப்புத்தலைவர் களுக்கான சின்னங்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் யாழ். மாவட்டத்திலேயே மாணவர்களும் கழுத்துப் பட்டி அணியும் முறையை எமது பாடசாலை ஆரம்பித்து வைத்தது.

## ஆன்மீகத்துறை:

இப் பாடசாலை நிறுவுனர்களின் நோக்கம் நிறைவேறும் முகமாக சைவச் சூழலை ஏற்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்த பாடசாலைச் சமூகம் பாடசாலையில் அசைவ உணவுகள் பரிமாறப் படுவதை முற்றாகத் தவிர்த்தது. வெள்ளிக்கிழமை களில் அனைத்து மாணவர்களும் பூக்கொண்டு வந்து ஆலய தரிசனம் செய்யும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. சமய தீட்சை ஏற்பாடுகள் செய்யப் பட்டு அனுட்டானம் மேற்கொள்ளும் பழக்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நடைபெற்று வந்த நவராத்திரி பூசை வழிபாடுகளுடன் கந்த சஷ்டி பூசை வழிபாடும் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் சமய குரவர் நால்வரின் குருபூசை தினங்கள் ஆரம்பத்தில் பெற்றோராலும் பின்னர் இந்து மாணவர் மன்றத்தினாலும் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. நெழுவினி சித்தி விநாயகர் ஆல யத்திற்கான கூட்டுப் பிரார்த்தனை சபை உரு வாக்கப்பட்டு எமது ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் வெள்ளிக்கிழமை மாலைகளில் பஜனை, வழிபாடுகள் விசேடமாக மேற் கொள்ளப்படுகின்றன. அத்துடன் மேற்குப்பகுதி ஆலயங்களின் பரிபாலன சபைகளை ஒன்றிணைத்து ஒன்றியம் உருவாக்கப்பட்டு இலண்டன் திரு கு. சோதிராசாவின் வழிகாட்டலில் இலண்டன் வாழ் அன்பர்களால் பூசகருக்கான வேதனம் வழங்கப் படுகின்றது. ஆலயங்களின் பெரு விழாக் காலங்களில் சிரமதானஞ் செய்தல், அன்னதானம் மற்றும் வழிபாடுகளுக்கு உதவும் பணிகளில் எமது ஆசிரியர் களும், மாணவர்களும் பக்தியுடன் பணியாற்றி வருகின்றார்கள்.

## பாடசாலைத் தரமுயர்வு:-

தரம் – 01 தொடக்கம் தரம் – 11வரையான வகுப்புக்களைக் கொண்டு விளங்கிய எமது வித்தியாலயம் 2001ம் அண்டு கிடைக்கப் பெற்ற க.பொத. சாதாரண தர பெறுபேற்று அடிப்படையில் க.பொ.த. உயர்தர வகுப்பை ஆரம்பிக்க முயன்று வெற்றி கண்டது. கோட்டக் கல்விப்பணிப்பாளர்,வலயக் கல்விப்பணிப்பாளர் மாகாணக் கல்விப்பணிப்பாளர் தந்த ஆதரவும், இரண்டிற்கு மேற்பட்ட தடவைகள் விமானம் மூலம் நான் கொழும்பு வழியாக திருகோணமலை மாகாண அமைச்சுக்கு சென்று அப்போதைய கல்விச் செயலாளர் திரு. R. தியாகலிங்கம் திருமதி தியாகலிங்கம் அவர்களின் நல்லெண்ணத்தால் இக் கைங்கரியம் நிறைவேறப் பெற்று எமது பாடசாலை 1'C' தரப் பாடசாலையாக தரம் உயர்ந்தது. இதனால் உயர்கல்வி கற்க வசதியற்று இருந்த பல்வேறு மாணவர்களுக்கு பெரியவரப்பிரசாதமாக அமைந்த துடன் மாணவர்கள் மேற்கில் இருந்து கிழக்கிற்கு சென்ற கலாசாரம் கிழக்கில் இருந்து மேற்குக்கு வருவதாகவும் மாற்றம் பெற்றது.

## பாடசாலை வள அமைவு:-

### 1) அலுவலகம், நூலகம்:

10'x10' அளவு கொண்ட அலுவலக அறை 20'x20' கொண்ட விசாலமான அலுவலகமாக மாற்றம் பெற்றது. விசாலமான அலுவலக மேசை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அவர்களின் வழி காட்டலில் கிடைக்கப் பெற்றது. புனரமைக்கப்பட்ட நூலகம், அதற்கான தளபாடங்கள் நிறைவாக கிடைத்தன. ஓடியோ வீடியோ அறை, தொலைக்காட்சி, வானொலி, CDபிளேயர், மற்றும் பல வானொலி உபகரணங்கள் என்பன திணைக்களம் மூலமும், தரஉள்ளீட்டு நிதி மூலமும் கிடைக்கப் பெற்றன. நூலகத்திற்கான நூல்கள் இல்லாத நிலையில் நான் கொழும்பு சென்று ஏசியா பவுண்டேசன், இந்து கலாசார

அமைச்சு, இமை கிருஸ்ண மிஷன் என்பவற்றில் இருந்து பெரும் தொகையான நூல்களை தரை வழிப் பாதை மூலம் சொந்தச் செலவில் கொண்டு வந்து சேர்த்துள்ளேன். ஆசிரியர் நலன்புரிச்சங்கம் பத்திரிகைகள் பெற்று வழங்குகின்றது. இதனைவிட பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் நூல்கள் வழங்கி உதவுவதோடு திணைக்களமும் காலத்திற்கு காலம் சிறு தொகுதி நூல்களை வழங்குகின்றது. இதனால் எமது மாணவர்களுக்கு நூலகப் பாவனையும் வாசிப்பு பழக்கமும் உருவாக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பக்கபலமாக தொண்டு அடிப்படையில் பழைய மாணவர்கள் நூலகராக சேவை புரிந்து வரு கின்றார்கள்.

## 2) ஆய்வுகூடம், வகுப்பறைகள்:-

புதிய ஆய்வு கூடம், ஆய்வு கூட உப கரணங்கள் என்பன திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ளன. அத்துடன் புதிய 07 வகுப்பறைகள் அமைக்கப்பட்டு இடப்பற்றாக்குறை நிவர்த்தியாக்கப் பட்டுள்ளது. அத்துடன் நவீன கற்றல் கற்பித்தலுக்கு ஏற்றவாறு அனைத்து வகுப்பறைகளும் பிரித்து மூடப்பட்டவையாக அமைக்கப்பட்டு வர்ணம் பூசி அழகாக்கப் பட்டுள்ளது. தர உள்ளீட்டு நிதி மூலம் பல்வேறு கற்பித்தல் துணைச்சாதனங்களும் பெறப் பட்டுள்ளன. இவற்றுள் O.H.P முக்கியமானதாகும்

## 3) விளையாட்டு மைதானம்:-

பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லாத பெருங்குறை நிலவியது. ஆனால் அருகில் ஒரு காணி 20 வருடங்களுக்கு மேலாக பாடசாலைக்கென சுவீகரிக்கப்பட்டு முற்றுப் பெறாத நிலையில் இருந்தது. 2001ம் ஆண்டு பாடசாலைத் தரிசிப்பிற்கு வந்த வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் "விளையாட்டு மைதான வேலையைத் தொடங்கினால் தான் அதன்நிலை தெரியவரும் உடனே தொடங்கும்" என்று கூறிய வார்த்தைகள் புதிய உற்சாகம் தந்தன. ரூபா 30,000க்கு மேற்பட்ட எனது சொந்தச் செலவில் புதிய மைதானம் பிறந்தது. அத்துடன் எதிர்ப்பு ஒன்றும் கிளம்பியது. அது தீர்க்கப்படாமலேயே உள்ளது. விளையாட்டு மைதானத்திற்கு மேற்குப்புற "பிராமண வளவு" என்ற காணியும் பெறப்பட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இன்று சொந்த மைதானத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி முடித்துள்ளோம். அத்துடன் தீவக வலயப் பாடசாலை களிலேயே எமது பாடசாயைில் ஆரம்ப பிரிவு, மேற்பிரிவு என வருடத்திற்கு இரண்டு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வந்துள்ளோம் தற்போது போர்க்காலச் சூழலால் ஏற்பட்ட நிதி நெருக்கடி பொதுவான ஒரு விளையாட்டு போட்டியை நடாத்தும் நிலையை உருவாக்கி உள்ளது விளையாட்டு உபகரணங்களின் பற்றாக்குறை நிலவினாலும், பல்வேறு உபகரணங்களை எமது வலயமும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் தந்து உதவியுள்ளன. மேலும் வெற்றிக் கம்பங்கள், வெற்றிக்கிண்ணங்கள், கேடயங்கள் எனப் பலவற்றை எமது மாணவர்களும், நலன்விரும்பிகளும் தந்து உதவி எம்மை வளப்படுத்தி உள்ளார்கள்.

## 4) பான்ட் அணி

பாடசாலைக்கென பான்ட் வாத்தியங்கள் பெறப்பட்டு பான்ட் அணி உருவாக்கப்பட்டது. இதனால் பயிற்றுவிப்பதில் யாழ். இசையாசிரியை. செல்வி வாசுகி ரங்கன் அவர்களின் பணி மகத்தானது. அத்துடன் இவற்றுக்கான ஆடைகளை தைப்பதற்கான உதவியை திரு. ச. கோகுலவரதன் (லண்டன்) திரு.திருமதி விஜயலதா தருமரத்தினம் (லண்டன்) வழங்கினார்கள்

எமது பான்ட் அணி தீவகத்தின் சிறந்த அணியாக பலராலும் பாராட்டப்பட்டது.

## 5) கணனிகள், கணனி கற்கை நிலையம்

எமது வித்தியாலய மாணவர்களின் நவீன கற்றல் தேவையை ஈடுசெய்யும் முகமாக பல்வேறு தனிநபர்களாலும் கணனிகள் அன்பளிப்புச் செய்யப் பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் தற்போது எமக்கு முன்னாள் தீவக வலயக்கல்விப் பணிப் பாளரும் தற்போதைய மாகாண SEMP முகாமையாளருமாகிய திரு. V. மகேந்திரன் அவர்களால் கணினிகள் கற்கை நிலையம் ஒன்று அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6) ஒலிபெருக்கி சாதனம், ஜெனரேற்றர், சூரிய மின்சக்தி கலங்கள்

எமது வித்தியாலயத்திற்கு ஒலி பெருக்கி சாதன தொகுதி, இரண்டு ஜெனரேற்றர்கள். இரண்டு சூரிய மின்சக்தி கலத் தொகுதி என்பவற்றை நல்லுள்ளம் கொண்டு பலர் வழங்கி வளப் பெருக்கத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்

## 7) சமையலறை, கிணறு ஏனையவை:-

தற்போது எமது வித்தியாலயத்திற்கு திட்டப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் அனு சரணை உடன் 20'x15' அளவில் சமையல் கூடம் அமைக்க அனுமதி கிடைத்துள்ளது. அத்துடன் நாம் வட மேற்கு மூலையில் புதிய கிணறு ஒன்றையும் அமைத்து உள்ளோம். இதனைவிட துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம், அமைத்து பாதுகாக்கின்றோம். இதனை விட பிளாஸ்ரிக் கதிரைகள், மனையியல் கூட உபகரணங்கள், பாத்திரங்கள், மேசை விரிப்புக்களை, பூச்சாடிகள், உருக்குக் கண்ணாடி அலுமாரி என்பனவும் மாணவர், நலன் விரும்பிகளால் தாராள மனத்துடன் உதவப்பட்டுள்ளன. அத்துடன் மாண வர்கள், ஆசிரியர்களின் களைப்பைத் தீர்க்கும் முகமாக தேனீர்ச்சாலை ஒன்றும் 2001ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்க தாகும். (எமது பாடசாலைக்கு பல்வேறு உதவிகளையும் வழங்கியவர்களின் விபரம் தனியாக இணைக்கப் பட்டுள்ளது.)

## 8. பாடசாலைச் சூழல்

எமது பாடசாலைச் சூழல் வாழைத் தோட்டங் களாலும், பூமரங்களாலும் நிறைந்து சிறந்த சோலையாக நல்ல கவி நிலையில் உருவாக்கப் பட்டுள்ளது. பாடசாலை வளவை அன்பளிப்பாக காணி பெற்று விஸ்தரித்து கட்டடங்களை ஒழுங்குபடுத்தி நிரையாக அமைத்து, முகப்பு வாயிலில் கம்பீரமாக நிற்கும் பெயர்வளைவு அமைத்து, வாயிலால் உள் சென்றதும் கருணை முகம் கொண்ட சரஸ்வதி சிலை வரவேற்கும் பாங்கு மிகவும் அழகானதாகும். அத்துடன் பாடசாலைக்கான சுற்றுமதில் மூன்று பக்கமும் நிறைவாக அமைத்து முடித்ததோடு பின்பக்கம் இன்னும் சில மீற்றர் தூரமே அமைக்க வேண்டி உள்ளது. மேலும் தீவகத்திலேயே எங்கும் இல்லாத சிறந்த சிறுவர் பூங்கா ஒன்றை அழகொளிர அமைத்து சிறுவர்க்கு ஆனந்தத்தை ஏற்படுத்தி உள்ளோம். இன்னும் எமது வித்தியாலயத்திற்கு மின் இணைப்பு பெற்று நூலகம், அலுவலகம், கணனிப் பாவனை எனப் பயன்பட்டு வருகின்றது. தற்போது மின்னிணைப்பை ஆய்வுகூடம், வகுப்பறை என விஸ்தரிக்க உள்ளோம். எமது

பாடசாலையின் அமைப்பு, அழகு, பிள்ளைகள் கற்பதற்கான கவின்நிலை என்பன காரணமாக 2007ம் ஆண்டு நடைபெற்ற பிள்ளைநேயப் பாடசாலைக்கான போட்டியில் தீவக வலயத்தின்மிகச் சிறந்த 06பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டமை எமக்கு கிடைத்த பெரிய மகுடமாகும். அத்துடன் எமது பாடசாலை மாகாண அமைச்சினாலும் பாராட்டப் பெற்று "மாதிரிப் பாடசாலை" திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மேலும் "ஜெயிக்கா" திடடத்தில் எமது பாடசாலை உள்வாங்கப்பட்ட போதும் தொடர்ந்த போர்க்காலச் சூழலால் தொடர முடியவில்லை.

9) பாடசாலை இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

எமது பாடசாலை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை, தரம் – 09 மாகாணமட்டப் பரீட்சை என்பவற்றில் எல்லாம் சிறந்த நிலையில் தனக்கென ஒரு தனி இடத்தை தக்க வைத்து வளர்ந்து வருகின்றது. க.பொ.த. உயர்தரத்தில் அண்மைக் காலமாக 100% சித்தியைப் பெற்று அனைவரும் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தேர்ச்சியை பெறுவதோடு பல மாணவர் பல்கலைக்கழக கற்கை நெறியை மேற்கொண்டும் வருகின்றனர். தமிழ்த்தினம், விளையாட்டுப் போட்டி என்பவற்றில் எமது மாணவர்கள் மாவட்ட மட்டம் வரைசென்று வெற்றி பெற்று வருவது மட்டுமல்ல இந்த ஆண்டு எமது பாடசாலை மாத்திரமே எமது தீவில் தமிழ்த்தினம், மெய்வல்லுனர் போட்டியில் மாவட்ட இடத்தை சில நிகழ்வுகளில் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் அரங்கம், கலாசாரப் போட்டி, பண்ணிசைப் போட்டி கணித, விஞ்ஞான போட்டி, சமய அறிவுப் போட்டி, சமய பாடப் பரீட்சை, கட்டுரைப் போட்டி என பல்வேறு கல்வி நிறுவனம் சார்ந்ததும் சாராததுமான போட்டிகளில் எமது மாணவ மாணவிகள் பங்கேற்று பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்று வருகின்றார்கள். அத்துடன் பாடசாலைகளில் பல்வேறு மன்றங்களும் சிறப்பாகச் செயற்பட்டு ஊக்கமளித்து வருகின்றன. மகளிர் தினம் போன்ற பல்வேறு உலக தினங்களும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன. 2001–2008 வரையான காலப் பகுதியில் நாம் இரண்டு மிகப் பெரிய கல்விக்கண் காட்சிகளையும் இரண்டு பாடசாலை மட்டத்திலான கண்காட்சியையும் நடாத்தியுள்ளோம். இந்த ஆண்டு நடைபெற்ற கல்விக் கண்காட்சியை அனைவருமே பாராட்டி உள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

ஆடைகளுக்கு வர்ணமம் தீட்டுதல், வீட்டு மின்சுற்று, எழுத்தறிவூட்டல் வகுப்பு எனப் பல்வேறு முறைசாராக் கல்வித்திட்ட வகுப்புக்களை நாம் பாடசாலையை விட்டு விலகியோருக்காக நடாத்தி உள்ளோம். ஆடைகளுக்கு வர்ணம் தீட்டும் பயிற்சி நிறைவில் நிறைவில் சிறந்த கண்காட்சியை நடாத்தி அதனை அப்போதைய பிரதிக்கல்விப் பணிப்பாளரும், தற்போதைய வலயக்கல்விப் பணிப்பாளருமான திரு. G.V. இராதாகிருஷ்ணன் அவர்களே திறந்து வைத்துப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வாணிவிழா, கிறிஸ்தவ மாணவர்களுக்கான ஒளிவிழா, க.பொ.த. உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல், மாணவத் தலைவர் சின்னச் சூட்டு விழா, இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கான பிரியாவிடை விழா எனப் பல்வேறு விழாக்களும் எமது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவையும் ஆளுமையையும் ஏற்படுத்துபவையாக அமைகின்றன.

மேலும் மாணவர்களிடையே பட்டம் விடுதல் போட்டி, போன்ற பொழுது போக்குகளையும் ஏற்படுத்தி வருகின்றோம்.

எமது தீவகத்தில் எமது பாடசாலையே "பரிசில் தினம்" என்பதை முதன்முறையாக 2005ம் ஆண்டு ஆரம்பித்து வாணி விழாவும் பரிசில் தினமாக வெகுவிமரிசையாக கொண்டாடினோம். எமது பாடசாலைச் சமூகம் நவராத்திரி காலத்தை பரிசில் தினமாகத் தீர்மானித்து அதைச் செயற்படுத்தி வருகின்றோம். 2006, 2007ம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அதனை நடாத்த முடியவில்லை. அவ்விரண்டு ஆண்டையும் சேர்த்து இந்த ஆண்டு மலர் வெளியீட்டுடன் அத்தினத்தைக் கொண்டாடுகின்றோம். எமது வித்தியாலயம் யாழ். நகரின் எந்த முன்னிலைக் கல்லூரியை எடுத்து ஒப்பு நோக்கினாலும் அதனுடன் எவ்விதத்திலும் குறைந்து போகாது முதன்மை வகிக்கும் வகையில் அமைப்பும், நிர்வாகமும், செயற்பாடு, வெளியீடு என்று அனைத்து நிலைகளிலும் செயற்பட்டு வருவதும் அதனை அனைவரும் பாராட்டுவதும் சிறப்பம்சம் ஆகும்.

எமது பாடசாலையையே தமது கல்விக்காகத் தங்கி இருக்கும் எம்மாணவச் செல்வங்களுக்காக எமது ஆசிரியர்கள் பொதுப் பரீட்சை வகுப்புக்களுக்கு மாலை நேர வகுபபுக்கள், விடுமுறைக்கால வகுப்புக்கள் என கால நேரம் பாராது பணியாற்றுவதும் ஏனைய தர மாணவர்களுக்கு எமது பழைய மாணவிகள் மேலதிக வகுப்புக்கள் நடாத்துவதும் அனைத்து முழு நாட்களுமே பாடசாலை தொடர்ச்சியாக இயங்குவது போல் காட்சியளிப்பது எமது பாடசாலையின் மற்றொரு சிறப்பம்சம் ஆகும். இருப்பினும் எமது மாணவரும் பெற்றோரும் இன்னும் அதிகமாக விழிப்புணர்வு கொண்டு செயற்பட வேண்டும் என்பது ஒரு குறையாக அல்லது எனதும் ஆசிரியர்களினதும் பேரவாவாக காணப்படுகின்றது. அத்துடன் எமது பாடசாலையில் சாரணியம், பெண்கள் சாரணியம், குருளைச் சாரணியம் என்பவற்றை உருவாக்கும் ஆரம்ப முயற்சிகள் வெற்றி அளித்தாலும், நாட்டுச் சூழலும் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இன்மையும் அவற்றை வெற்றிகரமாக செயற்படுத்த முடியவில்லை என்பது மன வேதனையைத் தருகின்றது. அத்துடன் விளையாட்டுத் துறையிலும் எதிர்பார்க்கும் திறனை அடைய இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டி உள்ளது என்றால் மிகையாகாது.

## தேவைகள் / நிறைவேற்ற வேண்டியவை

எமது பாடசாலைக்கு இன்னும் பல தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன. அவை ஆசிரியர் களுக்கு வசதியான ஓய்வறை, நவீன மயமான பிரார்த்தனை மண்டபம், செயற்பாட்டறை, திறந்த வெளிஅரங்கு, மீதியான சுற்றுமதில், விளையாட்டு மைதானச் சுற்றுமதில், பார்வையாளர் மண்டபம், மைதானச் சூழலில் நிழல் மரங்கள் நாட்டுதல், பாட ரீதியான வகுப்பறைகள், களஞ்சிய அறை, அத்துடன் கிணற்றில் இருந்து பல்வேறு இடங்களுக்கான நீர்க் குழாய் அமைப்பு சிற்றூழியர் நியமனம் என்பனவாகும்.

## நன்றிகள்:

2001ம் ஆண்டில் இருந்து இப்பாடசாலைச் செயற்பாடுகளுக்கு முன்னின்று வழிநடாத்தி வரும் நெழுவினி சித்திவிநாயகருக்கு முதல்நன்றிகள் சமர்ப்பணம் அக்காலத்தில் இருந்து எமது வலயத்தின்

கல்விப்பணிப்பாளர்களாக இருந்து சிறப்பான பணியாற்றிய திரு.ப. விக்கினேஸ்வரன், அவர்கள் அமரர். பொ. வேணுகோபால வாணிதாசன், அவர்கள், திரு. வி. மகேந்திரன் அவர்கள், திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள், வலயம் ஆரம்பித்த காலத்தில் இருந்து பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து இன்று வலயக் கல்விப்பணிப்பாளராக இருக்கும் திரு. G.V. இராதாகிருஷ்ணன் அவர்கள் யாபேரும் எமது பாடசாலையில் கண்ணும் கருத்துமாக விசேட கருசனையாக இருந்து சிறந்த வழிநடத்தலை யும், ஊக்குவிப்பையும் ஆதரவையும் தந்த தோடல்லாமல் நாம் அழைக்கும் போதெல்லாம் எம் மிடம் வருகை தந்து மகிழ்வித்த அனைத்துச் செயற் பாடுகளுக்கும் எமது மனப்பூர்வ நன்றிகள். அத்துடன் வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடம்சார் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர் கணக்காளர், நிதி உதவியாளர், அனைத்து துறைசார் வலய அலுவலர் அனைவருக்கும் இன்னும் தொழில்நுட்ப உத்தி யோகத்தர் அவர்களுக்கும் எமது மனப்பூர்வ நன்றிகள் உரித்தாகுக. அத்துடன் எமது கரமாக என்றும் உதவும் எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.க. அரசரத்தினம் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. மேலும் விசேடமாக எமது பாடசாலையை தரமுயர்த்தி உதவி, எமக்குத் தேவையான ஆசிரியர்களை இடமாற்றித் தந்தும், நியமித்தும் உதவியதோடு எமது விளையாட்டு விழாவிலே குடும்பத்துடன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த மதிப்பிற்குரிய முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும், தற்போதைய கிழக்கு மாகாண சபைச் செயலாளருமான உயர்திரு. R. தியாகலிங்கம் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

எமது பாடசாலைக்கு பத்து இலட்சம் ரூபா செலவில் 100'x20' நீள 5வகுப்பறைத் தொகுதி களை அமைத்துதவிய கௌரவ அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி செயலாளர் நாயகமுமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவாக்ளுக்கும் எமது நன்றிகள். அத்துடன் எமக்கு பான்ட் வாத்தியம், கணனி உதவிய கௌரவ கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் M.K. சிவாஜிலிங்கம் அவர்களுக்கும், சூரிய மின் கலத் தொகுதியை வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் அவர்களுக்கும், புதிய கிணறு மற்றும் ஒரு பகுதி மின்சுற்று அமைப்பதற்கு நிதி உதவி வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் N. சிறிகாந்தா அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. மேலும் எமது தேவைகளுக்காக நாடும் போது எல்லாம் வேண்டிய உதவியை நல்கி உதவியதோடு மலர் வெளியீட்டுக்கான நிதிப் பொறுப்பை முழுமை யாக ஏற்றும் இன்னும் பல்வேறு உதவிகளை எமக்கு வழங்க வாக்குறுதி தந்தும், நெடுந்தீவின் வளர்ச்சிக்காக பல்வேறு பணிகளை ஆற்றிவரும் நெடுந்தீவுப் பாடசாலை பழைய மாணவர் மன்றம் கனடா அங்கத்தவர்களுக்கும் குறிப்பாக சேவையுள்ளம் கொண்ட அதன் தலைவர் சு. நடராசா அவர்களுக்கும் நெடுந்தீவுக்கிளைத் தலைவர் எஸ்.பி. அருளப்பு அவர்களுக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகுக.


நாம் கேட்ட போதெல்லாம் பல்வேறு பொருட்களைப் பெற்றுத் தந்தோர், பல்வேறு விழாக் களுக்கும் அனுசரணை வழங்கியோர், மதில்,கேற், கட்டடம் என அமைத்துத் தந்தோர், பான்உடை, கண்காட்சி உடை, பெயர் வளைவு சரஸ்வதி சிலை, சிறுவர் பூங்கா எனப்பலவற்றை வழங்கி அனைத்துச் செயற்பாட்டிலும் கரம் தந்துதவிய அனைவர்க்கும் எமது இதய நன்றிகள் உரித்தாகுக.

எமது பாடசாலைக்கு விஜயம் செய்து இது "தெய்வீகச் சூழலாக" தெரிகின்றது என வாழ்த்துக் கூறி எமக்கு பெரிய ஜெனரேற்றர் உதவிய மதிப்பிற்குரிய அரசாங்க அதிபர் திரு. கே.கணேஸ் அவர்களுக்கும் அவருடன் இணைந்து வந்தது மட்டுமல்ல எமது இவ்வாண்டு விளையாட்டு விழாவில் பிரதம விருந்தின ராக கலந்து சிறப்பித்து எமக்கு சமையலறை அமைக்க உதவிய திட்டப்பணிப்பாளர் திரு. ம. பிரதீபன் அவர்களுக்கும் எமது நன்றிகள் சமர்ப்பணம்.

இரவு பகலாக உழைத்து எமது வெற்றிக் கெல்லாம் உரமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும், அதற்கும் மேலாக எந்த பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது, மனம் சலிக்காது மெழுகாக உருகி நிறைந்த பணியாற்றிய பணியாற்றிக் கொண்டிருக்கும் தொண்டராசிரியர்கள் அனைவர்க்கும் எமது இதய நன்றிகள். மேலாக எமக்கு பலமாக , பாலமாக இருந்து எமது கருத்திசைவாக நடந்து ஆதரவு நல்கும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், உறுப்பினர் பழைய மாணவர்மன்ற அங்கத்தவர்கள் அனைவர்க்கும் எமது உளப்பூர்வ நன்றிகள், வேண்டிய உதவிகளை வழங்கும் எமது வித்தியாலய காவலாளி திரு. வே. கீதபொன்கலன், எமது பிரதேச அனைத்து மத குருமார்கள், அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள், பணியாளர் கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன். பழம்பெருமை மிக்க கலைக்கோவில் செழித்துமிளிர என்னுடன் கரந்தந்த எனது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், நல்மனது படைத்தோர் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இக்கலைக் கோவில் மேலும் பல்கிப் பெருக நெழுவினி விநாயகர் துணை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**ச. சத்தியவரதன்**
**அதிபர்**

# பள்ளியின் பார்வையில்


யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
உள்ளத் தனையது உயர்வு

# MOTO - மகுட வாக்கியம்

உள்ளத்தனையது உயர்வு

# VISION - தூரநோக்கு

"கல்வி, பண்பாட்டில் முதல்தரப் பாடசாலையாகுதல்"

# MISSION - பணி இலக்கு

"பாடசாலையின் அனைத்து வளங்களையும்

சிக்கனமாகவும், உத்தமமாகவும், முழுமையாகவும் பயன்படுத்தி

இத்தீவு மக்களின் அறிவு, ஆற்றல், ஆளுமை விருத்திக்காக,

கல்வியின் உயரிய உலகளாவிய நோக்கங்களை அடைவதற்காக,

எதிர்காச் சவால்களை எதிர்கொண்டு, சமூகநீதி,மற்றும் சமநிலை ஆளுமை,

ஆற்றல் மிக்க நல்ல மனித வளத்தை தேசிய உணர்வு மிக்கதாக

உருவாக்குதல்"

# நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய கீதம்

ராகம்:- ஸிந்து பைரவி

தாளம்: ஆதி

## பல்லவி

வையகந் தனில்கல்வி வளர்கலைதரும் அன்னை
சைவப்பிரகாச வித்தியாலயம் வாழி!

## அனுபல்லவி

நெய் பால்வளம் கொழிக்கும்
நெடுந்தீவுப் பதியினில்
ஐயன் சித்தி விநாயகன்
அருளாலே மிளிர்ந்திடும்

## சரணம்

1. அறிவொளி ஏற்றியே அகத்திருள் போக்குவாள்
நெறிமுறை யோடு வாழ நேர்வழி காட்டுவாள்
அதிபர்ஆசிரியரை அநுதினம் பணிகுவோம்
அறிவுரை அனைத்தையும் அகத்தில் பதிய வைப்போம்

2. தெய்வபக்தி தேசபக்தி திகழ்ந்திடும் குருபக்தி
உய்யவழி காட்டிடும் உணர்வினை நாம் பெறுவோம்
செய்யும் அனைத்தையுமே செம்மையுறவே செய்வோம்
சைவமும் தமிழ் ஓங்கச் சால்புறத் தரும் அன்னை

3. செந்தமிழ் ஆங்கிலம் சிவநெறி விஞ்ஞானம்
நந்தமிழ் கலைகளும் நல்வினையாடலும்
பந்தமிகு கணிதம் கணனியும் கைத்தொழிலும்
முந்துமனையியலும் தந்துகல்வி அறிவூட்டும்

"சுபம்"

ஆக்கம்

"கலாரத்னா" கலாபூஷணம்" "மஹாவித்துவான்"

யாழ்ப்பாணம், பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஐயர் M.A.J.P

# இவ் வித்தியாலயத்தின் அதிபர்கள்

01. திரு. சி. வேலுப்பிள்ளை

02. திரு. இ. சுவாமிநாதர்

03. திரு. நீ. சேதுபதி

04. திரு. வி. இராமலிங்கம்

05. திரு. நா. பசுபதிப்பிள்ளை

06. திரு. க. கணபதிப்பிள்ளை

07. திரு. ஆ. கந்தையா

08. திரு. எஸ். இராமசாமி

09. திரு. இ. சுப்பிரமணியம்

10. திரு. க. கணபதிப்பிள்ளை

11. திரு. இ. வேலுப்பிள்ளை

12. திரு. சு. பசுபதி

13. திருமதி. பா. இராமநாதன்

14. திரு. சு. குமாரவேலு

15. திரு. நா. சங்கரப்பிள்ளை

16. செல்வி. க. தம்பிப்பிள்ளை

17. திரு. சு. கணேசதாசன்

18. திரு. சு. நடராசலிங்கம்

19. திரு. சு. சத்தியவரதன்

# பாடசாலைக் கொடி விளக்கம்

## பச்சை:

சாந்தம், குளிர்ச்சி, என்பவற்றோடு தெளிந்த சிந்தை, ஆன்மீக நிறைவு, என்றும் எதிலும் தயார் நிலை, இரக்க மனம், பசுமைப் புரட்சி, என்பவற்றைக் குறிக்கும்.

## நீலம்:

ஆழமான நிலை, அதாவது வானமும், கடலும் ஆழம் காண முடியாதவை போல கல்வியும் ஆழம் காண முடியாதது. அத்தகைய ஆழமான கல்வியைக் கற்பதே குறிக்கோள் என்பதைக் குறிக்கும்

# பாடசாலை சின்னத்தின் விளக்கங்கள்

**கோபுரம்:**

இந்துப் பண்பாட்டின் சின்னம் ஆன்மீகத்தோடு இணைந்த கல்விக்கான அடையாளம்

**புத்தகம்:**

கல்வியே கருப்பொருள் என்பதைக் குறிப்பது. திறந்த நிலையில் புத்தகம் இருப்பது சதா கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதையும் திறந்த புத்தகம் போல் உள்ளம் என்றும் தூய்மையானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும் என்பவற்றையும் குறித்து நிற்கின்றது.

**பசு:**

நன்மாணாக்கரைக் குறிக்கின்றது. இரை மீட்கும் பசுவைப் போல் பாடத்தை மீட்டு மீட்டுக் கற்க வேண்டும் என்பதோடு புனிதம், பொறுமை, இரக்கம், ஈதல் பண்பு மாணவருக்கு அவசியம் என்பதன் அடையாளமாகவும் அமைந்துள்ளது.

**கணனி:**

நவீன தொழிநுட்ப உலகில் மாணவர் நுழைந்து சிறக்க வேண்டும் என்பதைக் குறித்து நிற்கின்றது.

**உள்ளத்தளையது உயர்வு:**

ஒவ்வொருவரினதும் உள்ளமும் மாசு மறுவற்ற வெள்ளை உள்ளமாக கள்ளம் கபடமற்றதாக ஒளிவு மறைவு அற்ற திறந்த உள்ளமாக தூய்மையானதாக இருந்தால் அதற்கேற்ப வாழ்வு சிறக்கும் உயர்வடையும் என்பதாகும்.

# பாடசாலையின் தகவல் சுருக்கம்

| | |
|---|---|
| பெயர்: | யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| ஸ்தாபித்த ஆண்டு: | 1922 |
| ஸ்தாபகர்: | அமரர் சி. வேலுப்பிள்ளை(முதல் அதிபர்) |
| முகவரி: | வட்டாரம் - 04, மேற்கு, நெடுந்தீவு |
| மாவட்டம்: | யாழ்ப்பாணம் |
| மாகாணம்: | வடக்கு |
| பிரதேச செயலகம்: | நெடுந்தீவு |
| பிரதேச சபை: | நெடுந்தீவு |
| கிராமம்: | நெடுந்தீவு தெற்கு |
| கிராம அலுவலர் பிரிவு: | J/2, நெடுந்தீவு - தெற்கு |
| கல்விக்கோட்டம்: | நெடுந்தீவு |
| கல்வி வலயம்: | தீவகம் (வலயம் - V) |
| குறியீட்டு எண்: | 1004002 |
| பரீட்சை எண்: | 11065 |
| தொகைமதிப்பு எண்: | 09006 |
| பாடசாலைத் தரம்: | 1"C" |
| வகுப்புக்கள்: | தரம் 01 முதல் தரம் - 13வரை |
| பாடசாலை வகை: | கலவன் பாடசாலை |
| இதுவரை அதிபர்கள்: | 19 |
| அதிபர்: | திரு.ச. சத்தியவரதன் |



**ZONAL EDUCATION OFFICE**

**Islands - Velanai**

*This is to Certify that*

*J/Delft Saivapragasa Vidyalayam* ........ *has successfully demonstrated Child Friendly School Environmental for the Year 2007*

*Congratulation for earning.*

***Grade A***

*Good Luck for an excellent New Year.*

CFS Coordinator

26.09.2008
Date

G. V. Rathakrishnan
Zonal Director of Education
Islands, Velanai.

யுனிசெவ் அனுசரணையுடன் தீவகக் கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்ட பிள்ளைநேயப் பாடசாலைக்கான மதிப்பீட்டாய்வில் தெரிவு செய்யப்பட்ட முன்னணிப் பாடசாலைகள் 06இல் எமது பாடசாலையும் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கான வெற்றிக் கிண்ணமும் சான்றிதழ்

# ஆசிரியர் குழாம்

| ஆசிரியர் பெயர் | |
|---|---|
| ● திருமதி காந்திமதி சோதிநாதன் | Sp.Trd. Science |
| ● திருமதி லோகேஸ்வரி நகுலசிறி | Sp.Trd. Commerce |
| ● திருமதி மலர்விழி சந்திரலிங்கம் | Sp.Trd. Art |
| ● திரு. கந்தப்பு கணேசமூர்த்தி | Sp.Trd. Agriculture |
| ● திருமதி விமலாதேவி புவனேஸ்வரகுமார் | Sp.Trd. Primary |
| ● திருமதி பத்மாவதி சிறீதரன் | Sp.Trd. Home Science |
| ● திருமதி சந்திரகலா புவனேந்திரன் | Sp.Trd. Tamil |
| ● திரு. நடராசா றமணன் | Sp.Trd. Maths |
| ● திருமதி விஜிதா பத்மநாதன் | B.A. Sp.Trd. Tamil |
| ● திருமதி சுபாஜினி புவனேந்திரன் | Sp.Trd. Tamil |
| ● திருமதி விலிநிஷானி ஹெறால்பேட் | B.A. Dip.in.Ed. |
| ● செல்வி ஜெனிதா இந்திரன் | B.A. (Hons) |
| ● செல்வி யூட்றஜிதா ஜேம்ஸ் | B.F.A. |
| ● திரு. நடேசன் செந்தூரன் | Sp. Trd. Phy.Ed, Dip.in.phy.Ed. |
| ● திரு. கந்தசாமி விமலநாதன் | Dip. in. Teach(Maths) |
| ● திருமதி சூரியகலா கேதீஸ்வரன் | Sp.Trd. Primary |
| ●செல்வி சுகந்தினி தம்பிராசா | B.A. Sp.Trd. Primary |
| ● திருமதி சிவரஞ்சினி செல்வச்சந்திரன் | Dip. in. Teach(Primary) |

## பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணி செய்வோர்

- திருமதி புஸ்பராணி சயந்தன
- திரு. ஆசீர்வேததாஸன் டேவிற்சன்
- செல்வி ஜீவதர்சினி இலட்சுமணன்
- செல்வி ஜீவநந்தினி இலட்சுமணன்
- செல்வி நளினி சதாசிவம்
- செல்வி தர்சினி தர்மரத்தினம்
- செல்வி அனுஷா துஷானி பீற்றர்
- திரு. பாக்கியநாதன் அன்ரனி கிறிஸ்ரியன்
- திரு. அன்ரன் அருள்ஜிவன்
- செல்வி சுகிர்தா தனக்கோடி
- செல்வி டயானா வேலாயுதம்

சுவாமிநாதன் இல்லம் (மஞ்சள்)



வேலுப்பிள்ளை இல்லம் (சிவப்பு)



கணபதிப்பிள்ளை இல்லம் (பச்சை)



மாணவத் தலைவர்கள் ஒழுங்கு மேற்பார்வைக் குழுவுடன்



பான்ட்வாத்தியம் முதல் அணி



பான்ட் வாத்திய இன்றைய அணி



பாடசாலை கரபந்தாட்ட அணி -2008



பாடசாலை வலைப் பந்தாட்ட அணி - 2008



# ஆரம்பக் கல்வி மன்றம்

யா/ நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி, மன்றமானது தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்களை அங்கத்துவர்களாக கொண்டு தமதுசெயற்பாடுகளை அதிபர், ஆசிரியர்களின் துணையுடன் இயங்கி வருகின்றது. இமம்மன்றமானது. மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல், அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்குடன் இம்மன்றச் செயற்பாடுகள் முன் கொடுக்கப்படுகின்றன. அந்த வகையில் மன்றச் செயற்பாடுகள் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் மாணவர்களுக்கு பயனுள்ளதாகவும் அமைய ஆக்கமும் ஊக்கமும் அளித்து பக்கத்துணையாக இருப்பவர் எமது வித்தியாலய அதிபராவார். மாணவர்களின் ஆடல், பாடல் போற்ற இசைத்துறையில் ஆர்வத்தை ஊட்டி இரசனையுணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வருடம் தோறும் தவணைக்கு ஒரு தடவை இம்மன்றக் கூட்ட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வருட இறுதியாக "சஞ்சிகை" வெளயீடும் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி ஒரு புத்தாக்க வெளியீடாக வெளிவருவது மன்றத்துக்கு மகிழ்ச்சியைத் தருவதுடன் பாடசாலைக்கும் பெருமையாக உள்ளது.

எனவே மாணவர்களது செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் திறமையாகவும் உற்சாகமாகவும், நேர்த்தியாகவும் இருப்பதையிட்டு பாடசாலை மன்றமும் பெரும் உவகையுறுகின்றது.

## நிர்வாக உறுப்பினர்கள்

தலைவர் :- சோ. லக்ஷனா

செயலாளர் :- ஜெ. தூபகரன்

பொருளாளர் :- க. கோபிஷன்

போஷகர்:- த. சுகந்தினி

# சமூகக் கல்வி மன்றம்

எமது வித்தியாலயத்தில் இயங்குகின்ற மன்றங்களில் ஒன்றாக சமூகக் கல்வி மன்றம் விளங்குகின்றது. மாணவரின் தேடல்களை ஊக்குவித்து அறிவாற்றலை வளர்தெடுத்து சமூகப் பொருத்தப்பாட்டை ஏற்படுத்துவதில் இம் மன்றம் பெரும் பங்கு வகிக்கின்றது.

இவ் வகையில் எமது மன்றத்தால் சர்வதேச தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. குறிப்பாக சர்வதேச மகளிர் தினம், சுற்றுச் சூழல் தினம், சர்வதேச ஆசிரியர் தினம், என்பன மிகவும் சிறப்பாக கொண்டாப்படுகின்றன.

இத்தினங்களையொட்டி மாணவரிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படுகிறது. கலை நிகழ்வுகளினூடாக மாணவர்கள் சமூகத்துடன் இணங்கி வாழுகின்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன.

இம் மன்றத்தால் வருடந்தோறும் கண் காட்சியும் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எனவே இம் மன்றச் செயற்பாடுகளூடாக சமூகக் கல்விப் பாட பெறுபெறுகளும்உயர்வடைந்துள்ளமையை காண முடிகிறது.

சமூகக் கல்வி மன்றத்தின் செயற்பாடுகளுக்கு எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பையும் சிறப்பான வழிகாட்டுதலையும் தந்து மன்றம் சிறப்பாக பணியாற்ற உதவுகிறார்கள்.

## 2008நிர்வாக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. சத்தியவரதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள்: - | திருமதி வி. பத்மநாதன் |
| | செல்வி ஜே. யூட்றஜிதா |
| தலைவர்:- | செல்வன் த. அகில்செல்வன் |
| செயலாளர்:- | செல்வி. ச. துஷாந்தி |
| பொருளாளர்:- | செல்வன் ப. சாரங்கன் |

# இந்து மாணவர் மன்றம்

எங்கள் பாடசாலையில் முதலாவது வெளியிடப்படுகின்ற இம்மலரானது "சிரஞ்சீவியாய்" மலர்ந்து என்றென்றும் புகழ்மணம் பரப்ப வேண்டும் எனவும் அதற்கு எல்லாம் வல்ல நெழுவினி விநாயகர் அருள் வேண்டியும் இம்மமலர் வெளியிடுவதில் இந்து மாணவர் மன்றம் பெருமகிழ்ச்சியும்பெருவகையும் எய்துகின்றது.

இந்து மாணவர் மன்றத்தால் இந்து சமய விழுமியங்கள் பின்பற்றப்படுவதுடன் இந்துசமய நிகழ்வுகளையும் நால்வர் குருபூசை தினங்களில் அதிபர், ஆசிரியர்களின் சொற்பொழிவுகளும் மாணவர்களின் கூட்டு வழிபாடும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றது. நவராத்திரி வாணி விழா வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. அத்துடன் கந்த சஷட்டி தினங்களில் கூட்ட வழிபாடும் கலைநிகழ்வகளும் நடைபெறகின்றது.

வெள்ளிக்கிழமை காலை அருகில் உள்ள விநாயகர் ஆலயம் சென்று பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது மாலை கூடடுப்பிரார்த்தனையும் ஆற்றப்படுகின்றது. இதன் மூலம் தேவார அருட்பாக்களை மாணவர் மனனஞ் செய்ய வழி வகுக்கின்றது.

சைவ பரிபாலன சபையால் நடாத்தப்பட்டு வரும் சைவ சமய பாடப் பரீட்சையில் ஆண்டு தோறும் பல மாணவர் விசேட சித்திகளையும் திறமைச் சித்திகளையும், பெறுகின்றார்கள்

எமது மன்றத்தின் செயற்பாடுகளுக்கு எமது பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களின் ஒத்துழைப்பு மிக ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தந்து வருகின்றது.

## 2008 நிர்வாக சபை

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. சத்தியவரதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள்:- | திருமதி ப. சிறிதரன் |
| | செல்வி த. சுகந்தினி |
| தலைவர்:- | செல்வன் த. வாகீசன் |
| செயலாளர்:- | செல்வி. ப. புவிதா |
| பொருளாளர்:- | செல்வி இ. யனுஷா |

# தமிழ் மன்றம்

எமது வித்தியாலயத்தில் இயங்குகின்ற மன்றங்களில்ஒன்றாக தமிழ் மன்றம் விளங்குகின்றது. மாணவரின் தேடல்களை ஊக்குவித்து அறிவாற்றலை வளர்த்தெடுத்து மாணவர்களின் அறிவு, ஆற்றல், மொழித்திறன் என்பவற்றை ஏற்படுத்துவதில் இம்மன்றம் பெரும்பங்கு வகிக்கின்றது.

இவ்வகையில் எமது மன்றத்தால் தமிழ்த்தினப் போட்டி, வருடத்தில் மூன்று தடவைகள் தனது செயற்பாடுகளை வழங்கி வருகின்றது. இதில் நாடகங்கள், விவாத அரங்கு, உரையாடல், வினாடி வினா, பேச்சு, கவிதை, பாடல், ஆகியவற்றை தன்னகத்தே உள்ளடக்கி மாணவரின் கல்வியில் இணைப்பாட விதானச் செயற்பாடாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றச் செயற்பாடுகளூடாக தமிழ் மொழிப் பாடப் பெறுபேறுகளும்உயர்வடைந்துள்ளமையை காண முடிகிறது.

தமிழ் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பூரண ஒத்துழைப்பையும், சிறப்பான வழிகாட்டலையும் தந்து மன்றம் சிறப்பாக பணியாற்ற உதவுகிறார்கள்.

எமது பாடசாலை மலர் ஒன்றினை வெளியிடுவதையிட்டு இம் மன்றமானது பெருமகிழ்ச்சி யடைகின்றது. எம வித்தியாலயத்தில் முதன்முதலாக வெளிவரும் இம்மலரானது பாடசாலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதோடு மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்து காணப்படுவது வரவெற்கத் தக்கதாகும்.

## 2008 நிர்வாக சபை

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. சத்தியவரதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள் :- | செல்வி ஜெனிதா இந்திரன் |
| | திருமதி ச. புவனேந்திரா |
| தலைவர்:- | செல்வன் ச. ரவிக்குமார் |
| செயலாளர்:- | செல்வி. பே. தனுஷா |
| பொருளாளர்:- | செல்வன் இ. நிகேதன் |

# கணித, விஞ்ஞான, விவசாய மன்றம்

மேற்படி மன்றமானது வருடத்தில் மூன்று தடவைகள் தனது செயற்பாடுகளை வழங்கி வருகின்றது. இதில் கணித, விஞ்ஞான, விவசாயம் சார்ந்த பாடங்களுடன் தொடர்புடையதாக நாடகம், விவாத அரங்கு, உரையாடல், வினாடி வினா ஆகியவற்றை தன்னகத்தே உள்ளடக்கி மாணவரின் கல்வியில்இணைப்பாட விதானச் செயற்பாடாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலை மலர் ஒன்றினை வெளியிடுவதை இட்டு இம்மன்றமானது பெருமகிழ்ச்சி அடைகின்றது. எமது வித்தியாலயத்தில் முதன் முதலாக வெளிவரும் இம்மலரானது. பாடசாலையின் வளர்ச்சியைச் சித்தரிப்பதோடு மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் அமைத்து காணப்படுவது வரவேற்கத் தக்கது.

## 2008 நிர்வாக சபை

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. சத்தியவரதன் (அதிபர்) |
| பொறுப்பாசிரியர்கள்: - | திரு. ந. ரமணன் |
| | திருமதி கா. சோதிநாதன் |
| | திரு. க. கணேசமூர்த்தி |
| தலைவர்:- | செல்வன் த. ஸ்ரீரங்கன் |
| செயலாளர்:- | செல்வி. மேகலா |
| பொருளாளர்:- | செல்வன் த. வாகீசன் |

# பாடசாலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியோர்




திருமதி நிர்மலா சிறிகரன்



திருமதி நாளாயினி ரமணம்



செல்வி. கவிதா கதிரவேலு



செல்வி ஜெயராணி குருசுமுத்து


# பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்



கதிர்காமநாதன் சுதர்சினி



அமிர்தலிங்கம் பிரபாகரன்



தனுஷ்கோடி தர்ஷிகா



செபமாலை ராஜ்குமார் மார்க்

## க.பொ.த.(சா/த) பரீட்சை - 2007ல் சிறப்புப் பெறுபேறு பெற்றோர்



தருமலிங்கம் ஸ்ரீரங்கன்




பாலசுப்பிரமணியம் மேகலா

### தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் (2007) சித்திபெற்றோர்



லக்ஷன்யா புவனேஸ்வரகுமார்

### பாடசாலைக் காவலாளி




திரு வேலுப்பிள்ளை கீதபொன்கலன்

### மாவட்ட மட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் வெற்றி



செல்வி சண்முகநாதன் துஷாந்தி

### மாவட்ட மட்ட தமிழ்த்தின கட்டுரையாக்கல் போட்டியில் வெற்றி



செல்வி தனுஷா பேரின்பம்

# எமது பாடசாலை அன்றும் இன்றும்

1922ம் ஆண்டு அமரர் சி. வேலுப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட எமது இப் பாடசாலையே நெடுந்தீவின் முதல் சைவப் பாடசாலையும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது பாடசாலையும் ஆகும். பல அதிபர்கள், பல்வேறு ஆசிரியர்கள் என பல நூற்றாண்டுக் கணக்கானோரால் கல்வி அறிவு, ஆளுமை புகட்டப்பட்ட நிறைந்த நன் மாணவர்கள் பரம்பரையை தன் புத்திர புத்திரிகளாகக் கொண்டது எம் வித்தியாலயம்.

சிறிய கொட்டிலாக ஆரம்பித்துப் பல ஆண்டின் பின் கட்டட அமைப்புப் பெற்று பின்னர் நீண்ட காலமாக "ட" வடிவ கட்டிட அமைப்புக் கொண்டதாக மிளிர்ந்து பின்னர் 'ப" வடிவ கட்டிட அமைப்பாக மாறி இடப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் நிறை சேவை வழங்கி வந்தது இக்கலைக் கோவில் நெமுவினி சித்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக அவனின் அருளாட்சிக்கு உட்பட்டு குறைந்த நிலம், குறைந்த கட்டிடம், குறைவான வசதிகள், மிகப் பழைய தளபாடங்கள் என்று பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே கற்றல் கற்பித்தல் செயற்பாடு இடம்பெற்று வந்தது. ஆசிரியர் பற்றாக்குறை, உயர்தர வகுப்புக்கள் இன்மை, சொந்தமான விளையாட்டு மைதானம் இன்மை, பௌதீக வளப்பற்றாக்குறை என எத்தனையோ சிரமங்கள் எம்பகுதி மாணவர் கல்விக்குத் தடையாக அமைந்து இருந்தன. இந்நிலையிலும் அதிக மாணவர் தமது ஊக்கத்தாலும் உற்சாகத்தாலும் கல்வி கற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்கள்.

இவ்வாறான நிலையில் 2001ம் ஆண்டு எமது வித்தியாலயத்திற்கு விடிவு காலமாக அமைந்தது. எமது புதிய அதிபராகக் கடமையேற்ற திரு. ச. சத்தியவரதன் அவர்களுடைய வருகை எமக்கும் எம்பாடசாலைக்கும் மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. நாம் **O/L** சித்தியடைந்தநிலையில் உயர்தரக்கல்வியை எவ்வாறு எங்கு மேற்கொள்வது என்று தெரியாமல் திகைத்த போது "திக்கற்றவனுக்கு தெய்வம் துணை என்பது போல எமது புதிய அதிபர் எமது கஸ்ட நிலை உணர்ந்து பல்வேறு கஸ்டத்தின் மத்தியில் எமது பாடசாலையிலேயே க.பொ.த. உயர்தர வகுப்பை 2001ம் ஆண்டு குறிப்பிட்ட சில ஆசிரியர்களுடனும் 12மாணவர்களைக் கொண்டும் ஆரம்பித்து எமது பாடசாலையை **1'C'** தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தியதை இட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம்.

எமது பாடசாலைக்கு படிப்படியாக வளங்கள் குவிந்தன. போதிய நவீன தளபாடங்கள்,

ஆய்வுகூட நூலக வசதிகள், போதிய கட்டிட வசதிகள், தேவையான காணி அன்பளிப்பாகப் பெறப்பட்டமை. எமக்கென சொந்தமான பெரிய விளையாட்டு மைதானம், கணனிகள், சிறுவர் பூங்கா, ஒலிபெருக்கி சாதனங்கள், விளையாட்டு உபகரணங்கள், சிற்றுண்டிச்சாலை வசதி, ஜெனரேற்றர்கள், 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் புதிய கிணறு, நவீன கற்பித்தல் சாதனங்கள், தற்போது மின் இணைப்பும் பெற்று வளம் நிறைந்த பாடசாலையாக மிளிர்வதோடு மட்டுமல்ல, பாடசாலைக்கான சுற்றுமதில் , பெயர் வளைவு, வாணி சிலை என அமைத்து பாடசாலையை பூஞ்சோலையாக மாற்றி அமைத்த எமது அதிபருக்கு நாம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இன்று அழகுக்கும் தூய்மைக்கும் உதாரணமாக அனைவராலும் பாராட்டப்படும் பாடசாலையாக எம் வித்தியாலயம் திகழ்கின்றது.

கல்வி வளர்ச்சியில் கூட எமது பாடசாலை முதல்நிலை வகிக்கின்றது. சிறந்த பெறுபேறுகள், நூறுவீத சித்திகள், புலமைப் பரிசில் வெற்றிகள், பல்கலைக்கழக கற்கைகள், தமிழ்தினம், விளையாட்டு, பண்ணிசை, ஆங்கில தினம் என கோட்ட, வலய, மாவட்ட மட்ட வெற்றிகள், சாதனைகள் என்று எமது வித்தியாலயம் வீறுநடை போட்டு வளர்கின்றது. ஆன்மீக ரீதியில் அன்று நவராத்திரி பூசையோடு மட்டும் நின்ற எம் வித்தியாலயத்தில் இன்று நால்வர் குருபூசை, கந்தசஷ்டி பூசை எனப் பல்வேறு ஆன்மீக நிகழ்வுகள் நடப்பதும் நெழுவினி சித்தி விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனையை இந்து மாணவர் மன்றமே நடாத்துவதும், தீட்சை வழங்கி உதவுவதும் எனப்பல நிகழ்வுகள் இடம் பெறுவதோடு வெள்ளிக்கிழமை காலை அனைத்து மாணவர்களும் தூய்மையுடன் புத்தகம் ஒரு கையும் பூக்கள் மறு கையுமாக பாடசாலை வந்து விநாயகரைத் தரிசிக்கும் காட்சி என்றும் மறக்க முடியாதது.

இவ்வாறு இன்று பல்வேறு வளர்ச்சி நிலைகளை எமது வித்தியாலயம் அடைந்து தீவகத்தின் சிறந்த கலைக் கோவிலாக மிளிர்வது எம்மை எல்லாம் மகிழ்ச்சியின் உச்சிக்கே இட்டுச் சென்றுள்ளது. இக் கலைக்கோவில் என்றும் பல வளர்ச்சிகளைக் காண வேண்டும். மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**செல்வி குமாரசாமி லலிதாதேவி**
**உபதலைவர்**

**செல்வி. இலட்சுமணன் ஜீவநந்நினி**
**செயலாளர்**

**பழைய மாணவர் மன்றம்**
**சைவப்பிரகாச வித்தியாலயம்,**
**நெடுந்தீவு.**

# நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்

(கலை மலரில் இருந்து மறுபதிப்பு)

சைவப் பிரகாச வித்தியாலயம், தீவுப் பகுதியைச் சேர்ந்த நெடுந்தீவிலுள்ளது. நெடுந்தீவின் முக்கிய துறையாகிய மாவிலித் துறைமுகத்தில் இறங்குபவர், பிரதான வீதி வழியாக மேற்கு நோக்கி ஏறக்குறைய 4மைல் தூரம் பிரயாணம் செய்தால் நெடுந்தீவு மேற்குக் கிராமத்தில், பழம் பெருமை வாய்ந்த நெழுவினி விநாயகர் ஆலயம் புதுப் பொலிவுடன் அருளொளி பரப்புவதைக் காண்பர். இத் திருக்கோவில் பிரதான வீதியின் வட கரையோரமாக அமைந்திருத்தலையும், நெடுந்தீவு மக்களின் 'ஊருணி'யாக அமைந்த நன்னீர்க் கிணறுகளைக் கொண்ட சாராப் பிட்டிக்குச் செல்லும் வீதி தென் கரை யோரத்திலிருந்து வெளிப்படுவதையும், சந்தியின் தென் மேற்குப் பக்கமாக, புதுக்கி அமைக்கப்பட்ட கட்டிடம் ஒன்று காட்சி தருதலையுமறிவர். இதுவே நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம். புதுக்கி அமைக்கப்பட்ட இக்கட்டிடம் பல புராதனச் செய்திகளை உள்ளடக்கியது.

நெடுந்தீவு மேற்குக் கிராமத்தில் இப்பொழுது ஐந்து பாடசாலைகளுள், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்குமுன், இவைகள் யாழ்ப்பாணம் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையின் கீழ் இயங்கி வந்தவை. நான்கு பாடசாலைகள் மேற்படி சங்க காலத்தில் தோன்றியவை. ஆனால் இப் பாடசாலை அச்சங்கம் தோன்றுவதற்குக் காரணமாகவிருந்த பெருமையுடையது.

சைவப் பிரகாச வித்தியாலயமே நெடுந்தீவு மேற்கில் உயர்வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாகும். இஃது ஒன்று தொடக்கம் ஒன்பது வரையுள்ள வகுப்புக்களையுடைதாய் கனிஷ்ட மகா வித்தியாலயமாக இயங்கி வருகிறது. 229 மாணவர் கல்வி பயில்கின்றனர். இவர்கள் எல்லோரும் சைவ சமயத்தவர் இவர்களில் 115பேர் ஆண்கள், 114பேர் பெண்கள் 6ஆம் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரங்களிலும் 102மாணவர் கல்வி கற்கின்றனர். தேசிய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (9ஆம் தரம்) பரீட்சைக்கு, இவ்வாண்டில்(1995) மாணவர் 20பேர் விண்ணப் பித்துள்ளனர். இப்பாடசாலையின் அதிபராக பண்டிதர் சு. பசுபதி கடமையாற்றுகிறார். திருமதி பா. இராமனாதன் ,செல்வி என். அம்பலவாணர், திரு. சு. நடராசசிங்கம், திருமதி கா. கந்தையா, திருமதி பு. வேலுப்பிள்ளை திரு.க. கயிலாய பிள்ளை திரு. கா. பூபாலசிங்கம், திரு. க. சோதி லிங்கம் என்போர் துணை ஆசிரியராகப் பணி புரிகின்றனர். இவர்களிலொருவர் வாரத்தில் இரு

நாட்கள் வேறு பாடசாலையில் கடமையாற்று கிறார்.

இப் பாடசாலை மாணவரிற் சிலர் அரசினரின் 5ஆம் தரப்புலமைப் பரிசிற் பரீட்சையிற்றேறியும், அகில இலங்கை உயர் பாடசாலைப் பரீட்சையில் சித்தியடைந்தும் வெளியூர்களிலுள்ள உயர்தர வித்தியாலங்களிற் கல்வி பயில்கின்றனர். கொழும்பு விவேகானந்த சபையாரின் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றி வருடந்தோறும் நூற்றுக்கு மேற்பட்டோர் சைவசமயச் சான்றிதழ் பெறுகின்றனர், அகில இலங்கைப் பரிசிலும் பெறுகின்றனர்.

மக்களின் குடிபெயர்ச்சி காரணமாகச் சனத்தொகை குறைவடைந்தாலும், 5ஆம் தரம் முடியவுள்ள வகுப்புகள் கற்கும் மாணவர்க்கு ஆங்காங்கே சிறிய பாடசாலைகளிருப்பதனாலும், 6ஆம் தரத்திலும் அதற்கு மேற்பட்ட தரங்களிலும் கல்வி கற்கவேண்டிய மாணவர் சிலர் பிறவூர்ப் பாடசாலைகளுக்கும், நெடுந்தீவு மத்தியிலுள்ள மகா வித்தியாலயத்துக்கும் செல்வதனாலும் மாணவர் தொகை அதிகரிக்காத நிலை இருந்து வருகிறது. மாணவர்தொகை அதிகரித்து, ஒவ்வொரு பாடத்துக்கும் சிறப்புப் பெற்ற ஆசிரியரும் நியமிக்கப்பெறின் இப் பாடசாலையால் இக் கிராமம் பெரிதும் முன்னேறும், புதிய கல்வித்திட்டத்தின் பயன் முழுவதையும் மக்கள் பெற வாய்ப்பிருக்கும்.

ஊர்காவற்றுறைக் கல்விவட்டார மாணவர்கள் தத்தமது பாடசாலை வரலாற்றை ஓரளவாவதுஅறிந்து கொள்வதற்கு வாய்ப்பாகவும், ஊர்வாற்றுறைக் கல்வி வட்டாரத்தின் கல்வி வரலாற்றை பெரும்படியாக எல்லோரும் தெரிந்து கொள்வதற்கு வசதியாகவும் ஊர்காவற்றுறைக் கல்வி வட்டார ஆசிரியர் சங்கம் "கலைமலர்" ஒன்று வெளியிடத் துணிந்தமை வரவேற்கத் தக்க நற்செய்தியாகும். இதற்குத் தூண்டு கோலாக இருந்து பணியாற்றும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. நடராசா அவர்கள் எமது பாராட்டுக்குரியவர்.

எமது இலங்கைத் தீவகத்தை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் ஆட்சி புரிந்த காலத்தில் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் பெரும்பாலும் றோமன் கத்தோலிக்க மதச் சார்பாகவும் புரட்டஸ்தாந்து மதச் சார்பாகவும் இயங்கி வந்தன. இதனால் பெரும்பான்மையினரான புத்தமதப் பிள்ளைகளும் சைவ சமயப் பிள்ளைகளும் கல்வி கற்க விரும்பின் வேற்று மதப் பாடசாலைகளையே நாடவேண்டியிருந்தது. மதம்மாறிய பலருக்கும் பெரு நிதிபடைத்த சிலருக்கும் இப்பாடசாலைகளில் உயர்கல்வி கற்கும் வாய்ப்பும் கிட்டியது.

கி.பி. 1921ஆம் ஆண்டளவில் நெடுந்தீவில் சைவமதச் சார்பான பாடசாலைகள் உருவாகவில்லை. நெடுந்தீவு மேற்குக் கிராமத்தைப் பொறுத்தவரையில் 5ம் வகுப்புக்கு மேற்பட்ட தரங்களையுடைய வேறு மதப்

பாடசாலைகளுமில்லை.

"மனிதன் மனிதனாக வாழுவதற்கு மதக்கல்வி உறுதுணைபுரிய வல்லது. அக் கல்வி இளமைப் பருவத்திலேயே ஊட்டப்பட வேண்டும். இளமையிற் கல்வி சிலையில் எழுத்தன்றோ! மத ஆசார அனுட்டானங்களும் இளமைப் பருவத்திலேயே பழக்கப்பட வேண்டும். தொட்டிலிற் பூண்டகுணம் சுடுகாடு மட்டுமல்லவா! இவ்வகையான சிந்தனைகள் நெடுந்தீவு மக்களின் உள்ளத்தை உறுத்திக் கொண்டேயிருந்தன.

1922ஆம் ஆண்டு பிறந்தது நெடுந்தீவைப் பிறந்தகமாகவும், அனலைதீவைப் புக்ககமாகவு முடைய திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை ஆசிரியர் நெடுந்தீவுக்கு வருகை தந்தார். இவர் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள், அப்பொழுது அனலைதீவு சதாசிவவித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர். சைவசமய அறிவும் ஆராசமும் உடையவர், பொது நலப்பணியில் பேரரார்வ முடையவர், நெடுந்தீவின் சைவசமயப் பிள்ளைகள் வேற்றுமதச் சூழ்நிலையில் கல்வி பயில வேண்டியநிலை தொடர்ந்து இருந்து வருவதைக் கண்டார். மனமிகநொந்தார். இந்நிலையில் நெடுந்தீவில் வாழும் சைவசமயப் பற்றுள்ள பெரியார் சிலர் இவரை அணுகி சைவப் பாடசாலை இல்லாக்குறையை எடுத்துக் கூறிக் கலந்துரையாடினர். இச்சந்திப்பின் பெறுபேறாக நெடுந்தீவு மேற்குக் கிராமத்தின் மத்தியில், நெழுவினி விநாயகராலயத்துக்கு அண்மையாக சைவப்பாடசாலை ஒன்று நிறுவ வேண்டும் என்றும், திரு.சி. வேலுப்பிள்ளை ஆசிரியர் தலைமையாசிரியராகப் பணிபுரிய வேண்டுமென்றும் முடிபெடுக்கப்பட்டது.

பாடசாலை கட்டத்தீர்மானித்த காணி நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. கட்டிடத்துக்குரிய பொருள்களும் நன்கொடையாக வந்து சேர்ந்தன. கட்டிட வேலைகள் சிரமதானமாக நிறைவேறின, 60அடி நீளமான தற்காலிக கட்டிடம் உருவாகியது. 1922ம் ஆண்டு பங்குனி மாதத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திரு. சி. வேலுப்பிள்ளை தலைமைசிரியராகவும், திரு கா. சுப்பிரமணியம் திரு. வே. இராமநாதர், திரு. சி. இளையதம்பி என்போர் உதவியாசிரியர்களாகவும் பணி புரிந்தனர்.

மாணவர் ஆசிரியரின் வசதி நோக்கியும், அரசாங்கத்தின் அங்கீகாரம் கருதியும் "நிரந்தர கட்டிடம் ஒன்றை உருவாக்க வேண்டும்" எனும் எண்ணம் பலரது உள்ளத்தில் உதித்தது. அதற்கான முயற்சிகளில் ஆசிரியர்களும் சைவப் பெருமக்களும் ஈடுபட்டனர். இத் தொண்டில் நெடுந்தீவு மேற்கு அம்பலவாணர் கணபதிப்பிள்ளை அவர்களின் பணி முதலிடம் பெற்றிருந்தது. பொருளாகவும் பணமாகவும் சைவப் பெருமக்கள் உதவினர். 60அடி நீளமும் 20அடி அகலமுமான

கட்டிடம் "ப" வடிவத்தில் உருவானது. தளபாடங்களும் நிரப்பப்பட்டன. புதிய கட்டிடத்திற்குப் பாடசாலை மாறியது.

ஆசிரியர்களின் பொருளாதாரநிலை சிரம தான முறையில் தொடர்ந்து கற்பிக்க இடங் கொடுக்கவில்லை. தலைமையாசிரியர் திரு.சி. வேலுப்பிள்ளை அவர்கள் திரு. இ.சுவாமிநாதர் அவர்களை தமது இடத்தில் அமர்த்திவிட்டு மூளாய் விக்டோரியாக் கல்லூரியில் சேவையாற்றி தனது சம்பளத்தின் ஒரு பகுதியை பாடசாலைப் பராமரிப்புக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இப்பணத்தையும். சைவப்பெருமக்கள் வீடுகள் தோறும் சேகரிக்கப்பட்ட "பிடி அரிசி" வருவாயை யும் கொண்டு பாடசாலைப் பராமரிப்பை திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்கள் கவனித்து வந்தார். பிள்ளைகளும் வகுப்புகளும் கூட ஆசிரியர்களும் தேவைப் பட்டனர். முன்காட்டிய உதவியாசிரியர் களுடன் திரு. க. கோவிந்து, திரு.இ. சுந்தரம் பிள்ளை, திரு. ஆ. வைத்தியலிங்கம் என்போரும் பணிபுரிந்தனர்.

குறைந்த பொருளாதார நிலையுடைய ஊர்மக்கள் பாடசாலையைத் தொடர்ந்து நடத்தச் சிரமப்பட்டனர். தூதுக்குழுவொன்று சேர்.பொன். இராமநாதன் அவர்களைச் சந்தித்தது. பாடசாலை முகாமையைக் கையேற்கும்படி கேட்டுக் கொண்டது. அவர், தம்மால் நிர்வாகிக்கப்படும் பாடசாலைகளின் தொகையைச் சுட்டிக்காட்டி ஏற்க மறுத்து விட்டார். திரும்பி வந்தவர்கள் ஐந்தாறு மாதங்களின் பின் மீண்டும் இராம நாதனாரைச் சந்தித்தனர். பொருளாதாரம் குறைந்த கிராமங்களில் இயங்கி வரும் சைவப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கும் அவ்வகைப் பட்ட கிராமங்களில் புதிய சைவப் பாடசாலை களை உருவாக்குவதற்குமாக சைவ மதச்சார்பான சங்கமொன்றை உருவாக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். சிறிது நேரச்சிந்தனையின்பின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கம்" எனும் பெயரில் சைவச்சங்கம் ஒன்றை உருவாக்கி அரசாங்கத்தின் பதிவையும் பெற்றார் இராமநாதன் அவர்கள். இப்பாடசாலையும் இதற்குப்பின் தோன்றிய நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாசாலையும் யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் 1ஆம் 2ஆம் இலக்கப் படாசாலைகளாயின.

இப்பாடசாலையின் தலைவர் பதவியை முறையே திரு. சி. வேலுப்பிள்ளை, திரு. இ. சுவாமிநாதர், திரு. நீ. சேதுபதி, திரு. இ. சுவாமிநாதர், திரு.வி. இராமலிங்கம், திரு.நா. பசுபதிப்பிள்ளை, திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. ஆ. கந்தையா திரு.எஸ். இராமசாமி, திரு.இ.சுப்பிரமணியம், திரு.க. கணபதிப் பிள்ளை, திரு. இ. வேலுப்பிள்ளை என்போர் பொறுப் பேற்றுப் பணிபுரிந்திருக்கின்றனர்.

உள்ளூர் ஆசிரியர் மாத்திரமன்றி பிறவூர்

ஆசிரியர்களும் தலைமையாசிரியராகவும் உதவியாசிரியராகவும் பதவியேற்றுப் பெரும்பணி புரிந்திருக்கின்றனர். இவர்களில் இடைக்காட்டு ஆசிரியர்களின் பணி முதலிடம் வகித்தது.

பழம்பெருமை வாய்ந்த சைவப்பிரகாச வித்தியாலயம் நெடுந்தீவு மேற்கு கிராம மாணவர்க்கு பல்திறப்பட்ட உயர் கல்வியை வழங்கக் கூடிய வகையில் வளர்ச்சியடைவதற்கு ஊர் மக்களும், பழையமாணவரும், பெற்றார் ஆசிரியரும் கல்விப் பகுதியும், பொதுநலன் பேணும் ஆர்வமுடைய அயலூர்மக்களும் உதவியளிக்க முன்வருவார்களாக. பிள்ளையார் கோவிற் பள்ளிக்கூடம், எனப் பொது மக்களால ழைக்கப்படும், இவ்வித்தியாலயம் மேன்மேலும் வளர்ச்சியடைய நெழுவினி விநாயகன் திருவருளை வேண்டுகிறோம்.

**அமரர் பண்டிதர். சு. பசுபதி**
**(அதிபர்)**

ஆசிரியர் குறிப்பு:

30 ஆண்டுகளின் பின் இன்று எம் வித்தியாலயம் அமரரின் கனவுகளை நனவாக்கி உயர்ந்து நிற்பது அவரின் ஆத்ம சாந்தி அடைய உதவும்.

# எமது சைவப் பிரகாச வித்தியாலயம்

எமது தாயகத்தின் மேற்குப் பகுதியின் பிரதான வீதியில் சைவப் பிரகாச வித்தியாலயம் அமைந்துள்ளது. இவ்வித்தியாலயத்தின் எதிர்ப்பக்கத்தில் பழமையும் பெருமையும் மிக்க நெழுவினிப் பிள்ளையார் என்று எல்லோராலும் வழிபடும் ஆலயம் அமையப் பெற்றது சிறப்புடையதாகும். "கற்றதனால் ஆய பயன்" என்ற வள்ளுவன் வாக்குக்கும்," ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையாளரின் வாக்குக்கு அமைவாக வித்தியாலயமும் ஆலயமும் அருகருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தவப் பெருமைமிக்க கல்விக் கூடம் 1922ல் அரசின் கீழ் உதவி நன்கொடைபெறும் பாடசாலையாக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையால் நெடுந்தீவில் 2ம் பாடசாலையாகவும், 1ம் பாடசாலை கிழக்குப் பகுதியில் உள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையும் பதிவு பெற்றன. பிற்காலத்தில் இந்த சைவ வித்தியா விருத்திச்சங்கம் 200க்கு மேற்பட்ட பாடசாலைகளையும், ஒரு ஆசிரியர்பயிற்சிக் கலாசாலையையும் நிர்வகித்த கல்விநிலையமாக விளங்கியது. 1962ல் இப்பாடசாலைகள் அரசினர் பாடசாலையாகப் பதிவு செய்யப் பெற்றது..

1922ல் இப்பாடசாலையை அமைப்பதற்கு வீட்டுக்கு ஒரு பனை என்றும். வீடுகளில் பிடிஅரிசி சேர்த்து கட்டிடத்திற்கும் ஆசிரியர் வேதனத்திற்கும் கொடுத்தார்கள். பண்டித்தெரு உயர்திரு. பெரியதம்பியார் உதவி முகாமையாளராக இருந்து சைவப் பிரகாச வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்களில் இவரும் ஒருவராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நானும் இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் உயர்கல்வியையும் பெற்றுக் கொண்டேன். அரிச்சுவடிகளில் திருமதி கந்தையா பொன்னம்மா, திரு. ஆசைப்பிள்ளை என்பவர்கள் படிப்பித்தார்கள். பிற்காலத்தில் திரு. ஆசைப்பிள்ளை என்பவர் புராணங்களுக்குப் பயன் சொல்லும் (பாட்டும் பயனும்) சிறந்த பண் ஆசிரியராக திகழ்ந்தார். 1934ம் ஆண்டில் 5ம் வகுப்பில் திரு. ஆ. கந்தையா ஆசிரியரிடம் கல்வி கற்றேன். இவர் மிகவும் கண்டிப்பானவர், மேல்நிலைக்கல்வியை மீண்டும் இப்பாடசாலையில் 1937ல் ஆரம்பித்தேன். திரு சுவாமிநாதன் அவர்கள் அதிபராக இருந்தார். 1940ம் ஆண்டு காலமாகும் வரையும் கடமையாற்றினார். இவரின் சேவைக்காலம் பொற்காலம் எனலாம். திறமையான ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். திருவாளர்கள் ஆ.சுப்பிரமணியம் (செல்லத்துரை) தி.கணபதிப்பிள்ளை(ஒழுகுழி) க.கணபதிப்பிள்ளை(வெள்ளை) ஆசிரியர்களாக திருவாளர்கள் R.T. சுப்பிரமணியம் (சாவகச்சேரி) பண்டிதர் நடராசா (சுளிபுரம்) திரு. கைலாசபிள்ளை(சரசாலை) ஆகியோர் கல்விமான்களை உருவாக உதவியாகத் திகழ்ந்தார்கள்.

சைவவித்தியாவிருத்திச்சங்கத்தினால் மாணவர் தேர்ச்சி மன்றங்களும் மாணவர்நேசன் பத்திரிகையும் ஒழுங்காக வெளியாகிக் கொண்டிருந்தன. 1941ல் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் (SSL) சித்தியடைந்து பாடசாலையில் இருந்து வெளியேறினேன். அக்காலத்தில் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் (திரு. சுவாமிநாதன் அவர்களின் மருமகன்) அதிபராகக் கடமையாற்றினார்.

சைவப் பிரகாச வித்தியாலயம் சிறந்த ஆசிரியர்களையும், கல்விமான்களையும் உருவாக்கியுள்ளது. முதன்முதலில் மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதர்களான திரு. பசுபதிப்பிள்ளை பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் பண்டிதர் நா. கந்தையா என்பவர்களும் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் என்பதை கூறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை 86ம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு அதிபர் ஆசிரியர்களைப் பாராட்டும் வேளையில் எனது வாழ்த்துக்களையும் பழைய மாணவன் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மு. சுப்பையா**
**இளைப்பாறிய அதிபர்**
**கனடா**
**(வெந்தவளவு, மேற்கு, நெடுந்தீவு)**

கணனி அறையில்



நூலகத்தில்



விஞ்ஞான ஆய்வுகூடத்தில்



சிறுவர் பூங்காவில் சிறுவர்கள்



நடன அறையில்



பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் குருபூஜை



க. பொ. த. உயர்தர முதல் அணி அதிபர் ஆசிரியர்களுடன் ஒன்றுகூடல் நிகழ்வில்



ஆசிரியர் நலன்புரிச் சங்க பிரியாவிடை நிகழ்வின் போது



# எமது பாடசாலை வளர்ச்சிக்கு பலம் தந்து வளம் ஈய்ந்தோர்

- 100" X 20" வகுப்பறைத் தொகுதி

  கௌரவ சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள்

- பான்ட் வாத்தியக் கருவிகள்

  கணளி - 01, பிறின்ரர் - 01,

  கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு. M.K. சிவாஜிலிங்கம் அவர்கள்

- புதிய கிணறு அமைத்தல், மின்சாரம் பெறுதலும் ஆய்வுகூட மின்சுற்று அமைத்தலும்

  கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு. N. சிறிகாந்தா அவர்கள்

- சூரிய மின்கலத் தொகுதி - 01

  கௌரவ எம்.பி, நாடாளுமன்ற திரு. ம. ஈழவேந்தன் அவர்கள்

- அமரர் க. சின்னத்துரை ஞாபகார்த்த சிறுவர் பூங்கா அமைத்தல்

  திரு. சி.பரராசசிங்கம் அவர்கள் (கனடா)

- அமரர் வே. குமாரசாமி ஞாபகார்த்தமாக பாடசாலை முன்பாக 270அடி நீளமான மதில் அமைத்தல், விளையாட்டு மைதான பின்பக்க கேற் அமைத்தல்

  திரு. கு. சோதிராசா அவர்கள் (லண்டன்)

- பெயர்வளைவு அமைத்தல்
- வாணி சிலை அமைப்பு

திரு. வ. சங்கரப்பிள்ளை ஜேபி அவர்கள் (நெடுந்தீவு)

- ஒலிபெருக்கி சாதனம் அன்பளிப்பு

திரு. தி. கருணாகரன் (கருணா) அவர்கள் பிரான்ஸ்"

- சிறிய ஜெனரேற்றர் - 01

திரு. சு. சிவநாயகமூர்த்தி அவர்கள் (கனடா)

- உருக்கு கண்ணாடி அலுமாரி - 01

அமரர் சி. கதிர்காமநாதன் நினைவாக

திரு. க. நடேசலிங்கம் (றமேஸ்) பிரான்ஸ்)

- வெற்றிக் கிண்ணங்கள் - 10

திரு.சி. உதயகுமர் அவர்கள் (கனடா)

- சூரிய மின்கலத் தொகுதி - 01

வன்னி ரெக்

- விளையாட்டு மைதானத் திருத்தம்
- விளையாட்டு மைதான வேலி அமைத்தல்
- மர, உருக்கு அலுமாரிகள் - 05 திருத்தல்
- பூச்சாடிகள் - 25

திரு.ச. சத்தியவரதன் அவர்கள் (நெடுந்தீவு)

- பாடசாலைக்கான காணி அன்பளிப்பு

அமரர் அப்பாக்குட்டி நாகநாதி. அவர்கள்

அமரர் கார்த்திகேசு இலட்சுமி அவர்கள்

திருமதி அம்பலவாணர் கனகம்மா அவர்கள்

- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் உருவப்படம்

திருநாவக்கரசு நாயனார் உருவப்படம்

சிவத்தமிழ்ச்செல்வி

அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

- மாணிவாசகர் உருவப்படம்

அமரர் திருமதி ஸ்ரீஞானலக்ஷ்மி அவர்கள்

- சுந்தரமூர்த்தி நாயனார் உருவப்படம்

திரு. இ. மருதலிங்கம் அவர்கள்

- நூலகப் புத்தகங்கள்

ஏசியா பவுண்டேசன் கொழும்பு

இந்துகலாசார அமைச்சு கொழும்பு

இராதகிருஸ்ண மிஷன் கொழும்பு

அமரர் த. சுதர்சன் நினைவாக

திரு.கா. தம்பிராசா அவர்கள்

- பாடசாலை மணி

திரு. வே. கீதபொன்கலன் அவர்கள்

- விளையாட்டு மைதான சுவீகரிப்பிற்கான நிதி

அமரர் நா. சங்கரப்பிள்ளை அவர்கள்

திரு.வ. சங்கரப்பிள்ளை ஜே.பி. அவர்கள்

- அலுவலக மேசை

திரு. எ. சத்தியசீலன் அவர்கள்

- பிளாஸ்ரிக் கதிரை - 10

திரு. டா. அலெக்ரின் றென்கலி அவர்கள்

- துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு இடம் அமைத்தல்
- கட்டிடம், கூரை,

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

- கூரைத்தகடுகள்(சீற்)

திரு. ப. ஐயாத்துரை அவர்கள்

- கணனி - 01. றைற்றல் -01

திரு. எஸ். மதுரநாயகம் அவர்கள் (அவுஸ்திரேலியா)

- கணனி - 01, பிறின்ரர் - 01

அமரர் வை. சதாசிவம் நினைவாக

திரு. ச. சந்திரன் (அவுஸ்திரேலியா)

- கணனி - 01

யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி

- அலுவலக பூச்சாடி-02

A/L மாணவர்கள் 2ம் அணி

- கொடிக் கம்பம் - 05

A/L மாணவர்கள் 3ம் அணி

- வெற்றிக் கிண்ணம் - 06

A/L மாணவர்கள் 4ம் அணி

- திரைச்சீலை

A/L மாணவர்கள் 5ம் அணி

- பிளேட் 42, டிஸ் - 06, கிளாஸ்-08 கரண்டி - 04

A/L மாணவர்கள் 6ம் அணி

- நிறைகுடத் தொகுதி

திருமதி விமலாதேவி புவனேஸ்வரகுமார் அவர்கள்

- மேசைவிரிப்பு வழங்கியோர்

திரு. ப. கிட்ணராசா அவர்கள்

திருமதி த. முத்துப்பிள்ளை அவர்கள்

முறைசாராக் கல்வி மாணவர்கள்

திருமதி ப. சிறிதரன் அவர்கள்

- வெற்றிக் கேடயம் வழங்கியோர்

திரு. வி. ரமணன் அவர்கள்
திரு. கி. அறிவரசன் அவர்கள்
அமரர் த. சுதர்சன் நினைவாக
திரு. மு. குணரத்தினம் அவர்கள்
அமரர் வே. மாணிக்கம் நினைவாக
திரு. மா. பார்த்தீபன் அவர்கள்

- விளையாட்டு மைதான விஸ்தரிப்பு காணி கொள்வனவு

திரு. திருமதி தருமரத்தினம் விஜயலதா அவர்கள் (இலண்டன்)

- நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா வழங்கியவை

1) பிளாஸ்ரிக் கதிரைகள் திரு.திருமதி பத்மசேனன், தேவி

2) விளையாட்டு மைதான முன்பக்க கேற்

அமரர் க. பசுபதி நினைவாக
திருமதி வேதநாயகி குமாரசாமி அவர்கள் (கனடா)

3) தொண்டர் ஆசிரியர், விசேடபாட ஆசிரியர், வேதனம்,

4) மாணவருக்கான புலமைப்பரிசில் - 05 மாணவர்

5) மலர் வெளியீட்டுக்கான நிதி

6) பரிசிலுக்கான நிதி

- 2008இல் வழங்க இருப்பவை

பாடசாலை முன்பக்க கேற்
கணனி - 01, பிறின்ரர் - 01, O.H.P - 01
பாடசாலை முழுமைக்கும் மின்சுற்று அமைத்தல்
நூலகத்திற்கான நூல்கள் கொள்வனவு

- அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம்

| | |
|---|---|
| சுற்றுமதில் 80மீற்றர் நீளம் - | சிறுவர் பாதுகாப்பு நிதியம் |
| வகுப்பறைகள் பிரித்து மூடி அடைத்தல்<br>மண்டபம் தளம் போடல் | யுனிசெவ் |
| சமையலறை - | உலக உணவுத் திட்டம் |
| முதலுதவிப் பொருட்கள்,<br>பாவனைப் பொருட்கள் | செஞ்சிலுவைச் சங்கம் நெடுந்தீவுக்கிளை |
| தளபாடங்கள் - | நிகொட் |

- அரச திணைக்களங்கள் மூலம்

| | |
|---|---|
| பெரிய ஜெனரேற்றா | அரச அதிபர் |
| கணனி கற்கை நிலையம் | SEMP |
| அலுவலக விரிவாக்கம்<br>நூலகம்,<br>ஆய்வுகூடம்<br>வகுப்பறைத்தொகுதி | மாகாண அமைச்சு |
| T.V.,CD பிளேயர், வானொலி, டெக்<br>பெரிய ஸ்கிறீன் - 04<br>தளபாடம் | வலயக்கல்வி அலுவலகம் |

- விளையாட்டு விழாக்களிற்கான அனுசரணை வழங்கியோர்

1) அமரர் சோதிடக் கலாநிதி கு. சுப்பிரமணியம் நினைவாக
   சு. சுதேச பாஸ்கரன் அவர்கள் (இலண்டன்)
2) அமரர் சுவாமிநாதன் அமரர் கணபதிப்பிள்ளை நினைவாக
   குடும்ப உறுப்பினர்கள்
3) நயினை திரு. திருமதி. ஜெ. ஜெய்சுரேஸ் அவர்கள் (கனடா)
4) திரு. திருமதி பாக்கியதேவி வன்னியசிங்கம் அவர்கள் (பிரான்ஸ்)

5) அமரர் குமாரசாமி வள்ளியம்மை நினைவாக

திரு.திருமதி. புண்ணியமூர்த்தி இராஜஇராஜேஸ்வரி அவர்கள் (பிரான்ஸ்)

- உடற்பயிற்சிக்கான உடை அனுசரணை வழங்கியோர்

1) திரு. கதிர்காமநாதன் நடேசலிங்கம் (றமேஸ்) அவர்கள் (பிரான்ஸ்)

2) திரு.திருமதி. தருமலிங்கம் முத்துப்பிள்ளை அவர்கள்

- பான்ட் வாத்திய அணிக்கான உடை - அனுசரணை வழங்கியோர்

1) திரு. சங்கரப்பிள்ளை - கோகுலவரதன் அவர்கள் (இலண்டன்)

2) திரு.திருமதி. விஜயலதா தருமரத்தினம் அவர்கள் (இலண்டன்)

- பரிசில் தினத்திற்கான பரிசில் அன்பளிப்பு வழங்கியோர்


2005ம் ஆண்டில் - திரு. கந்தையா வரதராஜா அவர்கள் (கனடா)

2006, 2007, 2008ம் ஆண்டில் - நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா

- பரிசில் தினம், வாணிவிழா, மலர் வெளியீட்டு விழாவிற்கான(2008) அனுசரணை வழங்கியோர்

திரு.திருமதி தருமரத்தினம் விஜயலதா அவர்கள் (லண்டன்)

**மனம் கோணாது நிறைமனதுடன் தாங்கள் ஈய்ந்த கொடைகளுக்காக எங்கள் இதயபூர்வ நன்றிகள் உதிர்த்தாகுக!**



# விசேட ஆக்கங்கள்

# நிறுவனங்களில் பயிற்சியளித்தலின் முக்கியத்துவம்

க.தேவராஜா
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள்
வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம் (Introduction)

பயிற்சி அளித்தல் என்பது பொதுவாக நிறுவனத்தில் வேலை செய்கின்ற ஊழியர்களின் அறிவாற்றலினையும், திறனையும் அதிகரிக்கச் செய்கின்ற ஒரு நடவடிக்கையாகும்.

எல். எல். ஸ்டெயின் மெட் (L.L.Stein Metz) பயிற்சியளித்தல் என்பதனை பின்வருமாறு வரையறுக்கின்றார். ஊழியர்களின் தொழில்நுணுக்க அறிவினையும், திறனையும் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக கற்றுக்கொள்ள பயன்படும் குறுகியகால செயற்திறன் என்பர்.

எட்வின் பிலிப்பே (Edwing. Flippo) என்பவரின் கருத்துப்படி குறித்த ஒரு வேலையினை செய்வதற்கு ஊழியர்களுடைய திறனை, அறிவினை அதிகரிக்கின்ற செயற்பாடு பயிற்சியளித்தல் என்பர்.

## 2.0 பயிற்சியளித்தலின் தேவை (Need for training)

பின்வரும் வழிகளில் பயிற்சியளித்தலுக்கான தேவை தோற்றம் பெறலாம்.

1. புதிதாக உள்வாங்கப்படும் ஊழியருக்கு குறித்த வேலையினை பரீட்சியமாக்கிக் கொள்வதற்கு பயிற்சியளித்தல் ஆனது தேவையானதாக அமைகின்றது.
2. நிறுவனத்திலுள்ள ஊழியர்களுக்கு அவர்களின் திறனையும் வேலை குறித்த அறிவினையும் காலத்திற்கு காலம் சீராக்கி கொள்வதற்கு பயிற்சி தேவை மேலும் பயிற்சியளித்தல் என்பது புதிதாக நிறுவனத்தில் இணைகின்ற ஊழியர்களுக்கும் தேவையாகும்.
3. ஊழியர் ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கும் போது குறித்த அந்த பதவிக்குரிய செயற்பாடுகளை செய்து முடிப்பதற்கு ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் தேவைப் படுகின்றது.
4. வேலை செய்கின்ற முறைகள், வேலை சூழல் போன்றவற்றில் மாற்றம் ஏற்படும் போது அதனை பின்பற்றி ஊழியர்கள் வேலை செய்து கொள்வதற்கும் பயிற்சியளித்தல் தேவைப்படுகின்றது.

## 3.0 பயிற்சியளித்தலின் முக்கியத்துவம் (Importance of Training)

பயிற்சியளித்தல் ஆனது பின்வருவனவற்றினால் முக்கியத்துவம் உடையதாக அமைந்துள்ளது.

- ஊழியர்களின் அறிவிலும், திறனிலும்

அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு அதாவது ஊழியர்களின் அறிவிலும், அவர்களின் திற னிலும் அதிகரிப்பினை ஏற்படுத்துவதால் ஊழி யர்கள் நன்றாக செயற்படுவார்கள்.

- உற்பத்தி, உற்பத்தித்திறன் என்பவற்றில் அதிகரிப் பினை ஏற்படுத்துகின்றது. அதாவது நன்றாக பயிற்றப்பட்ட ஊழியர்களினை வேலைக்கு அமர்த்துவதனால் அவர்களின் உற்பத்தித்திறன் அதிகரித்து உற்பத்தியும் அதிகரிக்கும்.
- வேலை திருப்தி ஏற்படுகின்றது. நன்றாக பயிற்றப் பட்ட ஊழியர்கள் உயர்ந்த திறனுடன் வேலை செய்வதனால் ஊழியர்களின் சுய நம்பிக்கை அதிரிக்கும், வேலை மீதான அர்ப்பணிப்பு அதிகரிக்கும். இதனால் ஊழியர்களின் வேலை குறித்த திருப்தியானது அதிகரிக்கின்றது.
- நிறுவனங்களின் வளங்கள் வினைத் திறனாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப்படுகின்ற தன்மை யானது பயிற்சியளித்தலால் உருவாகும்.
- விபத்துக்கள் தவிர்க்கப்படும்: நன்றாக பயிற்றப் பட்ட ஊழியர்கள் வேலையினை மேற்கொள்ளும் போது வேலைபற்றி அறிந்திருப்பதனால் விபத்துக் களிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம்.
- மேற்பார்வையாளரின் அளவினைக் குறைத்துக் கொள்ளலாம். நன்றாக பயிற்றப்பட்ட ஊழியர் களுக்கு குறைந்தளவு மேற்பார்வையாளர் போதியதாகிறது, அத்துடன் அவர்களின் உதவி யினை பெறாமலேயே வேலை செய்யக் கூடியதாக இருக்கும்.
- முறைப்பாடுகள் குறைக்கப்படுகின்றது.
- பயிற்றப்பட்ட ஊழியர் வேலை அமுல் மாற்றத்துக் கும் வேலை முறையின் மாற்றத்துக்கும் ஏற்ப வேலை செய்யும் நிலை உருவாக்கப்படும்
- நிறுவனத்தில் நிலைத்த தன்மையினையும் நெகிழ்வு தன்மையி னையும் அதிகரிக்கின்றது.
- வழக்கற்றுப் போகுதல் தடுக்கப்படுகின்றன.

பயிற்சியளித்தல் என்பது ஊழியர் தமது வேலைகளை ஆற்றுவதற்குத் தேவைப்படும் ஆற்றல் களைக் கற்பிக்கும் செய்முறை ஆகும். அதாவது ஊழியரின் பண்புகளுக்கும் வேலைத் தேவைப்பாடு களுக்குமிடையேயான பொருத்தப்பாட்டை முன் னேற்றுவதற்கு ஊழியரின் நடத்தை, அறிவு, ஊக்கப்படுத்தல் போன்றவற்றை மாற்றுகின்ற ஒரு முறைப்படியான செய்முறை ஆகும். பயிற்சியளித்த லானது ஏனைய மனிதவள நடவடிக்கைகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டது. உதாரணமாக மனிதவளத்திட்டமிடலில் ஆற்றல் பற்றாக் குறைகள் இனங்காணப்பட்டு அவ் ஆற்றல்களை ஊழியருக்கு ஏற்படுத்தும் பொருட்டு பயிற்சி வழங்கப்படலாம். செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் உண்மையான செயற்திறனுக்கும் எதிர்பார்க்கப்படும் செயற் திறனுக்குமிடையிலான இடைவெளி இனங்காணப் பட்டு அவ் இடைவெளியைக் குறைப்பதற்கு பயிற்சி வழங்கப்படலாம். அவ்வாறே ஏனைய மனிதவள நடவடிக்கைகள் பயிற்சியளித்தலுடன் இசைந்த வையாக காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக ஊழியர் புதிதாகக் கற்றுக் கொண்ட ஆற்றல் களுக்கேற்ப கொடுப்பனவுகள், பதவி உயர்வுகள் என்பன வழங்கப்படலாம்.

அபிவிருத்தி என்பது தனிநபர்களை தற்போதைய தேவைகளுக்காக அன்றி எதிர்கால பதவிகளுக்கு தயார்ப்படுத்துவதைக் குறிக்கும். (அதாவது நிறுவனத் திற்கு எதிர்கால பதவிகளுக்கு தயார்படுத்துவதைக் குறிக்கும்.) அதாவது நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் தேவைப்படக்கூடிய ஆற்றல்கள், திறமைகளை ஊழியருக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு முயற்சி

ஆகும். பயிற்சி, அபிவிருத்தி ஆகிய இரண்டுக்கு மிடையிலான வேறுபாடுகளைப் பின்வருமாறு காட்டலாம்.

| | பயிற்சி | அபிவிருத்தி |
|---|---|---|
| கவனம் செலுத்துதல் | தற்போதைய வேலை | எதிர்கால வேலைகள் |
| பரப்பு | தனித்தனி ஊழியர் | வேலைக்குழு/ நிறுவனம் |
| கால அடிப்படை | உடனடியாக மேற்கொள்ளல் | நீண்டகாலத்தில் மேற்கொள்ளல் |
| இலக்கு | தற்போதைய ஆற்றல் பற்றாக்குறைகளை நீக்குதல் | எதிர்கால வேலைத்தேவைப்பாடு களுக்காகத் தயார்படுத்தல் |

பயிற்சியளித்தல், அபிவிருத்தி ஆகிய இரண்டிலும் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் ஒரே மாதிரியானவை. தற்காலத்தில் பயிற்சியளித்தலின் நோக்கங்கள் பரந்தவையாக உள்ளன. நிறுவனங் கள் போட்டிச் சூழலில் நிலைத்திருக்க வேண்டுமாயின் தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப இணங்கிப் போக வேண்டியுள்ளது. உற்பத்தியையும், சேவைகளின் தரத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. ஊழியர்கள் தீர்மானமெடுத்தல்,செய்தித் தொடர்பு, குழு உருவாக் கம், நவீன தொழில்நுடபங்கள் என்பவற்றிலான ஆற்றல்களைப்பெற வேண்டியுள்ளது. இத்தகைய காரணங்களினால் நிறுவனங்களில் பயிற்சியளித்தல் முக்கியமான ஒன்றாக அமைகிறது. பல பெரிய நிறுவனங்கள் பயிற்சிளித்தலுக்கென ஆண்டு தோறும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றன

## 4.0 தேவை எழுந்தபின் பயிற்றுதலும் முன்கூட்டியே பயிற்றுதலும் (Reactive & Proactive Training)

தேவை எழுந்தபின் பயிற்சி என்பது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு பயிற்சியளிப் பதைக் குறிக்கும்.

உதாரணமாக: ஒரு உற்பத்தி வரிசையில் உயர்ந்தளவு பழுதடைந்த பொருட்கள் அல்லது குறைவான தரம் தொடர்பான ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஊழியருக்கு பயிற்சியளிப்பதைக் குறிப்பிடல் பயிற்சி எனலாம். நிறுவனம் தற்போது தேவைப்படாத ஆனால் எதிர்காலத்தில் தேவைப் படுமென கருதப்படும் ஆற்றல்களை ஊழியருக்கு பயிற்றுதல் முன்கூட்டியே பயிற்சி எனலாம்.

உதாரணம்: தற்போது மேலதிக மேற்பார்வை யாளர்கள் தேவைப்படாதிருக்கலாம். ஆனால் நிறுவனம் மனிதவளத் திட்டமிடலின் ஊடாக எதிர்காலத்தில் அவர்கள் தேவைப்படுவார்கள் எனத் தெரிந்து அதற்கான பயிற்யை வழங்குவதைக் குறிப்பிடலாம்.

## 5.0பயிற்சியளித்தல் தேவைகளையும் நோக்கங்களையும் தீர்மானித்தல்.

பயிற்சியளித்தலின் தேவையையும் நோக் கங்களையும் தீர்மானிப்பதன் மூலமே நிறுவனம் அது தொடர்பான ஏனைய தீர்மானங்களை எடுக்க முடியும். பயிற்சித்திட்டத்தின் உள்ளடக்கம், பயன் படுத்தப்படும் பயிற்சி நுட்பங்கள், பயிற்றப்பட வேண்டிய நபர்கள் என்பன பயிற்சித் திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானி க்கப்படும்.

பயிற்சியளித்தல் தேவைகளை இனங் காண்

பதற்கு பின்வரும் பகுப்பாய்வுகள் உதவும்.

### 5.1 நிறுவன பகுப்பாய்வு

நிறுவன பகுப்பாய்வு ஆனது எங்கே பயிற்சியளித்தல் தேவைப்படுகிறது எனத் தீர்மானிக்கும் செய்முறை ஆகும். இத்தகைய பகுப்பாய்வின் மூலம் முக்கியமான ஆற்றல்களின் நிரம்பலை உறுதிப்படுத்தல், முகாமைத்துவ பதவி களுக்கு அடுத்து வர இருக்கின்ற தகைமை வாய்ந்த நபர்களின் நிரம்பலை உறுதிப்படுத்தல், ஊழியரின் உற்பத்தித்திறனையும் வெளியீட்டின் தரத்தினையும் உறுதிப்படுத்தல், வேலையில் புதிய நடத்தைகள் வலியுறுத்தப்படு வதை உறுதிப்படுத்தல் என்பவற்றை அடைந்து கொள்ள முடியும்.

### 5.2 வேலைப்பகுப்பாய்வு

பயிற்சியளித்தல் தேவைகளை அறிந்து கொள்வதற்கு வேலையின் தேவைப்பாடுகளை பகுப்பாய்வு செய்வது ஒரு முக்கியமான தரவு மூலமாக அமையும். குறிப்பாக வேலை விபரணத் தகவல்கள், வேலைக்குறிப்பீட்டுத் தகவல்கள் என்பவற்றைக் கொண்டு குறித்த வேலைக்கு எத்தகைய ஆற்றல்கள் தேவை என அறிந்து பயிற்சியை வடிவமைக்கலாம்.

### 5.3 ஊழியரின் செயற்திறன் பகுப்பாய்வு

பயிற்சியளித்தல் தேவைகளை இனங்காண் பதற்கு பல தொழில்தருநர்கள் செயற்திறன் மதிப்பீட்டுத் தகவலைப்பயன்படுத்துகின்றனர். ஊழியரின் செயற்திறன் குறைபாடுகளை அறிந்து அவற்றை நீக்குவதற்கு ஏற்றவிதத்தில் பயிற்சி வடிவமைக்கப் படலாம்.

மேற்குறித்த பகுப்பாய்வுகளை விட மேலும் சில நுட்பங்கள் பயிற்சிக்கான தேவைகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும். குறிப்பாக நேர் காணல்கள், வினாக்கொத்து மூலமான ஆய்வுகள், பரீட்சைகள், ஆளணிப்பதிவேடுகளை பகுப்பாய்வு செய்தல், அவதானங்கள் என்பவற்றைக் குறிப்பிட லாம்.

ஒரு முகாமையாளர் தனது பகுதியில் பயிற்சி யளித்தலுக்கான தேவையுள்ளது என்பதை பின் வரும் அறிகுறிகளைக் கொண்டு தீர்மானிக்கலாம்.

- உற்பத்தி, சேவைகளின் தரம் குறைவாக இருத் தல்
- செய்தித் தொடர்பில் தடைகள் காணப்படுதல்
- ஊழியரிடையே முரண்பாடுகள் காணப்படுதல்
- மேலுத்தியோகத்தரது மேற்பார்வை பயனு றுதியற்றதாக இருத்தல்
- தொழிலாளர் புரள்வு அதிகமாக இருத்தல்
- தொழிலிலான விபத்துக்கள் அதிகமாக இருத்தல்
- ஊழியர் வரவீனம் அதிகமாக இருத்தல்
- இலக்கு உற்பத்தி அடையப்படாதிருத்தல்
- உற்பத்தியில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுதல்
- ஊழியர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை கள் உயர்வாக இருத்தல்

## 6.0 பயிற்சியும் கற்றலும்

## Training and Learning

பயிற்சியளித்தலானது அடிப்படையில் ஒரு கற்றல் செய்முறை ஆகும். எனவே ஊழியரைப் பயிற்றுவதற்கு அவர்கள் எவ்வாறு கற்றுக் கொள் கிறார்கள் என்பது பற்றி அறிவது பயனுடையது. பயிற்சியளித்தலை பயனுறுதிமிக்க முறையில்

நடாத்துவதற்கு கற்றல் கோட்பாட்டின் அடிப்படை யிலான சில ஆலோசனைகள் வருமாறு:

- முதலில் பயிற்சி பெறுவோர் பயிற்சியிலான முக்கிய விடயங்களை விளங்கிக் கொள்ளக் கூடிய வகையிலும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய வகையிலும் பயிற்சி அமைதல் வேண்டும். இதற்கு பின்வருவன அவசியம்.
    - அ) பயிற்சியின் ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ள பயிற்சியின் முக்கிய அம்சங்களை மேலோட்ட மாகத் தெரியப்படுத்த வேண்டும்.
    - ஆ) பயிற்சியளித்தலின் போது பலவிதமான தொடர்புடைய உதாரணங்களைப் பயன் படுத்துவது சிறந்தது.
    - இ) பயிற்சி பெறுவோருக்கு ஏற்கனவே பழக்க மான பதங்களையும் எண்ணக் கருக்களை யும் பயன்படுத்துதல் வேண்டும்.
    - ஈ. சாத்தியமான அளவிற்கு கட்புல சாதனங் களை உபயோகித்தல் வேண்டும்.

- இரண்டாவதாக பயிற்சியின்போது கற்றுக் கொண்ட புதிய ஆற்றல்களையும் நடத்தை களையும் ஊழியர் வேலையில் பிரயோகிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- மூன்றாவதாக பயிற்சி பெறுவோரை ஊக்கப் படுத்த வேண்டும். இதற்கு பின்வருவன அவசியம்.
    - அ) நடைமுறைச் சாத்தியம் கொண்ட, வேலை யில் பிரயோகிக்கக் கூடிய பயிற்சியை வழங்குதல் வேண்டும்.
    - ஆ) பயிற்சி பெறுவோருக்கு சரியான பதில் நடவடிக்கைகளை உடனடியாக வழங்கும் போது அவர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார் கள்.
    - இ) பயிற்சி பெறுவோர் தமது சொந்த வேகத்தில் கற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும் போது அவர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

## 7.0 பயிற்சியளித்தல் நுட்பங்கள் (Training Techniques)

தற்கால நிறுவனங்கள் பயிற்சிக்கான தேவை களை அடிப்படையாகக் கொண்டும், பயிற்றப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையை அடிப்படை யாகக் கொண்டும், பயிற்சிக்கென தாம் செலவிடத் தயாராக இருக்கும் பணத்தின் அளவினைக் கொண்டும் வேறுபட்ட பயிற்சி நுட்பங்களைப் பயன் படுத்துகின்றன. பொதுவாகப் பயன்படுத்தப்படும் பயிற்சி நுட்பங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### 7.1 வேலையின்போது பயிற்றுதல் (On - The -Job Training)

ஒரு நபர் வேலையை ஆற்றிக் கொண்டிருக்கும் போதே அவ்வேலையைக் கற்பதற்காகப் பயிற்று தலை இது கருதும். வழமையாக அனுபவம் வாய்ந்த ஊழியரிடம் அல்லது மேற்பார்வையாளரிடம் புதிய ஊழியர் வேலையின்போது பயிற்சி பெறுவர். வேலையின் போதான பயிற்சியில் பல முறைகள் காணப்படுகின்றன. அவையாவன,

#### 7.1.1. பழக்குதல் / பயிற்றுதல் (Coaching)

இம்முறையில் ஊழியர் அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட ஊழியர்களால் அல்லது மேற்பார்வை யாளரால் வேலையின்போது பயிற்றப்படுவர்.

உதாரணம்: ஒரு இயந்திரத்தை இயக்குவது தொடர்பாக மேற்பார்வையாளர் அதனை இயக்கிக் காட்டுதல்

### 7.1.2 வேலைச்சுழற்சி Job Rotation

இம்முறையில் ஊழியர் வேறுபட்ட வேளைகளில் சுழற்சி முறையில் அமர்த்தப்பட்டு பயிற்றப்படு கிறார்கள்.

உதாரணம்: முகாமைத்துவ பயிலுநர்

### 7.1.3.4 வேலையைக் கற்பதற்கு நியமிக்கப் படுதல்

### Apprenticeship

இம்முறையில் வகுப்பறையிலான அறிவுறுத் தல், வேலையின் போதான பயிற்சி ஆகிய இரண்டி னதும் சேர்க்கையூடாக ஊழியர் பயிற்றப்படு கிறார்கள்.

உதாரணம்: மின்சாரம் சம்பந்தமான தொழிலாளர் களை பயிற்றுதல், மருத்துவ மாணவர்களை பயிற்சிக்கென அமர்த்துதல்.

வேலையின் போதான பயிற்சியின் அனுகூலம் யாதெனில் இது ஒப்பீட்டளவில் செலவு குறைந்தது. பயிற்சி பெறுவோர் உற்பத்தி அல்லது சேவையை செய்து கொண்டே கற்றுக் கொள்கிறார்கள். பயிற்சி அறை, பயிற்சி உபகரணங்கள் போன்ற செலவுமிக்க, வேலைக்கு வெளியிலான வசதிகள் தேவையில்லை. மேலும் புதிய பாதுகாப்புத் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு உடனடி மாற்றங்கள் தேவையாக இருக்குமிடத்து இத்தகைய பயிற்சி பொருத்தமானது.

### 7.2.1. வேலை அறிவுறுத்தல் பயிற்சி

### (Job Instruction Training)

ஊழியருக்கு படிப்படியாக பயிற்சி வழங்கக் கூடிய விதத்தில் ஒவ்வொரு வேலையினதும் அடிப் படையான கடமைகளை பிரதான குறிப்புக்கள் அல்லது அறிவுறுத்தல்களுடன் நிரற்படுத்துதலை இது குறிக்கும். இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் படிப்படியாக சிறந்த முறையில் வேலை கற்பிக்கப் படும்.

### 7.3.2. செவிப்புல கட்புல நுட்பங்கள்

### (Audiovisual Techniques)

தொலைக்காட்சி, படங்கள் (Films), ஒலிப்பதிவு கருவிகள் (Audiotapes) ஒளிப்பதிவுக் கருவிகள் (Videotapes) போன்ற செவிப்புல கட்புல சாதனங்களின் மூலம் பயிற்சியளிப்பது மிகவும் பயனுறுதிமிக்கதாக அமையும். விரிவுரை நுட்பத்தைவிட இவை மிகவும் செலவுமிக்கவை. எனினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் இவை மிகப் பயன்பாடுடையவை.

அ) குறித்த ஒரு வேலையின் தொடர் ஆனது எவ்வாறு பின்பற்றப்பட வேண்டுமென விளக்கு வதற்கு இவை பொருத்தமானவை. குறிப்பாக ஒளிநாடாவில் விரைவான அசைவில் மெதுவான அசைவில் (fast/slow motion) செய்முறை களைக் காண்பிக்க முடியும்.

உதாரணம்: ஒருஉற்பத்திச் செய்முறை

ஆ) விரிவுரைகளில் இலகுவாக விளக்க முடியாத நிகழ்வுகளை பயிற்சிபெறுவோருக்கு காட்ட வேண்டிய தேவை காணப்படும்போது இவை பயனு டையவை.

உதாரணம்: ஒரு சத்திரசிகிச்சை

இ) பயிற்சியானது முழு நிறுவனத்துக்கும் வழங்கப் பட வேண்டியிருப்பின் பயிற்சி வழங்குவோரை இடத்துக்கு இடம் நகர்த்துவது அதிக செலவுடை யதாக அமையுமிடத்து இந்நுட்பம் பயனுடையது.

### 7.4.1 நிரற்படுத்தப்பட்ட கற்றல்
### (Programmed Learning)

இது குறித்த பிரச்சனையை முன்வைத்து, குறித்த நபர் பதிலளிப்பதற்கு அனுமதித்தல், அவரது பதிலின் சரியான தன்மைபற்றி உடனடியாக பின்னூட்டி வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கிய, வேலை தொடர்பான ஆற்றல்களைக் கற்பிப்பதற்கான ஒரு முறைசார்ந்த நுட்பம் ஆகும்.

### 7.5.1 போலியான உபகரணத்தில் பயிற்சியளித்தல்
### (Simulated Training)

இம்முறையில் பயிற்சியாளர். தாம் வேலைக்குப்பயன்படுத்தும் உண்மையான உபகரணத்தினைப் போன்ற போலியான ஒரு உபகரணத்தில் பயிற்சி பெறுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் உண்மையான உபகரணத்திலேயே வேலைக்கு புறம்பாக தனியான அறையில் பயிற்சி பெறுகிறார்கள். ஊழியர்களை வேலையின்போது பயிற்றுவது அதிக செலவுமிக்கதாக அல்லது அபாயமானதாக இருக்கும்போது இத்தகைய பயிற்சி வழங்கப் படலாம்.

உதாரணம்: விமானியைப் பயிற்றுதல்

### 7.6. கணனி அடிப்படையிலான பயிற்சி
### (Computer - Based Training)

ஒரு வேலையானது பரந்தளவிலான கணனிப் பாவனையை வேண்டி நிற்குமாயின் கணனி அடிப் படையிலான பயிற்சியளித்தல் அதிகளவில் வேலை தொடர்பானதாக அமைவதுடன் பயிற்சி மூலம் கற்றுக் கொண்டவற்றை அதிகளவில் வேலையில் பிர யோகிக்க முடியும். கணனி மூலம் பயிற்சியளிக்கப் படும் போது பயிற்சி பெறுவோர் தமக்கு சௌகரிய மான வேகத்தில் கற்றுக் கொள்ளமுடியும். குறிப்பாக ஆறுதலாக கற்போர் (Slow learners) அவசரப்பட வேண்டிய தில்லை, விரைவாக கற்போர் (Fast learners) சலிப்படைய மாட்டார்கள். மேலும் கணனி அடிப்படையிலான பயிற்சியில் பெற்றுக் கொண்ட அறிவை ஊழியர் வேலையில் பிரயோகிப்பதில் எந்த பிரச்சனையும் இருக்காது.

சில வேளைகளில் பயிற்சி பெறுவோர் தமது ஆற்றல்களை அதிகரிப்பதற்கு கணனி அடிப்படையி லான முறைமை (system) ஒன்றையும் பயன் படுத்துவர்.

உதாரணம்: சிறந்த முறையில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்குரிய ஆற்றல்களை நேர்முகப் பரீட்சை நடத்துவோருக்கு வழங்குவதற்கு கணனி மயப்படுத்தப்பட்ட பயிற்சித்திட்டம் ஒன்று பயன் படுத்தப்படலாம். இங்கு பயிற்சி பெறுபவர் கணனித் திரையில் விண்ணப்பதாரியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், வேலையின் தன்மை போன்ற தகவல்களை நோக்குவார். பின்பு ஒரு போலியான நேர்முகப் பரீட்சையை ஆரம்பித்து வினாக்களை கணனியில் அச்சிடுவார். விண்ணப்பதாரிக்குப் பதிலாக செயற்படும் ஒரு ஒளிநாடா மூலம் (Videotaped model) இவ்வினாக்களுக்கு பதில் கிடைக்கும்.இப்பதில்கள் ஏற்கனவே கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் தயாரிக்கப்பட்டிருக்கும். இங்கு போலியான நேர்முகப்பரீட்சையை நடத்துபவர் தான் கணனியில் அச்சிடும் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கப்படும் போது, விண்ணப்பதாரியின் விடை பற்றிய தனது மதிப்பீட்டை பதிவு செய்து இறுதியாக, குறித்த பதவிக்கு அந்நபரின் பொருத்தப்பாடு பற்றி ஓர் தீர்மானம் எடுப்பார். இந்த

செயல் முறையின் இறுதியில், கணனியானது பயிற்சி பெறுபவர் எங்கே பிழை விட்டுள்ளார் என தெரியப்படுத்துவதுடன் அத்தவறுகளை திருத்த அறிவுறுத்தல்களையு ''ம் வழங்கும்.

### 7.7.1 விரிவுரைகள்

### (Lectures)

அதிக எண்ணிக்கை கொண்ட பயிற்சியாளர் களுக்கு பயிற்சி வழங்க பயன்படுத்தப்படும் எளிமை யானதும் விரைவானதுமான வழி இதுவாகும். இம்முறையில், புத்தகங்கள், கைநூல்கள் போன்ற எழுத்திலான மூலங்கள் பயன்படுத்தப்படும்.

### 7.8.1. கலந்துரையாடல்கள் (Discussions)

எண்ணங்களையும் தீர்வுகளையும் உருவாக்குவ தற்கு பயன்படக்கூடிய குழு ரீதியான கலந்துரை யாடல்கள் ஒழுங்கு செய்யப்படலாம்.

### 7.9.1 நிறுவனத்திற்குள்ளே கருத்தரங்குளை நடாத்துதல்

### (In-House Seminars)

பயிற்சி வழங்குவோரை நிறுவனத்திற்கு வெளியிலிருந்து அழைத்து குறித்த நிறுவனத்தில் அவர்களைக் கொண்டு கருத்துரை வழங்கப்படலாம்.

### 7.10. வெளியக கருத்தரங்கள்

### (Outside Seminars)

பயிற்றப்பட வேண்டியவர்களை நிறுவனத் திற்கு வெளியே நடைபெறும் கருத்தரங்குகளில் பங்கு பற்றுவதற்கு அனுப்பப்படலாம்.

### 8.0 முடிவுரை

நிறுவனங்கள் தமது ஊழியர்களது உற் பத்தித் திறனை அதிகரிக்க விரும்பும் பொழுது எப்பொழுதுமே பயிற்றுதலுக்கு முன்னுரிமை வழங்கு தல் வேண்டும். மனிதவள முகாமைத்துவத்தில் ஊழியர்களது அபிவிருத்திக்கு ஒருமுறை மட்டுமன்றி அவர்களது பணிக்காலம் முழுவதற்குமே பயிற்சி யளித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எனக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் பயிற்சிக்கான கிரயம் ஒரு செலவல்ல என்றும் பதிலாக அது என முதலீட்டு நடவடிக்கையே என்றும் கொள்ளப் படுவதனால் மனித வளத்தின் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையாக பயிற்சியளித் தலைக் கருதலாம். இதன் காரணமாக தற்கால நிறுவனங்கள் எல்லாம் குறிப்பாக பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் கல்வித்திணைக்களம் பல பயிற்சிகளை வழங்கி வருவதனைக் காண முடிகின்றது. எனவேதான் எல்லா வகையான ஊழயர்களின் செயற்றின் அபிவிருத்திக்கும் பயிற்சி யளித்தல் அவசியமெனக் கொள்ள முடியும்.

# குழந்தை இலக்கிய வரலாற்றில், ஈழத்துக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள்

பேராசிரியர் **எஸ். சிவலிங்கராஜா**
தலைவர்,
தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## 1. தோற்றுவாய்

தமிழில் குழந்தை இலக்கியம் மிகப் பழங் காலந்தொட்டே நிலவி வந்துள்ளது. பொதுவாக இலக்கியத் தோற்றத்திற்காகக் கூறப்படும் காரணிகளையே குழந்தை இலக்கியத் தோற்றத்திற் கான காரணிகளாகவும் கொள்ளலாம். இலக்கியத் தோற்றத்திற்கு வாய்மொழி மரபும் ஒரு வலுவான காரணியாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் குழந்தை இலக்கியமும் வாய்மொழி மரபுவழியாகவே வந்திருக்கும் எனக் கருதலாம். எமது பண்பாட்டில் "பாட்டி கதை சொல்லும் மரபும், தாய், பாட்டி முதலானோர் "மழலை கேட்டுப் பாடும் மரபும் நீண்ட நெடுங் காலமாகவே வழங்கி வருகின்றது. குழந்தை இலக்கியத் தோற்றத்தின் ஊற்றுக்கால்களாக இவற்றைக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்காகப் பெரியவர்களாற் பாடப் படும் வாய்மொழிப் பாடல்களையும், குழந்தைகள் கூடிக் குலாவி விளையாடும் போது தாமாக ஆக்கிப் பாடும் பாடல்களையும் நாட்டுப் பாடல்களிலே பார்க்கக் காணலாம். நாட்டார் பாடல்களிலேயே பெருமளவுக்குக் குழந்தைப் பாடல்கள் காணப் படுகின்றன.

குழந்தை மனம் இசையால்மிகு இலகுவாக ஈர்க்கப்படும் தன்மை வாய்ந்தது என்பர். தாலாட்டு இசையோடு இசைவு படப் பழகிய குழந்தை காலப் போக்கில் ஒத்திசையுள்ள இலகுவான பாடல்களை வாய்விட்டுப் பாடத் தொடங்குவதையும் அவதானிக்க லாம்.

தாய்மார்கள் குழந்தைகளின் குதூகலத்திற்காக,

அம்புலி மாமா வா வா வா
அழகழ சொக்கா வா வா வா

என்று பாடுவதை இன்றும் காணலாம். ஓசைநயமும், வாய்ப்பாட்டு ரீதியாகத் திரும்பத் திரும்ப இடம்பெறும் சொற்களும், கட்புலன்சார் கவினும் குழந்தையின் ஆர்வத்தைத் தூண்டிவிடக் குழந்தை தானாகவே பாடத் தொடங்குவதும் உண்டு.

வாய்மொழி மரபாக முகிழ்ந்த குழந்தைப் பாடல்கள் ஏனைய இலக்கியங்கள் போலவே எழுத்திலக்கிய மரபுடன் இணைந்து பயிலத் தொடங்கின எனலாம். வாய்மொழி மரபினை முற்றும் விட்டுவிடாது செந்நெறிப் பாங்கையும் உள் வாங்கித் தமிழ்க் குழந்தைப் பாடல்கள் வளரத் தொடங்கின எனலாம்.

பழந் தமிழ் இலக்கியங்களிலே குழந்தைகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றனவேயன்றிக் குழந்தை இலக்கியம் பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை. தமிழிற் குழந்தை இலக்கியம் தொல்காப்பியர் காலத்தில் இருந்தே வழங்கி வந்துள்ளது எனக் கருத இடமுண்டு. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் 485ஆவது நூற் பாவும், அந்நூற்பாவுக்குப் பேராசிரியர் தரும் விளக்கவுரையும் தமிழிற் குழந்தை இலக்கியம் வழங்கி வந்ததென்பதை அரண் செய்கின்றன.

அந் நூற்பாவில் வரும் "பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்" - எனுந் தொடருக்குப் பேராசிரியர் பின்வருமாறு உரை கூறுவர்.

"ஒரு பொருளின்றிப்பொய்படத் தொடர்ந்து
சொல்லுவன.
ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச்
சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்
கியையாப் பொருள்படத் தொடர்நிலையான்
ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்றுமுறையான்
வருகின்றன"

தமிழில் தோன்றிய குழந்தைப் பாடல்கள் ஓரளவுக்கு அறிதல் முறையையும், பெரும்பாலும் புத்தி புகட்டுவதனையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. தமிழின் ஆரம்ப காலக் குழந்தை இலக்கியங்கள் என்று கூறப்படும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியன அறநீதிக் கருத்துக்களைப் போதிப்பவையாகவே காணப் படுகின்றன. ஆத்திசூடி அகரவரிசையில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். குழந்தை அகர வரிசையை அறிவதனூடு அறக் கருத்துக்களை அறிய வேண்டும் என்பதும், அறக் கருத்துக்களினூடு அகரவரிசையை நினைவுபடுத்த வேண்டும் என்பதும் ஆத்தி சூடியின் பிரதான நோக்கமெனலாம்.

அக்காலச் சூழ்நிலையிலும், கல்வி முறையிலும், கற்கத் தொடங்கும் வயதெல்லையிலும் இக் கருத்துநிலை சாத்தியமானதாக இருந்திருக்கலாம். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, கல்வி ஒழுக்கம் முதலியன "அருளிச் செய்யப்பட்டன" என்று கூறும் பொழுதே அவற்றின் பொருட்பரப்பு இலகுவாகப் புலனாகின்றது.

தமிழ்க் கவிதை மரபிலே புதுமைகள் செய்த பாரதிகூட "புதிய ஆத்திசூடி" ஒன்றை ஆக்கினான். பழைய ஆத்திசூடியின் வைரமான பாரம்பரியத்திலிருந்து விடுபட முடியாதவனாகவே பாரதியும் காணப்படுகின்றான். "பாப்பாப் பாட்டுக்கள்" பாடிய பாரதி ஆத்திசூடி மரபினைப் பேணியமை குழந்தைப்பாடல்கள் கொண்டிருந்த மரபிறுக்கத்தினையே காட்டி நிற்கின்றதெனலாம்.

## 2. ஈழத்திற் குழந்தைப் பாடல்கள்

### 2.1 பாடல்களின் வரலாறு

யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திற்கு முந்திய இலக்கிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சான்றுகள் கிடைக்காமை ஈழத்து இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சனை யாகும். 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை குழந்தை இலக்கியவகை பற்றி ஈழத்து அறிஞர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. கல்வித் தேவையைக் கொண்டு 19ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர்கள் சிலர் உரைநடையிற் குழந்தைகளுக்கான சிறிய கதைகளை எழுதியுள்ளனர். ஆறுமுகநாவலர், ஆர்னோல்ட்

சதாசிவம்பிள்ளை ஆகியோர் இந்த வகையில் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள். 1859ஆம் ஆண்டு பாலியர் நேசன் என்ற பெயரில் சிறுவர்களுக்கான பத்திரிகையொன்றை அமெரிக்க மிஷனரிமார் ஆரம்பித்தனர். இப்பத்திரிகையிலும் உரைநடையில் கதைகளும், நீதி போதனைகளும், ஆத்திசூடி முதலானவையும் இடம் பெற்றனவேயன்றிக் குழந்தைப் பாடல்கள் இடம்பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டில் குழந்தைப் பாடல் தொகுதிகள் வெளிவந்தமை பற்றி அறிய முடியவில்லை. இதே காலப் பகுதியிலே தமிழ் நாட்டிலும் குழந்தைப் பாடற் தொகுதிகள் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

குழந்தை இலக்கிய வரலாற்றிலே ஈழ நாட்டிற்குச் சிறப்பானதோர் இடமுண்டு. குழந்தைப் பாடல்கள் என்ற உணர்வோடு முதன்முதலிலே குழந்தைப் பாடற் தொகுதியொன்று 1918ஆம் ஆண்டு ச. வைத்தியநாதர் என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. இக் குழந்தைப் பாடற் தொகுதி பற்றிக் கனக செந்திநாதன் பின்வருமாறு குறிப்பிடுவர்.

"தமிழ்நாடு குழந்தை இலக்கியம், முக்கிய மாகக் கவிதைகள் பற்றிச் சிந்திக்கு முன்பே ஈழத்தில் இது தோன்றி வளரத் தொடங்கி விட்டது. பல பாடற் தொகுதிகளை ஈழத்துச் சான்றோர் தொகுத்து வெளியிட்டு நமக்கு வழி காட்டியிருக்கின்றார்கள். 1918ஆம் ஆண்டிலே வித்தியாதிகாரி அவர்களின் விருப்பத்தின்படியும் அனுமதிப்படியும் இலங்கை அரசாட்சியாரின் பிரதான முதலியாராகிய ச. வைத்தியநாதரால் தமிழ்ப் பாலபோதினி என்ற குழந்தைப் பாடல்களின் அபிநயப் பாடல்களின் தொகுதியொன்று வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இத்துறையில் கால் எடுத்து வைக்க எத்தனையோ வருடங்களுக்கு முன்பே ஈழம் முயற்சி செய்துள்ளது. பெருமைப்படத் தக்கதாகும்."

தமிழ்ப் பால்போதினியைத் தொடர்ந்து 1935ஆம் ஆண்டு க.ச. அருணந்தியவர்களாலே தொகுக்கப்பட்ட பிள்ளைப்பாட்டு எனும் பாடற் தொகுதி விதந்து குறிப்பிடப்பட வேண்டியது. வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க வெளியீடாக வந்த பிள்ளைப்பாட்டு நூலின் பதிப்புரையிலே சங்கத் தலைவர். சி. சுவாமிநாதன் அத்தொகுப்பின் தேவைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பாலர்களுக்கேற்ற சந்தவின்பம் உள்ள சிறு பாட்டுக்கள் இதுகாறும் திருத்தமான முறையில் தமிழில் வெளிவரவில்லை. இப்படிப்பட்ட பாட்டுக்களைப் பாடக்கூடிய சக்தி பலரிடத் திலிருந்தும், அச்சக்திகளைக் கூட்டி முடிக்கத்தக்க ஒருவர் இன்மையால் அது பயன்படவில்லை. இப்பொழுது வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமாந் கே.எஸ். அருணந்தி M.Sc அவர்களின் அபாரசக்தியினால், பலருடைய கவித்துவ சக்தியும் ஒன்று கூட்டப்பட்டுப் பிள்ளைப்பாட்டு என்ற இப் புத்தகமாகப் பரிணமித்திருக்கின்றது."

ஈழத்துத் தமிழாசிரியர்களை ஊக்குவித்து அவர்களிடையே குழந்தைப் பாடற் போட்டி யொன்றினை நடத்திப் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவையே இப் பிள்ளைப்பாட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடக் கூடியது. இப் போட்டியிற் கலந்து கொண்ட பாடல் களைத் தெரிவு செய்யும் பொறுப்பு, சுவாமி விபுலான ந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், நவநீதகிருஷ்ண

பாரதியார், பண்டிதர் மகாலிங்கசிவம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானோரிடம் ஒப்படைக்கப் பட்டது. அக்காலத்துப் புகழ் பெற்று விளங்கிய தமிழறிஞர்கள் இப்பாடல்களைத் தேர்ந்தெடுத் தமையும் குறிப்பிடக் கூடியது.

குழந்தைகளின் இயல்புகள், சூழல், விருப்பு முதலானவற்றோடு அவர்களுக்கு நற்போதனை யையும் வழங்க வேண்டும் என்ற கருத்தினை இதன் தொகுப்பாசிரியர் கொண்டிருந்தார். கல்வியாளனா கவும் உளவியல் கற்றவராகவும் விஞ்ஞான அறிவுடையராகவும் திகழ்ந்த அருணந்தி இப் பாடற்றொகுதி பற்றிக் குறிப்பிடுவது ஈழத்துக் குழந்தைப் பாடல்களின் நோக்கினையும் போக் கினையும் அறிய உதவுகின்றது.

"...யாம் பாலர்களைப் பயிற்றுங்கால் அவர் களது உளநிலை, விரும்பு வெறுப்புக்கள், ஆற்றல்கள் ஆதியன பொருட்படுத்தப்படாது மழுக்கப்படுகின்றன. பாலர்களது இயற்கைக்குப் பொருந்த அவர்களை நன்கு வளர்ச்சி பெறச் செய்யாததினால் அவர்களது இக்கால சீவியம் பங்கமுறுவதன்றி அவ்விதமே அவர் பிற்கால சீவியமும் பங்கமுறுமென்பது உளநூல் ஆராய்ச்சி வழியாகவும் அனுபவ வாயிலாகவும் யாம் அறிந்துள்ள பேருண்மையாகும் .......... பாஷையையும் நற்போதனைகளையும் சிறுபிராயத்திற் கற்பிக்கும் ஆசிரியர்கள் தாளம், இராகம், அபிநயம் முதலிய வற்றில் பாலர்களுக்குப் பெரிய விருப்பம் உண் டென்றும், தங்கள் சீவியத்தோடு சம்பந்தப்படாத விஷயங்களை அவர்மனம் நாடாதென்றும் உணர்ந்திலரேல் அவ்வாசிரியரது முயற்சியாற் பெறப்படும் பயன், எதிர்நோக்குடைய இருவர் ஒருவழிச் செல்ல முயல்வதனாற் பெறப்படும் பயனை ஒக்குமென்ப."

குழந்தைகளின் மனநிலையை மனங் கொண்டு இப் பிள்ளைப்பாட்டுத் தொகுக்கப்பட்டது என்பதனை மேற்காட்டிய பகுதி தெளிவுபடுத்து கின்றது.

குழந்தைகளின் வயது, அறிமுறைத் திறன், கொண்ணிலை, உளவியல் முதலானவற்றை மனங்கொண்டு பகுதி ஒன்று, பகுதி இரண்டு என இப்பிள்ளைப்பாட்டு பகுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இயற்கை காட்சிகள் (அம்புலி, கடல், சூரியன்), வளர்ப்புப் பிராணிகள் (நாய், பூனை, ஆட்டுக்குட்டி), விழாக்கள், கொண்டாட்டங்கள் (தேர், தீபாவளி, தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு), விளை யாட்டுக்கள் (பந்து, பட்டம் விடுதல்), குடும்ப உறவினர் (அம்மா, அப்பா, பாட்டி) முதலானவையே பெரும் பாலும் இப்பாடற்றொகுதியின் பாடு பொருளாக அமைந்துள்ளன.

அறநெறி போதிக்கும் கதைப் பாடல்களும், பாடல்வழி அபிநயித்து நடிக்கக்கூடிய நாடகத் தன்மையைக் கொண்ட பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

## 2.2 பாடிய கவிஞர்களும் அவர்களின் ஆற்றலும்

அழகுணர்வு, ஆச்சரியம், மகிழ்ச்சி, அறம் முதலானவை மேலோங்கிக் காணப்படும் இப்பாடல் களைப் பதின்மூன்று கவிஞர்கள் எழுதியுள்ளனர். ஈழத்துக் குழந்தைப் பாடல் மரபுக்கு வளமும் வனப்பும் சேர்த்த நவாலியூர் சோம சுந்தரப்புலவரின் "ஆடிப்பிறப்பு", "கத்தரி வெருளி" முதலான பாடல்கள் இத்தொகுதியிலே இடம் பெற்றுள்ளமை குறப்பிடக் கூடிய அம்சமாகும்.

முதலாம்படி (Grade I) மாணவர்களுக்கென மா.பீதாம்பரம் எழுதிய (முதற்பரிசுபெற்ற) பாடல்களுள் ஒன்றை வகை மாதிரிக்குச் சுட்டிக் காட்டலாம்.

ஆலமரம் ஆல மரம்
அழ கான ஆலமரம்
பாலர் நாங்கள் ஆடல் பாடல்
பழக நல்ல ஆல மரம்

ஈழத்துக் குழந்தைப் பாடல் வரலாற்றிலே அருணந்தி தொகுத்த பிள்ளைப்பாட்டுக்கு அழியாத தோர் இடமுண்டு என்று துணிந்து கூறலாம். 1930-40களில் புகழ்பெற்று விளங்கிய குழந்தைக் கவிஞர்களின் பாடல் மரபே காலதேச வர்த்த மானத்திற்கேற்ப மாற்றமடைந்து இன்றுவரை ஓடிக் கொண்டிருக்கின்றது.

இக்காலப் பகுதியிலே தோன்றிய ஈழ கேசரியும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளது. இந்தப்பத்திரிகையில் பாலர் பகுதி என ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அப்பகுதியிலே பாலர்களுக்கான பல்வேறு விடயங்களும் பிரசுரிக்கப் பட்டன. பெருமளவு குழந்தைப் பாடல்கள் இப் பகுதியிலே இடம் பெற்றமையும் குறிப்பிடக் கூடியது.

ஈழத்துக் குழந்தைப் பாடல் வரலாற்றிலே சோமசுந்தரப் புலவருக்கு அடுத்த தலைமுறை யினராக, யாழ்ப்பாணன், கவிஞர் செல்லையா, வேந்தனார், இதம், கனக செந்திநாதன் முதலியோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள், யாழ்ப்பாண னின்,

ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி
அருமையான சின்னக் குட்டி
ஓட்ட மோடி வந்திடுவாய்
உனக்கு முத்தந் தந்திடுவேன்

என்ற பாடலும்

தம்பி நாங்கள் கோயில் கட்டிச்
சாமி ஒன்றை உள்ளே வைத்து
கும்பிட்டிங்கு பூசை செய்வோம்
கூடி ஆடிப் பாடிக் கொள்வோம்

எனத் தொடங்கும் அபிநயப் பாடலும், கவிஞர் செல்லையாவின்,

அம்மா வெளியே வா அம்மா
அழகாய் மேலே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனைத்
துண்டாய் வெட்டின தாரம்மா!

என்ற பாடலும், வேந்தனாரின்,

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
காலைக் காய்ச்சி சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

என்ற பாடலும் இன்று வரை நின்று நிலைப்பனவாகக் காணப்படுகின்றன.

இவர்களைத் தொடர்ந்து இ. நாகராசன், பா. சத்தியசீலன், வீரகத்தி, இராசையா முதலியோர் குழந்தைப் பாடல்கள் எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டினர். இ. நாகராசாவின் "பட்டுச் சட்டையும், வீரகத்தியின் "பலூனும்" நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. சத்தியசீலன் சமூக மாற்றத்தினை மனங்கொண்டு "ஐஸ்கிறீம்", "கெலிகொப்ரர்" முதலான தலைப்புக்களில் குழந்தைப் பாடல்கள் எழுதியுள்ளமையும் குறிப்பிடக் கூடியது. வ.இராசையா குழந்தைகளின் மன உணர்வு

நிலைகளுக்குக் கேற்றவகையிற் பல பாடல்களை எழுதியுள்ளார்.

முற் குறிப்பிட்டவர்களின் சம காலத்தவர் களாக இருந்த போதிலும், இன்று தொடர்ந்து குழந்தைப் பாடல்கள் எழுதுபவர்களாக ஆடலிறை, துரைசிங்கம், சரணாகையும், கல்வயல் குமாரசாமி, சபா ஜெயராசா முதலானோரைக் குறிப்பிடலாம். சபா ஜெயராசாவின் பாடல்களிற் பல குழந்தைகளின் உளவியற் பாங்குக்கு ஏற்ப, அவர்களுக்குரிய சொல்லாட்சியுடன் அமைந்துள்ளமை விதந்து குறிப்பிடக் கூடியது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் குழந்தைப் பாடல்கள் 1950களிலேயே தோற்றம் பெறுகின்றன என்று செ. யோகராசா குறிப்பிடுகின்றார். இப்பிர தேசத்தின் குழந்தைக் கவிஞர்களாகத் திமிலைத் துமிலன், ஆரையூர் அமரன், திமிலை மகாலிங்கம், நாகூர் பாவா முதலானோரைக் குறிப்பிடலாம். பெரும்பாலும் பத்திரிகைகளிலே இவர்களது குழந்தைப் பாடல்கள் வெளியாகியுள்ளன.

## 3. கைலாசபதி கருத்து

பொதுவாகப் பேராசிரியர் க.கைலாசபதி குழந்தை இலக்கியம் பற்றிக் குறிப்பிடும் கருத்து, ஈழத்துக் குழந்தைப் பாடல்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. அவர் கூற்றின் ஒரு பகுதி பின்வருமாறு:

"குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், ஏற்புடமை இவற்றை யெல்லாம் கவனத்திற் கொண்டு சீரிய பாடல்களை எழுதியோர் பொதுவில் குறைவு. சிறுவர் கவிதைகள் பற்றிச் சொல்லிய குறைபாடுகள் சிறப்பாகக் குழந்தை இலக்கியத்திற்குப் பொருந்துமாயினும் கூர்ந்து கவனிக்கும் பொழுது இவை தமிழ்இலக்கியத்தில் நிலை கொண்டுள்ள குறைபாடுகளே என்பது புலனாகாமற் போகாது. அறவியல் பண்பாட்டுச் சுமைகளைத் தாங்கும் வாகனமாகவே இலக்கியம் இன்றும் பரவலாகக் காணப்படுகின்றது என்பதற்கு இது மறைமுகமான சான்று ஆகும்"[5].

ஈழத்துக் குழந்தைக் கவிதைகளைத் தொகுத்து நோக்குமிடத்துப் பேராசிரியர் க. கைலாச பதியின் கருத்து ஓரளவுக்குப் பொருந்துவதாகவே காணப்படுகின்றது. எனினும் அண்மைக் காலத்தில் வெளிவரும் சிறுவர் பாடல்களுக்கு இக்குறைபாடு பொருந்தாது என்றே கூறவேண்டும். நவீன அச் சியந்திரத்தின்செயற்பாடுகள் (கணனி அச்சு முறை), படங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் கவர்ச்சி நிறைந்தவையாக வெளிவருகின்றன.

ஈழத்துத் தமிழ் கவிதை வரலாற்றின் பலமான ஓர் பகுதியாகக் குழந்தைப் பாடல்கள் அமைகின்றன என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்வர். ஈழத்துக் குழந்தைப் பாடல்களை அதன் முழுப்பரிமாணத்துடன் விரிவாக நோக்க வேண்டியதன் அவசியத்தையே இச்சிறுகட்டுரை அவாவி நிற்கின்றது.

## குறிப்புக்கள்:

1. செந்திநாதன், கனக, ஈழத்துக்குழந்தைப் பாடல்கள் குரும்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு-1988
2. சுவாமிநாதன்.சி.பதிப்புரை பிள்ளைப்பாட்டு-1935, வ.இ.த.ஆ.சங்க வெளியீடு இரண்டாம் பதிப்பு-1941
3. மேற்படி, முன்னுரை
4. யோகராசா, செ., மாஸ்டர் சிவலிங்கம் மணிவிழாமலர்- 1994
5. கைலாசபதி. க., நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், பக்கம் - 75-76
6. இக்கட்டுரையில் பாடல் உதாரணம் விரிவஞ்சி விடுக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளின் தரமேம்பாட்டிற்கு அதிபரின் பங்களிப்பும், பொறுப்பும்

கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்றுறை.
யாழ். பல்கலைக்கழகம்

## அறிமுகம்

நவீன நூற்றாண்டின் கல்விசார் செல்நெறிகள் ஒவ்வொருவரிடமும் கல்வி தொடர்பான விழிப்புணர்வையும், புத்தாக்க சிந்தனைகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் கல்வியுலகில் மாற்றங்கள் தவிர்க்க முடியாததுடன் வளர்ச்சி வேகமும் அதிகரித்துச் செல்கின்றது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட கல்வி சார்ந்த மாற்றங்களையும் குறிக்கோள்களையும் நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே பாடசாலையாகும். இங்கு மாணவர்கள் தம் எதிர்கால வளர்ச்சிக்கேற்பப் பல்வேறு வகையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவம், குழுவாகச் செயற்படுதல், கருத்து ஒருமைப்பாடு, செய்முறை ஒழுங்கமைப்புத் திறன்கள், ஏனையோரிடத்தில் அக்கறை கொள்ளல், நீதி, நேர்மை, சேவை, அன்பு போன்ற விழுமியங்களை பாடசாலைகளினூடாகவும், கலைத்திட்டத்துடன் இணைந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை வளர்ப்பதன் மூலமாகவும் வளர்க்க முடிகின்றது. ஒரு பிள்ளை தனது வாழ்க்கைக் காலத்தில் பெற வேண்டிய அனைத்துப் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்கின்ற ஒரு இடமாகப் பாடசாலை விளங்க வேண்டும். எல்லா நாடுகளும் பாடசாலைக் கல்வியினூடாக நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என நம்புகின்ற நிலையிலே அதற்கெனத் திட்டமிட்ட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தும் பாரிய பணியும் பாடசாலைகளைச் சார்ந்ததாகும். கல்வியின் குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட கல்விசார் நிறுவனமே பாடசாலையாகும். இத்தகைய நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் நிர்வகிக்கும் நிர்வாகி அப்பாடசாலையின் அதிபராவார்.

## தரமேம்பாடு - வரைவிலக்கணம்

குறிப்பிட்டதொரு பாடசாலையோ அல்லது ஒருநிறுவனமோ ஒப்பீட்டளவில் இதுவரை உள்ள நிலையில் இருந்து ஒரு படிமேலே வளர்ச்சி பெறுதல் அந்நிறுவனத்தின் தரமேம்பாடு ஆகும். அதாவது தரமான உள்ளீடுகளைப் பெற்று அதன் மூலம் சிறப்பான செயற்பாடுகளை மேற்கொண்டு தரமான வெளியீடுகளை வழங்கும் நிலையில் பாடசாலைகள் அமைய வேண்டும். கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் நுகரப்படும் எல்லாப் பொருட்களும் தரமான உள்ளீடுகளாகும். அதேவேளை தரமான உள்ளீடுகள்

(Quality Input) ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படும் பட்சத்தில் அதன் விளைவு தரமான வெளியீடு களாகும். (Quality Output)

## அதிபர்களின் வகிபங்கு:

தரமான பாடசாலைக்குத் தரமான கல்வி என்பதற்கு இணங்க ஒரு பாடசாலையின் கல்வி சார்ந்த வெற்றிக்கு அங்கு கடமையாற்றும் அதிபரும் ஆசிரியர்களும் முக்கிய பங்குதாரர்களாக விளங்கு கின்றார்கள். இன்று பாடசாலைகள் மத்தியில் போட்டி அதிகரித்து வருகின்றது. இதனால் பாடசாலைகள் வளர்ச்சியை எதிர்கொள்கின்றன. கல்வியின் தரம் பெரும்பாலும் ஆசிரியர்களையே சார்ந்துள்ளது. ஆகவே தரமான கல்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகின்றதா? என்ற வினாவிற்கு விடையளிப் பவர் பாடசாலை அதிபராகையால் இவ்விடயத்தில் தரம் என்பதை உறுதி செய்தல் அதிபரின் கடமை யாகும். ஆகவே அதிபர் சிறந்த ஒரு முகாமையாளராக விளங்க வேண்டுமானால் பாடசாலையின் கல்வி அபிவிருத்தியிலும், ஏனைய செயற்பாடுகளிலும் அக்கறையுடைய ஒருவராக விளங்க வேண்டும். பாடசாலையினூடாக சமூகத்தின் பாரிய வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு செயற்படும் அதிபர் பல்வேறு வகிபாகங்களை ஏற்றுச் செயற்பட வேண்டும். நவீன தேவைகளைக் கருத்திற் கொண்டு பொருத்தமான மாற்றங்களையும், தந்திரோபாயங்களையும் எதிர் கொண்டு பாடசாலையை வினைத்திறனுடையதாக மாற்றல் வேண்டும்.

அதிபர் என்பவர் முதல்நிலை முகாமையாளரா வார். பாடசாலையின் எந்த விளைவிற்கும் பதில் கூற வேண்டிய கடமைப்பாடு அவருக்குண்டு. பாடசாலை யில் கிடைக்கும் வளங்களை மிகவும் உச்சமாகப் பயன்படுத்தி அப் பாடசாலையை வினைத் திறனுடைய ஒரு பாடசாலையாக மாற்றி யமைப்பதும் ஒரு அதிபரின் சிறந்த முகாமைத்து வத்திலேயே தங்கியுள்ளது. இன்று பாடசாலைகள் பல்வேறு வழிகளிலும் முயன்று தமது செயற்பாட்டை முன்னேற்றகரமான பாதைக்கு திசை திருப்பியு ள்ளன. பாடசாலைகள் குறிக்கப்பட்ட இலக்கினை அடைதலையே தம் குறிக்கோளாகக் கொண்டு ள்ளன. ஆனால் பாடசாலை எச்சமூகத்தில் அமைந்துள்ளதோ அது அச்சமூகத்தின் பண்பாடு, மக்கள் வாழ்க்கை முறைகள், சமூகத்தின் தேவை கள் போன்றவற்றைக் கருதியே தம் செயற் பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும் அத் தகைய நிலையிலேயே பாடசாலையானது தர மேம்பாட்டை உறுதி செய்து கொள்கின்றது.

தரம் (Quality) என்ற சொல் உயர் அடைவைக் குறிப்பதாகும். இந்த உயர் அடைவு என்பது பல விடயங்களை உள்ளடக்குகின்றது. சொல்லாற்றல், எண்ணாற்றல், ஒன்றைப் பார்த்து அதனை உருவாக்குதல், புதியன படைத்தல், கற்பனை செய்தல், தவறின்றிச் செய்தல் போன்ற மனிதத்திறமைகளும் ஆற்றல்களும் பலவாகும். இத்தகைய செயற்பாடுகள் எல்லாம் கல்வியில் முக்கியமான அம்சங்களாகக் கருதப்பட்டு அவற்றில் தேர்ச்சிபெறும் நிலை ஏற்படும்போது அதுதான் உயர் அடைவாகக் கருதப்படும். இன்று தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள் கல்வி நிலைக்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டன. இதனால் அதிபர்களின் பணி மிக முக்கியமாகக் கருதப்பட்டு அவர் ஒரு முதன்நிலை முகாமையாளராகக் கருதப்படுகின்றார். இதனால் நிர்ப்பந்தமான சூழல் ஒன்று அவரைச் சூழ உள்ளது. இதனால் பாடசாலைகளை வழிநடத்தும்

அதிபர்களது சிறந்த தலைமைத்துவப்பண்பு பாட சாலையின் தரவிருத்திக்கு முக்கியமானதொரு அம்சமாகக் காணப்படுகின்றது.

## அதிபரின் கடமைகளும் பொறுப்புக்களும்:

ஒரு பாடசாலையில் நடைபெறும் கல்வி சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பானவர் அதிபரேயாவார். அங்கு இடம் பெறும் கல்விசார்ந்த விடயங்களை உரிய முறையில் திட்டமிட்டு, அதன் வளர்ச்சிக்குத் தேவையான வெவ்வேறு செயற்பாடு களையும் முன்னேடுத்து, அதன்படி செயற்படுத்தப் படுகின்ற திட்டங்களை மதிப்பீடு செய்து தனது நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதால் அவர் ஒரு மேலாண்மையாளராகச் (Management executive) செயற்படுகின்றார். பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரையும் அங்கு இடம்பெறும் கல்வி நடவடிக்கைகளையும் மேற் பார்வை செய்பவராகவும் (Supervisor) செயற்படு கின்றார். இந்நிலையில் பல கடமைகளை அவர் நிறைவேற்ற வேண்டியவராயுள்ளார்.

- கட்டளையிடுபவர்(Dictator): பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகவும், ஏனைய புற வேலைகள் தொடர்பாகவும் பல உத்தரவு களைப் பிறப்பிக்கும் ஒரு ஆணையாளராவார்.
- ஒழுங்கை நிலைநாட்டுபவர் (Disciplination) கல்விச் செயற்பாடுகள் தவிர்ந்த ஒழுக்கம் தொடர்பான விடயங்களிலும் அக்கறையுடைய வராகின்றார்.
- மேலாளர் (Manger) நாளாந்தம் பாடசாலை வேலைகளை மேற்பார்வை செய்கின்றார்.
- செயலாளர் (Executive): பாடசாலை வேலைகள் தொடர்பான பல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துகிறார்.
- ஒருங்கிணைப்பாளர் (Co-ordinator) பாடசாலையின் சகல வேலைகளையும் இயல் பாகவும், விரைவாகவும், திறமையாகவும் நடைபெற ஒரு பாலமாக விளங்குகின்றார்.
- தலைவர் (Leader): பாடசாலையானது குறிக்கப்பட்ட இலக்கை நோக்கிச் செல்வதற்காக அதனை முன்னின்று வழிநடத்திச் செல்கின்றார்.

சமூகத்தில் நாளாந்தம் துரித மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமேயுள்ளன. அதேபோன்று பாட சாலையாகிய சமூகத்திலும் மாற்றங்கள் ஏற்படு கின்றன. அத்தகைய உயர்வு நோக்கிய மாற்றங் களை எதிர்கொண்டு அதன் மூலம் பாடசாலையின் தரத்தை மேம்படுத்த அதிபர் முன்வர வேண்டும். தனது பாடசாலை எதிர்காலத்தில் எத்தகைய வளர்ச்சிபெற வேண்டும் என்பது தொடர்பான தொலைநோக்கு ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய மாற்றங்களும், செயற்பாடுகளும் சரியான நேரத்தில் இடம் பெறுகின்றதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னுடைய அயராத சேவையினால் சிறந்த கல்வித்தரத்தைப் பேணுவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

கல்வியில் மாற்றம் என்பது தவிர்கக் முடியாதது. இவ்வகையில் தொடர்ச்சியான மாற்றங்களைச் சந்தித்துவரும் கல்விச் செயற்பாடு களை முகாமை செய்யும் நிறுவனங்களாகப் பாடசாலைகள் செயற்படுகின்றன. பாடசாலைகள் உயர் வினைத்திறனுடன் இயங்க வேண்டுமெனில் அதிபர் தந்திரோபாயச் சிந்தனை உடையவராக இருக்க வேண்டும். பாடசாலையின் உயர்நோக்கங் களையும் அடைய வேண்டியும் அதன் உச்சப் பயனை

அதிகரிப்பதற்கும் பொருத்தமான முகாமைத்துவ நடவடிக்கைகளை அதிபர் மேற்கொள்ள வேண்டும். ஒரு சிறந்த பாடசாலை ஒன்று இயங்குகின்றது என்றால் அங்கு அதிபரின் செயற்பாடு சிறப்பானதாக இருக்கும். ஏனெனில் ஒரு மோசமான அதிபரின் கீழ் ஒரு சிறந்த பாடசாலை இயங்க முடியாது. அதே போன்று ஒரு சிறந்த அதிபர் பாடசாலையை மோசமான நிலையில் வைத்திருக்க மாட்டார்.

பாடசாலையின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு என்ற இரண்டு செயற்பாடுகளுக்கும் காரண கர்த்தாவாக விளங்கும் அதிபர்கள் தமது ஆசிரியர்களின் செயற்பாட்டை வினைத்திறனுடையதாக மாற்ற வேண்டும். அதிலேதான் பாடசாலையின் வெற்றி தங்கியுள்ளது. பாடசாலைகளுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் அவர் சளைக்கக் கூடாது அவர் உயர்ந்த ஒரு பண்பாளராக விளங்க வேண்டும். அவரிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்புகளாவன:

- அடக்கமும் பணிவும்
- நட்புத்தன்மை
- நேர்மை
- நெகிழ்ச்சிப் போக்கு
- நடுவு நிலைமை
- அர்ப்பணிப்பு
- அறிவாண்மை
- தலைமைத்துவம்

இவ் உயர்பண்புகள் எல்லாம் வாய்க்கப் பெற்றவராக இருக்க வேண்டும். பாடசாலையின் வளர்ச்சி சார்ந்த மாற்றத்துக்கான செயல்களில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். ஆசிரியர்களிடையே சமூக உறவை வளர்ப்பதோடு பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்துபவராக விளங்க வேண்டும். ஆசிரியர்களின் செயற்பாடுகளை அவதானிப்பவராக இருக்க வேண்டும். அவர்களின் சுதந்திர செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கக் கூடாது. எனினும் தனது நேரடி மேற்பார்வையின் கீழ் ஆசிரியர்களைக் கண் காணிப்பவராக இருக்க வேண்டும்.

ஒரு நல்ல அதிபர் சிறந்த நடிகராவார். தனது நடிபங்கினை நன்கு புரிந்து கொண்டு அவர் செயலாற்ற வேண்டும். கல்விக் கோட்பாடுகள் தொடர்பாக அவற்றை முழுமையாக அறிவதோடு அதனை அமுல்படுத்த முன்வர வேண்டும். சிறந்த அறிவாளியான சுறுசுறுப்பான நல்ல சிந்தனையுடைய ஒரு அதிபரே பாடசாலை தொடர்பாக ஒரு நிர்வாகியாகவும்(Director), ஒழுங்கமைப்பாளராகவும்(Organizer) முகாமையாளராகவும் (Manager) செயற்படக் கூடியவராவர், பாடசாலையில் பேணப்படவேண்டிய ஆவணங்கள் யாவும் பாதுகாப்பாக இருக்கிறது என்பதை அதிபர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே எந்த ஒரு நிறுவனமும் அது பரந்து விரியும் போது நவீன முகாமை முறைகளை மேற்கொண்டாலேயொழிய அதன் செயற்பாடு திறன் மிக்கதாய் திகழ முடியாது. ஆகவே தனது முகாமையின் கீழ் தகுந்த ஆசிரியர்களை நியமித்து வழிகாட்டி, மேற்பார்வை செய்து கல்வியின் தரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். தனது முகாமையின் கீழ்

- பாடசாலைகளை நிர்வகித்தல் வேண்டும்
- கல்விப் பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்
- கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடல் வேண்டும்.
- இலக்குகளை எய்தும் நோக்கம் இருக்க வேண்டும்.
- சேவை மனப்பான்மையுடையவராக இருக்க வேண்டும்.

- சமூகத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப கல்வி நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை அவர்தன் முகாமையின் கீழ்செயற்படுத்த வேண்டும். இன்று அளவுப் பெருக்கம்(Quality) ஏற்பட்டு வருகின்றது. இதனால் கல்வி நிலையங்கள் எண்ணிக்கையில் பல மடங்கு அதிகரித்துள்ளன. இந்நிலையில் அரசும் கல்விக்கான முதலீட்டைப் பலமடங்கு அதிகரித்துள் ளது. எத்தகைய வசதிகள் கல்வியுலகில் ஏற்பட்டு ள்ள போதிலும் பாடசாலையின் கல்விச் செயற் பாட்டை முன்னின்று திட்டமிட்டு நடத்திவரும் அதிபரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே ஒரு தலைமை அதிபர் ஒருவர் ஆசிரியர் தொடர்பான பொறுப்புக்கள், மாணவர் தொடர்பான பொறுப்புக்கள், பாடசாலைகள் தொடர்பாகச் செய்யும் வேலைகள், நிதிப் பொறுப்புக்கள், பொது மக்கள் தொடர்பான பொறுப்புக்கள் போன்ற பல விடயங் களை மதிப்பீடு செய்யும் பணியையும் முன்னெடுத்துச் செல்கின்றார்.

## முடிவுரை

இன்று உலகம் மிக வேகமாக மாறிக் கொண்டு செல்கின்றது. இதில் சிறப்பாக வாழ வேண்டுமானால் அதற்குப் பொருத்தமான பயிற்சியை இளம் சந்ததியினர் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வி திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். கல்விநடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களாக இருந்தபோதும், அவற்றை வகுப்பறையில் செயற் படுத்துபவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் அச் செயற்பாடுகள் யாவும் செம்மையுற நடைபெறு வதற்குரிய சிறந்த முகாமைச் செயற்பாடுகளை முன்னெடுப்பவர் அதிபராவார். பாடசாலைச் செயற் பாடுகளில் இன்று அதிபரின் பங்கும், பொறுப்பும் அதிகரித்து விட்டது. சிறந்த நிர்வாகச் செயற்பாடு களை நடைமுறைப்படுத்தி "கல்வியின் தரம்" என்ற சிந்தனையை முன்னிருத்தி அதனை நோக்கி முன்னேற அவ்விலக்கை அடைந்து கொள்வ தென்பது சாதாரண செயற்பாட்டினால் நிறைவேற்ற முடியாது. ஆகவே கல்வியின் தரத்தைப் பேண வேண்டுமானால் அது அப்பாடசாலையில் அதிபரின் அதி சிறந்தசெயற்பாட்டிலேயே தங்கியுள்ளது எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்:


1) கல்வியின் புதிய செல்நெறிகள்
2) தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை
3) கல்வியின் தத்துவ மேலாண்மை, கணபதி. வி
4) இந்திய சமுதயத்தில் எழுந்துள்ள கல்விசார் அறைகூவல்கள், நாகராஜன். கி.

# மாணவர் தேர்ச்சி விருத்தியில் ஆசிரியர் வகிபங்கு

திருமதி வாசுகி தவபாலன்
B.Sc.(Hons), PGD. in. Edu., M.Ed.
உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)
தீவகக் கல்வி வலயம்

சம கால மாணவர்கள் தகவல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் அறிவுத் துறையில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். தொழில் நுட்பவியலின் முன்னேற்றம் தேர்ச்சியுறாத தொழிலாளர்களை நிராகரித்து விடுகின்றது. இத்தகைய சூழலில் மாணவரை பொருத்தமான முறையில் வழிகாட்டும் பொறுப்பு ஆசிரியர்குரியது. சமகாலக் கல்வி வளர்ச்சியும் விஞ்ஞான தொழில் நுட்ப விசைகளும், வாழ்வின் பன்முக மட்டங்களிலும், அறிவுத் தொகுதியிலும் நிலை மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. அவை வேலை, வாழ்க்கைநிலை, உணவு, இல்லம், பொழுது போக்கு, கலைநுகர்வு என்ற வகையில் தனி மனிதர்மீது முடிவில்லாச் செல் வாக்குச் செலுத்தி வருவதால் ஒவ்வொரு மாண வனும் சமூகத்துடன் பொருந்தி வாழ உரிய தேர்ச்சிகளைப் பெறுதல் அவசியம். கல்வி வளர்ச்சிக் செயன்முறையின் அச்சாணியாகவும் உள்ளார்ந்த தொடர்புடைய வராகவும் விளங்கும் ஆசிரியர்கள் தம்மிடம் கற்கும் மாணவன் பற்றிய அறிவு, அவன் வாழும் யதார்த்தங்கள் என்பவ ற்றை அறிந்திருப்பதுடன் கால மாற்றத்திற்கும் சிந்தனை மாற்றத்திற்கும் ஏற்ப கற்றல், கற்பித்தல், கணிப்பீட்டு முறையியலில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை அறிந்து தமது மாணவர்களை உரிய முறையில் வழிகாட்டல் வேண்டும்.

எனவே மாணவர் பாடசாலைக் காலத் தில் பெற வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளை பெறும் பொருட்டு ஒவ்வொரு பாடத்துடனும் தொடர்புடைய பிரச்சினைகளையும், எண்ணக்கருக்களையும் பொருளுள்ள வகையிலும், அவர்களின் வாழ்க்கை யுடன் பொருத்தப்பாடு உடைய விதத்திலும் முன்வைப்பதற்கு ஏற்றவாறு மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயன் முறையை ஒழுங்கமைத்துக் கொடுப்பதன் மூலமும், கற்றல் அனுபவங்களை பொருளுள்ள வகையிலும் கவர்ச்சியாகவும் முன்வைப்பதற்காக பொருத்தமான பாடமேம்பாட்டுச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொடுப்பதன் மூலம் இனங்காணப்பட்ட தேர்ச்சி களை அடையச் செய்வதும், சமநிலை ஆளுமையை ஏற்படுத்தலும் தேர்ச்சி மையக்கலைத் திட்டத்தின் நோக்கமாகும். தகவல்களைப் பெற்று அறிவாற்றல் உள்ளவராக, பரந்த செயற்றிறன் உடையவராக, நல்லொழுக்கமுடையவராக ஒருவரோடு ஒருவர் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துபவராக ஆக்குவதே மேற்குறித்த தேர்ச்சி மையக் கல்விச் செயற்பாட்டின் முக்கிய வெளிப்பாடுகளாகும். இதற்கமைய புத்தாக்கம், ஆக்கத்திறன் செயற்பாடுகள்

என்பவற்றை உள்ளடக்கி செயலூக்கமும் சுறு சுறுப்பும் உள்ளதாக கற்றல் செயற்பாடுகள் இருத்தல் வேண்டும். மாணவர்களை விருப்புடனும் மகிழ்ச்சியுடனும் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அடிப்படைத் தேர்ச்சிகளையும் அதனூடு தேசியப் பொதுக் குறிக்கோள்களையும் அடையச் செய்வதற்கு வகுப்பறை வசதிகளும் வளங்களும் மட்டுமன்றி ஆசிரியரின் கற்றல் தந்திரோபாயங்களும், புதிய உத்திகளும் முக்கிய காரணிகளாகும். அவ் வகையில் ஆசிரியர்களின் மாறிவரும் வகிபாகம் பற்றிய யுனெஸ்கோ அறிக்கையில்,

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்கள்,

- உயர் தொழிற் தகைமை,
- அடிப்படைப் பாடநெறிகளில் வல்லுனராக இருத்தல்
- பல்வகைக் கற்பித்தல் தத்துவங்களை உள் வாங்கல்.
- மாணவர்களுடன் உரையாடுந்திறன், அவர் கள் தகவல்களைத் தெரிவு செய்து பயன் படுத்த உதவுதல்.
- படைப்பாற்றல், மாற்றங்களையும் புத்தாக் கங்களையும் வரவேற்கும் மனப்பாங்கு போன்ற தகைமைகளையும், மாறும் நிலைக் கேற்ப இசைவாக்கம் பெறுதல், திறனாய்வு மனப்பாங்கு, பிரச்சினைகளை இனங்காணல், அவற்றுக்குத் தீர்வுகாணல் போன்ற திறன் களைக் கொண்டிருத்தல்.
- சகிப்புத்தன்மை, சமூகநீதி, சமாதானம், இனங் களிடையான புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தும் மாற்றங்களுக்கான முகவராக செயற்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டு ள்ளது.

21ஆம் நூற்றாண்டிற்கான கல்வி பற்றிய சர்வதேச ஆணைக்குழுவின் "கற்றல் உங்களுடைய வள மாகும்" எனும் அறிக்கையில் ஆசிரியர் கல்வி பற்றி குறிப்பிடுகையில்

- உள்வாரியான ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட போதனாவியலைப் புரிந்து கொள்ளல்.
- பொதுசன தொடர்பு சாதனங்களின் அறிவுறுத் தல்களைப் பின்பற்றல்
- தொடர்பு சாதன தகவல்களைத் தெரிவு செய்து உபயோகிக்கும் ஆற்றலைப் பெறல்
- மாணவர்களைத் தயார்படுத்தும் ஆற்றலைப் பெறல்
- தொடர்ச்சியான கல்விச் செயற்பாட்டை நிர் வகிக்கும் ஆற்றலைப் பெறல்
- கற்பித்தல் தேர்ச்சித் திறன்கள்
- தொழில் வாண்மைக் கடமைகள், விழுமியங்கள் என்பவற்றை அறியச் செய்தல்
- தகவல் தொழிற்துறைப் புரட்சி, பூகோளமய மாதல் தொடர்பான சவால்களை எதிர் கொள் ளும் ஆற்றலைப் பெறுதல்

போன்ற தேர்ச்சிகளை ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான பல திறன்களையும் தேர்ச்சி களையும் வழங்கும் வகையில் ஆசிரியர் கல்வி அமையும் போது அவர்கள் பின்வரும் தகைமை களைப் பெறுவர்.

- கல்வியின் புத்தாளர்களாகச் செயற்படல்
- சமூகமாற்றங்களை ஏற்படுத்தும் மாற்று முகவர்களாகச் செயற்படல்
- கல்வி முறையின் சீரமைப்பிற்கு பங்களிப்புச் செய்தல்

- பாடசாலை மட்டத்தில் நடைமுறைகளை மேம் படுத்தல்
- கல்வியில் தர விருத்தியை ஏற்படுத்தல்

அறிவையும், அனுபவங்களையும், சமூக இடைவினைகளையும் ஒரே நேரத்தில் இணைத்துக் கொடுப்பது கலைத்திட்டம், கலைத்திட்டம் வெற்றி பெற கல்வியை விழிப்புணர்ச்சிச் சாதனமாக்க வேண்டியுள்ளது. அறிவூட்டல், அனுபவங்களை விளக்குதல், சிந்தனை வேகத்தை விசைப்படுத்துதல் போன்ற தூண்டற்பேறுகளை ஏற்படுத்த வேண்டியு ள்ளது. எனவே ஆசிரியர் வழிகாட்டுபவராகவும் மாணவர் சுதந்திரமாகத் தொழிற்படுபவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கமைய மாணவர் எப்போதும் தேடியறியவும் கையாண்டு பார்க்கவும் முனைவர் என்ற இயல்பினை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கலைத்திட்டத்தில் செயற் பாட்டறைச் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இடைநிலைப்பிரிவு மாணவர் செய்முறைத் திறன் களையும் தொழில்நுட்பத் திறன்களையும் வளர்த்து யதார்த்த வாழ்விற்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளுமுகமாக செயற்பாட்டறை பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைப் பார்க்கும் போது சில எளிய பரிசோதனைகள் கூட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் களுக்கு உதவி உள்ளன. பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் தற்செயலானவை. இன்னும் சில ஊகம் உட்தூண்டல், அதிஸ்டம், கற்பனை, உள்ளுணர்வு விளைவால் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக நியூட்டன் ஈர்ப்பு விதியையும், போல்டிறாக் சக்திச் சொட்டு நிலையியக்கவியல் சார்புக் கொள்கைக்கான விதிகளையும் ஊகித்தறிந்த தாகவும், மகஸ்வெல் கற்பனையில் புனைந்த சக்கரங்களின் அடிப்படையில் மின்னியக்கவியல் கண்டுபிடிப்புக்களை சாதகமாக்கினார் எனவும், கெப்ளர் அவதானத்தின் அடிப்படையில் கோள்களின் இயக்க விதிகளை முன்மொழிந்தார் எனவும், கெக்குலே எனும் இரசாயனவியலாளர் அவருடைய கனவினூடாக பென்சீனின் கட்டமைப்பைக் கண்டறிந்தார் எனவும் கூறப்படுகின்றது. (Richard Feynman, 1967.p.158) எதனையோ நோக்கமாகக் கொண்டு பரீட்சிக்கப்பட்டவை எதிர்பாராத ஏனைய கண்டுபிடிப்புகளுக்கு வழி கோலின. எல்லாமே ஆய்வுகூட ஆய்வுகளுக்கூடாக மாத்திரம் சாத்தியப் பட்டிருக்கவில்லை. பல பகுத்தறிவாதத்தினூடாக ஒப்பேறியிருக்கின்றன. இன்னும் பல உள்ளுணர்வு வழிமுறைகளினால் சாத்தியப்பட்டிருக்கின்றன. தெரிந்ததில் இருந்து தெரியாததை நோக்கிய அவர்களது முயற்சிகள் தெரிந்தவற்றின் அடிப்படை யிலேயே ஊகங்களைப் பெறுகின்றன. பார்த்தல், கேட்டல், செய்தல் மூன்றிலும் செய்தலே சிறந்தது. ஓர் ஆய்வுகூடம் குறிப்பானவற்றைக் கற்பிப்பதில்லை, உபவிளைவுகளையே கற்பிக்கின்றது. ஆய்வுகூடச் செயற்பாடுகளிலே ஏற்படும் தவறுகள் மாணவரிடம் சரியான எண்ணக்கரு உருவாவதற்கு மறைமுகமாக உதவுகின்றது. மாணவர்களின் அடைவின் மேலாண்மை கற்கக் கற்றல், பிரச்சினை விடுவித்தல், படைப்பாற்றல் என்பவற்றுடன் தொடர்புபட்டது. இவ்வகையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் யாவும் திட்டமிட்டபடி நடந்தேறியவை எனக் கூறமுடியாது. அவர்களுடைய தேடல் முறைகள், தேடுகையில் காட்டும் தீவிரம், ஆழ்ந்து ஈடுபடும் மனநாட்டம், அதீத பொறுமை, புறவயப்பட்ட மனப்பாங்கு, தர்க்க கற்றல், எளிமையான அணுகுமுறை, சிக்கனமாக்கிய சிந்தனை, தளராத மனஉறுதி, எல்லாமே ஆற்றுகை

முறைகளுக்குப் பின்புலமானவை.

எனவே இன்றைய உலகில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பவற்றை மட்டும் உருப்போட்டு ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைகளாக மாணவர் இருத்தல் முடியாது. பாடநூலுக்கு வெளியே குறிப்பிட்ட விடயம் பற்றி அல்லது வேறு விடயம் பற்றி தேடிக்கற்று பரந்த அறிவினைப் பெறவேண்டிய கட்டாய நிலை இன்றுள்ளது. அறிவைத் திரட்டல், விளக்குதல், மதிப்பீடு செய்தல், வாழ்நிலைக்குப் பிரயோகித்தல் என்ற பல்துறை ஆக்கங்கள் வளர்க்கப்பட வேண்டியுள்ளன. ஒரு தனிமனிதன் அறிதுறைகள் அனைத்தையும் கற்றுக் கொள்ள முடியாது. இந்நிலையில் அறிவு நிதியத்தை எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படைகள் அனை வருக்கும் கற்பிக்கப்படல் வேண்டும். எனவே பாடத்தைக் கற்பிக்க முனையும் ஆசிரியர் தேசிய பொதுக் குறிக்கோள்கள் தொடக்கம் பாடத்திட்டத்தின் பொது நோக்கங்கள் வரை நன்கு அறிந்திருக்க வேண்டும். பாடத்திலுள்ள விடய உள்ளடக்கத்தை மாணவர்களின் பிரவேச நடத்தைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் பொருத்தமானவாறு முன்வைக்க கற்றல் சந்தர்ப்பங்களை தெரிவு செய்யவும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்க மைக்கவும் வேண்டும். அத்துடன் கற்பிக்கப்படும் பாடத்தின் தன்மை, மாணவர் நுண்ணறிவு மட்டம், மாணவர்களின் ஆற்றல்கள், ஆர்வங்கள் என்பன பற்றியும் பாடசாலை வளங்கள் பற்றியும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். பாடத்தினூடாக மாணவர் அடைய வேண்டும் என எதிர் பார்க்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்காக, மாணவர் நேரடியாகப் பெறும் அனுபவங்களினூடாக அவற்றை விளங்கிக் கொள்ள வகை செய்தல் வேண்டும். கற்பித்தற் செயற்பாடுகளை வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தாது அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்களிற்குச் சென்று அவதானித்தல், ஆராய்தல், கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், ஆக்கச் செயற்பாடுகள், குழுச் செயற்பாடுகள் செய்முறை வேலைகளில் ஈடுபடுத்தல் வேண்டும்.

ஆசிரியர் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் போது மாணவர்களுக்கு திறன் களும், அனுபவங்களும் கிடைக்கக்கூடிய வகையில் நூல்களை உசாவுவதிலும், தகவல்களைச் சேகரிப்பதிலும், இணையத்தளத்தைப் பயன்படுத்து வதிலும் மாணவரை வழிப்படுத்தல் வேண்டும். அதிலும் மாணவர்களின் தனிப்பட்ட கவர்ச்சிகளை அல்லது திறன்களை அடிப்படையாகக் கொண்டு துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக குழுச் செயற்றிட்டங்களிலும், ஆய்வுகளிலும் ஈடுபடுத்தல் வேண்டும். இவற்றினூடாக தன்னடக்கம், ஒத்துழைப் புடன் செயற்படல், ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுத்தல், ஏனையோருக்கு உதவுதல், நேர்மை போன்ற மனப்பாங்கு சார்ந்த பண்புகளை மாணவர் களிடம் வளர்க்கலாம்.

எனவே பாடசாலையினூடாகப் பெறும் அனு பவங்களை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலைச் சூழ்நிலையும், சூழலும் ஒழுங்கமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பல்வேறு பாடமேம்பாட்டுச் செயற்பாடுகள் மாணவர் தேவைக்கேற்ப இனங் காணப்பட்டு பாடசாலை வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். அதற்காக,

1. மாணவர் கழகம் தாபித்து நடத்துதல்
2. வெளிக்களச்சுற்றுலா, கல்விச் சுற்றுலாக் களை ஒழுங்குபடுத்தல்

3. ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கங் களில் மாணவரை ஊக்குவித்தல்
4. வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிட்ட விவாதங்கள், உரையாடல்கள் நடத்தல்,
5. கண்காட்சிகளை நடத்தல்
6. துறைசார் நிபுணர்களின் குறித்த தலைப் புகளிலான விரிவுரைகள்
7. பாடப் பாசறைகள்

போன்றவற்றை ஒழுங்குபடுத்தி நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

கற்றலும் தம்முள்ளே நிகழும் மாற்றமும் தம்மால உருவாக்கப்படுகின்றதென்பதை மாணவர் உண ருதல் வேண்டும். ஆசிரியர் கற்றலைத் திணிப்பவராக இராது உதவியளிப்பவராக மாற வேண்டும். தம்மைப்பற்றிய சுயஎண்ணக் கருக்களை உருவாக்கு வதற்கும், தமக்குரிய விழுமியங்களைக் கண்டறி வதறகும், மாணவர்'க்குச் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். கற்றலினூடாக மாணவர் தன்னியல் நிறைவு பெறல் வேண்டும் செயல்மானங்கள் வழியாக அனுபவங்களைத்திரட்டிக் கொள்ளல், சொந்த அனுபவங்களிலிருந்து வியாக்கியானங் களைப் பெறல், தொடர்ச்சியான பரிசோதனைகளை மேற் கொள்ளல் மூலம் கல்விச் செயன் முறையின் வாயிலாக சமூக அனுபவங்களும், சமூகப் பங்கு பற்றலும், வாழும் முறைகளும் வளர்த்தெடுத்தல் சிறந்தது பிள்ளை தானே அறிந்து கொள்ளக் கூடியதாக செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். பிள்ளை தான் கண்டுபிடித்த, முயன்று பெற்ற, தான் அனுப வித்த, தானே தேடிய விடயங்களை இலகுவில் மறந்து விடாது. எனவே பிள்ளை குறித்த விடயங்களில் தேர்ச்சியடைய வேண்டின் ஆசிரியர் வசதியளிப்பவராக ஒரு அரங்க நெறியாளர் ஒரு அரங்க நெறியாளர் போல் செயற்படல் வேண்டும்.

ஆசிரியர்களின் புதிய வகிபாகம் மாணவர் களுக்குக் கற்றல் திறன்களை வழங்குவதுடன் அவாக்ளுடைய கற்றல் ஆற்றல்களை மேம் படுத்துவதாகவும், அவர்கள் வாழ்க்கை நீடித்த கல்வியைப் பெறும்வகையில் ஊக்கம் வழங்கு வதாகவும் மாற்றம் பெற்று வருகின்றது. எனவே ஆசிரியர்கள் பாட விடயத்தைக் கற்பிக்கும் அதேவேளையில் மாணவர் சுயமாக தாமாக கற்கும் திறன்களையும் கற்பிக்க வேண்டும். கல்விச் செயற்பாட்டில் கற்பதற்குக் கற்றல் இன்று முக்கியம் பெறுகிறது. மாணவர் கற்கும் பாடப் பொருள் அறிவு விரைவில் காலாவதியாகி விடுகிறது. ஆகவே மாணவர் தமது அறிவைத் தாமே புதுப்பித்து கொள்ளவும், இற்றைப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய காலப்பகுதியில் வாழ்கின்றனர். இதற்கு உதவும் வகையில் ஆசிரியர் வகிபாகம் மாற வேண்டும். அவ்வகையில் ஆசிரியர்களும் தம்முள்ளே பல்வேறு வகையான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண் டும்.

# மன அழுத்தமும் மூச்சுப் பயிற்சியும்

## BREATHING EXERCISE FOR STRESS MANAGEMENT

**சி. சபாஆனந்** M.phil
விரிவுரையாளர்,
விளையாட்டு விஞ்ஞான அலகு
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது மூத்தோர் வாக்கு ஆனால் இன்றைய 21ம் நூற்றாண்டில் திரைகடல் ஓடி திரவியம் தேடி அதனை மருத்துவத்திற்கும் மாத்திரைகளுக்கும் செலவு செய்கின்றனர் மக்கள். இன்று சமூகத் தில் ஒவ்வொரு மனிதனும் பணத்தையே அதிகம் நேசிக்கின்றான். அதற்காக இரவு பகலாக உடலை வருத்தி போதிய உறக்கம் இன்றி பணமீட்டும் தொழில்களில் ஈடுபடுகின்றான். மறுபுறம் பொருளாதார, தொழில் நுட்ப, தொடர்பாடல் வளர்ச்சி காரணமாக மனிதனின் அன்றாட உடலியல்சார் தொழிற்பாடுகள் குறைந்து கொண்டே செல்கின்றது. இதன் விளைவாக உடலியல், உளவியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றது. அடுத்து மன அழுத்தம் என்பது இன்றைய மக்களிடையே காணப்படும் ஒரு முக்கியமான உளவியல் தாக்கமாகும். உதாரணமாக எட் மணிநேரம் வேலை செய்யும் ஒரு சராசரி தொழிலாளி கண்டிப்பான மேலதிகாரியின் கீழ் வேலை செய்வதும், கடும் இயந்திரசாதன ஒலி, புகைகளுக்கிடையில் தொழில்சார் போராட்டம் செய்வதும் வீடு திரும்பும் போது போக்குவரத்து நெரிசல் காரணமாக தாமதம் ஏற்படுவதும், சராசரி மனிதர்களிடையே எரிச்சலூட்டும் நாளாந்த நிகழ்வுகளாகும். இது காலப்போக்கில் மன அழுத்தமாக உருவெடுத்து உளவியல் சார் நோய்கள் ஏற்படவும் காரணமாகின்றது. இத்தகைய மன அழுத்தமானது(Stress) இருதயம்சார் நோய் களையும் ஏற்படுத்த வல் லது.

இதற்கான தீர்வு முறைகளை ஆராயும் போது உடற்பயிற்சி என்பது ஒரு முக்கியமான பக்க விளைவுகள் அற்ற நோய் தீர்க்கும் வழி முறையாக காணப்படுகின்றது. மேலைத்தேச நாடுகளில் இன்று நாளாந்தம் காலையோ, மாலையோ ஏதாவது ஒருவேளை உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர் மக்கள். இத்தகைய உடற்ப யிற்சியானது மன அழுத்தத்தை குறைப்பதற்கும், தசைநார்களை பலமூட்டுவதற்கும் இருதய தாங்குதிறனை அதிகரிப்பதற்கும், இரத்தச் சுற்றோட்டத்தை சீராக்கவும், சீரான உடல் எடையை பேணவும், நிம்மதியான உறக்கத்திற்கும் வழி செய் கின்றது.

சமீபத்திய ஆய்வுகளின் பிரகாரம் சட்டத் துறை, மற்றும் அலுவலகங்களில் பணி புரிவோர் காலையில் உடற்பயிற்சி செய்வதால் தொடர்ந்து

வரும் அன்றாட நீதிமன்ற, அலுவலகப் பணிகளை இலகுவாக செய்ய முடிவதாகவும் வியாபாரத் துறையில் ஈடுபடுபவர்கள் மாலை வேளையில் உடற்பயிற்சி செய்வதால் அன்றாடம் ஏற்படும் வியாபாரச் சிக்கல்கள் மன உளைச்சல்களில் இருந்து விடுபட உடற்பயிற்சி உதவுவதாகவும் சமீபத்திய ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

மேலும் மன அழுத்தத்தை குறைப்பதற்கு மூச்சுப்பயிற்சி (Breathing Exercise) இன்றி அமையாத ஒரு உளவியல் சார் நோய் தீர்க்கும் காரணியாக காணப்படுகின்றது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் இத்தகைய மூச்சுப்பயிற்சியூடாக உடல் உள ரீதியான ஆரோக்கிய நிலை அதிகரிக்கும் என கண்டறியப் பட்டுள்ளது.

அடுத்து எவ்வாறு மூச்சுப் பயிற்சியை மேற் கொள்ளலாம் என நோக்கும். இத்தகைய பயிற்சிக் காக அமைதியான சுத்தமான, காற்றோட்டமான இடத்தை தெரிவு செய்தல் நன்று.

## படிமுறை ஒன்று

### Deep Breathing

(ஆழ்ந்த மூச்சப்பயிற்சி)

உடலின் பின்புறம் தரையில் படுமாறு நீண்டு படுத்துக் கொள்ளல் வேண்டும். முன் உடல் பகுதி மேலே பார்த்த வண்ணம் இருத்தல் வேண்டும். முழங்கால்களுக்கடியில் தலையணை ஒன்றை வைத்துக்கொள்ளல் வேண்டும். பின்னர் கால்களை ஒன்றோடு ஒன்று சேர்த்து வைக்காமல் சிறிது இடைவெளி விட்டு பேணுதல் வேண்டும். கால்களின் நுனி விரல்பகுதி வெளிநோக்கி காணப்படுதல் வேண் டும். கைகளில் ஒன்றை வயிற்றுப் பகுதியிலும் ஒன்றை நெஞ்சுப் பகுதியிலும் வைத்தல் வேண்டும். பின்னர் மெதுவாக மூச்சை உள்ளே இழுத்து மெதுவாக வெளியே விடுதல் வேண்டும். இவ்வாறு மூச்சை உள்ளே இழுக்கும் போது வயிற்றுப்பகுதி மேலே உயர வேண்டும். மூச்சை வெளியே விடும் போது கீழே செல்ல வேண்டும் .இவ்வாறு செய்யும் போது நெஞ்சுப் பகுதியானது அதிகளவு மேலே வரக்கூடாது. இவ்வாறு பத்து தடவைகள் செய்தல் ஒரு முழு பயிற்சியாக கருதப்படும். பின்னர் சோதித்துப் பார்ப்பதனால் பயிற்சியின் முன்பை விட பின்பு காணப்படும் மன அழுத்த வேறுபாட்டினை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்து வந்தால் மன அழுத்தம் குறைத்து விடும்.

## படிமுறை(2)

### Sighing

(நீண்ட பெருமூச்சுப்பயிற்சி)

படிமுறை ஒன்றில் குறிப்பிட்டதை போன்று அதே உடல் நுட்பத்தை கடைப்பிடித்து மூச்சை மூக்கின் வழியாக பின்வரும் விசேட காலப்பகுதிக்கமைய உள்ளெடுக்கவும் (4,5,6sec) பின்னர் உள்ளெடுத்த மூச்சினை பின்வரும் காலப்பகுதிக்கமைய மெதுவாக வாய்ப்பகுதிய ஊடாக வெளியே விடுதல் வேண்டும். (8,10,12,sec) இத்தகைய பயிற்சியை மன அழுத்தம் காணப்படும் போது எட்டு தொடக்கம் பத்து தடவைகள் மேற்கொள்ளலாம்.

## படிமுறை(3)

## Complete Natural Breathing

### (முற்றிலும் இயற்கையான மூச்சுப்பயிற்சி)

முதலில் நிமிர்ந்து உட்காருதல் வேண்டும் அல்லது நிமிர்ந்து கொண்டும் இத்தகைய பயிற்சியை செய்யலாம். பின்னர் மூச்சை மூக்கின் வழியாக மெதுவாக உள்ளெடுத்து நுரையீரலை வளியினால் மெதுவாக நிரப்புதல் வேண்டும். பின்னர் மூச்சை வெளியே விடாது சில நாழிகைகள் கட்டுப்படுத்தி மெதுவாக வெளியே விடுதல் வேண்டும். இத்தகைய பயிற்சியை பத்து தடவைகள் இதயத் துடிப்பு சாதாரண நிலை வரும் வரை செய்தல் வேண்டும்.

மேற்கண்ட ஒழுங்கு முறைகளுக்கமைய மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால் மன அழுத்தம் கட்டுக் குள் வந்துவிடும் இத்தகைய பயிற்சிகளை இருதயம் சார்ந்த நோயுள்ளவர்கள் மிகவும் கவனமாகவும் நேர்த்தியாகவும் செய்து வந்தால் மன அழுத்தத்தை குறைப்பதன் ஊடாக இருதயம் சார்ந்த நோய் களையும் கட்டுக்கள் கொண்டு வரலாம்.

# நேரத்தை முகாமை செய்தலின் அவசியம்

ச. சத்தியவரதன்
B.A., Dip. in Ed., Sc.Tra.(Sp)

நவீனத்துவம் நிறைந்த தற்காலத்தில் அனைத்து செயற்பாட்டு மட்டங்களிலும் நிர்வாகம் என்ற சொல் செயலிழந்து முகாமைத்துவம் என்பதே அதிக பலம் பெற்று வருகின்றது. கிடைக்கக் கூடிய அரிய பெறுமதி மிக்க வளங்களை வினைத்திறன் விளைதிறனுடன் சிக்கனமாக, உச்சப்பயன்பாடு மிக்கதாக செயற் படுத்துவதாக முகாமைத்துவம் அமைந்து காணப் படுகின்றது. தற்காலத்தில் வளங்களில் முக்கியமான தாக நேரமும் கொள்ளப்படுகின்றது. இதனால் நேர முகாமைத்துவம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்று நேரவளமும் திறமையாகவும், சிக்கனமாகவும், நன்கு திட்டமிட்டும் பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனை வளர்ந்து காணப்படுகின்றது. பெறுமதி மிக்க நேரத்தின் ஒவ்வொரு செக்கன் துளிகளும் சென்றால் திரும்பப் பெற முடியாதவை. இன்றே இப்போதே இருக்கும் நேரத்தை மிகவும் உச்சமாகப்பயன் படுத்துவதே வாழ்வின் வெற்றியின் இரகசியமாகும். ஒவ்வொரு செக்கனும் கழியும் போது எமது ஆயுளின் ஒரு பகுதி கழிந்து செல்கின்றது என்ற எண்ணம் தோன்றுமாயின் நாம் ஒவ்வொரு செக்கனையும் மிகவும் சிறப்பாகத் திட்டமிட்டுப்பயன்படுத்த தீர்மானிப் போம்.

நேரத்தின் பெறுமதி, அதன் வலிமையான பயன்பாடு அதனை எவ்வாறு சிக்கனமாகவும் உச்சமாகவும் பயன்படுத்த வேண்டும் என்பவை பற்றி பல்வேறு அறிஞர்கள் பல கருத்துக்களை முன் வைத்துள்ளனர். பாரதியார் பாப்பாப் பாட்டுப் பாடி குழந்தைகளுக்கே நேரமுகாமைத்துவ அவசியம் போதிக்கின்றார். "ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா...." என்றும், சோம்பல் மிகக் கெடுதி பாப்பா...., காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுவதும் விளையாட்டு என்றும் நேரத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டும் பயன்படுத்த வேண்டும் என்பதை வரிசைப்படுத்துகின்றார். ஜே.எஸ். ஏப்ரகாம் என்பவர் "நேர நிர்வாகமும் சுய முன்னேற்றமும்" என்ற தனது நூலில் "நேர உணர்வு இல்லாதவர்கள் பின் தங்க நேரிடும். அவரின் முன்னேற்றமும் தடைப்படும். கொஞ்சம் புத்திசாலித் தனமாக நேர நிர்வாகம் செய்தோமெனில் நிறையவே சாதிக்க முடியும்" என்று கூறுகின்றார். இக்கருத்தின் மூலம் நேரத்தின் மகத்துவம் அதனை எவ்வாறு திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும் என்பவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

"நேர நிர்வாகமும் வியாபார வெற்றியும்" என்ற தனது நூலில் சி.எஸ். வேதநாதன் அவர்கள் "நேரம் என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியானது தான். ஏழைக்கு 23மணி நேரமோ, செல்வர் என்பதற்காக 25மணி நேரமோ, கிடையாது. திறமையுள்ளவர், திறமையற்றவர், புத்திசாலிகள், முட்டாள்கள் எல்லோருக்கும் 24மணி நேரம் தான். அதனைப் பயன்படுத்திக் கொள்வதிலேயே அவரவரின் வெற்றி தங்கி உள்ளது." என்று கூறும் கருத்து கருத்தூன்றிச் சிந்திக்கத் தக்கது. எனவே நேரத்தை வீணாக்காமல் அதனைத்திட்டமிட்டுப் பயன்படுத்துவதிலேயே வெற்றி தங்கி உள்ளது.

நேரம் தாமதமில்லாமல் நாம் எமது ஒவ்வொரு கருமங்களையும் ஆற்றப் பழகிக் கொள்ள வேண்டும். நாளை, நாளை என்று ஒத்திப் போடாமல் இன்றே இப்போதே செய்ய வேண்டும் என்ற சிந்தனை நமது எண்ணத்தில், உள்ளத்தில் குடி கொள்ள வேண்டும். எமது முன்னேற்றத்தை நாம் தூங்கிக் கெடுக்கக் கூடாது. மாணவர்கள் ஆனாலும் மகான்கள் ஆனாலும் நேரத்துடன் செயற்பட வேண்டும். மாணவர்களுக்கு நேரத்தின் அவசியம் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் தனது புதுமைப் பெண் என்ற கவிதையில் "கடிகாரம் ஓடுமுன் ஓடு என் கண்ணல்ல..." என்று கூறும் கருத்து எவ்வளவு பெறுமதி வாய்ந்தது. மாணவர்களுக்கும் மற்றையோர்க்கும் நல்ல பாடமாக அமைவது. நேரம் பொன்னானது. விலைமதிக்க முடியாதது. எனவே நேரத்தை அனைவரும் மதிக்க வேண்டும். அனைவரும் நேர காலத்துடன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். காலையில் எவன் நான்கு மணிக்குத் துயில் எழுகின்றானோ அவனே அந்த நாளை வெற்றி கொண்டவனாகி, ஆயுளை வெற்றி கொண்டவனாகி, வாழ்வில் சாதனைகள் படைக்கின்றான்.

திரு.க.தேவராஜா அவர்கள் முகாமைத்துவம் என்ற தனது நூலில் நேரத்தை முகாமை செய்தல் பற்றிப் பின்வரும் கருத்துக்களை முன்வைக்கின்றார்.

- குறித்த நேரத்திற்கு முன்பாகவே சமூகமளித்தல்
- முதலில் கடுமையான வேலையையும், பின்னர் இலகுவான வேலைகளையும் செய்தல்
- திட்டமிட்ட நேரத்தினுள் வேலைகளை நிறை வேற்றல்
- தேவையற்ற உரையாடல்களைத் தவிர்த்தல்
- பிரச்சினைத் தீர்விற்கு தனியான நேரம் ஒதுக்குதல்
- தேவையற்ற அசைவுகளை இல்லா தொழித்தல்
- குறித்த நேரத்தில் குறித்த வேலை செய்வதை உறுதிப்படுத்தல்
- நாளை என்ற நிலை இல்லாது அன்றைய கருமம் அன்றே நிறைவேற்றப்படல்
- தேவைக்கதிகமான கூட்டங்களைத் தவிர்த்தல்
- நேரம் விரயமாக்கப்படுவதை ஆய்வுக்குட்படுத்தல் என்பனவாகும்.

இவை தனிநபர் அல்லது எந்த ஒரு நிறுவனம் தனது நாளாந்த நேரத்தை எவ்வாறு திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டுமென்பதை தெளிவாக வரையறுத்துக் காட்டுகின்றது. இவ்வாறான நிலையில் செயற்பாடுகள் இடம்பெறும் போது நேரவிரயமின்றி, சுறுசுறுப்பாகவும், உற்சாக மும் தொழிற்படுவது மாத்திரமின்றி, நேரம் சிக்கனமாகவும் பயன்படுத்தப்படும் இதன் மூலம் நேரத்தைப் பயன்படுத்துபவர் மாத்திரமல்ல பயனாளிகளும் உச்சப்பயனைப் பெற முடியும்.

இன்று பொழுது போக்கு, ஓய்வு, என்ற பெயர்களில் பல்வேறு நிறுவனங்களிலும், வீடுகளிலும் நேரம் வீணடிக்கப்படுகின்றது. அல்லது விரயமாக்கப்படுகின்றது. அதற்கு மேலாக நாட்டின் சூழலால் பெருமளவு நேரம் வீதிகளிலும் வேறு இடங்களிலும் விரயமாகின்றது. எனவே இருக்கும் அல்லது கிடைக்கும் குறுகிய நேரத்தை நாம் எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதில் தான் நம் வாழ்வும் எதிர்காலச் சமூக வாழ்வும் தங்கி உள்ளது. அணுக்குண்டால் அழிந்த யப்பான் இன்று அதிசயிக்கத்தக்க வெற்றி நாடாக விளங்குகின்ற தென்றால் யப்பானியரின் சலியாத மனமும் ஓயாத உழைப்பும் நேரத்தை நிறைவாகப் பயன்படுத்தியமையும்தான் காரணம். எனவே நாமும் வீட்டிலோ, வெளியிலோ, வேலை இடங்களிலோ, கல்விச் சாலைகளிலோ, ஆலயங்களிலோ எமது பொழுதை நாம் திட்டமிட்டுக் கழிக்க வேண்டும். எந்தச் செயற்பாடாக இருந்தாலும் அதனை நேரத்துடன் இணைத்துத் திட்டமிட வேண்டும். ஒவ்வொரு செக்கன் துளிகளும் ஒவ்வொரு தங்கக் கட்டிகளாக கருதப்பட வேண்டும். குழந்தைப் பராயத்தில் இருந்தே நேரத்துடனான செயற்பாட்டை பெற்றோரும், ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். அலுவலகங்களில் இருந்து அரட்டை அடிப்பதை விலக்கவேண்டும். இவ்வாறு நாம்எமது நேரத்தை பயனுள்ளதாக அமைத்துக் கொண்டோமேயானால் நாம் எமக்கும் பிறர்க்கும் நன்மை செய்தவராக, வாழ்வை வெற்றி கொண்டவர் களாக, வாழ்வில் சாதனை படைத்தவர்களாக மாற முடியும்.

நேரத்தைச் சேமிப்போம்!

நிறைவாக வாழ்வோம்!




இருப்பவர் இடமிருந்து வலம் :

திருமதி. ச. புவனேந்திரா, திருமதி. ம. சந்திரலிங்கம், திருமதி. கா. சோதிநாதன் (பிரதி அதிபர் - நிர்வாகம்), திரு. ச. சத்தியவரதன் (அதிபர்), திருமதி. லோ. நகுலசிறி (பிரதி அதிபர் - கல்வி அபிருத்தி) திருமதி. வி. புவனேஸ்வரகுமார், திருமதி. வி. பத்மநாதன்

நிற்பவர் இடமிருந்து வலம் :

திரு. க. கணேசமூர்த்தி, திரு. ந. செந்தூரன், திரு. க. விமலநாதன், செல்வி. இ. ஜெனிதா, திருமதி. கு. கேதீஸ்வரன், செல்வி. ஜே. யூட்றஜிதா, திருமதி. சு. புவனேந்திரன், திருமதி. ப. சிறிதரன், செல்வி. த. சுகந்தினி, திருமதி. வி. ஹெரால்ட், திரு. அ. அருள்ஜீவன், திரு. ந. ரமணன் (பிரதி அதிபர் - திட்டமிடல்)


ஆசிரியர் பக்கம்

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரின் பங்களிப்பு

**லோகேஸ்வரி நகுலசிறி**

பிள்ளைச் செல்வங்கள் பெற்றோருக்கு இறைவனால் வழங்கப்பட்ட மாபெரும் சொத்துக்கள். அவர்களை பெற்று வளர்த்து விட்டால் மட்டும் பெற்றோரின் பணி முடிந்து விடுவதில்லை. மாறாக அவர்களை கல்வியறிவிலும, ஆன்மீகத்திலும் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டியது அவர்களின் தலையாய கடமையே என்றால் மிகையாகாது. பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோரே. அவர்களின் கல்விப்பணி வீட்டில் குழந்தைக்கு "அம்மா" சொல்லிக் கொடுப்பதிலிருந்தே ஆரம்பிக் கிறது. இம்முக்கிய பணியில் பிள்ளைகளை தொடர்ந்தும் எல்லா வகுப்புக்களிலும் ஊக்குவித்து உற்சாகமூட்ட வேண்டியவர்களாக பெற்றோர் இருக்க வேண்டியது அவசியமாகிறது. பெற்றோரின் பங்களிப்பின் மூலமே பாடசாலைகள் பிள்ளைகளின் கல்விச்செயற்பாட்டை கட்டி எழுப்புகின்றன. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்..." என்பது போல

ஆரம்ப எழுத்தறிவையும், கணித அறிவையும் மேம்படுத்த ஆலோசனை வழங்குவது பெற்றோரே. தமது பிள்கைளுக்கு பாட்டுக்கள், கதைகள், கவிதைகள், விடுகதைகள் போன்றவற்றை புத்தகங் கள் வாயிலாகவோ அல்லது அவர்களின் பிள்ளைப் பருவ ஞாபகச் சுவடிகளில் இருந்தோ பெற்றோரால் கற்பிக்க முடியும். பிள்ளைகள் நன்றாக கல்வி பெறுவதற்கு தனியே பாடசாலையையும் ஆசிரியரையும் நம்பியிருக்காது பெற்றோர்கள் பல வழிகளில் தமது பிள்ளைகளுக்கு உதவ முடியும். பாடசாலை தவிர்ந்த நேரங்களில் நூலகங்களுக்கு சென்று வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதன் மூலம் அவர்களின் மொழியறிவை உயர்த்தலாம். எண் அறிவை வளர்ப்பதற்கு பூக்களை வகைப்படுத்தல், எண்ணுதல், நேரம் கணித்தல், நாட்காட்டி பாவித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் வழிநடத்தமுடியும். இதே போன்று பெற்றோர் வீட்டில் சுகாதார பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுப்பதன் மூலமும், அப் பழக்கங்களை பிள்ளைகள் நாளாந்தம் பின்பற்ற வழிப்படுத்துவதன் மூலமும் விஷேட வைபவங்கள் நிகழ்வுகளை அறிய செய்வதன் மூலமும் பிள்ளை களின் இணைச் செயற்பாடடிற்கு உதவ முடியும். உதாரணமாக பிறந்தநாள். தேசிய விழாக்கள், பாடசாலை விழாக்கள், பிள்ளைகளைப்பற்றி ஆசிரியர்களை சந்தித்து கலந்துரையாடுதல்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர் எப்பொழுதும் கூடிய அக்கறை எடுத்து

செயலாற்றுவது அவசியமாகும். பாடசாலை விட்டு வீட்டிற்கு பிள்ளைகள் வந்தபின் அவர்கள் அன்று பாடசாலையில் கற்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுதல், நலிவடைந்துள்ள பாடங்களை மீட்டல் செய்ய உதவுதல், குறிப்பிட்ட நேரத்திற்கு மேசையில் அமர்த்தி கற்கத் தூண்டுதல், வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்வதற்கு வழிநடத்துதல் என்பவற்றினூடாக பிள்ளைகளின் அன்றாட கற்றல் செயற்பாட்டிற்கு உதவ முடியும்.

"கற்க கசடு அறும்" என்னும் வாக்கிற்கிணங்க பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையான கல்வியை பெறுவதற்கு வழிசமைத்து கொடுப்பதன் மூலம் அவர்களின் பேதமை அகலும். எதிர்காலத்தில் உத்தம புத்திரர்களாக உருவாக்குவதற்கு பெற்றோர் பல்வேறு தியாகங்களை செய்ய நேரிடும். தாயின் மடியிலேயே குழந்தையின் ஆரம்ப அறிவு தொடங்கு கின்றது. பெற்றோர் தமது பேச்சுக்கள், செயல்கள் மூலம் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக விளங்க வேண்டும். கடவுள், பக்தி, அறிவு, நற்பழக்க வழக்கம் என்பவற்றை பயிற்றுவிக்க வேண்டும். சிறுபராயம் முதல் அவர்களின் விருப்புக்கேற்றபடி பெற்றோரும் குழந்தைகளாக மாறியே அவர்களுக்கு நற்புத்திமதி களைப் புகட்ட வேண்டும். பிள்ளைகள் தவறிழைக் கும்போது நன்மந்திரிபோல் இடித்துரைப்பதும் கவலை கொள்ளும்போது ஆறுதல் கூறுவதும் பெற்றோரின் கடமைகளேயாகும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையாகத்தான் பிறக்கின்றது. அது நல்லவராக, சிறந்தவராக வளர்வதற்கு ஊன்று கோலாக விளங்குபவர்கள் பெற்றோரே.

காலத்தின் தேவையும், பூகோளமயமாதலும் பிள்ளைகளை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வைக்கிறது. அந்த சவால்களை சமாளித்து வாழ தேவையான கல்வியை பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வழிசெய்ய வேண்டும். பிள்ளைகள் சான்றோனாக, கல்விமானாக போற்றப்படுகின்ற போது பெற்றார் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர். அவ்வாறான மகிழ்ச்சியை எல்லாப் பெற்றோரும் பெற வேண்டுமானால் தமது பங்கு எவ்வளவு என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் பாடசாலைச் சமூகத்துடன் பெற்றோரும் ஒன்றிணைந்து தமது பங்களிப்பை நிறைவாக வழங்கும் போது தான் பிள்ளைகள் கல்வித் தரத்தில் உயர்ச்சியடைய முடியும். பிள்ளைகளின் உடல், உள தேவைகள், கல்வித் தேவை என்பவற்றில் மிகுந்த அக்கறையுடன் ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து செயற்படு வராயின். நல்லதொரு பண்பான, ஆன்மீகம் நிறைந்த, ஒழுக்கமுள்ள கல்வியறிவுடைய எதிர்கால தலைவர் களை உருவாக்க முடியும். என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வாழ நினைப்பவர்க்கு
வாழ்ந்தவர்களே சாட்சி

# ஆசான்கள்

திருமதி விஜிதா பத்மநாதன் B.A
ஆசிரியர்

மனித செயற்பாடுகளில் முதன்மையானது கற்றலாகும். சுய முன்னேற்றம், திறன்கள், புத்தாக்கங்கள் என்பவற்றின் துணையுடன் ஒருவரை பக்குவப்படுத்துவதே கல்வியாகும். ஆற்றல் மிகுந்த இன்றைய உலகில் தகவல்,அறிவு,ஆற்றல், மனப்பாங்குகள்,நம்பிக்கைகள்,விழுமியங்கள் போன்றவற்றை அடையும் வழிகளை கல்வி வழங்க வேண்டியுள்ளது. அதனால் கற்பிப்போனாகிய ஆசிரியன் அந்தப் பொறுப்புக்களை ஏற்று செயற்படுகின்றான்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் கட்டல்
என்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

புரட்சிக் கவியாம் பாரதியின் போற்றுதல் களுக்குள் திளைத்துக் கொள்ளும், எழுத்தறிவிக்கும் ஆசிரியர்களின்சிறப்பை சுவாமி விபுலானந்தரும் "மனிதனையே போற்றுவதற்குரிய பக்குவத்தை வழங்க வல்லதாக நம் கல்வி இயக்கம் அமைய வேண்டும்" என்ற கூற்றின் மூலம் கல்வியின் மூல கர்த்தாக்களான ஆசிரியரின் சிறப்பை மேலும் விரித்துக் காட்டுவதை அறிகிறோம்.

கல்வி என்பது எந்தவொரு உயிரினதும் ஆழ் மனதில் உறைந்து கிடக்கும் எண்ணங்களை வெளிக் கொணர்வதாகும். அவ்வாறு வெளியிடப்படும் எண்ணங்கள் சமூகமயமாக்கப்படத்தக்கதும் நேர் மனப்பாங்குடையதுமாக அமையச் செய்வதே ஆசிரியரின் பங்காகிறது. இத்தகைய சமூகச் சிந்தனையாளனான ஆசிரியர் சமூகத்தால் மதிக்கப்பட வேண்டியவராகவும் ஆகின்றார்.

மனித குலத்தின் அறிவுச்சிருஷ்டி கர்த்தாவான ஆசிரியர் வையகத்தில் பிறந்திட்ட மாந்தர்கள் பாழ்பட்டு, நெறிபிறழ்ந்து போகாது பண்புடன் வாழ்டந்திடச் செய்திடும் பாதுகாவலன். தான் தேய்ந்து மணந்தரும் சந்தனக்கட்டை, அறியாமை போக்கிடும் அகல்விளக்கு, பூமிப் பந்தின் பொறியியலாளர்கள் என்றெல்லாம் போற்றப் படுகின்றார்கள்.

உலகம் போற்றுகின்ற இந்த ஆசிரியர்களின் சமூகப் பொறுப்புக்களோ விசாலமானவை. வைய கத்தார் இவர்களிடமிருந்து எதிர்பார்ப்வையும் ஏராளம். அலுவலகங்களில் பணிபுரியும் அநேகர் வெறும் கோவைகளோடு உறவாடுபவர்களாகி ன்றனர். தமது கடமையை நாளைக்கு என பிற்போடவும் சிலவற்றை முன் கூட்டியே செய்து முடிக்கவும் அவகாசம் கிடைக்கலாம். ஆனால்

ஆசிரியருக்கோ உரிய வேளையில் உரிய கடமையை செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாய நிலையே உள்ளது.

ஆசிரியரின் பணியானது அதிகாரம், பொறுப்புக்கள், கடமைகள், நடத்தைகள் ஆகிய நான்கு விடயங்களோடு இணைந்ததாக உள்ளது. ஆசிரியரின் தனது பணியை செவ்வனே செய்து முடிக்க மேற்காட்டிய நான்கு விடயங்களும் இன்றியமையாதன வாகும். பாடசாலைக்கு வரும் பிள்ளையின் "பூர்வீகம்" முழுவதையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். பசியோடும் மன உளைச்சலோடும், வேதனை களோடும் வரும் பிள்ளைகளை வெறுமனே புத்தகப் பூச்சிகளாக மட்டும் கருதி செயற்பட முடியாது. வறுமை காரணமாக பட்டினியோடு வரும் பிள்ளைகளை ஆதரித்து பசி போக்கி கல்வி புகட்ட வேண்டும். அன்பும் இரக்கமும் காட்டி மன ஆற்றுகையளித்தல் அவசியம். அத்தோடு சமூகத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கான உதவிகளை சமூக பொது அமைப்புக்கள் மூலம் பெற்றுக் கொடுக்க ஆவன செய்தல், கல்வி, சமூக முன்னேற்றம், நன்னடத்தை தொடர்பான எண்ணக்க ருத்துக்களை ஊட்டுதல் யாவும் ஆசிரியனின் பொறுப்புக்களாகவே விளங்குகின்றன.

இதனாலேயே இன்று பாடசாலைகளினூடாக பின்வரும் பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

- உணவு வழங்கல்
- சீருடை வழங்கல்
- கற்றல் உபகரணங்கள் வழங்கல்
- புலமைப் பரிசில்கள் வழங்கல்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கல்
- அடையாள அட்டை வழங்கல்
- மாணவர் சேமிப்புத் திட்டங்கள்
- சாரணிய சேவைகள்

என பல்வேறு செயற்கூறுகள் ஆசிரியரின் தன்னலமற்ற சேவையின் உச்சங்களாக இச் செயற்பாடுகள் பிறதுறை சார்ந்தோரினதாக இருந்த போதும் வினைத்திறனும் விரைவும் கருதியே இவை ஆசிரியனின் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன என்பதை ஆசிரியர்களும் உணர்ந்து செயலாற்றி வருகின்றனர். செயலாற்றவும் வேண்டும்.

அடுத்து சமூகத்தவரின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு உதவிகளும் வேண்டிய ஆலோசனை களும் வழங்கி அவர்களின் இடர்போக்கவும் ஆசிரியர்கள் முன் நிற்பர். சமூகத்தவரும் இவர்களை நாடி வருவர்.நாடி வருவோர்க்கும், நலிவுறுவோரை நாடிச்சென்றும் உதவுதல் ஆசிரியரின் கடமை என்பதை உணர்ந்து ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டியவராவார். அதேபோல் பல்வேறு இடர் களுக்கும் இன்ப துன்பங் களுக்கும் இடையே நலிந்து போகாமல் வருமானத்தை மட்டுமே நோக்காக கொண்டு அலையாமல் துணிந்து நின்ற ஆசிரியப் பணியை மேற்கொள்பவர்களை மாணவர்களும் பெற்றோரும், சமூகத்தவரும் நன்றிப் பெருக்குடன் நோக்குவதும் அவர்களின் தடங்கலற்ற சேவைக்கு உரமேற்றி உற்சாகப்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகிறது. இதன் மூலமே எதிர்காலம் மகிழ்ச்சிகரமான வாழ்வின் காலமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# ஆரம்பக் கல்வியை வழங்குவதில் ஆசிரியரின் பணி

த. சுகந்தினி
(ஆசிரியர்)

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு கல்வி அவசியமாகின்றது. "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமாப் புடைத்து:" என்கின்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க ஒருவர் இறந்த பிற்பாடும் அவருக்கு ஏழேழு பிறப்புக்களிலும் கல்வி வந்து உதவுகின்றது. இவ்வாறு சிறப்புப் பெறும் கல்வியை ஆரம்பத்திலேயே மிகத் துல்லியமாக பெறுதல் அவசியம் ஆகும். மனிதனை முழுமையான எழுத்தறிவு உடையவனாவும் வாசிப்புத் திறன் உடையவனாகவும் ஆக்குவதில் வல்லமையுடைய வர்கள் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களே.

ஆரம்பக் கல்வியினை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதில் முழுமையான பங்கினை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே வகிக்கின்றனர். இந்தக் கல்வியின் மூலமே சமுதாய மாற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக திகழ்பவர்கள் ஆசிரியர்களே ஆவார்.

ஆரம்பக் கல்வி என்பது அடிப்படைக் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வது. அதாவது தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையாக அடிப்படைக் கல்வியை படிமுறை வளர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளும் பிரிவினரே அவார். இதனூடாக மாணவர் அறிவு, திறன், மனப்பாங்கு என்பன சிறந்த முறையில் கட்டியெழுப்பப்பட வேண்டியது. ஆசிரியரின் தலையான பணி ஆகும். இந்தக் கல்வியின் மூலம் மாணவர்களது வளர்ச்சியினை இவர்களது நடத்தை மாற்றத்தினை கட்டி எழுப்ப முடியும்.

ஆரம்பக் கல்வியின் மூலம் இதனைச் சிறந்த முறையில்மேற்கொள்வதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியரே ஆளுமைத்திறன்கள் உடையவராகவும் எதனையும் துணிந்துசெய்யும் ஆற்றல் படைத்தவரா கவும் மிகவும் புத்தி சாதுரியமான தலைமைத்துவப் பண்பு மிக்கவராகவும் மாணவர் நலன்கள் நடத்தை மாற்றத்தினை அவதானித்துத்தீர்வு காணும் சக்தியாக மிளிர வேண்டும். ஆளுமை என்பது உடல், உளத்திறன் ,உடைநடை, பாவனை, நேர்மை, நடுவு நிலைமை தன்னம்பிக்கை, சமுதாய நம்பிக்கை ஒத்துழைப்பு நகைச்சுவையுணர்ச்சி, அன்பு, பரிவு, கொள்கையுறுதிப்பாடு கொண்ட ஆசிரியரே ஒவ்வொரு மாணவரையும் நுணுகி ஆராய்ந்து அப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

மாணவர்கள் சிறந்த முறையில் வழி நடாத்திச் செல்வதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது பணிகளை செவ்வனே தொடர இவ் ஆளுமைப்பண்பு

அவசியமாகின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே மாணவரின் உள நிலைமைகளை நன்கு அறிந்தவர் களாகவும் கற்றல் தேர்ச்சி உடையவர்களாவும் கட்டுப்பாடு உடையவராகவும், தேசிய உணர்வு உடையவராகவும் திகழ வேண்டும். மேலும், நேர்மை, இரக்கம், முகமலர்ச்சி, அடக்கமுடமை கீழ்ப்படிவு மனஉறுதி, மனஎழுச்சி, முதிர்ச்சி, தொழிற்பாடு போன்றன பண்புகளாக அமைகின்றன.

எனவே பொருத்தமான கற்றல் நடைபெற வேண்டுமானால் பொருத்தமான கற்பித்தல் சாதனங்களைப்பயன்படுத்தி செயற்பாடுகளை முன் னெடுப்பதனூடாக மாணவரின் உச்சப் பயன்பாட்டைப் பெற முடியும். அந்த வகையில் முன்மாதிரியாக நடத்தல், பாடசாலை அமைவிடச் சூழலை விளங்கிக் கொள்ளல், தொழிற்திறனை வளர்த்தல், உளவியல் தத்துவங்கள் விளங்கிக் கொள்ளல் கல்வி மூல வளங்களை ஒன்று சேர்த்து அறிவைப்பரப்புதல் சிந்தனையைத் தூண்டுதல், நுட்பச் செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபட வைத்தல், நடுவு நிலமை தவறாது நடந்து கொள்ளல் சமுதாயப்பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் பேணல் பாதுகாத்தல் போன்ற பண்பு களைக் கொண்டு சிறந்த நல்லொழுக்கம் மிக்க இளஞ்சிறார்களை உருவாக்கும் சிற்பிகளாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் போற்றப்படுகின்றார்கள்.

எனவே சமுதாயத்தின் மையக்கல்லாக அடி அத்திவாரமாக தமது பணியை பூரணமாக நிறைவேற்றும் ஒரு ஒளிச் சுடராக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் திகழ்கின்றார்கள் என்றால் அது மிகை ஆகாது.

# வாழ்வில் சைவம்

திருமதி சுபாஜினி புவனேந்திரன்
(ஆசிரியர்)

சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறியாகும் மனிதனை நேரான பாதையில் வாழ வழி காட்டுவது சமயமாகும். சமயம் என்பதற்கு பாதை, நெறி, மார்க்கம், வழி என்றெல்லாம் பல பெயர்கள் கொள்ளப்படுகின்றன.

மக்கள் வாழ்க்கை வளர்ச்சியடைந்து மிக உயர்ந்த நிலை அடைந்தபோது அவர்களுக்கு இறை உணர்வு தோன்றியது. மக்கள் தமக்கு மேலாக ஒருசக்தி உள்ளது என்றும் இப்பிரபஞ்சத்தில் நடைபெறுகின்ற அனைத்தையும் அச்சக்தியே இயக்குகின்றது என்றும் உணர்ந்தார்கள் .தம் அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ப அவனைக் கடவுள், இறைவன், பரம்பொருள் என்றெல்லாம் அழைத்தார்கள்.

வாழ்வில் சமயம் என்னும் போது சிவத்தை சார்ந்து நின்று தெய்வீக பண்புகளை வாழ்க்கையோடு இணைத்து வாழ்தலாகும். சமயம் சார்ந்த பண்புகள் எனும்போது உண்மை, அன்பு நீதி, தர்மம், சாந்தம், அழகு, நன்மை, இன்ன செய்யாமை முதலிய வற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். மனிதன் மனிதப் பிறவியை எடுத்ததன் மூலம் மனிதனாகி விட முடியாது. சிவம் சார்ந்த பண்புகளைக் கடைப்பிடிப்பதனால் மனிதன் ஆகின்றான்.

கல்வி கற்பதன் நோக்கம் கற்றபடி ஒழுகுதலாகும். ஒவ்வொருவரும் அறநெறியில் நின்று தத்தமது கடமைகளை நிறை வேற்றுவதன் மூலம் ஆன்ம விடுதலை பெற முடியும் என சைவத்திரு நூல்கள் எமக்கு எடுத்தியம்புகின்றன. ஒருவனுடைய உள்ளம் தூய்மை அடையும் போதுதான் வாழ்வு சிறப்படைய முடியும். நாம் எப்படியும். வாழலாம். என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கிணங்க வாழ்ந்து காட்ட வேண்டும். அப்போது தான் நாம் இறைவனின் பாதார விந்தங்களை அடையமுடியும். எமக்கு நூலறிவு இருந்தால் மட்டும் போதாது சமயங்கள் காட்டும் நெறியில் நின்று வாழப் பழக வேண்டும்.

ஒரு மனிதன் பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமையுணர்வு என்பவற்றை மனத்தில் இருந்து அகற்றி விடுவதன் மூலம் மனம் தூய்மை பெறுகின்றான். தூய்மையான மனத்தில் தோன்றும் எண்ணங்கள், சிந்தனைகள் நல்லுணர்வுகளாகவே அமையும் அவை எல்லோரையும் வாழ்விக்கும்

தன்மை கொண்டவை. பண்பாகவும், பணிவாகவும் இனிய சொற்களைப் பேசுவதன் மூலம் கேட்போர் மன மகிழ்ச்சி அடைவர். இவற்றின் மூலம் ஒருவன் தானும் தூய்மையாகி மற்றவர்களையும் தூய்மையடைய வழிகாட்டுகின்றான். எந்தவொரு நிலையிலும் தீய எண்ணங்கள் புகுந்து கொள்ளாமல் நல்லதையே நினைத்து நன்றே புரிய வேண்டும்.

மனிதன் மனிதனாக வாழ சமயம் சார்ந்த பண்புகள் அவனை நெறிப்படுத்துகின்றன. சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விழாக்கள், பண்டிகைகள், சம்பிரதாய பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் போன்ற சாதனங்கள் உதவுகின்றன. சைவம் வகுத்த நெறியில் ஒருவன் செல்வதன் மூலம் நல்லொழுக்கம், பண்பாடு உடையவனாக திகழ்கின்றான்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல, சமயமே வாழ்க்கை வாழ்க்கையே சமயம் என்பது சைவத்தின் நிலைப்பாடு. மனிதன் சமூகமாக வாழ வேண்டியவன். பிறரில் தங்கியும் பிறரைத் தாங்கியும் வாழ்பவர்களாக மனிதர்கள் உள்ளார்கள். சமூகத்தவருடன் இசைந்தும் இணங்கியும் முரண்படாமலும், நல்லறவு பேணியும் வாழ்தல் அவசியமாகின்றது. பண்பாடு உருவாவதற்கு முக்கிய காரணியாக அமைவது மனம் ஆகும். அந்த மனத்தை பண்படுத்துவதற்கும் பக்குவப்படுத்து வதற்கும் உறுதுணையாக இருப்பது சமயம் ஒன்றே யாகும்.

சைவ சமயத்தின் கண்ணாகப் போற்றப்படும் பெரிய புராணமானது சைவ சமயத்தை பேணி வளர்த்த அருட் கொடையாளர்களின் வரலாற்றைக் கூறும் ஓர் ஒப்பற்ற நூலாகும். இந்நூலிலே பல்வேறு நற்பண்புகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. தொண்டுள்ளங் கொண்டு தொண்டு செய்த அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாற்றை மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார் சேக்கிழார் சுவாமிகள். சைவ திருநூல்களைக் கற்பதன் மூலம் எமது சமய வரலாறு மேம்படுத்தப்படுகின்றது.

பரம்பொருளாகிய இறைவனின் நினைப்பு எம்மிடம் நீங்காது எந்நேரமும் அவனுடைய திருத்தாள்களை எண்ணி செய்வதை திருந்தச் செய்து நல்லொழுக்கமுள்ள, பாண்பாடுகளுள்ள, நல்லறிவுள்ளவர்களாக வாழ்ந்து எமது சமயப் பாரம்பரியம் என்றும் நிலைக்க வழிகோலுவோமாக.

# எங்கள் அதிபர்


திருமதி விலிநிசானி ஹொல்பேட்
B.A. Dip in Ed.
(ஆசிரியர்)


சமாதான நீதவான் சங்கரப்பிள்ளை அவர்களின்
சாதிக்கப் பிறந்த தலைமகன்
சத்தியம் தவறாத சத்தியவரதன் – இன்று
சைவப்பிரகாசாவின் முதல்வர் அவர்

நெடுந்தீவின் தவப் புதல்வன்
நெஞ்சில் அன்பும் கண்களில் நேர்மையும்
நிமிர்ந்த நடையும் – ஒருகணம்
நிமிர்ந்து நோக்க எமக்கும்
நெஞ்சம் நடுங்கும்

கல்வி போதிக்க கால் பதித்த நாள்முதல்
கண் துஞ்சா நெஞ்சினன்
கருமமே கண்ணெனக் கொண்டு
காரியம் சாதிக்கும் காவியத் தலைவர்

அரசியல் கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான்
ஆசிரியராய் எமக்கு அறிமுகமாகி – இன்று
அதிபராய் எமக்கு அறிவுத் தெய்வமாய்
ஆபத்தில் உதவிடும் அன்புத் தோழனாய்
அறிவுரை கூறி வழிகாட்டும் நல்ல அதிபர் அவர்

வித்தியாலயந் தன்தை இரண்டாயிரத் தொன்றில்
பொறுப்பேற்று
விவேகமும் வேகமும் ஒன்றுசேர– தீவக
வலயமே வியந்து போற்றிட
வித்திட்ட வீரமகன் அவர்

ஆலயம் அருகமைந்து
அழகுச் சோலையாய் தலைநிமிர்ந்து
அறிவூட்டிடும் கட்டிடங்களும்
அழகாய் அமைத்த முதல்வர் அவர்

நிர்வாகம் செய்வதில் நிகராக எவருமில்லை
நேர முகாமைத்துவம் அவரது உயிர்மூச்சு
நிறைந்த ஒழுக்க விதிகளுடன்
நிறைவான மாணவரை உருவாக்கும்
நேசமிகு தலைவர் அவர்

பள்ளிக்குள் கால் வைத்தால் – அவருக்கு
பசி தாகம் என்று எதுவும் நினைவிலில்லை
பாடசாலை வேலைகளில் மூழ்கி
பகல் பொழுது போய்விடும் – அதிபருக்கு

அறிவு நிறைந்த பேச்சு
அழகான புன்னகை
அனைவரும் விரும்பும் நல்மனம்
அதிபரின் தோள்களுக்கு – என்றும்
மலர் மாலைகளே அதிகம் பொருத்தம்

பொய்யில்லை புரட்டில்லை – வெறும்
புகழ்ச்சி இல்லை பண்புக்கும்
பணிவான நடத்தைக்கும்
பார்ப்போர் வியந்துவக்கும் எம் அதிபர்
பார் போற்ற என்றும் வாழ்க!

# ஆசிரியப் பணி

திருமதி V. சிறிதரன்
(ஆசிரியர்)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் எனக் கூறும் போது இறைவனுக்கு நிகராக அக்காலத்தில் ஆசிரியர்கள் போற்றப்பட்டார்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் வைத்துப் போற்றப் படுபவர்களில் ஆசிரியரும் ஒருவரே இது மரபு ரீதியாக தரப்படுகின்ற முக்கியத்துவம் ஆகும்.

இந்த வகையில் ஆசிரியப் பணியின் சிறப்பு உணரப்படுகின்றது. இதிலிருந்து எமக்கு பல்வேறு வினாக்கள் தோன்றுகின்றது.

- ஆசிரியர் என்போர் எத்தகையவர்?
- ஆசிரியர் பங்களிப்பு எத்தகையது?
- மாணவருக்கும் ஆசிரியருக்குமான உறவு எத்தகையது?
- நாம் ஆசிரியர்களை ஏன் போற்ற வேண்டும்

போன்ற இன்னோரன்ன வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

ஆசிரியர் என்போர் அஞ்ஞான இருள் அகற்றி ஞான ஒளி பரப்பும் சூரியன்களாக நாம் ஆசிரியர்களை இனங்காண முடியும். இந்துக் கலாசாரத்தினூடாக நாம் ஆசிரியர்களை பார்க்கும் போது குருகுலக் கல்வி முறையாக கல்வி போதிக்கப்பட்டதையும் மாணவனுக்கு கல்வியை ஆரம்பிக்கும் பராயம் வந்தவுடன் அவன் குருகுலம் சென்று அவருடன் வாழ்ந்து அவர் சொற்கேட்டு, அவருக்கு பணி விடைகள் ஆற்றினான். குருகுலத்தை விட்டு அம்மாணவன் வெளியேறும் போது ஒரு வீட்டிற்கு, சமூகத்திற்கு, நாட்டிற்கு பொருத்தப்பாடுடையவனாக தரம் உயர்த்தப்பட்டு வெளியேறினான்.

அந்நிலமை மாறி தற்காலத்தில் கல்விச் சாலைகள் அமைத்து பெற்றோர் தமது பிள்ளைகள் கல்வி பெற வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகின்றனர். இந்த இரு நிலமைகளும் ஒன்றாகவே காணப்படுகின்றது. அன்றைய மாணவர்கள் குருவை மதித்தார்கள் குரு சொற் கேட்டார்கள் சமுதாயத்தில் குரு காட்டிய பாதையில் வாழ்ந்தார்கள் அப்போ சிரமம் என்ற சொல் எங்காவது ஆசிரியர் மாணவர் என்ற நேர் கோட்டில் காணப்படவில்லை.

இன்றைய சமுதாயத்தில் ஆசிரியப் பணியை நோக்குமிடத்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மாணவர்கள் காணப்படுகின்றனர். அச் சிரமங் களோடு கிரமமாக ஆசிரியர்கள் தமது சேவையை ஆற்றுகின்றனர். நல்ல ஒரு பிரசையை உருவாக்கி இந்த சமூகத்தில் விடுவதற்கு மிகுந்த பிரயத்தனம் தேவையாக உள்ளது.

ஆசிரியர்களிடம் இருந்து நல்ல சேவையைப் பெற சமுதாயம் ஒத்துழைக்க வேண்டும். அதாவது ஒரு கைதட்டினால் ஓசை உண்டாகாது. அதுபோல

சிறந்த கல்வியாளர் திறந்த மனதுடன் சேவையாற்ற சிறந்த உளம் படைத்தோர் அவசியம். இவர்களை நாம் பெற்றோர்களென்று பெயரிடலாமா? சிறந்த ஆசிரியப் பணியில் நிறைவு காண பெற்றோர் மாணவர் பங்களிப்பும் அவசியமாகின்றது.


ஆசிரியப் பணி பற்றிக் குறிப்பிடும் போது புராணங்கள், இதிகாசங்களில் குறிப்பிட்ட குரு குல வம்சத்தினரை நாம் தினமும் போற்றி வாழ்ந்தாலும் எம்கண்கண்ட தெய்வங்கள் போன்று எம்மையெல்லாம் வழிப்படுத்தி நெறிப்படுத்திய ஆசிரிய குழாத்தினரை நான் நினைவு கூருகின்றேன். “அரியாசனத்தில் அரசரோடென்னை சரியாசனம் வைத்த” தெய்வங்களையெல்லாம் நாம் எண்ண வேண்டும். வாழ வைத்த தெய்வங்களை வணங்க வேண்டும். அந்த வகையில் எனது ஆரம்பக்கல்வியை யா/ மகேஸ்வரி வித்தியாலயத்தில் மேற் கொண்டேன் எனக்கு அரிச்சுவடி காட்டி அரவணைத்து கல்வி புகட்டிய திருமதி சிந்தாமணி குணசிங்கம் ஆசிரியை அவர்களையும் அவரோடு இணைந்து எனக்கு கல்வி புகட்டிய ஆசான்களையும் என்மனத்தில் ஏற்றி வணங்குகின்றேன். இடைநிலைக்கல்வியை வழங்கிய யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தினையும் அன்று கல்வி வழங்கிய ஆசான்களாகிய அமரராகிய திரு. சு. குமாரவேலு, திரு.க. கயிலாயபிள்ளை, திரு.சு. நடராஜலிங்கம், திரு.க. அரசரத்தினம், அமரர் திருமதி வே. புஸ்பராணி, செல்வி கனகமணி தம்பிப்பிள்ளை, திருமதி யோ. நரேந்திரன், திருமதி அமரர் க. கமலம், திருமதி பி. இதயமலர் போன்றவர்களை எனது உள்ளத்தில் நிலை நிறுத்திப் பார்க்கின்றேன்.

அடுத்து எங்கள் பாடசாலை அதிபர் அவர்கள் மதிப்புக்குரிய திருவாளர் ச.சத்தியவரதன். அதிபர் அவர்களை தனி ஒருவராக நின்று உயர் வகுப்புக்குரிய அனைத்துப்பாடங்களையும் போதித்து என்னையும் சமுதாயத்தில் நன்நிலைக்கு உயர்த்திய பெருமை எங்கள் பாடசாலை அதிபர் அவர்களையே சாரும். அவர்கள் நிர்வாகத்துடன் இணைந்து சேவை யாற்ற உதவி புரிந்த இறைவனையும் எண்ணிப் பார்க்கின்றேன்.

எனது கல்விப்பணியினை நன்றாக அமைக்க நல்வழிப்படுத்திய ஆசான்களை நினைவு கூர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். என்னைப் போல பல மாணவர்களை உயர்வடையச் செய்த ஆசான்களும் அவர்களும் சேவைகளும் பெருமைக்குரியனவே.

ஆசிரியப் பணியாளர்கள் கடமையுணர்வு கனிவு, பொறுமை, தெளிவு, இனிமையுடையோராகக் காணப்பட வேண்டும். தம்பணி சிறக்கவும் தொழில் மகத்துவத்தினையும் ஆசிரிய சமூகம் உணர வேண்டும். ஒரு சமூகத்தின் உயர்நிலையானது மாணவர் உயர்நிலையைப் பொறுத்தே அமையும். எனவே மாணவர் நலனை எந்நேரமும் ஆசிரியர் தமது கண்போல எண்ணிச் செயற்பட வேண்டும். மாணவர் நலனை அவனது உயர்வை எந்த ஒரு ஆசிரியரும் நேசிக்கின்றாரோ அவரை மாணவ சமுதாயம் தான் நினைக்கா விட்டாலும் கௌரவிக்கா விட்டாலும் அந்த ஆசிரியருக்கான அவருடைய சிறப்பான பணிக்கான நல்ல விருதுகள் இறைவனால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். எனவே ஆசிரியர் களுக்கு மன நோவுகளை ஏற்படுத்தும் மாணவர் களால் ஒரு போதும் ஆசிரியப் பணியினை தனது சேவை நோக்கத்தை ஆசிரிய சமூகம் ஒரு போதும் பின்னிற்காது பணியினை தொடர வேண்டும். எமது பணியினை நாம் எல்லோரும் இணைந்து வலுமிக்க ஆற்றல் மிக்க யாராலும் மாற்ற முடியாத வலுமிக்கதாக எமது பணி சிறப்படைய வேண்டும் ஆசிரியப் பணியானது சிறப்படைய நாம் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்.

விளையாட்டு மைதான திறப்பு விழாவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு. க. அரசரத்தினம் மங்கள விளக்கேற்றுதல்




வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள்
வகுப்பறைத் தொகுதியை திறந்து வைத்தல்



வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள்
விளையாட்டு விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தல்



வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சோ. தில்லைநாதன்
அவர்கள் சரஸ்வதி சிலையைத் திறந்து வைத்தல்



வடக்கு கிழக்கு
மாகாணக் கல்விச் செயலாளர்
ஆர். தியாகலிங்கம் அவர்கள்
விளையாட்டு விழாவில்
பிரதம விருந்தினர் உரையாற்றுதல்



வலயக் கல்விப் பணிப்பாளர்
அமரர் வேனுகோபால
வாணிதாசன் கல்விக்
கண்காட்சியை திறந்து வைத்தல்



கல்விச் செயலாளர் வலய பணிப்பாளர்கள்
விழாவிற்கு அழைத்துவரத் தயாரான போது



வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. G.V. இராதாகிருஸ்ணன் அவர்கள்
முறைசாராப் பிரிவு கண்காட்சியை திறந்து வைத்தல்



# கலை பற்றிய ஒரு கண்ணோட்டம்

இ.ஜெனிதா B.A.(Hons)
(ஆசிரியர்)

இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்கலைகள் மிக முக்கியம் பெற்று விளங்குகின்றன. இந்து சமயம், இந்துக் கலைகள், இந்துத் தத்துவம் ஆகிய மூன்றும் தனித்தனியாக பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து காணப்படுவது இந்து நாகரிகத்தின் சிறப்பான அம்சம். கலைகள் வெறும் புவியியல் சார்ந்ததாக அமையாது ஆத்மீக உள்ளனுபவங் களையும் வெளிப்படுத்துவதாகவே காணப்படுகிறது. கலை கலைக்காக மட்டுமன்றி அதற்கு ஒரு நோக்கமும் பயனும் உண்டு என்பது இந்துக் கலைகளின் தனித்துவமான சிறப்பு. உள்ளத்தில் அலைமோதும் கருத்துக்கள் செவிகேட்க, கண்காண, கலைகள் மிளிர்கின்றன. இந்திய மக்கள் மிகத் தொன்மையான காலம் தொட்டே கட்டடம், சிற்பம், ஓவியம், நடனம் இசை ஆகிய நுண்கலைகளைப் போற்றி வளர்த்து வருகின்றனர். இக்கலைப் படைப்புக்கள் உலகையே வியக்க வைக்கும் அளவிற்கு கலைத்துவம் மிக்க அற்புதப் படைப்புக் களாக விளங்குகின்றன.

கலை என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல் எனினும் "கலை" என்ற சமஸ்கிருத சொல் 'Art" என்ற ஆங்கிலப்பதம் "கொலே" என்ற பிரான்சிய மொழிப்பதம் கல்வி என்ற தமிழ்ச் சொல் இவை யாவற்றுக்கும் மூலம் ஒன்றே என்பர் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியாரிய சுவாமிகள். இங்கே கலை என்றால் சதா வளர்ந்து கொண் டிருப்பது என்பது பொருள். பிறையானது நாள் தோறும் வளர்ந்துகொண்டிருப்பதுபோலவே கலையும் மாந்தர்க்கு மன வளர்ச்சியைத் தந்து முடிவேயில்லாமல் வளர்ந்து வருவது. கலையை இன்னது தான் என வரையறை கூறி விளக்க இயலாது. ஆனால் கலை பற்றி சிந்தித்துள்ள அறிஞர் பலரும் பல்வேறு கோணங்களில் உணர்ந்து விளக்கம் தர முனைந்துள்ளனர். அவர்களின் கருத்துக்களை இயன்றளவு மனதிற்கொண்டு புரிந்து கொள்வதே ஏற்புடையதாகும்.

ரவீந்திரநாத் தாகூர் எனும் அறிஞர் "கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம் இன்பம் அதன் பயன். கலையானது தன்னலமும், பழி வாங்கலும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்லவல்லது" என்கிறார். வெளித் தோற்றத்தை மட்டும் காட்டுவது கலையின் நோக்க மன்று. அகத் தோற்றத்தையும் அது காட்டுதல் வேண்டும். அது தான் உண்மையான கலை. ஒரு

கலை உண்மையாக உயர்ந்ததாக இருந்தால் அது உணர்ச்சிகளுக்கும் புலன்களுக்கும் இன்பம் அளிப்ப தோடு அறிவுக்கும் விருந்தாக இருக்க வேண்டும் என்பர் சிந்தனையாளர் அரிஸ்ரோட்டல்.

Dr. ஆனந்தக் குமாரசுவாமி "அனுபவம் கலையனுபவம் ஆகிய இரண்டும் ஒரே அனுபத்திற்கு கொடுக்கப்பட்ட இரட்டைப் பெயர்" என்பர். அலங்கார இராகவன் "கலையின் செயற்பட்டால் ஏற்படும் கவர்ச்சியினால் ரசிகனின் உள்ளம் நன்கு மகிழ்ச்சி யடையாவிடின் உண்மையான கலையழகு ஏற் படாது" என்கிறார். "டால்ஸ்டாய்" என்ற அறிஞர் "கலை" என்பது உணர்வின் வெளிப்பா்டு அது உணர்வை வெளிப்படுத்துவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வை ஊட்டும் பெருமையுடையது என்கிறார். கலை என்பது யாது என்பதனை இராதாமல் முகர்ஜி என்பவர் கூறுமிடத்து "மனித உறவுகளையும், வாழ்க்கை குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காகச் சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலை என்கிறார். இவ்வாறு அறிஞர்கள் கூறிய கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு கலை என்பதற்கு பின்வருமாறு பொது விளக்கம் கொடுக்கலாம். கூடுதல், குறைதல் இன்றி எப்பொருளும் அளவுப் பொருத்தத்துடன் அமைந் திருப்பின் அவ் அமைப்பு கண்ணையும் கருத்தையும் கவரும் இயல்புடையதாகத் தோன்றும். எனவே கலை என்பது அளவுப் பொருத்தம் தன்னுள் அடங்கி நிற்பதாகும்.

இந்துக் கலைகளின் சிறப்பாகக் கருதப்படும் ஒரு தன்மை "அனோமதேயம்" என்பதாகும். இந்துக் கலைப்படைப்பை வரைந்தவர் யார் என்று குறிப்பிட முடியாது. கால வரையறை அற்றது. இது இந்துக்கலையின் பாரம்பரியத்தை எடுத்து விளக்குகிறது. அடுத்து இந்துக் கலைகள் மறைபொருள் தன்மை உடையது. இந்துக்கலைகள் குறியீட்டுத்தன்மை வாய்ந்தவை. இங்கு கலைகளின் இறுதியுணர்வு குறியீட்டினூடாக உணர்த்தப் படுகின்றது. இக்குறியீட்டை நாம் ஆலயங்களில் காணும் விக்கிரகங்களில் காணமுடிகின்றது. கலைகள் கலைக்காக மட்டும் வளர்க்கப்படவில்லை. மக்கள் மத்தியில் தெய்வ பக்தியும், மன அமைதியும், ஒழுக்கத்தையும், உயர்ந்த இலட்சியங்களையும் ஏற்படுத்துவதற்காகவே வளர்க்கப்பட்டது என்பது பொருத்தமானதாகும்.

ஆலயம் என்பது ஆண்டவன் அருள் சுரக்கும் நிலையமாக மட்டுமன்றி நுண்கலைகளின் உறைடவிடமாகவும் கலை வளர்க்கும் சுரங்க மாகவும் இருந்து வந்துள்ளது. கட்டடக்கலையில் கலை தேர்ந்த "ஸ்தபதி" என்ற உயர்கலைஞன் வரை ஆலய அரவணைப்பிலேயே வளர்ந்து வந்துள்ளான். வழிபாட்டிற்குரியது. இறைவன் திருவுருவம். இதையமைக்கும் கலை விக்கிரகக்கலை. இக் கலையை நன்கு அமைப்பவர் சிற்பிகள். இவர்கள் உருவாக்கும் திருவுருவங்களை நிறுவ ஆலயம் இன்றியமையாததாகும். இதனால் எழுந்ததுதான் கட்டடக் கலை என்பர் "பேர்ஸி பிறௌன்" இக்கலை அழகிய கோயில்கள், விமானம், கோபுரம், தூண்கள், மண்டபங்கள், மதில்கள் என்பன எழக்காரண மாகின. தெய்வத் திருவுருவங்களை ஊர்வலமாக எடுத்து வருவதெற்கென அழகிய வாகனங்கள் உருவாகின. இவற்றுடன் இணைந்து ஓவியக்கலை வளர்ச்சியுள்ளது. உட்புறச் சுவர்களிலும், தூண்களிலும், கூரைகளிலும், எழில்மிகு ஓவியங்கள்

தீட்டப்பட்டது. இறைவழிபாட்டில் அவனைப் புகழ்ந்து பாடுதல் பரவசமிட்டு ஆனந்தக் கூத்திடல் என்பன சிறப்பாக இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகளாகும். பக்தி அனுபவ வெளிப்பாட்டிற்கு இவை மிகவும் இன்றியமையாதன. இவற்றுடன் இணைந்து வளர்ந்த கலைகளே இசை, நடனக்கலை ஆகுமென பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் கூறுகின்றார்.

புராதன இந்துப் பண்பாட்டு மரபிலே கலைகள் அறுபத்து நான்கு (64) என கூறப்பட்டுள்ளன. ஆய கலைகள் அறுபத்துநான்கு(64) என கம்பரும் குறிப்பிட்டுள்ளார். இவ் 64 கலையில் பலவற்றை இன்றைய அறிஞர்கள் கலைகள் எனக் கொள் வதற்கு தயங்குவர். ஏனெனில் அவை பெரும்பாலும் ஒருவனில் பல்வேறுபட்ட திறமைகளைக் காட்டுவனவாகவும் உள்ளன. எனினும் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய கலைகள் என்பதில் ஐயமில்லை.

நுண்கலைகள் வீடுபேற்றிற்குரிய சாதனமாக தொன்றுதொட்டு பயின்று வருகிறது. ஆத்மஞானம், சிவஞானம் என்பவற்றைத்தந்து முத்திக்கு வழிகாட்டுவனவாக உள்ளது. மன அமைதியை உண்டாக்கி இன்பநிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் உள்ளன. இசையும், தோத்திரமும் பக்தியை வளர்க்கும் கலையாகவும், சிற்ப வடிவம் தியானத் திற்கும், வணக்கததிற்கும் உரிய சாதனமாக உள்ளன. கலைகள் இறைவனிடத்திலிருந்துதான் பிறந்தன என்னும் கருத்துடையவர்கள் இந்தியர்கள். கலைகள் கலைக்காக மட்டும் வளர்க்கப்படவில்லை. மக்கள் மனதில் தெய்வீக பக்தியையும் மன அமைதியையும் ஒழுக்கத்தையும் உயர்ந்த இலட்சியங்களையும் ஏற்படுத்துவதாக வளர்க்கப்பட்டதெனின் மிகை இல்லை.

## உசாத்துணை நூல்கள்


- இந்து நாகரிகத்திற் கலை– கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
- இந்து நாகரிகத்தில் நுண்கலைகள் – பாகம் – 1 சி. சோதிலிங்கம்
- கலைக்களஞ்சியம்
- வியத்தகு இந்தியா

# கணினி பற்றிய ஒரு நோக்கு.....

ந. செந்தூரன்
Spl. Trd.phy.Ed, Dip.in.phy.Ed
(ஆசிரியர்)

## சுருக்க வரலாறு

சுமார் கி.மு 3000ம் ஆண்டளவில் Abacus எனும் கணி கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் கணினியின் வரலாறு ஆரம்பித்தது எனலாம். இக்கருவியினால் எண்கணித செயற்பாடுகளை (Arithmatic calculation) செய்யக் கூடியதாக இருந்தது. 1942ல் பிரெஞ்சு நாட்டு கணிதவியலின் தத்துவ மேதையான Blaise Pascal என்பவரால் பொதுவான கிரேக்க முறையிலமைந்த முதலாவது கணினி (Digital computer) கண்டு பிடிக்கப்பட்டது.

1671ல் Gottfried wihelm von Leivniz என்பவரால் கூட்டல், கழித்தல் என்பவற்றை நேரடியாக செய்யக்கூடிய பொறிவழிக் கணினி கண்டுபிடிக்கப்பட்டது. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்து கணிதப் பேராசிரியரான Charles Babbage மிக நீண்ட கணித செயற்பாடுகளை தானாக கணக்கிடக் கூடிய இயந்திரத்தை கண்டறிந்தார். இதன் மூலம் அட்சர கணித செயற்பாடுகளை எளிதாக செய்யக் கூடியதாக இருந்தது. இது அனாலிட்டிக்கல் மெசின் (Analytical machine) என அழைக்கப்படுகின்றது. இதனால் Charles Babbage நவீன கணினியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

## கணினியின் தலைமுறைகள் (Generation of Computer)

கணினியானது 05தலைமுறைகளை கொண்டுள்ளது. முதலாவது தலைமுறை கணினியானது (1st Generation computer) முதலாவது வர்த்தக ரீதியிலான பொதுப்பயன்பாட்டு கணினி ஆகும். இக்கணினி ஆனது இலத்திரனியல் வால்வுகளைக் (Vacum tube) கொண்டு உருவாக்கப்பட்டது. இவ் வகை கணினிகளின் செயல் நிரலாக்கத்திற்கு அசம்பிளி(Asembly) மொழி பயன்படுத்தப்பட்டது. இவ்வகை கணினிகள் சிறிய உள்ளக சேமிப்பகத்தை கொண்டவையாகவும், செயற்திறனில் வேகம் குறைந்தவையாகவும் விளங்கின. இவை அதிகளவிலும் விரைவாகவும் வெப்பமாகக் கூடியனவாக இருந்ததினால் இவற்றிற்கு அதிகளவு குளிரூட்டல் தேவைப்பட்டது. ஆனால் இவை பாவனைக் காலம் குறைந்தனவாக விளங்கின.

இரண்டாவது தலைமுறைக் கணினி (2nd Generation) திரான்சிஸ்ரர்களின் (Transistor) வருகையினாலும் முதலாவது தலைமுறைக் கணினி யின் குறைபாடுகளினாலும் வால்புகளின் பாவனை குறைக்கப்பட்டு திரான்சிஸ்ரர்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இவ்வகை கணினிகளின் செயல் நிரலாக்கத்திற்காக Forten, AlGol COBOl போன்ற மொழிகள் பயன்படுத்தப்பட்டது. இவை 1வது தலைமுறைக் கணினிகளுடன் ஒப்பிடுகையில் சிறியனவாகவும் பெரிய உள்ளக சேமிப்பகத்தை கொண்டனவாகவும் விளங்கின. செயல்திறன் வேகம் கூடியனவாகவும் நம்பகத் தன்மை கூடியனவாகவும் வெப்பமடைதல் சிறிதளவு குறைந்தனவாகவும் விளங்கின.

மூன்றாவது தலைமுறைக் கணினி (3rd Generation Computer) ஒருங்கமைக்கப்பட்ட சுற்றுக்களினால் (Integrated circuit on a tiny silicon chip) உருவாக்கப்பட்டது. இவ்வகை கணினியும் பருமனில் சிறியதாகவும் முதல் இரண்டுதலைமுறைக்கணினிகளையும் விட பெரிய உள்ளக சேமிப்பகத்தை கொண்டதாகவும் விளங்கின. அவற்றினை விடசெயற்திறன்வேகம் கூடியனவாக வும், வெப்பமடைதல் குறைந்தனவாகும் விளங்கின.

நான்காவது தலைமுறைக் கணினி (4th Generation Computer) உருவாக்கத்தின் போது Micro Processor பயன்படுத்தப்பட்டது. இவ்வகை கணினிகளே இப்போது பாவனை யிலுள்ளன. இன்று அலுவலகங்கள், தொழிற்சாலை கள், இல்லங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் இவற்றின் பயன்பாட்டைக் காணலாம்.

உதாரணமாக

Intel Pentium 1

Intel Pentium 2

Intel Pentium 3

Intel Pentium 4

போன்ற கணினிகளை கூறலாம். இவை பருமனில் சிறியனவாகவும் செயற்திறன் வேகம் கூடியன வாகவும் குறைந்த மின்னூட்டலுடன் செயற்படக் கூடியனவாகவும் விளங்குகின்றன.

ஐந்தாவது தலைமுறைக் கணினி (5th Generation Computer) மேற்கூறப்பட்ட கணினிகளின் ஆற்றல்களையும் கொண்டுள்ளதோடு செயலாற்றல் வேகம் மிக அதிகமானவையாக விளங்குகின்றன. இவற்றில் செயற்கை நுண் அறிவுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக இவ்வகை கணினியில் இயந்திர மனிதர் அடங்குவர்.

## கணினியின் வகைகள்

## (Types of Computer)

கணினியானது தரவுகளை கையாளும் முறை (Technology), பாவனை (Purpose) பார்வை (Size) அடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றது. தரவுகளை கையாளும் அடிப்படையில்

1. ஒப்புமைக் கணினி (Anolog Computer)
2. இலக்க கணினி (Digital Computer)
3. கலப்புக் கணினி (Hybrid Computer)

பார்வை (Size) அடிப்படையில்

1. Main Frame
2. Mini Frame

3. Micro Computer

பாவனை (Purpose) அடிப்படையில்

1. Special purpose
2. General purpose

போன்றவனவும் வகைப்படுத்தப்படுகின்றது.

## கணினியின் முறைமை

## (System of Computer)

கணினியின் முறைமைச் சூழலினை 4 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. வன் பொருள் (Hard ware)
2. மென் பொருள் (Soft ware)
3. உயிர்ப் பொருள் (Live ware)
4. நிறுவனமுறைமை (Firm ware)

வன்பொருள் எனும் போது கணினியில் தொட்டுணரக் கூடிய அனைத்து பாகங்களும் வன் பொருளே. இது இரண்டு வகையாக உணரப் படுகின்றது.

1. உள்ளீட்டு சாதனம் (Input divice)
2. வெளியீட்டு சாதனம் (Out divice)

கணினிக்கு தரவுகளையும் அறிவுறுத்தல் களையும் உள்ளீடாக கொடுக்கக் கூடிய சாதனங்களே உள்ளீட்டு சாதனங்கள் (Input divice) எனப்படும்.

உதாரணம்:

Key board, Mouse,
Scanner, Modem

கணினியினுள் செலுத்தப்பட்ட தரவுகளை செயற்படுத்தி வரும் விளைவுகளை வெளியிடும் சாதனங்கள் வெளியீட்டுச் சாதனங்கள் (Output divice) எனப்படும்.

உதாரணம்:

Printer
Monitor
Speaker
Modem

கணினியில் பயன்படுத்தப்படுகின்ற சகல கட்டளைத் தொகுதிகளும் மென்பொருள் எனப்படும். இவற்றை 2வகையாகப் பிரிக்கலாம்.

1. System software
2. Application software

System software கணினி வன் பொருட் களுக்கும் பாவனையாளருக்கும் இடைமுகப்பாக தொழிற்படும். இவை operating system எனவும் அழைக்கப்படும்.

உதாரணம்:

Micro soft windows
Linux
Unix
Ms-Dos

Application software கணினிகளில் குறிப்பிட்ட வேலைகளை செய்யவென உருவாக்கப் பட்ட கட்டளைத் தொகுதிகளின் தொகுப்பாகும்.

கணினியுடன் தொடர்புபட்ட சகல மக்களும் Liveware எனப்படும்.

உதாரணம்:-

User

Programmer

Data entry oprator

system Analyst

கணினி உதிரிப்பாக உற்பத்தியாளர்களால் அப்பாகங்களில் பதியப்படுகின்ற ஒருதொகுதி கட்டளை வரிகள் Firmware எனப்படும்.

கணினியின் அடிப்படைக் கட்டமைப்பு உள்ளீட்டு சாதனம் (Input divice), வெளியீட்டு சாதனம் (Out put divice) மையச் செயற்பாட்டுப்பகுதி (Central processing unit) போன்றவற்றை கொண்டது. இங்கு Central processing unit)என்பது உள் வழங்கப்படும் தரவுகளை ஆராய்ந்து கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் ஒப்பிட்டு முடிவுகளை எடுத்தல், கணித்தல்களை மேற்கொள்ளல், தர்க்க ரீதியான முடிவுகளை எடுத்தல், கணனியினை கட்டப்படுத்தல் போன்ற பணிகளை ஆற்றுகின்றது.

## கணினியின் நினைவகம்

## (Storage of Computer)

கணினிகளில் தரவுகள் கட்டளைத் தொகுதிகள் என்பவற்றை வைத்திருந்து தரவு நிரற்படுத்தலுக்கு உதவும் சாதனமாகும். Computer memory என்றும் அழைப்பர். கணினியின் நினைவகத்தை 2 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. முதன்மை நினைவகம் (Primary Memory)

உதாரணம்:

Register

RAM

ROM

Cache memory

2. இரண்டாந்தர நினைவகம்

(Secondary memory)

Optical storage

Magnetic Storage

### Register

நிகழ்ச்சி நிரலானது செயற்படுத்தலை மேற் கொள்வதற்கு தேவையான எண்கள், எழுத்துக் கள் என்பவை இதில் பதியப்படும்.

### RAM

இதில் தரவுகள் தற்காலிகமாக சேமிக்கப் படுகின்றது. கணினிக்கான மின் வழங்கள் நிறுத்தப்பட்டால் அழிந்துவிடும். இவற்றின் (RAM Random Access memory) சில வகைகள்

SDRAM

SRAM

DRAM

DDRAM

### ROM

இங்கு சேமிக்கப்படும் தகவல்கள் அழிவடைய மாட்டா. இவற்றின் (ROM - Read only memory) சிலவகைகள்

PROM

EPROM

EEROM

**Cach memory:**

இது CPU ற்கும் (Central processing unit) RAM ற்கும் (Random Access memory) இடையில் அமைந்திருக்கும் இது ஒரு தற்காலிக நினைவகம்

இரண்டாந்தர நினைவகத்திலே CDROM, WORM CD போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

## கணினி மொழி

## (Computer language)

கணினியின் நிரலாக்கத்திற்காக பயன்படுத்தப் படும் மென்பொருள் கணினி மொழி ஆகும். இம் மென்பொருள் சில நியம சொற்களை கொண்டு குறிப்பிட்ட விதி முறைகளுக்கு அமைவாக உருவாக்கப்படும் அறிவுறுத்தல்களின் ஊடாக கணினியை கட்டுப்படுத்தும் வகையில் அமைவுறும். தற்போது அதிக வகையான கணினி மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இயந்திர மொழி, அசம்பிளி மொழி,உயர்மட்ட மொழி என கணினி மொழிகள் உண்டு. இயந்திர மொழி அறிவுறுத்தல் 0,1 என்பவற்றை மட்டுமே கொண்டது. அசம்பிளி மொழியும் இயந்திரம் சார்ந்ததே ஆனாலும் இரண்டினடி தொகுப்பிற்கு பதிலாக சில குறிப்பிட்ட சொற்களை கொண்டமைந்தது உயர்மட்ட மொழியானது, அசம்பிளி மொழியில் காணப்பட்ட கடினத்தை நிவர்த்தி செய்யவென உருவாக்கப்பட்டது. இவ்வகை மொழிகள் இயந்திரம் சாரா மொழிகள். இவற்றை மனிதனால் இலகுவில் விளங்குகிக் கொள்ள முடியும். மொழியாற்றல் செயற்பாடு இடம்பெறுதலால் நேரம் அதிகமாகும். இங்கு மொழி மாற்றல் செயற்பாட்டிற்கு Compiler பயன்படுத்தப் படுகின்றது. Compiler ஆனது High -level மொழியில் எழுதப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை குறிப்பிட்ட கணினி மொழிக்கு மாற்றியமைக்கும்.

கணினி மொழி மாற்றிகளாக Interpreter Compiler போன்றன தொழிபடுகின்றன. Interpreter ஆனது உயர்மட்ட மொழியிலுள்ள (High - level language) நிகழ்ச்சி நிரல்களை செயற்பாட்டின் போது ஒவ்வொரு கூறாக இயந்திர மொழிக்கு மாற்றுகின்ற ஒரு மொழிமாற்றி, Compiler என்பது உயர்மட்ட மொழியிலுள்ள நிகழ்ச்சி நிரல்களை செயற்பாடடின் முன்னமே முழுவதுமாக இயந்திர மொழிக்கு மாற்றுகின்ற ஒரு மொழி மாற்றி ஆகும்.

## கணினி வலையமைப்பு

## (Computer Network)

ஒன்றையொன்று சாராத பல எண்ணிக்கை யிலான கணினிகள் பகிரப்பட்ட வலையமைப்பு ஊடகத்தின் மூலமாக ஒன்றையொன்று தொடர்பு கொள்ளுதலானது கணினி வலையமைப்பு (Computer Net work) எனப்படும். பொதுவாக கணினி வலையமைப்பு இணைக்கப்படும் ஊடகத்தை கொண்டு 2 வகையாக பிரிக்கலாம்.

1. Wired Network

வடங்களின் (Wore Media) உதவியுடன் உருவாக்கப்படும் கணினி வலையமைப்பு

2. Wireless Network

வடங்களின் உதவியின்றி உருவாக்கப்படும் கணினி வலையமைப்பு. இவை தொடர்பாடல் ஊடகமாக radio frequencies ஐ பயன்படுத்து கின்றன.

இணைக்கப்படும் கருவிகளுக்கு இடையிலான தூரத்தை கருத்தில் கொண்டு பிரிவுகளாக பிரிக்க லாம்.

1.LAN (Local Area Network)
2. WAN (wide Area Network)
3. MAN (Metrapolitan Area Network)

கணினி வலையமைப்பு ஒன்றிலே Network Topology பயன்படுத்தப்படுகின்றது. கணினிகளை பௌதீக ரீதியாக இணைக்கும் முறையே Network |Topology எனப்படும். இது பொதுவாக 5 வகை அவை

1. Bus
2. Ring
3. Star
4. Mesh
5. Tree

## பரிமாற்ற ஊடகம்

## (Transmission Media)

கணினியானது பயன்படுத்தப்படும் சில பரிமாற்ற ஊடகங்கள்

1. Magnetic Media
2. Twisted Pair
3. Coaxial Cable
4. Optical fiber
5. Wireless

## கணினி வைரஸ்

## (Computer Virus)

கணினி வைரஸ் என்பது பாவனையாளரின் அனுமதியின்றி அல்லது பாவனையாளர் அறியா வண்ணம் கணினியில் ஊடுருவக் கூடிய ஒருவகை Program ஆகும். சில வகையான வைரஸ்கள் குறைந்தளவு பாதிப்பினை ஏற்படுத்தவனவாகவும் சில வகையான வைரஸ்கள் மிகவும் ஆபத்தானவை யாகவும் உள்ளன. இவை Program களை அதிகளவில் பாதிப்படைய வைத்தல், தரவுகளை அழித்தல் / குழப்பவிடுதல், கணினி முறைமையின் செயற்பாட்டு வேகத்தை குறைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள்ளக் கூடியன.

வைரஸ்கள் சில

- File viruses
- Macro viruses
- Boot and partition Sector Viruses
- Over Writing Viruses
- Trojan Horse
- Worms
- Bacerium

வைரசானது பின்வரும் வழிகளில் பரவுகின்றது.

1. BBS எனப்படும் Bullet in Board service முறை மூலம்
2. Network மூலம்
3. இணையத்தளம் (Internet) மூலம்

4. File server மூலம்

இன்றைய நிலவரப்படி நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 10-12 வைரஸ்" Program கள் உருவாக்கப் படுகிறது. இவ் நவீன உலகில் வைரஸ்கள் விரைவில் பரவ இணையத்தளம் (Internet) முக்கிய பங்கு வகிக்கிறது.

இன்றைய கணினி உலகத்திலே தகவல் பரிமாற்றத்திற்கு பெரிதும் இன்றியமையாத சாதனமாக கணினி விளங்குவதனை காணலாம். கணினி என்ற சொல்லானது கணித்தல் (Computer) என்ற சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. கணினியானது பல தரப்பட்ட தகவல பரிமாற்றங்களுக்கு பயன்படுத்தப் படுகின்றது இங்கு தரவுகளை நிரற்படுத்துவதன் மூலம் பெறப்படுகின்ற பயன்மிக்க விடயங்களே தகவல் (Information) எனப்படும்.

கணினியானது பகுக்கப்படாத தகவல்களை பகுத்து பயன்மிக்க தகவல்களாக வழங்கும் சாதனமாக விளங்குகின்றது. கணினியில் கொடுக்கப்படும் தரவுகளை மாற்றியமைத்தலை Processing என்பர். இதன் போது சுருக்குதல், சேமித்தல், வகுத்தல் போன்ற கணித்தல் செயற்பாடுகள் நடைபெறு கின்றன.

கணினியானது அலுவலக நிர்வாக வேலைகள், வியாபார நிலைய வேலைகள், பாடசாலை வேலைகள், போன்றவற்றில் அதிகளவு பயன்படுத்தப் படுவதோடு வைத்தியசாலைகள், வங்கிகள் போன்றவற்றின் செயற்பாட்டிற்கும் மிக முக்கிய மானது. இன்றைய காலகட்டத்தின் பல செயற் பாடுகளுக்கு முக்கியமானது என்பதை மறுக்க முடியாது.

வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு இன்று கணினி பற்றிய அறிவின் அவசியம் தலை தூக்கி நிற்பதை காணலாம். இத்தகைய முக்கியம் வாய்ந்த கணினி உபயோகமானது பல்வேறு வழிகளில் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது.

- Inventor of Computer - Charles Babbage - 1812
- First computer programmer Ada lovelace
- Computer language

  Visual basic

  Java

  C++

  Pasal
- First digital computer Inventor - Blaise Pascal - 1642
- First successful mechanical calculator Thomas of Colmar
- Full name of Virus

  V- very

  I - Important

  R- Resource

  U - Under

  S- Sidge
- Search Engines

  Yahoo

  Google

  ESN

  Ask. com
- Introduction to Internet

  The Interne is an international network connecting many smaller networks around the world.
- WWW - World Wide Web

# பாடசாலை நூலகத்தின் பயன்கள்

செல்வி ச. நளினி
நூலக ஆசிரியர்

கல்விக்கும் வாழ்வுக்கும் நூலகம் அவசியமான தேவையாக விளங்குகின்றது. கோபமும் குறையும் கொள்ளாமல் ஒளிவு மறைவு இல்லாமல் நாம் தேடுவதை தரும் சிறந்த ஆசான் நூல்களே. பாடசாலை நூலகம் கற்றலுக்கான சேவைகள் நூல்கள் மற்றும் வளங்களை வழங்குகின்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். வாசிப்புப் பழக்கம் உடையவர்கள் பரந்த அறிவும் இளமைத் தோற்றமும் உள்ளவர்களாகத் திகழ்வார்கள். அமைதியைப் பேணியும் ஒழுங்கமைப்பைக் கடைப்பிடித்தும் மௌன வாசிப்பின் மூலம் பல அறிவு சார் விடயங்களை அறிந்து கொள்ள நூலகம் உதவுகின்றது.

இனம், மதம், மொழி, மற்றும் சாதி பாகுபாடுகளின்றி பாடசாலை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவமாகப் பாடசாலை நூலகச் சேவைகள் வழங்கப்படல் வேண்டும். வசதியற்ற மாணவர்களது கல்விக்கும் நூலகம் பெருந்துணையாக அமைகின்றது.

எழுத்தறிவு, கல்வி, தகவலளித்தல் மற்றும் பொருளாதார சமூக பண்பாட்டு வளர்ச்சி என்பவற்றுக்காக ஒவ்வொரு நெடும்பருவத்தின முறைக்கும் பாடசாலை நூலகம் மிகவும் இன்றியமையாத துணையாகின்றது. எனவே நூலகத்தில் உள்ள நூல்களைப் பயன்படுத்துவதோடு பாதுகாக்கும் மனப்பாங்கும் பாடசாலை சமூகத்தில் உள்ள அனைவரினதும் பொறுப்பாகும்.

நூலகங்களும் ஆசிரியர்களும் ஒருமித்துச் செயற்படும் போது மாணவர்கள், எழுத்தறிவு வாசிப்புத்திறன், கற்றல், பிரச்சனை தீர்த்தல், தகவலறிதல், மற்றும் தொடர்பாடல், திறன்கள் என்பவற்றில் உயர்வான தேர்ச்சியை பெற்றுக் கொள்கின்றார்கள். என்பது ஆய்வுகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

உலகளாவிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதிலும் பெரும்பங்காற்றுகின்றது. நூலகம் நிறைவானதாக இருக்கின்ற பொழுது அதனைச் சார்ந்த சமூகமும் நிறைவானதாக இருக்கின்ற பொழுது அதனைச் சார்ந்த சமூகமும் நிறைவான அறிவு, மனப்பாங்கு பெற்ற சமூகமாக திகழும். ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் உறுதுணை அளிப்பதோடு மாணவர்களின் மேலதிக தேடலையும் மேலதிகமான அறிவையும் பெற்றுக்கொள்ளும் இடம் நூலகம். இத்துடன் உளச்சார்பு, பொது அறிவு, மொழித் திறன் ஆகிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு சிறந்த இடமாகவும் நூலகம் விளங்குகின்றது.

# குத்துவிளக்கு ஏற்றுதலின் மகத்துவம்

திருமதி சந்திரகலா புவனேந்திரா
ஆசிரியை

ஒளியானது இருளை அகற்றுகிறது. அத்துடன், எல்லாப் பொருட்களையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. சூரியன், சந்திரன், அக்கினி என்பன முச்சுடர்கள். அவை ஒளியைத்தந்து உயிர்களை வாழ்விப்பவை. எனவே, அவற்றையும் கடவுளராக வழிபாடு செய்கின்றோம். நல்லன செய்யும் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவை. ஆகவே, அவை வணக்கத்திற்குரியவை. ஒளி நன்மை பயப்பதால் வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரியது ஆகின்றது. சைவர்கள், காலையிலும், மாலையிலும் வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்யும் வழக்கத்தை உடையவர்கள். மகாலட்சுமி எல்லாவித செல்வங்களையும் எமக்கு வழங்குபவள்.

இம்மை வாழ்வில் இன்பம் அடைவதற்குப் பொருட் செல்வம் தேவை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். செல்வத்திற்கு அதிபதியாகிய மகாலட்சுமியை குத்துவிளக்கில் தரிசிக்கிறோம். குத்துவிளக்கினை ஏற்றியபின், அதனை ஊடுபற்ற விடுதல் கூடாது. ஊடுபற்றுதல் என்பது எண்ணெய் இல்லாமல் திரிகாய்ந்து எரிதலும் புகைத்தலும் ஆகும். குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கும் போது சிலர் வாயினால் ஊதி அணைப்பதைக் காண்கிறோம். அவ்வாறு செய்தல் தவறாகும். எந்தத் தீபத்தையும் வாயினால் ஊதி அணைத்தல் ஆகாது. குத்துவிளக்கு எரியும் போது சுடர்பட்டு மலர்கள் எரிந்து கருகுவதையும் காண்கிறோம். அந்த நிலை ஏற்படவிடக்கூடாது.

ஆகையால், மலர்மாலைகள் விளக்குச் சுடர்படாதவாறு சூட்டப்படுதல் வேண்டும். ஒளி அறிவை உணர்த்தும் சின்னம் இறைவன் பேரறிவாளன். அறிவின் ஊற்று இறைவனே எல்லாவித அறிவிற்கும் மூலதத்துவமாக விளங்கும் இறைவனை ஒளிமயமாக வழிபட்டு கருமங்களை ஆரம்பிக்கிறோம். இறைவனை முன்வைத்து ஆற்றுங்கருமங்கள் நீதியாக அமையும். அதனால் வெற்றி பெறுகின்றன. ஒளி இருளை அகற்றும் அறிவொளி அறியாமையை நீக்கும். அறியாமை அகன்று விட்டால், நாம் எடுத்த கருமங்களுக்குக் குறுக்கே அறியாமையால் ஏற்படுகின்ற இடர்பாடுகள், இடையூறுகள் அகற்றப்பட்டுவிடும். அறிவொளியின் துணையால் எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறும். இதனை உணர்த்தவே குத்துவிளக்கு ஏற்றப்படுகிறது.


மாணவர் பக்கம்

# எனது பாடசாலை

**செல்வி தனுஷா பேரின்பம்**
A/L கலைப்பிரிவு (2008)

பிடியரிசி தானெடுத்து கட்டுவித்த பள்ளியின்று
பெருவிருட்சமாகி பெருமைபெற்று நிற்கிறது – அன்று
வேலுப்பிள்ளைதனை முதல்வராகக் கொண்ட பள்ளி – இன்று
சத்தியமே தவறாத சத்திய வரதனின் வியர்வைத்துளியதனில்
வீறுகொண்டு நிற்கிறது.
"சைவப் பிரகாசா" எனும் பெயர் கொண்டு
சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்பணியைச் செய்கிறது.

கல்வி, கலை, ஞானம், விளையாட்டு என்று
அத்தனை துறைகளிலும் அடியெடுத்து வைத்து விட்டால்
தீவினிலே முதலிடமாய்க் கொடி கட்டிப் பறக்கிறது
கல்வி, கலை மட்டுமல்ல வாழ்வினிலே வீறுநடை போட
ஒழுக்கம், பண்பாடு என யாவற்றையும் மாணவர்க்குத் தந்து மகிழ்கிறது

கல்லூரியின் வாயிலிலே வந்துவிட்டால்
தென்றற்காற்று இதமாக எம்மனதை ஊடறுத்துச் சென்றுவரும்
வாழை, நெல்லி, செவ்வரத்தை தேக்குடனே
யாழ்ப்பாணத்துக் குறோட்டன் என நாமழைக்கும்
அத்தனை மரங்களும் அழகாகக் காட்சிதர
நெழுவினியான் துணையிருக்க சரஸ்வதியோ வரவேற்க
நாமகளும் பூமணமும் நற்கவிதை கொண்டு வர
கல்லூரியின் அழகினிலே சொக்கி எம்மனதைப் பறிகொடுக்க
பள்ளிதனைச் சுற்றி நாமும் வலம் வந்து விடடாலோ
வெளியேற மனமின்றித் தவித்திடுவோம். இது உண்மை.

வாசலிலே அதிபர் "வாருங்கோ" என அழைக்க
அனுமதியுடன் நாமும் அலுவலகம் சென்றுவிட்டால்
சொக்கி விடுவோம் நாம் சொர்க்க எல்லை சென்றிடுவோம்.

அறிவொளி வீசும் பெரியோர்கள் சூழ்ந்திருக்க
அந்தநாள் அதிபர்கள் அமரர்களாய் வீற்றிருக்க
இந்த நாள் அதிபரோ இதமான மொழிபேசி அமர்ந்திருப்பார்
தெய்வக் களை கட்டும் இது அலுவலகம் அல்ல
நிச்சயமாய் கோயிலென நாமுணர்வோம்.

அங்கிருந்து வெளியேறி வராந்தா வழி சென்றால்
அறிவொளி வீசும் நூலகமும் எம்மை அன்போடு வரவேற்கும்
அதுமட்டுமன்றி கணனி அறையும் எம்மைக் கவர்ந்திழுக்க
சற்று நேரமதில் தாமதித்து நின்றிடுவோம்
அதற்கப்பால் ஒன்றுகூடல் மண்டபமும்
அதனருகில் பிரார்த்தனை மண்டபமும் – அதையடுத்து
ஆசான்கள் வீற்றிருக்கும் ஆசிரியர் அறை இருக்கும்.

இவை தவிர பாலர் வகுப்பு முதல் பதின்மூன்றாம் ஆண்டுவரை
அத்தனை வகுப்புகளும் அழகழகாய் அமைந்திருக்க
அவற்றின் முன்புறமோ வண்ண மலர் மரங்கள்
இங்கிதமாய் வரவேற்க சிலநிமிடம் அவ்விடத்தில் உணர்விழந்து நிற்போமே
இவை மட்டுமல்லாது நீர்த்தொட்டி கிணற்றுடனே மலசல கூடங்களும்
சிறப்புடனே அமைந்திருக்க
சிறுவர் பூங்காக்குள் நாமும் சென்றுவிட்டால்
சிலநேரம் நம்நினைவு நம்மிடத்தில் இருக்காது
மெய்மறந்து வாயகன்று நின்றிடுவோம் – அதன்
அழகினிலே நாமும் சிறுவர்களாய் மாறிடுவோம்.

சைக்கிள் தரிப்பிடமும் ஆய்வு கூடமுமெனவே
அத்தனையும் அற்புதமாய் அமைந்திருக்க – நம்
நெஞ்சை விட்டகலாத நினைவுகளும் உடனிருக்கும்
ஒரு கட்டிடத்துடனும் ஒன்பது ஆசான்களுடனும்
ஆரம்பித்த பள்ளியோ
என்பத்தாறாண்டுகள் எட்டி மறைந்து விட்டாலும்
ஏழாண்டுகளாக எல்லையில்லா வளர்ச்சியினைக்
கண்டு வருகிறது.

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் – அதன்
புகழ் நிலைத்து மணம்பரப்ப
மாணாக்கர் அறிவு பெற ஆசீர்வதித்த வண்ணம்
ஆனைமுகன் அருகிருக்க
அபராத முயற்சியுடன் அதிபர் உடனிருக்க
கல்லூரியின் புகழ் உலகெலாம் சென்று வர
வேண்டிடுவோம் விநாயகனை எந்நாளும் மகிழ்வுடனே

# தாய்

**செல்வி ந. கோபிஷா**
**தரம் - 10**

பத்து மாதம் சுமந்து என்னை
முத்துப் போலப் பெற்றெடுத்தவள்
நித்தம் சோறு ஊட்டுவாள் – அன்னை
முத்தம் தந்து வளர்ப்பாள்

ஆலமர விழுது போல தாங்கிடுவாள்
அவனியிலே நாம் சிறக்க அருள் செய்வாள்
பசியுறக்கம் தனை மறந்து பாலூட்டி வளர்த்த
அன்னையவள் தன்னை அகம் குளிரத் துதிப்பேன்.

கண் விழித்தது முதல் கண்ட தெய்வம்
கண்ணை இமை காப்பது போல் காக்கும் தெய்வம்
ஆலயம் அனைத்துக்கும் அதிபதியாம் அன்னை
அவனியிலே நாம் சிறக்க அருள் செய்வாள்.

அன்னையவள் புதுமை தனை அறியாத மாந்தர்
முதியோர் இல்லம் உள்ள இடத்தை மகத்தாக தேடி
மனங்குளிர்ந்து பெற்றெடுத்த அன்னைதனை
மனம் பதைக்க விட்டு விட்டு சந்தோசம் கண்டாள்.

அன்னையவள் சேவை எண்ணிலடங்காது
அன்னையவளாலே நாம் பிறந்தோ மிங்கு
தெய்வத்தின் வடிவமான அன்னை தனை
தெவிட்டாது போற்றி பேரின்பம் காண்போம்.

# கடவுள் அழுவது எல்லோருக்குமே

செல்வி மு. கோபிகா
தரம் - 12

| | | |
|---|---|---|
| உறவுகள் | அழுவது | பாசத்திற்கு |
| உலகம் | அழுவது | பணத்திற்கு |
| ஊமை | அழுவது | வார்த்தைக்கு |
| ஊனம் | அழுவது | சுமைகளுக்கு |
| | | |
| தேசம் | அழுவது | சுதந்திரத்திற்கு |
| தேகம் | அழுவது | சுகத்திற்கு |
| தேடல் | அழுவது | பொருளுக்கு |
| தேர்தல் | அழுவது | அரசியல் வாதிக்கு |
| | | |
| குழந்தை | அழுவது | பாலுக்கு |
| குயில்கள் | அழுவது | கூட்டுக்கு |
| குடிசைகள் | அழுவது | ஏழைக்கு |
| குடிகாரன் | அழுவது | போதைக்கு |
| | | |
| மரணம் | அழுவது | உயிருக்கு |
| மதங்கள் | அழுவது | பல பொய்களுக்கு |
| மனிதன் | அழுவது | பல பசிகளுக்கு |
| மகுடம் | அழுவது | தலைகளுக்கு |
| காதல் | அழுவது | கண்ணீருக்கு |
| காயங்கள் | அழுவது | தழும்புகளுக்கு |
| கனவுகள் | அழுவது | இரவுகளுக்கு |
| கடவுள் | அழுவது | எல்லோருக்குமே |

# நெடுந்தீவு

செல்வி ந. தனுஷிகா
தரம் - 12

பாய்ந்து வரும் பகைவர் தமை
விரட்டி ஓட்டும்
படைத் தலைவன் போர்த் திறமை
போலே நுமை
தோய்ந்து வரும் அலை கடலைத்
தகர்த்து வீரத்
தலைமகளாய் நெடுந்தீவு
அமைந்தாள் இங்கே!

சீர் மிகுந்த தமிழினத்தின்
சிறப்பைக் காட்டிச்
சிலம்பு தரும் கற்பு நெறிக்
காணியாய் வாழும்
பார் புகழும் பாவையரின்
கூட்டம் நல்ல
பண்புக்கோர் அணிகலனாய்த்
திகழ்ந்து நிற்கும்!

ஓங்கி வளர் தெங்கு பனை
செழித்து நன்றே
ஒருங்கிணைந்து பொருளீந்து
மக்கள் வாழ
நீங்காது தம் பயனை
வழங்கி என்றும்

நிறைகண்டு வாழத் தமைத்
தந்தே நிற்கும்!

பேதங்கள் நம்மிடையே
இல்லை – நண்பா
பேசாதே உயர்வு தாழ்வு
இல்லை என்றே
கூறாமல் அறிவுரைகள்
கூறி இந்தக்
குவலயத்தின் ஒற்றுமைக்கு
அணியைக் காட்டும்

இயற்கை அன்னை தாலாட்ட
வளர்ந்து நாளும்
இன்பமுடன் துயர் நீங்கி
வாழும் மக்கள்
தனிச் சிறப்புக் கண்டு
நெடுந்தீவு அன்னை
தலை நிமிர்ந்து வாழ்கிறாள்
உலகில் இன்று.

# கல்விச் செல்வம்

**செல்வி இ. யனுஷா**
**தரம் - 13**

அறியாமை இருளினை அகல ஓட்டுவது கல்வி
அறிவுக்கு உணவினை அள்ளி ஊட்டுவது கல்வி
பசுமைப் புரட்சிக்குப் பலம் கூட்டுவது கல்வி
பல் தொழிலும் பெருக்கிடக் கரம் நீட்டுவது கல்வி

அறிவு, பண்பு, மனப்பாங்கு நன்கு மாற்றுவது கல்வி
அன்பு, நட்பு, நற்குணம் நலமே ஏற்றுவது கல்வி
பணிவு துணிவு கனிவினைப் போற்றுவது கல்வி
பல்கலையும் பெருகிடப்பணி ஆற்றுவது கல்வி

சிந்தனைத் தீயினை மூட்டுவது கல்வி
சீரையும் சிறப்பையும் நாட்டுவது கல்வி
இன்பமும் இனிமையும் மீட்டுவது கல்வி
இகமதில் இறைவனைக் காட்டுவது கல்வி

முழுமனித வளர்ச்சியே கல்வியின் நோக்கம்
முடிந்த தென் கல்வியென்று தலையிலேன் வீக்கம்
“கல்விக்கு கரையில்லை” அறிந்துமா தூக்கம்
“கற்றது கையளவே” அறிந்திட்டால் ஆக்கம்

# சந்தேகிக்காத வரை

செல்வி ச. துஷாந்தி
தரம் - 13

சிநேகிதனே.....!

சிந்தனைகள் பிறக்கின்றதா

சந்தேகங்கள் உதிக்கின்றதா

சோகங்கள் வேண்டாம்.

சாபங்கள் வேண்டாம்

நட்பு என்னும் சோலையில்

நானும் நடமாடியிருக்கிறேன்

நட்பின் புனிதம் எனக்கு தெரியும் நண்பா

தூற்றுவார் தூற்றட்டும்

வாழ்த்துவார் வாழ்த்தட்டும் – ஆனால்

நீ மட்டும் நம் நட்பின்

நிஜங்களை சந்தேகிக்காதே

காலத்தின் கோபத்தால் பல நட்புக்கள்

சிதைந்து போயிக்கலாம் – ஆனால்

அன்பில் உறைந்து உயிரில் கலந்து

ஆத்துமாவில் ஒன்றிணைந்த எம் நட்பு

திசை மாறிப் போகாது

எத்தனை ஜென்மங்களிலும்

நமக்குள் நாம் நட்பின் புனிதத்தில்

சந்தேகங்கள் ஏற்படாத வரை

நானும் நீயும் இணைபிரியாத

நண்பனும் நண்பியுமாய்

என்றும் இவ் வுலகில் நட்புக்காய்

சந்தேகமின்றி காத்திருக்கும்

ஜீவன்கள்!

# சூரிய சக்தியும் அதன் பயன்பாடும்

செல்வி வை. கனகரஞ்சினி
தரம் - 13

சூரிய சக்தியைப் பற்றியும் அந்த சக்தியை எவ்வாறு நமது வாழ்க்கைக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது குறித்தும் தெரிந்து கொள்ளமுன் சூரியன் குறித்து அதன் அமைப்பு, அதன் ஆற்றல் பற்றி முதலில் தெரிதல் வேண்டும். அப்போதுதான் சூரிய சக்தியை வாழ்க்கைக்கு பயன்படுத்திக் கொள்வது பற்றி தெளிவாக விளங்கலாம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞான சதாப்தம் பிறக்க பலகாலத்திற்கு முன் பூவுலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் சூரியனைச் சார்ந்துள்ளன என்பதை ஆதி மனிதன் அறிந்திருந்தான். பூமியின் வெவ்வேறு பாகங்களுக்கிடையே குடியிருந்த மக்களிடையே, வானத்தில் ஊர்ந்து செல்லும் தீப்பிழம்பை பற்றிய பல கட்டுக்கதைகள் வழங்கி வந்தன. பழங்கால பபிபொனியர். எகிப்தியர், கிரேக்கர், ரோமர், ஆரியர், வடஅமெரிக்கர், சிவப்பு இந்தியர், மாயர், இன்கா இந்தியர் ஆகியோர்கள் சூரிய வழிபாடு செய்தனர். பூமியில் உயிர் தோன்ற இன்றியமையாத சக்தி மூலமும் சூரியனே என்பதும் இக்கால கொள்கையாகும்.

சூரியனின் கதிர்வீச்சு ஒரு 13% குறையுமாயின் பூமியின் மேற்பரப்பு முழுவதும் ஒரு மைல் கனமான பனிக்கட்டியால் மூடப்படும். கதிர்வீச்சு 30% அதிகரிக்குமாயின் உயிரினம் அனைத்தும் கருகி அழிந்துவிடும்.

தாவரங்கள் சூரிய ஒளியில் இருந்தே சக்தியைப் பெறுகின்றுது. அச்சக்தி இல்லையெனில் பூமியில் உயிர் இராது. ஏனெனில் மனிதன் மிருகங்கள் யாவற்றின் சக்திக்கும் அடிப்படையிலான மூலமாக உள்ளது தாவர வர்க்கமே. சூரிய ஒளியின் திசையும் அதன் ஒளியும் பருவ கால மாறுதல்களை உண்டுபண்ணுகின்றன. சூரியன் ஒவ்வொரு 24 மணிநேரங்களை இரவு, பகலாக பிரித்து நமது வாழ்க்கை முறை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றது.

எமது வாழ்விற்கு மிக முக்கியமான எரிபொருளாகிய நிலக்கரி கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மடிந்து மங்கிப் போன தாவர வர்க்கமேயாகும். நிலக்கரியால் நாம் பெறும் சக்தி முற்காலத்தில் சூரிய

ஒளியின் இயக்கத்தால் இத்தாவர வர்க்கத்தில் சேமித்து வைக்கப்பட்டது. இச்சக்தியை வெவ்வேறு வழிகளில் நாம் உபயோகிக்கும் போது இது ஆதி முதல் சூரியனிடத்தில் இருந்து வந்த சக்தி என்பதை மறந்து விடுகின்றோம்.

உதாரணமாக நிலக்கரியை எரித்து வெப்பசக்தியை உண்டுபண்ணுகின்றோம். இவ் வெப்பத்தால் நீரைக் காய்ச்சி நீராவியை உண்டுபண்ணி நீராவியந்திரங்களை ஓட்டுகின்றோம். இவற்றினால் மின் உற்பத்திகளை இயக்கி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இம் மின்சாரசக்தி எமக்கு எண்ணிடலங்கா வழிகளில் பயன்படுகின்றது. இப்படி சூரிய சக்தி எம் அன்றாட வாழ்வில் பல்வேறு வழிகளில் உதவுகின்றது.

# அழுகை

செல்வி ச. நளாயினி
தரம் - 12

அம்மாவின் படத்துக்கு நேரே படுக்கையை விரித்து தலையணைக்குள் முகத்தை புதைத்து படுத்திருந்தான். படத்துக்கும் அவனுக்கும் நடுவே விளக்கு எரிந்து கொண்டிருந்தது நிசப்தமான இரவில் சுவரில் தூக்குமாட்டி தொங்கிய கடிகாரத்தின் அலறல் மூன்றேகால் மணியென்று முனங்கிக் கொண்டது. மெல்ல தலையை நிமிர்த்தி தன் விழிகளால் அம்மாவின் படத்தை வெறித்து பார்த்துக் கொண்டான். கண்ணீரோடும் புன்கைகயோடும் தாயோடு பேசியவாறு தொண்டையை அடைத்து விம்பல் வெடித்து அறையின் மௌனத்தை துரத்தியது அவன் அழுகை. அவனுக்கு தாயே நினைவாகி அந்தப்படமே தாயாகி பத்து நாட்கள் ஆகின்றன.

தாயின் இழப்பின் சோக நினைவுடன் முன் நேரத்திலே உறங்கிப்போன அவனை அம்மாவின் சிந்தனை தூக்கத்தை துரத்தி விட்டிருந்தது. தாயின் சேலையை நெஞ்சோடு அணைத்தவாறு அம்மா அ.....ம்......மா.... வென்று அவன் காய்ந்த உதடுகள் ஒட்டி உரிய உச்சரித்துக் கொண்டான். ம்.....ஹ..ம் என்று உடம்பை சோர்வெடுத்து சோம்பல் முறித்து சிணுங்கியவாறு மீண்டும் புரண்டு படுத்த படுக்கையில் இருந்து நெளிந்து கொண்டவனை அவன் தாய் ரமணி கையில் தேனீரோடு மகனை எழுப்பினாள்.

"அகில் எழும்படா மணி எட்டாச்சு பாடசாலைக்கு நேரமாகுது எதிர் வீட்டு மகா நேரத்தோடு எழும்பி படித்து கொள்கிறாள் என் கண்னு எழும்பு" என்றவாறு அவன் பிடரியில் கைகொடுத்து படுக்கையில் இருந்து நிமிர்த்தி தேனீரைக் கொடுத்தாள். அகில் சிணுங்கியவாறே அவன் தன் உதடுகளில் தேனீர் கோப்பையை அமர்த்தி தேனீரை ஒரு மடங்கு பருகி விழுங்கிய போது நாவில் பட்ட தேனீர் தேகத்தை உற்சாகப்படுத்தியது. தேனீரைப் பருகிக் கொண்டே அம்மா காலை சமையலுக்காக அங்கும், இங்கும் வேகமாக நடந்து திரிந்தது அவன் கண்ணில் பட திடுக்கிட்டு அம்மா என்று அலறிய போது சுயநினைவு வந்தவனாய் அம்மாவின் படம்தான் முன்னுக்கு சிரித்துக்கொண்டு இருப்பதைக் கண்டான். உண்மையிலே அந்தப்படம் ரமணி சிரிக்கும் போது எடுத்த படம்தான் அவன் முகமெல்லாம் வேர்த்து இருந்தது. அந்த வீட்டின் தனிமையில் எல்லாப் புறமும் ரமணியின் குரல் அகில், அகில் என்று அவனை அழைப்பது போலவும் தன்னுடனே கூட இருப்பதும் அவன் செவிகளையும் மனத்தையும்சுமையாக்கியது. படுக்கையில் இருந்த அந்த சேலையை எடுத்து முகத்தோடு அமிழ்த்தினான்.

அகில் நேரமாகுது போய் குளித்து விட்டு வா இன்று பரீட்சை என்பதை மறந்து போனாயா? அகில் எழும்பி அறைக்குள் போய் றேடியோவை திறந்த போது தாயின் குரல் மீண்டும் அன்பு கலந்த கண்டிப்போடு கடமைக்கு அனுப்பியது அகிலை.

இரவு முழுதும் நித்திரை பரீட்சையில் என்ன எழுதப் போறியோ சரி... சரி. கவனமாக கேள்வியை படித்து எழுது அகில் நீ பள்ளி முடிந்து வரும் போது நான் இல்லையென்றாலும் போட்டுச் சாப்பிடு என்று கூறியவாறே மகனின் நெற்றிப் பரப்பில் முத்தம் கொடுத்த போது ஏம்மா நான் என்ன குழந்தையா என்ற போது நீ எனக்கு குழந்தைதான் என்று பாடசாலைக்கு அனுப்பி விட்டு சந்தை வரை போய் வருவதற்கு ரவுண் பஸ்சில் ஏறினாள். அகிலுக்குப் பிடித்த மரக்கறியும் வாங்கிவிட்டு புத்தகசாலைக்குப் போய் பதினொராம் தரம் தமிழ் பயிற்சி புதகமொன்று வாங்கிவிட்டு விடு – விடு வென்று வீதியைக் கடக்க ரமணி ரமணி என்ற குரலை காதில் வாங்கி நின்று திரும்பிப் பார்த்த போது அவள் எதிரே வந்த தனியார் வாகனமொன்று அவளைத் தூக்கி மதில் சுவரோடு வீசி எறிந்தது. அகில் என்று கத்தியவாறு போய் விழுந்தாள். அவளின் தலையில் பலமான அடி ரமணி என்று கூப்பிட்டு வந்தவள் அவள் எதிர் வீட்டு அம்மா. ரமணி அடிபட்டு விழுந்ததும் அலறிக் கொண்டு ரமணி மேல் விழுந்து ரமணி என்னை மன்னித்துவிடு என்னாலதான் இப்படி ஆகிவிட்டது. ரமணி இரத்தம் தோய்ந்த முகத்தோடு உதடுகள் துடிக்க இல்லை இல்லை அக்கா இல்லை அது என் விதி கண்ணு அகில் அகில் என் மகன் அ...கி என்ற போது அவள் மூச்சு நின்று போனது அன்பு நிறைந்த அந்த ஆன்மா முடிந்து போனது.

ரமணி ஒரு விதவை அவள் மகன் அகில் இரண்டு வயது இருக்கும் போது ரமணியின் கணவன் இறந்து விட்டான். தனது கணவனை இழந்ததில் இருந்து மகன் தான் வாழ்க்கை. அகில் தான் அவன் உலகம் அவள் பாசத்தின் எல்லையே தன் மகன் தான் என்று வாழ்ந்து வந்தாள். மகனுக்கு சிறு சிராய்ப்பு ஏற்பட்டாலே துடித்துப் போவாள் ரமணி. அகிலும் இதுவரை யாருக்காகவும் வாழ்ந்ததாக இல்லை. எல்லாமே அம்மாதான் சகோதரம், நண்பன், உறவுகள் என்ற பெரிய வட்டத்தில் அவன் வாழ்க்கை இல்லாமல் தாய் என்ற பெரிய உலகத்தில் வாழ்ந்து வந்தான். இப்படி இருக்கும் போது தான் "முகத்தை குப்பையில் போட்டு விட்டு சிற்பி சிதறிப் போனதே" என்ற கவலை அந்த ஊரையே உலுக்கி விட்டிருந்தது.

அகில் வீடு நிறைய சனக்கூட்டம் எல்லோர் முகத்திலும் சோகத்தின் நிழல் பாடசாலை விட்டு வீட்டின் படிக[illegible] அடைந்த போது கால் தடக்கி குப்புற விழுந்தான். விழுந்தவன் எழவே இல்லை எல்லோரும் பதறியபடி அகிலை தூக்கி தண்ணீர் தெளித்து மயக்கத்தை தெளிய விட்டார்கள்.

தாயின் அரவணைப்பிலும் அன்பிலும் வாழ்ந்து விட்டு எதிர்பாராத வீழ்ச்சியால் விழுந்தவன் என்னவென்று வேதனை அடக்கி வாழ்ந்து விடப்போகின்றானோ. உறவுகளைப் பிரிந்து விட்டும் உயிர் விட்டுப் போனபின் இருப்பவர்கள் நினைத்து வேதனையில் கருகுவதைப் போல ஒரு தண்டனை மனித குலத்துக்கு தேவையா? என்று அகிலைப் பார்த்த போது எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

எல்லாம் முடிந்து விட்டது தீயுடனே தீர்ந்து விட்டது. என்னை ஏமாற்றி விட்டாள் அம்மா. எனக்கு முத்தம் கொடுத்து அனுப்பியவள் வாழ்க்கையை முடித்து விட்டாள். என்னைப் பற்றி எத்தனை ஆசை, கனவு எல்லாவற்றையும் வேதனையின் வெதும்பலுக்குள் புகுத்தி விட்டு போய்விட்டாள். என் அம்மா என் அம்மா அ...ம்...மா என்று புலம்பியவாறு படத்தை வெளித்துப் பார்த்து பெருமூச்சு விட்டபடியே தாயின் சேலையை தன்னோடு அணைத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தான். தாயின் புடவைகள் கிடந்த அந்தக் கொடியில் சேலையைப் போட்டுவிட்டு வெளியேறினான்.

சில நாட்களுக்குப் பின் ஒரு இரவில் அகில் படுக்கையில் இருந்து தனக்கும் தாயின் படத்துக்கும் நடுவே எரியும் விளக்கின் ஒளியில் தாயின் புன்னகையின் இழைகளில் இருந்து ஒரு வித மயக்கத்தில் தன்சோகம் மறந்து தாயின் ஆசை, கனவு அத்தனையும் தன் அம்மாவின் புகைப்படத்தில் தெரிவதாய் உணர்ந்தான். தன் மனதில் வேதனையைக் களைந்து தாயின் இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் திடமான ஒரு முடிவுக்கு வந்தான். அகில் அம்மாவின் படத்தைக் கும்பிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டான். ஆனால் எத்தனை வருடம் ஆகியும் தாயின் பாசத்திலும் கவலையிலும் ஜீரணிக்க முடியாமல் அழுகைக்குள் உட்பட்டு அதில் அதிக சுகம் கண்டவன் போல் பழகிப் போனான் அகில்.

# Delft

Miss. N. Jathusini
Grade - 10

My village is Delft. It is an Island. It is situated in the north of Sri Lanka. Whish is called 'Pearol of the Indian Ocean". My village has another name Pasuntivu - cow's island. Before we had a Lot of cows. We gave the milk to indian temple now also we can see a lot of cows and horses.

This island has a historical places. We can see the hotland and font hear hospital and the Vediyanasan font in Delft west we can see the medical plants in this village. The people are Farmers and Fisherman. We have R.C. Churches. Hindu temples Before, this Island attach the tourists. Now, with the war situation some people visit Delft.

# கணினியில் அறிந்திருக்க வேண்டியவை

செல்வி ப. புவிதா
A/L 2009 - கலைப்பிரிவு

1. கணினியில் தந்தை என்று அழைக்கப்படுபவர்

   சார்லஸ் பாபேஜ்

2. இண்டெல் (Intel) நிறுவனத்தை நிறுவியவர்கள்

   ராபர்ட் நாய்ஸ் மற்றும் கார்ல்ன்மூர்

3. மைக்ரோசா∴ப்ட் (Microsoft) நிறுவனத்தை நிறுவியவர்கள்

   பில்கேட்ஸ் மற்றும் பால் ஆலன்

4. ஆப்பிள் நிறுவனத்தை நிறுவியவர்கள்

   ஸ்டீவ்ஜாப்ஸ் மற்றும் ஜேக்கர்ட் (1911)

5. இலவச மென்பொருள் கழகத்தை நிறுவனத்தை நிறுவியவர்கள்

   ரிச்சர்ட் ஸ்டால்மேன்

6. சன் மைக்ரோசிஸ்டம் நிறுவனத்தை நிறுவியவர்கள்

   வினோத் கோசலா, ஸ்காட் மேகன்லே, பில் ஜாய் மற்றும் ஆண்டி பெக்டோல்சிம்

7. எ எம்டி (AMD) நிறுவனத்தை நிறுவியவர்கள்

   ஜேர்ரி சாண்டர்ஸ், எட்டர்னி மற்றும் சிலர்

8. முதல் மௌசை கண்டுபிடித்தவர்

   டுக்ளஸ் எங்கால்பர்ட் (Dauglas Engelbart)

9. CRT – யை கண்டுபிடித்தவர்

   ∴பெர்டினந்த் பிரான் (1987)

10. C – மொழியை உருவாக்கியவர்

    டேன்னிஸ் ரிட்சி மற்றும் கென் தாம்ஸன்

11. லினக்சை உருவாக்கியவர்

    லினஸ் டோர்வால்ட்

12. நுன்செயலியை கண்டுபிடித்தவர்

டேட் ஹொப் (Intel - 1971)

13. முதல் டிஜிட்டல் கணினியை வடிவமைத்தவர்

ஹோவர்ட் ஐய்க்கன் (1944)

14. TCP நெறிமுறையை உருவாக்கியவர்

விண்ட்செர்.ஃ.ப், ஸ்டிவ் கிராக்கர் மற்றும் டோனி ஹோகன் (1978)

- 10.000 ஆண்டுகளுக்கு முன் : தகவல் யுகம் இவ்வுலகில் அவதரித்த காலம்.
- கி.மு. 3000 : எகிப்திய நாட்டவர், நாட்டின் முக்கிய இரகசியங்களை காகிதத்தில் பதிந்து (Save) பாதுகாக்கத் தொடங்கினர்.
- கி. மு. 1700 : பொனீசியர்கள் 22 எழுத்துக்களைக் கொண்ட அரிச்சுவடியைப் பயன்படுத்தினர்.
- கி.மு 1000 : இன்றுவரை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் மணிச்சட்டம் புழக்கத்துக்கு வந்த காலம்.
- கி. பி 1642 : பாஸ்களின் கணக்கிடும் பொறி கண்டுபிடிக்கப்பட்டது
- கி. பி. 1833 : சாள்ஸ்பபேஜ் என்பவர் Analytical எனும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
- 1922 : IBM நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1930 : புஷ் என்பவர் அனலாக் என்ற பெயருடைய கணக்கிடும் கருவி ஒன்றை உருவாக்கினார்.
- 1944 : ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தினர் Mark 1 எனும் மின்சாரத்தினால் இயங்கக்கூடிய இலத்திரனியல் கணினியொன்றை உருவாக்கினார்.
- 1946 : முதல் தானியங்கி மின்னனு எண்ணியல் கணினி உருவாக்கப்-பட்டது. இது ENIAC என அழைக்கப்பட்டது.
- 1947 – 1972 : Transistor கண்டுபிடிக்கப்பட்டது.
- 1951 : Univac 1 எனும் வர்த்தக தகவல்களை ஆராயும் கணினி உருவாக்கப்பட்டது.
- 1969 : இணையம் தோன்றுவதற்கு காரணமாக இருந்த Net Work வலைப்பின்னல் தொழில்நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டது.
- 1970 : Floppy Disk, 4004 சிப் விற்பனைக்கு வந்தது.
- 1971 : சிறியரக கணினி கருவி உருவாக்கப்பட்டது.

- 1974: தொலைநகல் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1975: தனிநபர் மற்றும் சூப்பர் கணிணிகள் தயாரிக்கப்பட்டன.
- 1976: Lan என்பது Ethernet எனும் பெயரில் அறிமுகமானது.
- 1982: Compact disc வெளியிடப்பட்டது.
- 1983: செல்போன் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1985: Apple macintash வகைக் கணிணிகளின் விலை பாரிய அளவில் குறைக்கப்பட்டது.
- 1990: சுவிற்ஜர்லாந்தின் World Wide Web உருவாக்கப்பட்டது.
- 1993: Pentium tif Processor, வெளியிடப்பட்டது.
- 1994: Navigator ஆணைத் தொடர் உருவாக்கப்பட்ட.
- 1995: Pentium MS Windows 95க்கு விற்பனைக்கு வந்தது.
- 1996: MS Explorer அறிமுகமானது
- 1997: சூப்பர் கணிணிகள் உருவாக்கப்பட்டது.
- 1999: Piii, PC, 500 MHz வகைக் கணிணிகள் விற்பனைக்கு விடப்பட்டன.

# அறிவுக் கணைகள்

செல்வி B. மேகலா
தரம் - 12

1. செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர்?
   ஹென்றி டுனாண்ட்
2. தரையில் ஒருமைல் நீளம் என்பது கடலில் எத்தனை அடிகள்
   5280 அடிகள்
3. உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒருவருடகாலம் பதவி கொண்ட நாடு?
   சுவிற்சலாந்து
4. தனது நாட்டு வரைபடத்தையே தேசியக் கொடியிலும் சின்னமாக கொண்ட நாடு எது?
   சைபிரஸ்
5. வாலையும் உடலையும் தனித்தனியாக செயல்படவைக்கும் இரு மூளை கொண்ட விலங்கு எது?
   குரங்கு
6. சிகரெட் புகைத்தால் புற்றுநோய் வருமென முதன்முதலில் கண்டுபிடித்தவர்?
   ரிச்சர்ட்டில்
7. பலா மரத்தை தேசிய மரமாக கொண்ட தெற்காசிய நாடு எது?
   பங்களாதேஷ்
8. பாலில் இல்லாத ஒரே ஒரு சத்து எது?
   இரும்புச்சத்து
9. ஒரே ஒருமுறை மட்டும் சூரியன் உதிக்கும் கண்டம் எது?
   அண்டார்ட்டிக்கா (செப்ரம்பர் 26ம் திகதி)
10. இலங்கையில் முதல் முதல் குடிமதிப்பு கணக்கிடப்பட்ட ஆண்டு எது?
    1871
11. வாளேந்திய சிங்கக்கொடி எத்தனையாம் ஆண்டு தேசியக் கொடியாக பிரகடனப்படுத்தப்பட்டது?
    1950

12. இலங்கையில் ஒலிபரப்புச் சேவை தொலைக்காட்சி சேவை என்பன எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

ஒலிபரப்புச் சேவை – 1925 / தொலைக்காட்சி சேவை – 1978

13. உலகில் முதல் முதல் மூடப்பட்ட அறையினுள் நடந்த கிரிக்கட் போட்டி எங்கே இடம் பெற்றது?

அவுஸ்திரேலியா

14. கிரகங்களின் தூரத்தை அளக்கும் முறை எது?

பரலக்ஸ்

15. யாழ்ப்பாணக் குடாநாடு கடலின் கீழிருந்து மயோசின் காலத்தில் மேல் உயர்த்தப்பட்டது.

16. விமானம் எத்தனை மீற்றர் உயரத்தில் பறக்கிறதென கண்டுபிடிப்பது எது?

அல்டி மீற்றர்

17. சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரியென அழைக்கப்பட்டவர் யார்?

பூலான் தேவி

18. ஓசோன் படையை கண்டறிந்தவர் யார்? எப்போது?

அமெரிக்கரான சோன்ற்கீன் 1941ல் கண்டுபிடித்தார்.

19. ஐரோப்பாவில் பிறந்து ஆசியாவில் இறந்து ஆபிரிக்காவில் அடக்கம் செய்யப்பட்டவர் யார்?

மகா அலெக்சாண்டர்

20. எவரெஸ்டில் முதல் முதல் கால்பதித்தவர் யார்? இவர் எழுதிய நூல் எது?

டென்சிங் எழுதிய நூல் – பனிப்புலி

21. உலகில் மிகக் கூடிய தலாவருமானம் உடைய நாடு எது?

சுவிட்சலாந்து

22. தேசிய சமாதானம் இலங்கையில் கைச்சாத்திடப்பட்டது எப்போது?

22.02.2002

23. இலங்கை கடற்கரை எத்தனை கி. மீற்றர் நீளமுடையது?

1600 km

24. ஒட்சிசனைக் கண்டுபிடித்தவர் யார்?

லவோசியர்

25. மருத்துவ விஞ்ஞானத்தின் தந்தை யார்?

சிப்போ கிரட்டீஸ்

26. கதாநாயகன் இல்லாத முதல் திரைப்படம் எது?

ஒளவையார்

27. நமது (மனித) உடலில் வியர்க்காத பகுதி எது?

நாக்கு

28. நில நடுக்கத்தை அறிய உதவும் கருவியின் பெயர் யாது?

சீஸ்மோகிராப்

29. மனித ரேகைகள் எத்தனை வருடத்திற்கு ஒருமுறை மாற்றமடையும

23 வருடத்திற்கு ஒரு முறை

30. செயற்கை மழைக்கு தேவையான ரசாயனப் பொருள் எது?

சில்வர் அயோடைட்

31. ஒரு துளி இரத்தம் உடலை சுற்றிவர எடுக்கும் நேரம் எவ்வளவு?

22 வினாடிகள்

32. பாம்பின் விசத்தில் உள்ளவை எவை?

வைரயால், 4 ரோடஸ் செம்பு பாஸ்படெஸஸ், இன்றா, துத்தநாகம், கந்தகம்

33. எரிமலைக் குழம்பு உருகி வழியும் போது அதில் கிடைக்கும் இரசாயனப் பொருள் எது?

சிலிகேட் மற்றும் சிலிகான்

34. மனிதன் நிலவுக்கு போகவில்லை அது ஒரு பொய் நாடகமென தீர்க்கமான முடிவைக் கூறிய விண்வெளி ஆராய்ச்சியாளர் யார்?

பில்கேஸிங்

35. செயற்கை மழையை பெய்விக்கும் முறையை கண்டுபிடித்த நாடு எது:

அமெரிக்கா

36. உள்ளங்கையில் வைத்தவுடன் அதன் (கையில்) உஸ்ணத்திலேயே உருகும் தன்மை கொண்ட உலோகம் எது?

காலியம்

37. கறுப்புக்கண் கிரகம் எனப்படுவது யாது?

வியாழன்

38. மழை பெய்யும் போது வானத்தில் தோன்றும் மின்னலின் நீளம் யாது?

7 km

39. 50 வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் பூ எது?

மௌலானிகா

40. தென்னாபிரிக்காவின் "இரும்புமனிதன்" எனப்பட்டவன் யார்?

நெல்சன் மண்டேலா

# எமது கிராமத்தின் வரலாறு

செல்வி பு. லக்ஸன்யா
தரம் - 06

எமது கிராமமான நெடுந்தீவு யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத் திசையிலே யாழ்ப்பாணத்திலிருந்து ஏறக்குறைய 32 கி. மீ களுக்கு அப்பாலும் இராமேஸ்வரத்திலிருந்து 32 கி. மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இத்தீவு கிழக்கு மேற்காக 9 கி. மீ நீளத்தையும், வடக்கு தெற்காக 6 கி. மீ அகலத்தையும் ஒரு சரிந்த இணைகர வடிவிற் சுமார் 30 கி. மீ சுற்றளவையும் கொண்டது.

இத்தீவு தலைத்தீவு, பசுத்தீவு, பால்த்தீவு, அபிஷேகத்தீவு, தயிர்த்தீவு, அவகாலோகய, மருத்துமா மலைவனம் முதலான பெயர்களால் வரலாற்றுக் காலம் முதல் அழைக்கப்பட்டு வரப்படுகின்றன. இப் பெயர்கள் யாவும் காரணப் பெயர்களாகவே அமைந்துள்ளன. நெடுந்தீவு என்ற சொல்லின் நெடு என்பது இத்தீவின் நீளத்தைக் குறிப்பிடவில்லை. அது யாழ்ப்பாணக் குடா நாட்டில் இருந்து நெடுந் தொலைவில் இருப்பதைக் குறிப்பதாகும். ஆகவே குடா நாட்டில் இருந்து மிகவும் தொலைவில் இத்தீவு இருப்பதனால் அத்தீவுக்கு நெடுந்தீவு என்ற பெயர் ஏற்படலாயிற்று.

இத்தீவின் கிழக்குப் பகுதியும் தென்பகுதியும் பரந்த புல் நிலங்களாதலால் இங்கு மந்தைகளை மேய்ப்பதற்குப் பெரிதும் வாய்ப்பாக இருந்தமையினால் இத் தீவுக்கு பசுத்தீவு என்ற பெயர் ஏற்பட்டது எனலாம். பால்த்தீவு, தயிர்த்தீவு என்ற பெயர்கள் இத்தீவிலிருந்து தமிழ் நாட்டிலே உள்ள தனுஷ் கோடி இராமேஸ்வரம் முதலான ஆலயங்கட்கு இங்கிருந்து பால், தயிர் ஆகிய பொருட்கள் அனுப்பப்பட்டு வந்தமையினால் இப் பெயர்களை இத்தீவு பெற்றது என்பர்.

சிங்கள (பௌத்த) இலக்கியங்கள் இத் தீவினை அவகாலோகய என்று குறிப்பிடுகின்றன. இதன் பொருள் சஞ்சீவி உலகம் என்பதாகும். யாழ்ப்பாண வைபவமாலை, வைத்தியத்திற்கு சிறந்து விளங்கிய வைத்திய ராஜசிங்கன் என்ற பட்டப் பெயர் பெற்ற யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன் நெடுந்தீவை மருந்துவமா மலைவனம் போற்றியதைக் குறிப்பிடுகின்றது. இத்தகைய பெயர்கள் இத்தீவிற்கு ஏற்படுவதற்கு இத்தீவுப் பிரதேசம் எங்கிலும் மருத்துவ மூலிகைகள் நிறைந்து காணப்படுவது முக்கிய காரணமாகும். அத்துடன்

உடற்பயிற்சிக் கண்காட்சியின் நிறைவில் மாணவிகள்



விளையாட்டு விழாவில் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் போது



வெற்றிப் பீடத்தில் மாணவிகள்



ஒளிவிழா நாட்டுக்கூத்தில் ஒரு காட்சி



வாணி விழாவில் சிறுவர் நடன நிகழ்வு




மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் எம். பிரதீபன் அவர்கள் விளையாட்டு விழாவில் கேடயம் வழங்குதல்



மாணவத் தலைவர் சின்னஞ்சூட்டு நிகழ்வின் போது



முன்னாள் அதிபர்கள் உருவப்படத் திரை நீக்கத்தின் போது பிரதேச சபைத் தலைவர்



முன்னாள் அதிபர்கள் உருவப்படத் திரை நீக்கத்தின் போது கோட்டக் கல்விப்பணிப்பாளர்



இவற்றை அடிப்படையாகக் கொண்டு பௌராணிய மரபுக் கதைகளும், நம்பிக்கைகளும் ஏற்படக் காரணமாயிற்று எனலாம்.

இராமாயண காலத்தில் இராம இராவண யுத்தத்தின் போது மயக்கமுற்று வீழந்து படைவீரர்களை காப்பாற்றும் பொருட்டு இராமர் மூலிகைகள் நிறைந்த சஞ்சீவி மலையை கொண்டு வரும்படி அனுமாரைப் பணிக்க அனுமான் அவ்வாறே அம்மலையைப் பெயர்த்தெடுத்து பாக்குத் தொடுகடலைத்தாவி இலங்கைக்கு வரும் வேளையில் அம் மலையிலிருந்து வீழ்ந்த ஒரு பகுதியியே இத் தீவு என்று இம்மக்கள் நம்புகின்றார்கள். பொற்சீந்தில் என்ற மருத்துவ மூலிகை இவ்வூரில் அண்மைக் காலம் வரை இருந்ததாகவும் அதனை உண்பதால் நீண்ட ஆயுட்காலம் முன்னோர் வாழ்ந்தனர் எனவும் அறியப்படுகின்றது. இவ்விரு நம்பிக்கைகளும் இத்தீவில் மருந்து மூலிகைகள் நிறைந்து காணப்படுவதற்குக் காரணம் கற்பிக்கும் முகமாக எழுந்தன எனலாம். சிங்கள இலக்கியங்களில் இத் தீவு குறிப்பிடப்படுவதற்கு இராமாயண செல்வாக்கு காரணமாகலாம். கண்ணகி வழக்குரையிலே வெடியரசன் கதை வருகிறது. வெடியரசன் தீவுப் பகுதிகளுக்கு அதிபதியாக இருந்தான். இவ் வெடியரசன் கோட்டை கொத்தளம் அமைத்து ஆட்சி புரிந்த இடமே எனக் கருதலாம். வெடியரசன் நெடுந்தீவையும், அவன் தம்பி வீர நாராயணன் புங்குடுதீவையும், விளங்குதேவன் நயினாதீவையும், ஸ்ரீலங்குரவன் வேலணைத் தீவையும் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகின்றது.

# கற்க உதவும் காலையுணவு

செல்வன் ந. கணேஸ்வரன்
தரம் - 07

பல பாடசாலை ஆசிரியர்களின் கருத்துப்படி கல்வி கற்க புத்தகம், கரும்பலகை மட்டுமல்ல காலையுணவும் அவசியமானது. இதனைப் பல விஞ்ஞான ஆய்வுகளும் உறுதிப்படுத்தியுள்ளன.

மாணவர்கள் மத்தியில் 4 மாதங்களாக மேற்கொண்ட ஆய்வுகளின்படி காலையுணவை உட்கொள்ளும் மாணவர்கள் கணித பாடத்தில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதுடன் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், சுறுசுறுபானவர்களாகவும் காணப்பட்டனர். காலையுணவை உட்கொள்ளாத மாணவர்கள் சோர்வடைந்து போவதுடன் குறைவான புள்ளிகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

உணவு ஆய்வக நிறுவனத்தில் கடமையாற்றும் "மினஹல் கிளைமென்ஸ்" கூறுகின்றார். "காலையுணவு உட்கொள்ளாத பிள்ளைகள் விரைவாக உடல்நிலை சோர்வடைந்து போவதுடன் தலை வலியால் அவதிப்படுகின்றனர். இவர்கள் வகுப்புக்களில் தூங்கி வழிவதுடன் கல்வி வளர்ச்சியில் மந்தமானவர்களாகவும் காணப்படுகின்றனர்."

இதனைக் காலையுணவு உட்கொள்ளாமல் வகுப்புகளுக்கு செல்லும் நம்மவர்களும் கவனத்தில் கொள்வது நல்லது.

# விஞ்ஞானம்

செல்வன் கி. கபிலன்
தரம் - 08

கற்பனைகளுக்குக்கூட
கணினிகள் தேவைப்படும் காலமிது
வாழ்க்கை முறைகள் எல்லாம்
"நெட்வேர்க்கில்"
நெறிப்படுத்தப்பட்டுவிட்டன
"றோபோக்கள்" எல்லாம்
உறவு முறை எமக்கு
இன்ரநெற் மூலம் தான் – இனி
இல்லற வாழ்க்கை முறை
போதும் இனி புதுப் படைப்புகள்.

விஞ்ஞானிகளே!
நாங்கள் சுத்தமாக சுவாசிக்க
வளியை
கொஞ்சம் வடிகட்டித் தாருங்கள்
ஓசோன் ஓட்டைகளைக் கொஞ்சம்
ஒட்டுப் போட்டு விடுங்கள்
சூரிய கிரகங்களை கொஞ்சம்
சுதந்திரமாக சூழல விடுங்கள்
பழக்கமில்லாத படிமுறைகள்
இனி வேண்டாம் எமக்கு.....

# மூன்றெழுத்தில் வாழ்க்கை

செல்வன் பு. அபிராம்
தரம் - 04

| | | | |
|---|---|---|---|
| ➤ | உலகில் உள்ள | உயிர் | மூன்றெழுத்து |
| ➤ | உயிரை இயக்கும் | சக்தி | மூன்றெழுத்து |
| ➤ | சக்தியின் வடிவம் | அன்னை | மூன்றெழுத்து |
| ➤ | அன்னை காட்டும் | அன்பு | மூன்றெழுத்து |
| ➤ | அன்பை உயர்த்தும் | அறிவு | மூன்றெழுத்து |
| ➤ | அறிவை வளர்க்கும் | பள்ளி | மூன்றெழுத்து |
| ➤ | பள்ளியிற் கற்கும் | கல்வி | மூன்றெழுத்து |
| ➤ | கல்வியால் உருவாகும் | பதவி | மூன்றெழுத்து |
| ➤ | பதவியை சிறப்பிக்கும் | இளமை | மூன்றெழுத்து |
| ➤ | இளமை தரும் | மணம் | மூன்றெழுத்து |
| ➤ | மணத்தால் இணையும் | மனைவி | மூன்றெழுத்து |
| ➤ | மனைவியால் உருவாகும் | மழலை | மூன்றெழுத்து |
| ➤ | மழலைக்குச் செலவாகும் | பணம் | மூன்றெழுத்து |
| ➤ | பணத்தினைத் தேடும் | கைகள் | மூன்றெழுத்து |
| ➤ | கைகள் சோரும் | முதுமை | மூன்றெழுத்து |
| ➤ | முதுமையின் பின்பு | முடிவு | மூன்றெழுத்து |
| ➤ | முடிவின் பின் தேவைப்படும் | பெட்டி | மூன்றெழுத்து |
| ➤ | பெட்டியில் அடங்கும் | பிணம் | மூன்றெழுத்து |
| ➤ | ஊர்தி செல்லும் இடம் | சுடலை | மூன்றெழுத்து |
| ➤ | சுடலையில் வைக்கும் | கொள்ளி | மூன்றெழுத்து |
| ➤ | கொள்ளியில் எரிந்த | அஸ்தி | மூன்றெழுத்து |
| ➤ | அஸ்தி கரையும் | கடல் | மூன்றெழுத்து |

## கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்

செல்வி. சோ. நிருசனா
தரம் - 02

1. அதிகாலையில் விழித்தெழு
2. நாள்தோறும் காலை மாலையில் பற்களைத் தேய்த்துச் சுத்தம் செய்
3. நாள் தோறும் காலையில் நீராடு
4. விரல் நகங்கள் நீண்டு வளராது அடிக்கடி சீராக வெட்டு
5. சீப்பினால் தலை மயிரைப் படிய வாரி விடு
6. தெருக்களில் பொது இடங்களில் எச்சில் உமிழாதே
7. நாள்தோறும் உடற்பயிற்சி செய்
8. சுத்தமான உணவை உண்
9. காற்றோட்டம் உள்ள அறையில் அமர்ந்து படி
10. காற்றோட்டம் உள்ள அறையில் உறங்கு

## தெரிந்து கொள்ள சில தகவல்கள்

செல்வி. ச. மதுஷா
தரம் - 01

1. ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது
2. நாய்க்கு மோப்ப சக்தி அதிகம் உண்டு
3. நண்டுக்கு அதன் வயிற்றிலே பற்கள் உண்டு
4. முதலைகள் உறங்கும் போது கண்கள் மூடுவதில்லை
5. மிகவும் வேகமாக ஓடக்கூடிய மிருகம் சிறுத்தைப் புலி

# யானை

செல்வன். ம. பிரதீப்
தரம் - 01

1. யானை காட்டில் வாழும்.
2. யானை காட்டு மிருகங்கள் எல்லாவற்றையும் விட மிகப் பெரியது.
3. யானைக்கு தும்பிக்கை உண்டு.
4. யானைக்கு இரண்டு தந்தந்தங்கள் உள்ளன.
5. யானை பெரிய மரங்களை இடித்து முறித்து விழுத்தும்
6. யானைக்கு மிகவும் சிறிய இரண்டு கண்கள் உள்ளன.
7. யானை பாரங்களைத் தூக்கும்
8. யானை மிகச் சிறிய ஊசியைப் போட்டாலும் தனது தும்பிக்கையால் எடுக்கும்
9. யானை கரும்பை விரும்பி உண்ணும்
10. யானைக்கு குஞ்சம் போன்ற வால் உண்டு

# மின்மினிப் பூச்சியின் ஒளிவீசும் இரகசியம்

செல்வன். சோ. பவித்திரன்
தரம் - 07

மின் மினிப் பூச்சி என்பது சிறகுகளைக் கொண்ட ஒரு புழு. இவற்றின் அடி வயிற்றில் உள்ள ஒளியை உற்பத்தி செய்யும் ஒரு உறுப்பு நரம்புத் தொகுதியினால் இயங்குகிறது. இவ் உறுப்பில் லூசி பெரின், லூசி பெரேங் என்கின்ற இரு வகைப் பதார்த்தங்கள் உள்ளன.

லூசி பெரின் வளியிலுள்ள ஒட்சிசனுடன் சேரும் போது ஒளி உண்டாகுகிறது. இவ்வாறு லூசி பெரின் ஒட்சிசனுடன் சேருவதை லூசி பெரேங் ஊக்குவிக்கிறது. இதனாலேயே மின்மினி பூச்சிகள் இரவில் ஒளிவீசிய வண்ணம் பறக்கின்றன. இங்கு வெப்பம் இல்லாத ஒளி மட்டும் உருவாகும். இச் செயற்பாடு நிகழ்வதால் இது பயோ லூமின் சென்ஸ் எனப்படும்.

# பொது அறிவு

செல்வி சோ. லக்ஷனா
தரம் - 05

1. நுணுக்குக் காட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
   Z. ஜோன்சன்
2. தீப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் யார்?
   J.E. லுண்பீங்ரோப்
3. அணுகுண்டை கண்டு பிடித்தவர் யார்?
   லுட்டோஹறான்
4. நூல் நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
   ஜேம்ங் காக்கிறில்
5. துவிச்சக்கர வண்டியைக் கண்டுபிடித்தவர் யார்?
   K. மக்மிலான்
6. உலங்கு வானூர்தியைக் கண்டுபிடித்தவர் யார்?
   எதியன் ஏலற்சிச்சென்
7. பெற்றோலில் இயங்கும் காரை கண்டுபிடித்தவர் யார்?
   கார்ள் வெனங்
8. தன்னைச் சுற்றி வளையம் உள்ள கோள் எது?
   சனி
9. மனிதன் குடியேற்ற திட்டமிட்டுள்ள கோள் எது?
   செவ்வாய்
10. துருவக் கரடியின் நிறம் என்ன?
    வெள்ளை
11. உலகில் மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் எது?
    நிலத் திமிங்கிலம்
12. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் எது?
    ஈசல்
13. வாழ் நாளில் ஒரே ஒரு முட்டை இடும் பறவை எது?
    பெங்குயின்
14. நேராக நடக்கத் தெரியாத உயிரினம் எது?
    நண்டு
15. குட்டித் தூக்கம் போடும் விலங்கு எது?
    முயல்

# கல்வி

செல்வன் இ. நிதர்சன்
தரம் - 10

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருட்கள் கல்விப் பொருள், செல்வப் பொருள் என இரண்டு வகைப்படும். கல்வியானது கற்றற்குரிய நூல்களைக் கற்றல், கல்வியெனினும், வித்தை யெனினும் பொருந்தும். கற்றற்குரிய நூல்களாவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும் அந்நூல்களை அறிவதற்கு கருவிகளாக விளங்குபவை நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமாம். அறமெனினும், தருமமெனினும் பொருந்தும். வீடெனினும் முத்தியெனினும் மோட்சமெனினும் பொருந்தும்.

செல்வப் பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும். கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப் பொருள் வெள்ளத்தாலும், அக்கினியாலும் அழியும், கல்விப் பொருளோ ஒன்றாலும் அழிய மாட்டாது. செல்வப் பொருள் பிறருக்கு கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே வரும், கல்விப் பொருளோ பிறருக்கு கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே வரும். செல்வப் பொருள், சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பஞ் செய்து பலரையும் பகையாக்கும். சுவைகளை அனுபவித்தாலும், புகழும், பொருளும், பூசையும் பெறுதலாலும் பின்னே தருமத்தையும், முத்தியையும் அடைதலாலும் இடையறா இன்பத்தை அனுபவிப்பார். இப் பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் அறிந்தோம் என்று உலகத்தார் பலரும் அவரிடத்து அன்புடையவராவர். இதனால் செல்வம் பொருளிலும் கல்விப் பொருளே சிறந்தது.

உயர்குலமும், அழகும் செல்வாக்கும் உடையவராயினும் கல்வி இல்லாதவர் முருக்கம் பூவுக்கு சமமாவர். அரசர்களுக்கு அவர் தேசத்தில் மாத்திரம் சிறப்புண்டாம். கற்றறிந்தவருக்கு அவர் சென்ற தேசங்களிலெல்லாம் சிறப்புண்டாம். அதனால் அரசர்களைவிட கற்றறிந்தவரே சிறப்புடையவர். இதனால்

யாவரும் கல்வியை சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல் வேண்டும்.

அழுக்கு படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும். அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்றாக பிடிக்கமாட்டாது. சிறுபராயத்தில் கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். முதிர்ந்த பிராயத்தில் கற்றாலும் கல்வி நன்றாகப் புத்தியிலே பதிய மாட்டாது. இதனை ஔவையார் "இளமையிற் கல்" என்று கூறியுள்ளார். கல்வியை நல்லாசிரியரிடம் கற்க வேண்டு. கல்வி கற்று முடிந்தபின் மாணவர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபடுவது என்பது இன்சொற்களை சொல்லல் வணங்குதல், உற்றவிடத்து உதவுதல் போன்றனவாகும்.

கல்வியிலே தேர்ச்சிஅடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்க வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும், மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல் எப்பொழுதும் தங்கள் சக்திக்கு ஏற்ப கல்வியிலே பயில வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் சிறியதாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். கல்வியுடையவர் தாங்கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தலும், எல்லோருக்கும் உறுதியைப் போதித்தல் இம் மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வியாலாகிய பயனை அடைந்தவராவர். இம் மூன்றும் இல்லாதவிடத்துக் கல்வியினால் பயனில்லை.

# பார்போற்றும் உத்தமர்கள் ஆசான்களே!

செல்வி த. நிசாந்தினி
தரம் - 09

என் எழுத்துக் கற்பித்து எமையெல்லாம்
ஏற்றமுறச் செய்கின்ற உபாத்தியாயர்
கண்ணியஞ்சேர் குருவாவார் – எங்கள் வாழ்வின்
கண்களெனப் போற்றி நிதம் வாழ்த்திடுவோம்.

வேதனத்தைப் பாராது – எங்கள் வாழ்வின்
விடிவுக்காய் பாடுபடும் ஆசான்கள்
சீதனமாய்க் கல்விதனை எமக்களித்தார்
சிந்தயிலே அவர் புகழைத் தேக்கிவைப்போம்.

ஆறறிவு படைத்திட்ட உயிர்கட்கெல்லாம்
அகரமுதல் எழுத்ததனை அறியச்செய்து
நூலறிவு பலதந்த இவர்கள் வாழ்வு
நூறாண்டு காலமென இனிது வாழ்க!


வித்தை பல கற்பித்து எங்கள் வாழ்வின்
விடிவிளக்காய்த் திகழ்கின்ற அறிவு மேதைகள்
நித்தம் நித்தம் கலைவளர்த்தார் – இவர்கள் வாழ்வு
நிம்மதியாய் என்றென்றும் நீடுவாழி!

அள்ள அள்ளக் குறையாத கல்விச்செல்வம்
அளித்திட்ட ஆசிரியத் திலகம் என்றும்
வள்ளவென விளங்கிடுவார் – மாணவர்க்கு
வற்றாத கல்வியறிவூட்டி வாழ்வார்.

புத்தகங்கள் பல திறந்து போதித்தெம்மை
புகழுடையச் செய்திட்ட புண்ணியர்கள்
வித்தகராய் விளங்கிடுவர் – இந்நாட்டின்
வித்துஅவர் விண்புகழ் வாழி! வாழி!

# பூக்கள்

செல்வி ச. யுவேந்தினி
தரம் - 03



சின்ன வண்ணப் பூக்கள்
சிரிக்கும் நல்ல பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வந்து பாரும் பூக்கள்

சிவப்பு மஞ்சள் நீலம்
சேரும் வெள்ளை றோஜா
அவற்றை மூக்கில் வைத்து
அறிவோம் நல்ல வாசம்

பூத்த நல்ல மலரைப்
பூசை செய்ய எடுப்போம்
கொத்து மாலை தொடுப்போம்
கோவிலுக்குக் கொடுப்போம்



# அதிசய வர்க்கம் எம் அன்னையர் வர்க்கம்

செல்வன் ச. தவநேசன்
தரம் - 09

சிப்பி சிதையாமல் என்னை
பெற்றெடுக்கும் முயற்சியில்
வெற்றி கொண்டவளே
உனக்கு கோடி முத்தங்கள்

என்னில் ஒட்டிய
தாதுக்களாய் உன்
பாச சோகமான
கண்ணீர் பாதையிலும் எனக்காக
எத்தனை நேசம்

தன் கண்ணில் ரத்தம்
கசிந்தாலும் பிள்ளை விழியில்
கண்ணீர் கசிய விட
மாட்டாத ஜீவன்

என் கனவிலும் கவலை மறக்க
உன் முகம் வேண்டும்
கல்லறையிலும் கண்ணீர்
துடைக்க உன்
கை நீளும்

கண நேர மெழுகு வர்த்தியாய்
காலம் முழுதும் தன்
உடல் உருக்கும்
வர்க்கம் எம் " அன்னையர்
வர்க்கம்"

# ஆசிரியர்

**செல்வன் இ. நிகேதன்**
**தரம் - 11**

அன்னையின் கருவினிலே
பிள்ளை யெனும் உருவெடுத்து
இவ்வுலகில் உதித்து – எமக்கு
பள்ளி என்னும் ஆலயமாம்
கல்வி என்னும் இறைவனை
கண்ணியமாய் கற்பதற்கு
விரைந்திட்ட எம் கால்கள்
பள்ளிதனை நோக்கி
வண்ண மலர்கள் மாணவர்கள் பல
அம் மலர்களின் நிறங்களாய்
மனங்களாய் பாங்குடன்
வகை கூற வண்ண சேலைதனை
பக்குவமாய் அணிந்து
பல்விதமாய் நடந்து நிற்கின்றனர்
எம் ஆசான் இவ் ஆசானை
போற்றிட இன்று எமக் கொருநாள்
போற்றிடவா வேண்டும்
பண்பு தனை கல்விதனை
பக்குவமாய் பாசத்துடன்
உணவாய் ஊட்டி
அருகினில் அரவணைத்து
அனையாய் தந்தையாய்
நண்பனாய் சகோதரனாய்
தேற்றிட்ட எம் ஆசானை
நாம் போற்றிடவே வேண்டும்
எம் எதிர்கால இலட்சியக் கனவுகளை
இனிதாய் நிறைவேற்ற
எமக்கு விழியாக ஒளியாக
உப்பாக மாறும் எம்
ஆசான்களை போற்றிடவே வேண்டும்
ஆலமரவிழுது தனது
கிளைகளைப் பரப்பி பலருக்கு
குளிர்ச்சியையும் நிழலையும்
தருவதுபோல உங்களது
பணியின் உன்னதத்தில்
பல மாணவர்கள் மணம் பரப்ப
புகழ் வீசு உங்கள் பணி
தொடர எம் இனிய
நல் வாழ்த்துக்கள்.

# My School



Mas. N. Anusanth
Grade - 07

My School name is J/Delft Saivapragasa Vidyalayam. The Principal Name is Mr. S. Sathiyavarathan, We have twenty teachers and Two hundred and ten Students. We have a Children's Park and a big playground. My School is very beautiful. My class teacher name is Mr. N. Senthuran. There are thirteen Students in my class.


# My Garden



Mas. S. Kinthujan
Grade - 06

My garden is big. There are many flowers and plants in it. There is a big mango tree in the centre of my garden. There are flowers such as roses, shoe flowers and Jasmine. There are more than twenty kinds of crotons too. I water my garden every day. Gardening is my Favourite hobby. I Love my garden.

## The Elephant




Miss. S. Laksana
Grade - 05

The Elephant is a strong animal. The elephant has four legs. It can run fast. It is the biggest animal on the earth. It has 9 Long nose. Called trunk. The elephant has two small eyes and a thin tail. We see many elephants in our country.


## The Elephant

Mas. J. Thubaharan
Grade - 05




My pet is a Pappy
The colour is brown
So, I named it Brownie
He is very Fat and healthy
He is always active and alert
He plays with small thing and
Carries them in his mouth
I Feed him with Rice, Fish meat and Milk.
Every one in our home Loves him Dearly

செல்வி வி. சோபனா
தரம் - 05



இலங்கை வடக்காக இந்தியா அமைந்துள்ளது. இலங்கையில் சீனி தொழிற்சாலை கந்தளாய் பொலவத்தை, ஹிங்குரானை போன்ற இடங்களில் அமைந்துள்ளது. இலங்கையின் மிக நீண்ட ஆறு மகாவலி கங்கை. இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை பாக்கு நீரிணை ஆகும். இலங்கையின் முதல் பிரதமமந்திரி D.S சேனநாயக்க ஆவார். இலங்கை 1948.02.04 அன்று சுதந்திரம் பெற்றது. இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம். சனத்தொகை கூடிய மாவட்டம் கொழும்பு. உயரமான அணைக்கட்டு விக்டோரியா. அதிக மழை பெறும் இடம் வட்டவளை. உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்த

ஒல்லாந்தர் கால புறாக்கூடு




இராணி கோபுரம்



வெல்லையில் குதிரை



நெடுந்தீவின் கல் வேலி



பெருக்கு மரம்

ஆதி மனிதனின் காலடி

வீகாமன் கோட்டை




பொது பக்கம்

# இது போதும் எனக்கு

திரு. ச. சந்திரன்
அவுஸ்ரேலியா

குச்சொழுங்கை
கல்லு வேலி
குடிசை வீடு
கோழி கூவப்புலரும் பொழுது
எச்சைக்குக் கரையும் காகம்
இது போதும் எனக்கு

நாலுமணி பஸ்
நாதம் தரும் கன்றின் ஓசை
பால் சுமந்து வரும் பசு
குடம் சுமந்து போகும் குமரிகள்
கிணற்றடி நோக்கி மிதி வண்டியில்
போகும் காளைகள்
கண்களால் கவியெழுதும்
கன்னிப் பார்வை
இது போதும் எனக்கு

ஒடியற்கூழ்
சூடை மீன் சொதி
குறிஞ்சா இலையும்
கூட வறுத்த வெங்காயமும்
பருக மோர் பால் நெய்
கடிக்கப் பனங்கட்டி
கூட நடக்கச் சொந்தம்
இது போதும் எனக்கு

ஐயம் பிள்ளை ஐயாவின்
தண்ணி வண்டில்
எல்லோரையும்
ஏற்றி இறக்க ஒரு பஸ்
குதறிக் கொட்டினாலும்
குமுறிவரும் அலையை
கிளித்தோடும்
குமுதினிப் படகும்
இது போதும் எனக்கு

கரைவலை இழுத்து
காயப் போட்ட கருவாடு
கலப்படம் இல்லாத கள்ளு
காலாற வாகை மரம்
நாலாறு குதிரைக் கூட்டம்
நாங்களும் பணக்காரர் தான்
இது போதும் எனக்கு

பத்து வட்டாரத்திலும்
படிக்கப்பள்ளிக் கூடம்
கத்திக் கூப்பிட்டால்
சுத்திக் கேட்கும்
சொந்தங்களின் குடியிருப்பு
வெடியரசனும் வீகாமனும்
கட்டிய கடற்கோட்டைகள்

மண்மேடானாலும்
பெருமை பேசும் பரம்பரை
இது போதும் எனக்கு

எங்கள் தீவிலும்
ஏழு அதிசயங்கள்
ஆதி மனிதன்
காலடிச் சுவடுகள்
சாறாப்பட்டியில்
பூதங்கள் பொழிந்த
புதுமைக் கிணறுகள்
சிற்ரரசானாலும்
சிறக்க ஆண்ட
மன்னனின் கோட்டைகள்
குவிந்தாவில் தெரியும்
நிமிர்ந்த கோபுரம்

வெள்ளையன் மேய்த்த
குரையின் லயங்கள்
பழங்காலையில்
பார்க்கத் தெரியும்
இறந்தோர்க்கு ஈமைக்கிரியை
செய்ய இரண்டு மடங்கள்

மதங்கள் இரண்டு
இருந்த போதும்
மகிழ்ந்து வணங்கும்
மாட்சியை காண்பீர்
இது போதும் எனக்கு

அண்டங்கள் தாண்டி
அவுஸ்ரேலியா வந்தும் – நெடுந்
தீவான் என்பதில்
நெடுதிமிர் தான் எனக்கும்
நிமிரும் என் தீவிற்கு
நெம்பு கோலாய்
என் கரம் உயரும்
இது போதும் எனக்கு

ஆவூரான்

# எமது வித்தியாலய ஆதரவுடன் இயங்கும் நெழுவினி சித்தி விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபை

காப்பாளர்: திரு. ச. சத்தியவரதன்

தலைவர்: திருமதி. லோ. நகுலசிறி

செயலாளர்: செல்வி. தி. திருவேணி

பொருளாளர்: திரு. ப. கிட்ணராசா

உபதலைவர்: திரு. ந. புவனேஸ்வரகுமார்

உபசெயலாளர்: திருமதி . வி.பத்மநாதன்

நிர்வாக உறுப்பினர்கள்

1) த. சிவாஜினி
2) சி. கனகாம்பிகை
3) திருமதி. ம. சந்திரலிங்கம்
4) திரு. க. கணேசமூர்த்தி
5) திருமதி . த. குகனேஸ்வரன்

## கூட்டுப்பிரார்த்தனை செய்வோர் விபரம்

### தை:

திருமதி. க. நடராஜலிங்கம்

திருமதி. சு. புவனேந்திரன்

திரு. கா. கோபாலபிள்ளை

செல்வி. இ. கோசலாதேவி

### மாசி:

திருமதி. கா. சோதிநாதன்

திரு. இ. குமாரசாமி

திரு. த. கனகலிங்கம்

திரு. பொ. பரமலிங்கம்

### பங்குனி:

திருமதி . வி. பத்மநாதன்

திருமதி . ம. சந்திரலிங்கம்

திருமதி. ந. சசிகுமார்

திருமதி . தயாநிதி குனனேஸ்வரன்

## சித்திரை:

திருமதி . ரு.பரமேஸ்வரன்

திருமதி . கோ. பாலசிங்கம்

திரு. மு. வன்னியசிங்கம்

திரு. க. அன்பரசன்

## வைகாசி:

திரு. இ. கந்தையா

## ஆனி:

திருமதி. ப. சிறிதரன்

திரு. க. சுந்தரலிங்கம்

செல்வி. சி. கனகாம்பிகை

திரு. சி. தில்லைநாதன்

## ஆடி:

திரு. க. கணேசமூர்த்தி

திருமதி க. தட்சணாமூர்த்தி

திரு. அ. கதிர்க்கலைச்செல்வன்

திருமதி. பா. மனோகரன்

## ஆவணி:

திரு. ப. ஐயாத்துரை

## புரட்டாதி

திரு. ந. புவனேஸ்வரகுமார்

## ஐப்பசி:

திருமதி. சு. கேதீஸ்வரன்

திருமதி த. பகீரதன்

திரு. ப. கேதீஸ்வரன்

திரு. க. யோகநாதன்

## கார்த்திகை:

திரு. ச. சத்தியவரதன்

## மார்கழி:

திருமதி . லோ. நகுலசிறி

திரு. ப. கிட்ணராஜா

திரு. த. தர்மரட்ணம்

திருமதி. ஜெ. சிவகுமார்

## நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் (கனடா)

எமது தீவகத்தின் கல்வி, சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய தேவைகள் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. மேற்படி தேவைகளை எங்களால் இயன்றவரை பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நல்நோக்குடன் எமது தாயகத்தைச் சேர்ந்த சேவை மனப்பான்மையும். நல் உள்ளமும் கொண்டவர்களால் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் 2003ல் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். கடந்த 5 வருடங்களாக மாணவர் மன்றத்தினர் நெடுந்தீவுக்கு செயற்படுத்திய செயற்திட்டங்கள் பின்வருமாறு:

1) வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 25 மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் இருந்து உயர்கல்வி வரையான கற்கைச் செலவைப் பொறுப்பேற்றுப்பண உதவி வழங்கி வருகின்றோம்.
2) நெடுந்தீவில் உள்ள பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பண உதவி வழங்கி வருகின்றோம்.
3) 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டத்திற்கு விசேட வினாத்தாள்களை யாழ்ப்பாணத்தில் இருந்து தருவித்து பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதற்குப் பணம் வழங்கி வருகின்றோம்.
4) நெடுந்தீவில் உயர்தரம் கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள திறமையான மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கி வருகின்றோம்.
5) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு விசேட ஆசிரியர்களை வெளியூரில் இருந்து வருவித்து வகுப்புக்கள் நடாத்துவதற்குப் பணம் வழங்கியுள்ளோம்.
6) சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்களினால் நடாத்தப்படும் முன்பள்ளி நிலையங்களின் ஆசிரியர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பணம் வழங்கி வருகின்றோம்.
7) விழாக்கள், போட்டிகள் போன்றவற்றிற்கு பங்குபற்ற வெளியூர் செல்லும் வறிய மாணவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளுக்கு பணஉதவி வழங்கி வருகின்றோம்.
8) 60வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற வறிய முதியவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் உதவிப்பணம் வழங்கி வருகின்றோம்.

9. நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு சிறுவர் விளையாட்டு முற்றம் திரு. திருமதி கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக குமுதினியும், சகோதரர்களாலும் அன்பளிப்பு செய்து அமைத்துக் கொடுக்கப்பட்டது.
10. நெடுந்தீவு மேற்கு மங்கயற்கரசி வித்தியாலயத்திற்கு சிறுவர் விளையாட்டு முற்றம் அமைத்துக் கொடுத்துள்ளோம்.
11. நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் M. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களின் ஞாபகார்த்தமாக திருமதி தேவி பத்மசேனன் அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளார்.
12. சைவப்பிரசாக வித்தியாலயத்திற்கு சண்முகம் பசுபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக கேற்றும் அதன் இரு பக்கங்களிலும் 10' கொண்ட மதிலும் மகள் திருமதி தேவநாயகி குமாரசாமி அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளார்.
13. நெடுந்தீவு மத்தி சீக்கிரியாம்பள்ளம் அ.த.க. வித்தியாசாலைக்கு குடிநீர் தொட்டி அமைத்துக் கொடுத்துள்ளோம்.
14. அமரர் உயர்திரு. இராமநாதன் பொன்னையா அவர்களின் நினைவாக திருமதி ஜெகதீஸ்வரி பொன்னையா அவர்களால் நெடுந்தீவு மத்தியிலுள்ள வைத்தியசாலைக்கு நோயாளர் தள்ளுவண்டி

வழங்கப்பட்டது. (Strecture)

15. வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்து வகைகள், ஊட்டச்சத்து மாத்திரைகள் வழங்கியுள்ளோம்.

16. குமுதினி படகில் மரணித்த எம்மவர்களின் 20ம் ஆண்டு நினைவு நிகழ்விற்கு (2005)பணம் வழங்கியுள்ளோம்.

17. கடற்கோலினால் (சுனாமி) ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக பணம் வழங்கியுள்ளோம்.

18. நெடுந்தீவின் கல்வித் தந்தையும் முன்னாள் மகாவித்தியாலய ஆரம்ப அதிபருமாகிய அமரர் உயர்திரு எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் உருவச்சிலையை மகாவித்தியாலய முன்றலில் அமைப்பதற்கு முற்பணம் வழங்கியுள்ளோம்.

19. இந்தியாவில் தற்பொழுது புற்றுநோய்ச்சிகிச்சை பெற்றுவரும் கோவிந்தபிள்ளை தமிழ்ச்செல்வனுக்கு பண உதவி வழங்கியுள்ளோம். புற்று நோயினால் பாதிக்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த இரு பிள்ளைகளுக்கு இந்தியாவில் சிகிச்சை அளிக்கப்பட்டபோது பண உதவி அளித்துள்ளோம்.

20. தீவக வலயத்தின் வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் (2008) பங்கு பற்றியோருக்கு மதிய உணவு, வழங்கி உள்ளோம்.

21. நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கழக விளையாட்டு விழாவிற்கு நிதி உதவி வழங்கி உள்ளோம்.

22. மகாவித்தியாலய முன்பள்ளி அதிபர் எட்வேட் நவரத்தினசிங்கத்தின் 100வது பிறந்த நாள்விழாவை மிகச்சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்தோம்.

23. பிள்ளைநேயப் பாடசாலைச் செயற்திட்டத்திற்காக 8 பாடசாலைகளுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

24. நெடுந்தீவில் வதியும் வறிய முதியோருக்கு சிறுதொகை நிதி உதவி வழங்கி வருகின்றோம்.

25. கலைஞர்கள், சேவை உள்ளம் கொண்டவர்கள், பரீட்சைகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்து உள்ளோம்.

26. 2008-2009நடைமுறைப்படுத்த இருக்கும் செயற்திட்டங்கள்

i. நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு

1) கணனிப்பிறின்ரர் 2) மின்இணைப்புச்செய்தல் 3) நூலகத்திற்குப் புத்தகங்கள்

4) ஒவகெட் புரஜக்டர் 5) புதிய கேற்

27. நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலயத்திற்கு

1) மின்இணைப்பு 2) பாடசாலை அலுவலகம் அமைப்பதற்கு ஒருபகுதி நிதியை வழங்குதல்

28. இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் எமது தாயகத்தைச் சேர்ந்த உறவுகள் கொடிய நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு (புற்றுநோய், சிறுநீரகப் பாதிப்பு) பொது நிதி சேகரிக்க உள்ளோம். இதற்கு உங்கள் அனைவரின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

29. மாணவர் மன்றம் கனடாவில் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை நெடுந்தீவுக்கு செயற்திட்டங்களுக்கு 15245டொலர்கள் பணம் வழங்கியுள்ளோம் என்பதை உங்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது மன்றத்திற்குப் பணம் உட்பட பல வழிகளிலும் உதவி புரிந்து வரும் நெடுந்தீவு மக்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

– சிறகு பெற்றும் கூடு மறவோம் –

**2008 - 2009 நிர்வாகத்தினர்**

# நன்றி நவில்கின்றோம்.

எமது வித்தியாலயத்தின் 86வது ஆண்டு நிறைவில் "தீபம்" எனும் மலரை தங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமகிழ்வடைகிறோம். இம்மலரை வெளியிடுவதற்கு எமக்கு ஆலோசனை கூறி பேராதரவும் பேரூக்கமும் வழங்கி முழுமையாக உழைத்த எமது அதிபருக்கு நன்றிகள் நவில்கிறோம்.

இம்மலரானது சிறப்புற அமைய, பேரன்போடு வாழ்த்துரைகளை வழங்கிய மதத்தலைவர்கள், உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அறிஞர்கள், பெரியோர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள்.

மலரானது மணம் கமழ சிறப்புக் கட்டுரைகளை வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வியிலாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

வேண்டிய பொழுதுகளில் எமக்கு ஆலோசனை வழங்கி, வழிகாட்டிய தீவக வலயக் கல்விப்பணிப்பாளர், உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகள். ஆக்கங்களை வழங்கி மலரை அழகுபடுத்திய ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் எமது நன்றிகள். நெடுந்தீவின் வரலாற்றுப்பதிவுகளான படங்களை தந்துதவிய மாவட்டச் செயலக உத்தியோகத்தர் திரு. எஸ். ஜனார்த்தனன் அவர்களுக்கும் எமது நன்றிகளை கூறுகிறோம்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து ஆக்கங்களை வழங்கிய அன்பு உறவுகளுக்கும் எமது நன்றிகள். எல்லாவற்றிற்கும் மேலாக இம் மலரை வெளியிடுவதற்காக நிதியுதவியினை முழுமையாக வழங்கியதோடு வாழ்த்துச் செய்திகளையும் வழங்கி உதவிய நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடாக் கிளையினருக்கும் இதயங் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

இம் மலரை அழகுற அச்சிட்டு உதவிய கங்கை பிறின்டேஸினருக்கும் எமது நன்றிகள். "தீபம்" மலரானது நிறைவாக சுடர்விட உதவிகளையும் ஒத்தாசைகளையும் நிறைவாக வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

மலர்க்குழு





கங்கை பிறிண்டேர்ஸ், 781. கே. கே. எஸ் றோட் சிவலிங்கப்புளியடி யாழ்.